உ

கடவுள்துணை.

வித்வசிரோன்மணியாகிய புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்தருளிய

அபிமன்னன்

சுந்தரிமாலை.

சென்னை-சூளை,

கி. இராகவலு நாயுடு

அவர்களால்,

சென்னை.

ஸ்ரீ ஆதிமூலம்பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1923. [அணா 6.

விளம்பரம்.

கோவிலன் சரித்திரம் 2-பாகம்	... ...	0	4	0
அல்லி அர்ஜுனை 2-பாகம்	... ...	0	4	0
நல்லதங்காள் சரித்திரம் 2-பாகம்	... ...	0	4	0
சாவித்திரி சத்தியவான் 2-பாகம்...	... ...	0	4	0
கண்டிராஜன் சரித்திரம்	... ...	0	4	0
ஸ்ரீமத் இராமாயணத் திருப்புகழ் காவடிச்சிந்து	...	0	2	0
ஸ்ரீமகாபாரதத் திருப்புகழ் காவடிச்சிந்து	...	0	3	0
நந்தனர் சரித்திரக் காவடிச்சிந்து திருப்புகழ்	...	0	2	0
நல்லதங்காள் திருப்புகழ் காவடிச்சிந்து	...	0	2	0
அரிச்சந்திரன் காவடிச்சிந்து திருப்புகழ்	... ...	0	2	0
நடராஜஆச்சாரி புதிய திருடன்பாட்டு 2-பாகம்	...	0	2	0
பாஸ்கரதாஸ் கள்ளன்பாட்டு	... ...	0	3	0
கோமாளிபாட்டு ...	... ...	0	2	0
வள்ளியம்மை பரதம் ...	... ...	1	0	0
ஸ்ரீராமர் அஸ்வமேத அம்மானை	... ...	0	6	0

இன்னும் வேண்டிய புத்தகங்கள் வேண்டுமானல் அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

தி. இராகவலு நாயுடு

நெ. 17. ஆவடி சீனிவாச அய்யர் தெருவு,

ஜார்ஜ் டவுன் மதராஸ்.

உ

கடவுள் துணை.

அபிமன்னன் சுந்தரிமாலை.

விநாயகர் தோத்திரம்.

வெண்செந்துறை.

THE MADURA TAMIL S

அத்திமுகவா அரனார்திருமகனே
சத்தியின்புத்திரனே சரிந்தவயிற்றோனே
அரவணியும்வேணி அரனார்திருமகனே
நீரணியுங்கங்கை நீள்சடையோன்புத்திரனே
வானவர்கள்பூசைசெய்யும் மதயானைக்கன்றனே
ஆனைமுகத்தானே ஐங்கரனே நின்சரணம்
ஓரானைக்கன்னே உமையாள்திருமகனே
மூவர்க்குமுன்பிறந்த மூர்த்தியே முன்னடவாய்
தேவர்க்குதேவர் தெவிட்டாததெள்ளமுதே
அபிமன்னன் தன்கதையை அடைவாகயான்படிக்க
கவிமுன்னேவந்துதவும் கற்பகமேமுன்னடவாய்
சுந்தரிதன் கலியாணம் சொந்தமாய்த்தான்படிக்க
எந்தனிடநாவில் இருந்தருளும்நாயகனே
பாட்டினிசையறியாய் பாலனுரைத்தமிழ்
எட்டினிடமாக இருந்தருளும்நாயகனே
சிறுபெண்கள்வேண்டி தியபால்சிகப்படைக்கும்
அறிவுடையோர்வேண்டி அரியதவங்கள்செய்வார்
தன்னவர்கள்வேண்டி மலர்பூசைசெய்வார்கள்
எனக்குமொருமுகமாய் இரங்கும்பெரியோனே
சொர்க்கம்போவோர்க்குத துணையாயுதவிசெய்வீர்
வர்க்கம்பலகாம் வாங்கும்பெரியோனே
அப்பமெழுநூறும் அதிரசங்கள்தொண்ணூறும்
செப்பரியவெள்ளுருண்டை சோறுநூறாயிரமாம்
பனைக்கநல்லபச்சரிசி பதினாயிரக்கலமாம்
கூழோடேபோகும் குடதம்தாமோடசர்க்கரையும்
தேனோடேசெந்தினைமா தெவிட்டாவமுதமுடன்
செங்கரும்புரஸதாளி சீனிமலைப்பழமும்
தேங்காய்க்கொழுக்கட்டை திரளானபாணக்கமும்
மாங்காய்விளாங்கனியும் மாதுளநற்கனியும்
ஓங்காரமாகவே ஒளிவான ஐங்கரற்கு
பாங்காகநீர்சொரிந்து பத்தியுடன்ஐங்கரன்முன்
திங்கில்லாச்சாம்பிராணி தூபதீபங்கொடுத்து

அபிமன்னன்கதையை அன்பாகயான்படிக்க
தந்தருளவேணுமையா மாயவனார்தன்மருகா
ஓரானைக்கன்னே யுமையாள்மருமகனே
காரானைக்கண்ணே கணபதியேமுன்னடவாய்

முருகர் தோத்திரம்.

சீரானமாமுகனே சிறப்புடையவல்லவரே
மாயோன்மருகோனே வள்ளிமணவாளா
கந்தனேயென்றனிட கவலையெல்லாந்தீர்த்தோனே
அபிமன்னன்மாலைதனை அறுமுகனேயான்பாட
புத்திகளைநீகொடுப்பாய் புகழ்ச்சியாயான்பாட

கதையின் வரலாறு.

பஞ்சவர்களைவரும் பாராளும்நாளையிலே
அஞ்சலுடன்பெருமாளும் அவனியெல்லாமாளுகையில்
வஞ்சனைகள்செய்து மன்னன்திரியோதனனும்
அஞ்சாதமன்னவர்கள் அரசாளும்நாளையிலே
மாயன்பெருந்தேவி மங்கையலர்மேலும்
ஆறலழகன் அர்சுனன்தன்தேவி
பெருமாளுடன்பிறந்த பெண்ணாய்சுபத்திரையாள்
துவாரகைபுரிதனிலே சூதாகத்தானிருந்து
தலைமுழுகப்போக தாமிருவர்வருகையிலே
அந்தக்குளமருகே ஆலவிருட்சமுண்டு
விருட்சத்துக்கருகாக விக்கினருந்தானிருக்க
மாடுகள்மடக்கியவன் மக்கையிலேவந்துநிற்க
சூட்சமாய்வார்த்தையொன்று சொன்னாள்சுபத்திரையும்
அண்ணனிடதேவியரை அவளைமிகவழைத்து
மதனியேநாமிருவர் வந்தோந்தலைமுழுக
இந்தமுழுக்குடனே ஈஸ்வரனார்தன்செயலால்
அலர்மேலுமங்கையரே ஆண்பிறந்தால் உன்வயற்றில்
உன்மகனுக்கென்மகளை உகந்துகொடுப்பேனென்
என்வயிற்றிலாண்பிள்ளையும் உன்வயற்றில்பெண்பிறந்தால்
இப்படிக்குச்சம்மதியோ என்றாள்சுபத்திரையும்
அப்படியேசம்மதித்தாள் அலர்மேலுமங்கையரும்
நிச்சயமாய்பேசி நிதானமிட்டாரந்நேரம்
சுபத்திரையும்லட்சுமியும் சொல்லிசபதமிட்டார்
இந்தசபதம் இனிதப்பிப்போகாது
சந்தோஷவார்த்தைக்குச் சாட்சிவைக்கவேண்டுமென்றார்
இருவருஞ்சம்மதித்து இசைந்தார்கள்சாட்சிவைக்க

மருத்துவச்சிவண்ணாத்தி வந்துமகிழ்ந்துநிற்க
அரிவைசுபத்திரையும் அண்டையிலேவந்துநிற்க
இடுப்புமுதாருண்டு ஏகமாய்தான்பிடிக்க
பருவமாய்எவ்விலாரும் பக்கத்தில்தான்பிடிக்க
இப்படியாகவே இருக்குமந்தவேளையிலே
அலர்மேலுமங்கையரும் அரிவையரைப்பெற்ருளே
பெற்ருளேபெண்ணை பெருமாள்பெருந்தேவி
அப்போ-சுத்தமுள்ளகன்னி சுபத்திரையுந்தான்மகிழ்ந்து
தொபபுள்கொடியறுக்க தோகைசுபத்திரையும்
கொடுத்தாளாமாயிரம்பொன் கொம்பனையாளப்பொழுது
வாய்துடைக்கஆயிரம் வைத்தாளேசுபத்திரையும்
என்னைமுழுக்காட்டி ஏகாந்தப்பட்டுடுத்தி
அபிமன்னன்தேவியெறு அணிந்தாள்விபூதிதன்னை
ஆனையின்மேல்பேரிகை அடித்தாரேஅந்நேரம்
சுந்தரிக்கும்பாலனுக்கும் சொன்னபடிவேந்தரென்று
இந்திரரும்தேவரும் எங்குமறிந்தசுர்கள்
வந்தப்பிராமணர்க்கு மகாதானந்தான்கொடுத்தார்
விதைநெல்லுங்கொட்டைகளும் மெல்லியற்குதான்வழங்க
காதானம்பூதானம் கொடுத்தார்களநேகமெல்லாம்
கர்புலவருக்கும் பரதேசிதாதருக்கும்
நிப்புடவைகளும் கனமாகத்தான்கொடுத்தார்
பதிருறுநாளையிலே பைங்கொடிக்குத்தெண்டனிட்டு
நினைத்தாள்சுபத்திரையும் நிதானமிட்டாளந்நேரம்
பட்டணத்திலுள்ளான பார்மன்னரனைவருக்கும்
வெற்றிலைபாக்கு விரும்பியிடச்செய்தாளே
அப்படியேதான்செய்ய வாதாவாய்ச்சொன்னாளே
விருந்துசமையுமென்ருள் மேலானமங்கையற்கு
பொரித்தபொரியும் புத்தூருக்குநெல்பாலும்
அறுபத்துநாலுவகை அதிரசமப்பளமும்
மாங்கனியும்தேங்காயும் வாழைப்பலாக்கனியும்
இனிமணப்பாக்கும் திரட்பாலுசக்கரையும்
சாலவகைநற்கறியும சமைத்துவிருந்துமிட்டாள்
அறிவானசுந்தரிக்கு ஆணிப்பொன்தொட்டிலிட்டார்
வடிவானசுந்தரிக்கு மாணிக்கத்தொட்டிலிட்டார்
சுபத்திரையாளுடைமைகளை சிங்காரித்தாள்சுந்தரிக்கு
மகாராஜன்தேவியென்று மஞ்சநீராட்டிவைத்தான்
அபிமன்னன்தேவியென்று அனைவருக்குஞ்சொன்னாளே
இப்படியாயங்கே இருக்குமந்தவேளையிலே

அபிமன்னனையும் சுந்தரியையும் பள்ளிக்கூடத்தில் வைத்தது.

வருஷமும்நாலாச்சு வயதுமேஐந்தாச்சு
பள்ளிக்குமேல்வைக்க பருவமிதுவென்றுசொல்லி
உபாத்தியாயரைத்தானழைத்து வுகந்ததினம்பார்த்து
நல்லநாள்பார்த்து நன்முகூர்த்தந்தானுமிட்டார்
ஆடைசொர்ணம்வேணதெல்லாம் ஐவருக்குந்தான்கொடுத்து
பள்ளிக்குவைத்தார்கள் பாலனையுஞ்சுந்தரியும்
வடுகுதமிழ்கிரந்தம் மற்றுமுள்ளபாஷையெல்லாம்
அரிநமோசித்தமென்று அன்பாயறியுமென்று
ஆஆவென்று ஆதிமால்புத்திரியும்
அர்ச்சுனன்புத்திரனார் அபிமன்னராஜனுக்கு
ஓம்நமசிவாயவென்று ஓதுநீமுன்னேயென்று
அய்யருஞ்சொல்லிசொல்லி அடைவுடனேயானபின்பு
தங்குதடையில்லாமல் சதிராகத்தான்படித்தார்
சுந்தரிக்குப்பாடமே சொல்லுவான்பாலனுமே
சட்டமெழுத்துநடை தப்பினல்தண்டிப்பான்
வட்டக்கணக்குகளை தப்பிஎழுதிவிட்டால்
கிட்டவழைத்துவந்து கிள்ளுவான்கபதிரண்டும்
ஆடுவதும்பாடுவது மழலியுடனேபேசுவதும்
இப்படிச்செல்லாமெழுதிப்படித்தபின்பு
பள்ளிக்கூடம்வந்து பாலனுஞ்சுந்தரியும்
செல்வச்சிலம்பங்கள் பிடிக்கவேசெய்தார்கள்
தோல்வாறுபோடுறதுந்தடைதட்டிப்பாயுறதும்
ஆணையைவிட்டுத்தான் ஆக்கரித்துக்குத்துவதும்
தப்பாமற்கற்று சமர்த்தராய்நின்றார்கள்
சிறப்பானபாஷைகளுஞ் சகலவித்தையுள்ளதெல்லாம்
இருவருங்கற்று இருக்குமந்தவேளையிலே

சுந்தரியும் அபிமன்னனும் கணையாழி மாற்றிக்கொண்டது.

மைவிழியாள்சுந்தரியாள் வலக்கரத்தைத்தான்பிடித்து
கணையாழிமோதிரத்தை கழட்டியபிமன்னனும்
பெண்சகிகையிலிட்டு பேசினனபிமன்னனும்
மங்கையரேசுந்தரியே வரிசைதந்தாண்டி.
அந்தமுள்ளசுந்தரியுமவள்கையின்மோதிரத்தை
இந்தாருமென்றுசொல்லி இட்டாளபிமன்னனுக்கு
இருவருஞ்சமதியா யிருந்தார்களன்னேரம்
அப்படியேயங்கேயனேகநாள்சென்றபின்பு
வருடமேழானபின்பு வரும்பயந்தபாலனுமே

துரிதமுடனடந்தார் துவாரகாபுரியைவிட்டு
இந்திவனங்கடந்தார் எலுமிச்சையட்புகுந்தாள்
மஞ்சள்வனங்கடந்தாள் மாதுனையினுட்புகுந்தாள்
காடுகடந்து கரியமலை தான் கடந்து
பஞ்சவர்கள்நாட்டிலேதான் பைங்கிளியும்வந்தாளே
ஐந்துபோாசர்களும் ஆனைகுந்திபட்டணத்து
வஞ்சிசுபத்திரையும் வந்தாளேமாளிகைக்கு
தம்பியபிமன்னனுக்கு சலக்கங்கள் தானூட்டி
பாலமிர்தமுண்டு பசிதீர்ந்தபிற்பாடு

அபிமன்னனுக்கு நூறுதோழைரை
அழைப்பித்துவைத்தது.

தானமுதுகொண்டு சதிராயிருந்தாளே
பாலனுக்குத்தோழன்மாரை பட்டணத்தில்தானதேடி
பாலனைப்போல்நூறுபேரை பார்த்துவழைத்துவந்தார்
தோழமார்தங்களுக்கு சொனனாள்சுபத்திரையும்
தம்பியைவிட்டுநீங்கள் தனியேபிரியாமல்
அபிமனனராசனை அவனைப்பிரியாமல்
கவனமுடன தம்பியைக் காத்திருங்கள் தாமெனன று
அனனமும்பாகு மபிமனுடனேகொள்ளுங்கள்
அவனதரிக்கும்பூஷணங்கள் ஆடைபசைகத்தி
வகைவகையாய்ப்பிள்ளைகட்கு மாதுகொடுத்தாளே
தினந்தினந்தம்பியற்கு சிலபங்கள்செய்யுமெனறு
அஸ்திரகுணங்களெல்லாம் அடைவாககற்கவெனறு
இப்படியாகச்சொல்லி எடுத்துரைத்தார்மாதாவும்
அப்படியேநல்லதெனறு அடைவாககற்கவெனறு
அபிமனனரும்தோழருமாய் அமர்ந்தாரபிமனனுடன

அஸ்தினபுறத்தின் சிறப்பு.

அஸ்தினபுறத்து அதிசயத்தைசொல்லுகிறேன
திரியோதிரப்பெருமாள் சிங்காதனச்சபையில்
பதியிழந்துபாண்டவர்கள் பெருங்காடுறைந்தார்கள்
மதியையனுசரிக்கும் மனனனதுரியோதிரன
அஸ்தினபுரிபுகரில் அழகுமணிமண்டபத்தில்
புத்தியொருகோடி புகலரியமண்டபத்தில்
நிறைகோடிகால்நிறுத்தி நீலரத்னமுத்தணிந்து
வகைவகையாய்வச்சிரங்கள் வகையாகத்தானெழுத்தி
ஓரமருகே வுயர்ந்தமுத்துதொங்கவிட்டு
தூக்குத்தூணு தூண்டாவிளக்கேற்றி
தூணுக்குத்தூணு துலங்குமணிமண்டபத்தில்
மேல்கட்டித்தூக்கி விபரீதமாய்ச்சோதிமின்ன

ஆணிப்பவழமணி யணியணியாய்ச்சோதிமின்ன
சங்கிலை றமுத்துசாதிசா திமுத்துசோதிமின்ன
பாங்காகச்சோதிமின்ன பலதிசைபுந்தான தூக்கி
அல்லிமலர்முல்லை அழகுமி நவாட்சிகளும்
மல்லிகைமுல்லை மலருதிருவாட்களும
கொத்தலரிகுங்குமமுமு குளிர்ந்தசுகந்தமலர்
விஸ்தாரமான வெள்ளரிபூவுகளும்
வெண்டாமரைமலரும் வேண்டியசெந்தாமரையும்
கண்கொள்ளாப்பூச்சரங்கள் கானகத்தினமண்டபத்தில்
பூச்சரங்கள்கொண்டு புதிதாயலங்கரித்து
ஆச்சரியமாக அலங்காரபூச்சரங்கள்
வெள்ளித்தூணருகே விதமாய்மிடத்தூக்கி
சிங்கமும்யானையும் சிறக்கவணிசேர்த்து
சிங்கத்தினமேரில் சிறக்கவேதூணிறுத்தி
ஆனையினமேல் அழகாகத்தூணிறுத்தி
நாலுகால்பீடம் நலவாகவுண்டாக்கி
சிங்காதனமிட்டுச் சிங்காதனக்கால்நிறுத்தி
சங்கிலை றமுத்தும் தாவடமும்பூஷணமும்
இவ்விதமாகவே இதமாகத்தூணிறுத்தி
நாகக்கொடியும் நவரத்தினசோதிமின்ன
தென்னனைமுடிமன்னன திரியோதிரனசகுனி
கர்னனவிதுரனை காங்கேயனதேத்தரனை
குருக்கள்துரோணரும் கொற்றவருமனைவரும்
கிருபனகிருபாச்சாரி கீர்த்தியுளவீஷ்மருடன
அசுவத்தாமனுடனே ஆனவெரருமனைவனும்
திரியோதிரனசபையில் சேரக்கொலுவிருக்க
பதினெட்டக்குரோணி படைமன்னர்தானிருக்க

சகுனி இலக்குணனுக்கு விவாகஞ்செய்யநினைத்துத்
துரியோதனனுக்குச்சொல்வது.

மாமனசகுனி மருமகனைத்தானபார்த்து
திரியோதிரனுடனே சொல்லலுற்றானப்போது
அங்கிருந்தமன்னவர்கள் அனைவோருந்தானறிய
தேசமைப்பத்தேறு இக்கெட்டுமாளுமறையே
பாசமுடனதேசம் பட்டணமாளுமறையே
மிகச்சார்கனெல்லோரும் வீடுகட்டிவாழ்வார்கள்
கைசாய்ந்தால்கலியாணம் மகிழ்ச்சியாய்ச்செய்வார்கள்
அப்படியேவுமுடைய அழகானலக்குணர்க்கு
கலியாணஞ்செய்யவே காலங்களிப்போது
நனைரூய்க்கலியாணம் ராசமுடிமன்னர்மெச்ச
இப்போதேசெய்தால் இயலாயிருக்குமெனறார்

ஒப்பமுடன்சொல்லி உரைத்தான்சகுனி
தேசத்தழகுமன்னன் துரியோதிரன்கேட்டு
ஆமென்றுசொல்லி அனைவருஞ்சொன்னார்கள்
மாமன் சொன்னபெண்பேச்சை மறவாமல்மன்னவனும்
பெண்ணைக்கேளென்று போய்கேட்டானப்பொழுது
வண்ணமுடன் சகுனி வாராயுரைக்கலுற்றான்
சொன்னார்சகுனி துவாரகாபுரிதனிலே
மாயன்பெருமாள் மகளாரைக்கொள்ளுமென்றான்
இலக்குமணர்க்குஞ்சுந்தரிக்கும் இராசிப்பொருத்தமுண்டோ
எப்படியானாலு மிசைக்கக்கொள்ளவேணடுமென்றான்

துரியோதனன்மகிழ்ந்து தாயாரை வுத்தரவு கேட்குதல்.

அப்படியேசெய்வோமென்று அரசன் துரியோதிரனுஞ்
சிங்காதனத்தைவிட்டு கீழேகுதித்திறங்கி
பல்லக்குமீதேறி படைமன்னாகுழ்ந்துவர
மாமன்சகுனியுடன் வந்தானே தாய்வீட்டில்
தாயாரைச்சுற்றிவந்து சாஷ்டாங்கதெண்டனிட்டான்
வாரியெடுத்து மகனை மடியில்வைத்து
முகந்துடைத்துமுத்தமிட்டு முடிமேலசையவைத்து
வந்தவகையென்மகனே வரிசையுடன்சொல்லுமென்றாள்
தாயாருங்காந்தாரி தயவாகத்தான்கேட்டு
அண்ணன் சகுனியுந்தன அன்பாகத்தானழைத்து
இருவரும்வந்தவகை என்னுடனேசொல்லுமென்றாள்
சகுனியுரைத்தானே தங்கையர்க்குமனங்குளிர
துரியோதிரனும் தெரியவேசொன்னாரே
கட்டழகுலக்குமணர்க்கு கனமிகவேகலியாணம்
இட்டமுடன்செய்வதற்கு தெரியவேகேட்கவந்தேன்
என்னபுத்திதாயாரே எனக்கரியசொல்லுமென்றான்
பெண்ணுமிருக்குதம்மா பெருமாள்மகளாரும்
வண்ணமகள்சுந்திரியாள் மாயன்மகளாரும்
என்றுசொல்லியுங்களண்ணன் எனக்கரியச்சொன்னார்கள்
அந்தவிசேஷம் அதுகேட்டுஅம்மாளே
வந்தேனுஉவாய்விசேஷம் வாங்கியேபோகவந்தேன்
சந்தோஷமானபடி தாயாரேசொல்லுமென்றான்

தாயார்மகிழ்ந்து கலியாணஞ்செய்ய உத்தரவுகொடுத்தது.

தாயாருங்காந்தாரி சந்தோஷமாயுரைத்தாள்
மாயன்பெருமாள் மகளென்றுசொன்னாயே
எனக்குமெத்தசம்பந்தி ஒருவரில்லையுலகத்தில்
பெண்ணுங்கிடையாதோ பெருமாள்மெத்தகொள்ளுமென்றாள்
போவென்லனுப்பி புகழ்ந்துவிடைகொடுத்தாள்

திரியோதிரன் தன்தகப்பனிடம் வந்துகேட்பது.

வந்தான் திரியோதிரன் மன்னவர்கள் தங்களுடன்
கர்ணன்விதுரன் காங்கேயன் தன்னுடனே
மன்னன்குருக்கள் மற்றுமுள்ளோர்தங்களையும்
தங்களுடனகூடத் தகப்பனண்டைதானபோனான
தகப்பனைசுத்திவந்து சாஷ்டாங்கதெண்டனிட்டான
அண்டையிலேதானழைத்து அப்பாமகனேயென்று
மற்றுமுள்ளமன்னவரை வகையாயிருங்களென்று
இத்தனைபேரும் எனமகனுமெங்கேவந்தீர்
தென்னமுடியவர்தன திரியோதிரனுரைப்பான
லக்குணர்க்குநல்மூகூர்த்தம் தானசெய்யவேணுமென்று
மாயனபெருமாள் மகளானசுந்தரியை
நேமமுடனகொள்வோமென்று நிதானமிட்டேனிப்பொழுது
உம்முடையபுத்தி உயர்ந்தபுத்திதானகேட்டு
சம்மதித்தால்போகவென்று தகப்பனேவந்தேனென

திரிதராட்டிரன் வேண்டாமென்று தடுத்தது.

தகப்பனதயிலாடன தானகேட்டுஅவ்விசேஷம்
சிந்தைகலங்கி சிவசிவாவென்றுசொல்லி
இந்தவிசேஷம் எனக்குச்சரிபோதாது
சுந்தரிக்குப்பீமருக்குஞ் சொன்னார்சபதங்கள்
சுபத்திரைக்கும்லட்சுமிக்கும் முன்னேசபதமுண்டு
வில்லங்கமானபெண்ணைக் கொள்ளவேபோகாது
கொள்ளகுடிகேடு குலத்துக்குஆகாது
கள்ளப்பெருமான் கபடால்குடிகெடுப்பான
பெருமாள்நமக்குமுன்னே பொல்லாதசம்பந்தி
ஆகாதுகாணும் அவர்வீட்டுப்பெண்நமக்கு
பின்னையொருவீட்டில் பெண்ணுங்கிடையாதோ
போங்களென்றுசொல்லி போக்கவிடைகொடுத்தான

திரியோதிரன் துவாரகைக்குப் புறப்பட்டது.

அந்தவிசேஷமது அதுகேட்டுமன்னவனும்
கோபித்துகண்சிவந்து கண்கள்நெருப்பதுபோல்
தாவித்தபூஷணங்கள் சரஞ்சரமாய்தானுதிர
தரணியிலேதானவிழுந்து தார்வேந்தனகூறுவான
குருடனுடபேச்சு நடக்குமோகொற்றவனே
தகப்பனென்றுசொல்லவந்தால் தடுத்துஅன்னசொன்னதுவும்
வகையுடனேசொல்லாமல் மாராட்டஞ்சொன்னானே
கண்தெரியாதானசொற்கேட்டு கலியாணம்பண்ணாமல்
பின்வாங்கப்போறேனோ பெரியவரேவாருங்கள்
என்றுசொல்லிமன்னவனும் இருந்தவர்தன்னுடனே

வந்தாரரண்மனையில் மகாபேரிபோடுமென்றாள்
பட்டணத்திலுள்ள படைமன்னரத்தனையும்
இட்டான்பயணம் இடும்பன்திரியோதிரன்
துவாரகாபுரியென்று சொல்லிபயணமிட்டான்
அடித்தார்கள்பேரிகை ஐந்துலட்சங்கிங்கிலியர்
பிடித்தார்கள்பூரிகையை ராயசிடிஆறுலட்சம்
செவ்வானம்போல சூழ்ந்ததொருஆறுலட்சம்
கருமலைப்போலே கருத்ததொருஆறுலட்சம்
முத்துபோலானை முழுவெள்ளைமூன்றுலட்சம்
பவழநிறம்போல்குதிரை பத்துலட்சம்பயணமென்றார்
பல்லக்குக்கார படைமன்னராஜாக்கள்
கொல்லர்களெல்லோரும் கூடப்பயணமானார்
வீராதிவீரர்களும் வில்பிடிக்குமன்னவரும்
ஆறுலட்சம்ராஜாக்கள் அப்போபயணமானார்
துவாரகாபுரிதனிலே சுந்தரியைத்தான்கேட்க
பயணம்புறப்பட்டார் படைமன்னராஜாக்கள்
திரியோதிரனுடனே திரள்தம்பிமாருடனே
ஆயுதசேவகர்கள் அமளியுடனப்போது
தேரணியுங்காலாளுந் திரள்கோடிமன்னவரும்
தண்டிகைக்காரரும் கார்வேந்தராஜாக்கள்
ஒட்டையின்மேலேறி ஒருகோடிராஜாக்கள்
இட்டசட்டைவாங்காத இடும்பரொருகோடி
போட்டசட்டைவாங்காத போர்மன்னர்தான்கோடி
அஸ்தினபுரத்திலுள்ள ஆனதுரைமன்னரெல்லாம்
பரிசுத்தமாயெல்லோரும் பயணம்புறப்பட்டார்
முப்பத்திரண்டுவிதம் மேளங்கள்தான்முழங்க
பேரிகைகொட்ட பெரியகாளையூதிவர
பூரிகைகோடிலட்சம் பூமியதிர்ந்துவிழ
பண்ணியாடம்பரங்கள் பத்துலட்சந்தான்முழங்க
திட்டமுடநாகசுரம் திரள்கோடிதான்முழங்க
மத்தவுடுக்கைகளும் வாய்வீணைதாளமெல்லாம்
மெத்தமுழங்கிவர மெல்லியர்களாடிவர
சித்தமகிழ்ந்து திரியோதிரன்பார்க்க
வந்துதேபாளையங்கள் மாட்டாருதன்னருகே
இறங்கிற்றுபாளையங்கள் எங்கும்கிடுகிடென்ன
பூமிநடுங்கவெங்கும் பூலோகம்தானதிர
அண்டம்கிடுகிடென்ன ஆகாயந்தானதிர
குண்டுமலைகளெல்லாந் தூளாகத்தான்பறக்க
கண்டுபடைமன்னர்கள் களைபட்டுதான்விழவே
துவாரகைதானதிர தொடர்ந்துதேபாளையங்கள்
தென்கடல்பொங்கி திரண்டுவருவதுபோல்

நடந்ததேபாளையங்கள் நாலுதிக்குந்தானதிர
பெண்கேட்கவந்தானே பேரானமன்னவனும்
ஆயன்பெருமாள் அரண்மனைக்கருகில்வந்து
திரியோதிரன்கூட்டம் சேனைவருகுதென்று
அறிந்துகொள்ளமாயனுக்கு ஆள்கள்வந்துசொன்னார்கள்
சொன்னவுடனே தீவிரமாய்த்தானெழுந்து
என்னஅலுவலிங்கே அவர்கள்வரக்காரணமேன்

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஆற்றில்பெருக
கங்கையை யழைத்தது.

என்றுவிசாரமிட்டு எம்பெருமாளப்போது
போதித்தஞானத்தை பெருமாளுந்தான்பார்த்தார்
பெண்கேட்கவாராளும் பொல்லாதபட்டிமகன்
தங்கையென்றுகங்கைதனை தானழைத்தாரப்போது
மாயவருந்தானினைக்க வந்தாளேகங்கையவள்
கங்காபாவனிவந்து கிருஷ்ணரையுந்தான்பணிந்து
அழைத்தவகையென்ன அண்ணாவேசொல்லுமென்றாள்
மாயன்பெருமாளும் மறுவார்த்தைகூறுவாராம்
பொல்லாததிரியோதிரன் பெண்கேட்கவாராளும்
தேசமாயென்சீமை சில்லறைகள்செய்வானேன்
ஆகாததன்மார்க்கன் அவனிங்கேவந்தாக்கால்
நம்பவும்போகாது நானவனைநாயகியே
வம்பன்திரியோதினை வரச்சொல்லப்போகாது
தாயேநீர்தாங்களே தண்ணீரால்ஆற்றிலேதான்
பாலாறுதண்ணீர்வர பார்க்கவேணுங்கங்கையரே
பாராய்நீபைங்கிளியே தடையாகநிற்கவேண்டும்
வந்தெழவொட்டாமல் மாயவருஞ்சொன்னாரே

கங்கையானவள் ஆற்றில் பெருவெள்ளமாய்வந்தது.

நல்லதுஅண்ணாவே நன்றாய்வருகிறேன்
மேகம்பரவியப்போ மின்னலிடிமுழங்க
மழைகள்பொழியவே வருகுதுஆற்றுவெள்ளம்
வருகுதுஆற்றுவெள்ளம் மரங்கள்மலைபிடுங்கி
இருகரையுந்தான்பிளந்து வருகுதுஆற்றுவெள்ளம்
வருகுதுவண்ணீரது மானமதுபூமியொன்றாய்
ஆற்றங்கரையி லிறங்கிற்றுபாளையங்கள்
தண்ணீரைக்கண்டு தலைவாறுகெட்டுநொந்து
வண்ணவண்ணக்கூட்டம் வகையுடனேபோட்டார்கள்
தென்னமுடிமன்னன் திரியோதிரன்பார்த்து
என்னசெய்வோமென்று ஏங்கிமனந்தளர்ந்து
கூடாரம்போடுமென்று கோபமுடனிருந்தான்

திரியோதிரன் துவாரகைக்கு ஆளனுப்பியது.

வந்தசெகாருமன்னவரை வாய்மொழிகேட்டாளே
அவன்-அக்கரை தாண்டவேதான் ஆளனுப்பவேண்டுமென்றார்
படகுமேல்மன்னவரை பாங்குடனேயேற்றவிட்டு
அறிவுடனேற்றிவிட்டான் அம்மொழிகேட்டுவாரேன்
போனார்துவாரகா புரியந்தபட்டணத்தே
மாயனரண்மனைக்கு மன்னவரும்போய்நுழைந்தார்
சீரானமாயன் சிங்காதனத்தமுன்னே
தெண்டனிட்டுமன்னவர்கள் சீராகநின்றார்கள்
வந்தவரைத்தான்பார்த்து மாயனெடுத்துரைப்பார்
வந்தசேதிசொல்லுமென்று மாயவருந்தான்கேட்டு
சொன்னார்கள்மந்திரிகள் சுவாமியைத்தெண்டனிட்டு
பெண்கேட்கவந்தோமென்று பெருமாட்குசொன்னார்கள்
திரியோதிரனுமந்த சேனைபரிதளமும்
வருகிறார்நம்முடைய மகளாரைக்கேட்கவென்று
லக்குணர்க்குஞ்சுந்தரிக்கு லட்சணங்கள்தான்பார்த்து
சகுணங்கள்தான்பார்த்து வந்தானேதிரியோதிரன்
ஆறுதண்ணீர்வந்ததினால் அங்கேயிறங்கினார்கள்
ஆண்டவனேபெண்விசேஷம் ஆமனசொல்லுமென்றார்
ாயன்பெருமாளும் மறுவார்த்தைகூறுவார்
பெண்தாரோமென்றுசொல்லி பெருமாளுந்தான்கூறி
நபண்ணுக்குவந்தவர்கள் பின்னடந்துபோகாமல்
மான்கேட்டபொன்னை நமக்குகொடுத்தாக்கால்
கோபாலபெட்டி குறையாமலபொன்கொடுத்தால்
நேமமாகசுந்தரியை நிதானமிட்டுநான்தாரேன்

பெருமாள்சொன்னதை மந்திரிகள் திரியோதிரனுக்குச்சொல்வது.

அந்தவிசேஷம் அதுகேட்டுமந்திரிகள்
நல்லதென்றுதெண்டனிட்டு நடந்தார்களப்பொழுது
ஆறுசனைகடந்து அக்கரையேபோனார்கள்
திரியோதிரனுடனே செய்தியெல்லாஞ்சொன்னார்கள்
நல்லதென்றுசொல்லி நகைத்தான்திரியோதிரன்
பொக்கிஷக்காரரை போர்மன்னரையழைத்து
அஸ்தினபுரத்துக்கு அதிவேகமாய்நடந்து
ரொக்ககளஞ்சியத்தை நோக்கமுடன்தான்திறந்து
எழுலட்சம்ஒட்டையின்மேல் ஏற்றியந்தபொன்னையெல்லாம்
ஐந்துலட்சம்பானையின்மேல் ஆபரணமேற்றுமென்றார்
பெண்ணுக்குஉண்டான பூஷணங்களுள்ளதெல்லாம்
ஒன்றுங்குறைவில்லாமல் ஏத்தென்றுசொன்னானே

அப்படியே தான்போ யரண்மனைக்குட்புகுந்தார்
பொக்கிஷவாசல் புண்ணியர்கள் தான்திறந்து
ஒட்டகம்யானை ஒன்றாய்நிறைந்துவந்து
வந்துபொதிபிடித்தார் மகாராஜன்பொன்னுகளை
வேணுமென்றபூஷணத்தை வெகுவாய்பொதிபிடித்தார்
ஏற்றிவந்துவிட்டார்கள் இறங்குகின்றபாளையத்தில்
கண்டான் திரியோதிரன் களஞ்சியத்துபொன்னையெல்லாம்
கொண்டாடிக்கொண்டு குலுங்கிநகைகைத்து
அந்தவிபரமெல்லாம் அறிந்துபெருமாளும்
புத்திகெட்டுதான்திரியன் பெண்கேட்கவாராளும்
முன்னாலேதான்கொள்ளவந்து முனைகுலைந்துபோனானே
அர்ச்சுனன்தான்பார்த்து ஆகாயம்போனானே
பெண்ணைக்கொடுத்துவிட்டு பேய்போல்விழித்தானே
அர்ச்சுனன்தான்பார்த்து ஆண்மையுள்ளமைந்தனென்று
அர்ச்சுனன்மைந்தன் அபிமன்னனையும்பாராமல்
என்னையுந்தான்மனதி லீடாகப்பாராமல்
தன்னுடையதத்துவமுக தான்படைத்தஆண்மைகளும்
முன்பின்னுமெண்ணமல் முனைகுலைந்துபாராமல்
பின்னேவருகிற பிழைகளறியாமல்
வந்தானேபெண்கொள்ள மடையனிடபுத்திரனும்
நல்லதுநல்லதென்று நகைத்தந்தமாயவரும்
பணத்தின்வலுமையைத்தான் பாழாக்கயிப்போது
எண்ணிமனத்திலே எம்பெருமாள்தானுமப்போ
ஆற்றுநீர்வற்ற ஆயரவர்தானினைந்தார்
மாயமாய்ப்போக வரவழைத்தார்தங்கைதனை
அண்ணரழைக்க அறிந்துதங்கைதானடக்கி
மாரளவுகாலளவாய் வந்ததண்ணீர்தான்பார்த்து
திரியோதிரப்பெருமான் சேனையெல்லாமப்போது
நாளைபயணமென்று நகபத்தையடியுமென்றான்
தேரும்ரதமுந் திரளானராணுவமும்
ஆறுகடந்துஅப்போ அக்கரையில்வந்தார்கள்
யாயனிடபட்டணத்தில் வந்தமேதபாளையங்கள்
ஆயனிடபட்டணத்தில் அதுகாத்தண்டிறங்கி
திரியோதிரனுந் திரளானமந்திரியுடன்
கர்னன்சகுனிகள் கனதுரோணர்தன்னுடனே
ஆயன்பெருமா ளரண்மனையுட்புகுந்தார்
மன்னன்திரியோதிரனும் மாயவர்க்குதெண்டனிட்டு
ஆயனெழுந்திருந்து ஐவர்குருக்களைத்தான்
ஆசீர்வாதமென்று அவரவர்க்குசொன்னாரே
இருக்கச்சிலவு கொடுத்தாரேயெம்பெருமாள்
திரியோதிரனுக்குச் சிங்காதனமுமிட்டார்

குருக்கள்மார் தங்களுக்கு கூடசிங்காதனங்கள்
இருக்கவேயிட்டு யிருங்களென்றுரரப்போது
எங்கேவந்தீரென்று எம்பெருமாள் தான்கேட்டார்

திரியோதிரன் பெருமாளைப் பெண்கேட்டது.

மன்னன் திரியோதிரனும் வாய்திறந்து தானுரைப்பார்
பெண்கேட்கநாங்கள் பெருமையுடன்வந்தோம்
இலக்குணர்க்கும்சுந்தரிக்கும் இராசிப்பொருத்தமுண்டோ
எந்தன்மகன்லக்குணர்க்கு இசைந்திருக்குமையாவே
உந்தன்மகள்சுந்தரியை உகந்துதரவேணுமென்ன

அதற்கிசைந்து பெருமாள் பொன்கேட்பது.

அப்படியேதாரோமென்றார் ஆயன்பெருமாளும்
பக்தியுடன்சுந்தரிக்கு பிரியமுடனெத்தனைப்பொன்
அந்தப்பொன்னெந்தனுக்கு அளந்துதரவேண்டுமென்று
கொண்டுவந்தபொன்னையெல்லாம் கோபாலபெட்டிரொம்ப
அளந்துகொள்ளச்சொல்லி அன்பாகசொன்னனே

திரியோதிரன் பொருளைப் பெருமாள்
காத்தடிக்கச்செய்தது.

கோபாலப்பெட்டியைத்தான் கொண்டுவந்துவைத்தார்கள்
தெற்குவடக்கு திசைநான்குயோசனையும்
தக்கசதுர்முகமாய் தலப்பானைபோலிருக்கும்
அப்படிபோலொத்த அளவானபேழையிலே
கொட்டினார்பொன்னை கொற்றவருமன்னவரும்
ஏழுலட்சம்ஓட்டகத்தில் ஏறிவந்தபொன்னையெல்லாம்
பார்த்துபெருமாளும் பட்சமுடன் தானுரைத்தார்
பொன்பதராயில்லாமல் தூத்தியளவுமென்றார்
அப்படியேகொட்டி அம்பாரம்போட்டார்கள்
வாய்வுபகவானை மாயனுந்தியானித்து
காற்றடித்துபொன்பதராய் கடலிலேபோயொளிக்க
நேத்தியுடன்காத்தடிக்க நினைத்தார்பெருமாளும்
அப்படியேகாத்து அகோரமாய்தானெழும்பி
சூருவளிகாற்று சுழட்டியடித்ததுதான்
தூற்சவேபொன்பதராய் வெகுதூரம்போகுதுகாண்
ஆகாயந்தானெழும்பி அப்போதனுமாரும்
அம்பாரந்தானூற்றி வெளிப்பட்டாரிப்போது
நெல்லுகதர்போல பறக்குதுஅப்போது
வடப்பொதியிடச்சே மறுதேசம்போகுதுகாண்
திரியேதிரனுமப்போ சிறித்துமிகப்பார்த்தான்

கொண்டுவந்தபொன்னெல்லாம் கூடையரையாகவில்லை
பின்னையுமுண்டான பொக்கிஷங்களுள்ளதெல்லாம்
முன்னிருந்தபொக்கிஷங்கள் மூத்ததோர்தேடினதும்
தென்னமுடிமன்னன் திரியோதிரன்தேடினதும்
கர்னன்ஜகுனிகாட்சியுடன்தேடினதும்
எல்லாக்கனகமெல்லாம் எடுத்துவந்தாரப்போது
காற்றில்கழிந்து கடலிலேபோகுதுகாண்
ஆத்திதானளக்க அரைகூடையாச்சுதுகாண்
மன்னன்திரியோதிரனும் மனதுகலங்கினின்றான்
திரியோதிரன்கலங்கி திகைத்துமயங்குகிறதை
மாயன்பெருமாளும் மனதாலேதானறிந்து
கூடைமுக்காலாகாதென்று குறித்தார்பெருமாளும்
அப்படியேதானுமப்போ ஆச்சுது அக்கூடை
கால்கூடையானதும் கலியாணமானபின்பு
தருகிறோமென்றுசொல்லி சமாதானஞ்சொன்னனே
நல்லதென்றுசொல்லி நகைத்தார்பெருமாளும்
நாள்முகூர்த்தம்தந்திடவே நல்லபிராமணரை
அண்டையிலேதானழைத்து ஆலோசனைகள்செய்து
பஞ்சாங்கந்தான்பார்த்து பக்குவமாய்நாளுமிட்டு
ஜயவருஷம்வைகாசி தேதிபனிரெண்டில்
நட்சத்திரம்அவிட்டம் நல்லதிதிபஞ்சமியும்
வெள்ளிக்கிழமையிலே விடியவைத்துநாழிகையில்
இன்றெட்டாநாள்முகூர்த்தம் என்றுமேபாக்குமிட்டார்
பகல்முகூர்த்தமென்றுசொல்லி பாக்குமிட்டார்ராஜனுக்கு
பெண்கொள்ளத்தானிசைந்தான் பெருமையுடன்திரியன்
கொடுக்கவேதானிசைந்தான் கோபாலகிருஷ்ணனுமே
எல்லார்க்கும்பாக்குமிட்டு இன்பமுடன்பேசினரே.

திரியோதிரன் பந்தல் அலங்கரித்து

போகிறோமென்றுசொல்லி புறப்பட்டாரந்நேரம்
வந்தவர்கள்தங்களுட மாளிகையினுட்புகுந்து
பட்டணங்கள்தானறிய பேரிகைபோடுமென்றார்
கலியாணமென்றுசொல்லி கனபேரியடித்தார்கள்
தட்டிபறையடித்தார் தார்வேந்தரெல்லோர்க்கும்
பந்தலிடச்சொன்னார்கள் பட்டணங்களுள்ளதெல்லாம்
வேடிக்கையாகவேதான் விநோதங்கள்பண்ணுமென்றார்
அப்படியேநல்லதென்று அவர்களுந்தான்முனைந்தார்
துவாரகாபுரிதனிலே சொல்லியஅவ்விசேஷம்
திரியோதிரனும் திரளுடனேதான்வந்து
மாயனரண்மனையில் வந்துபெண்ணைகேட்டதுவும்
ஆயனதற்கு அமரிக்கைகொண்டதுவும்

பிரியமாய்த்தானிசைந்து பரியங்கள்வாங்கினது
பட்டம்பகலில் பகல்மூகூர்த்தமென்றுசொல்லி
எட்டுநாளென்றுசொல்லி இட்டாளும்பாக்குகளும்
சொல்லியிருக்கையில் சுந்தரியாள்தன்தோழி
செங்கழத்தாதி செட்டிக்கடைக்காக
வெளியேபுறப்பட்டு வீதியிலேபோகையிலே
கடைகள்பெருந்தெருவேகன்னியருமப்போழுது
பட்டணத்திலுண்டான பரிசனங்களத்தனையும்
தாதிமுகம்நோக்கி தனித்தனியேகேட்பார்கள்
சுந்தரிக்குகலியாணம் கூடிற்றோதோகையரே
இன்றெட்டாநாளோவென்று கேட்பார்களெல்லோரும்

தாதிசுந்தரிக்குச்சொல்வது

இந்தவிசேஷங்கேட்டு இடிவிழுந்தாள்தாதியரும்
அடித்துப்புரண்டு அழுதுநடந்தோடி
வந்தவழிதிரும்பி வாராளேசெங்கமலம்
கண்டாளேசுந்தரியும் காதலியாள்வாரதுக்கம்
ஏண்டியம்மாசெங்கமுனி என்னகுறைவுந்தனுக்கு
செலவுகொள்ளபோனயிடத்தில் செட்டியுன்னைவைதானோ
சரக்குகொள்ளபோனிடத்தில் சண்டைமெத்தவுண்டாச்சோ
பின்னேயொருவர் பிழைமெத்தசெய்தாரோ
திட்டியடித்தாரோ தீம்புமெத்தசெய்தாரோ
பஞ்சவர்க்குதாழ்வு பாக்கியரேவந்ததுண்டோ
அம்மான்மார்வார்த்தைக்கு யதிசயங்களுண்டோதான்
அத்தைதுரௌபதைக்கு ஆயாசம்வந்ததுண்டோ
மைத்துனனார்தன்னுடையவார்த்தைகள் தானுமுண்டோ
என்னடிதாதியாரே எனக்கறியச்சொல்லுமென்றாள்
செங்கமலத்தாதி சொல்லுவாள்சுந்தரிக்கு
தென்னமுடிவேந்தன் துரியோதிரன்பாவி
உன்னைமணம்புரிய வுடன்படிக்கைகேட்டதுவும்
மன்னன்பெருமாள் வரச்சொல்லிசொன்னதுவும்
பரியங்கள்பேசி பணம்வாங்கிக்கொண்டதுவும்
சரியாகச்சம்பந்தத் தாம்பூலம்வாங்கினதும்
சமமதித்தேவுன்தகப்பன் தனம்வாங்கிகொண்டதுவும்
கோபாலபெட்டியிலே கொட்டியளந்ததுவும்
இன்றைக்குஎட்டாநாள் இசைந்தமுகூர்த்தமென்று
பெண்கொள்ளவாரேனென்று பேசினான்துரியோதிரன்
பாரத்தமுக்குமிட்டான் பட்டணங்களுள்ளதெல்லாம்
இந்தவிசேஷமெல்லாம் கேட்டல்லோஎன்தாயே
உந்தனுடன்சொல்ல ஓடிவந்தேன்சுந்தரியே
என்றவளுஞ்சொல்லி யிருந்தாளேதாதியரும்

சுந்தரி தகப்பனிடம் வந்தது.

அந்தவிசேஷ மதுகேட்டுசுந்தரியும்
கதித்துகனலண்டி கண்கள் தனல்பறக்க
அவ்வலரிக்கண்கள்ரெண்டு செவ்வலரிபூத்ததுபோல்
அடித்துப்புரண்டெழுந்து அனியாயமென்றுசொல்லி
பாங்கியரைத்தானழைத்து பல்லக்குசோடியென்றாள்
கோத்தழுத்துபல்லக்கு பிடியுமென்றாள்கொம்பனையும்
ஏறினால்பல்லக்கில் எமலோகந்தானதிர
கோபமுந்தாபமும் கொண்டாளேயப்போது
வாராளேசுந்தரியு மாயனரண்மனைக்கு
காயாம்பூமேனியனார் கண்ணனுமப்பொழுது
மாயவருந்தானும் மகள்வரும்சேதிகேட்டு
தாஷ்டீகமான தங்கசிம்மாசனத்தில்
நீட்டினார்காலை நெடுகவிட்டார்முக்காட்டை
மூடியேதானும் பொய்யுறக்கம்கொள்ளுகிறார்
மாயன்பெருமாளே மன்னவனேநித்திரையோ
வெண்ணைதிருடியுண்ட மிகவிடைச்சிகையாலே
கட்டுண்டபுத்திகளை காட்டாதேமாயவரே
துருசாயெழுந்திரடா துன்மார்க்கசண்டாளா
கோஷ்டகுரலுமிட்டு கூப்பிட்டாள்சுந்தரியும்
ஐயாபெருமாளேயென் றலறியேகூப்பிட்டாள்
சேயப்பெருமாளுந் திருட்டுக்குரட்டையிட்டார்
மாயன்பெருமாளும் வயற்றிலறைந்துகொண்டார்
இரணியனைக்கொன்ற இராகவர்நித்திரையோ
மாரீசன்றனைக்கொன்ற மதிகேடாநித்திரையோ
இராவணனைக்கொன்ற இராமாநீநித்திரையோ
திராணியோதூற்றவர்க்கும் மார்க்கண்டசண்டாளா
தீரன்திரியோதிரன் வாய்ந்ததிரவியத்தை
திருடலையோவையாவே தீரங்கெட்டபுத்திபிதோ
கெடியதோர்வார்த்தை நஞ்சினைபிளந்தோனே
கடியதொருநித்திரையும் கனமாகநானறியேன்
அடியேனுன்பிள்ளை ஐயாநான்மனம்பொறுத்தேன்
கடிதானவார்த்தையுடன் கபடாநீயெழுந்திரடா
துடியாகப்பேசினவளை யான்சும்மாவிடுவதில்லை
அல்லடாநம்மா லறிவுகெட்டகோபாலா
இப்படியேசொல்லி எடுத்தெறிந்துகூப்பிடச்சே
ஆலித்தெழுந்திருந்தார் ஆயன்பெருமாளும்
தன்மகளைக்கண்டு தலைகுனிந்துகொண்டாரே

ஐவரையுங்கண்டு அடிவணங்கிதெண்டனிட்டாள்
தெண்டனிட்ட சுந்தரியை திடுக்கென்றுநாயெடுத்து
பொன்னானமேனி புழுதுபடச்சேதியென்ன
வந்ததொருகாரியத்தை வகையுடனேசொல்லுமென்றார்
எழுந்திருந்துசுந்தரிதான் எதிராகநின்றுக்கொண்டு
தகப்பனேநீயெனக்கு தாயாதியல்லவோடா
பெண்ணுக்குவீங்கியடா பனுதிபழிகாரா
இடபுத்திபிடரியிலே என்பார்கள்வையகத்தில்
மடபுத்தியானாயோ மதிகெட்டுப்போனாயோ
திரியோதிரன்பெண்ணுக்குச செலவுகளில்லையடா
பொன்னும்பொருளும் புலையன்படைக்கலையா
திரவியந்தான்வேண்டுமென்றார் தேவியரைக்கொடுத்துவிடு
அத்தைமகனிருக்க அயல்நாட்டான்வருவானோ
மாமன்மகனிருக்க மறுநாட்டான்வருவதென்ன
பொன்னாசைகொண்டு பெண்ணைநீயிர்க்கலாமோ
குள்ளநரிபோலே கொடிமன்னன்வீற்றிருப்பான்
அப்போதுமாயன் அகமகிழ்ந்துகொண்டாட
அருமைமயிலே அழகான சுந்தரியே
குள்ளநரிக்கதையை கூறுமென்றுதானுரைத்தார்

சுந்தரி தகப்பனுக்கு உவமான்மாகச்சொல்லிய
குள்ளநரிக்கதை.

கள்ளப்பெருமாளே கள்ளனே கேளுமென்று
வந்தவழிதனிலே மாட்டிறைச்சிதானிருக்க
தருகுள்ளநரிகண்டு குடுகுடென்றோடிவந்து
மாட்டிறைச்சிதன்னை வகையாகக்கௌவிக்கொண்டு
ஆற்றங்கரையில் அடவுடனேவரும்போது
இடதுபுறமாக யிருக்கின்றதண்ணியிலே
வாளைமீன்துள்ளி வலதுபுறத்தில்விழ
வாய்கரியைநிலத்தில்வைத்து வாளையைப்பிடித்துதாம்
வாளைமீன்தப்பி வகையாற்றிற்தான்விழவே
நிலத்தில்வைத்தமாட்டிறைச்சி நின்றதொருசெம்பருந்து
காலிலிடுக்கிக்கொண்டு கானகமேபோய்விடச்சே
மாட்டிறைச்சியும்போச்சு வாளமீன்தான்போச்சு
வானத்தைப்பார்த்து மதிமறந்துநின்றதுவாம்
அந்தப்பருநதைப்போல் அபிமரென்னைகொண்டு
போவார்காண்மாயவரே புத்திக்கெட்டஐயாவே
குள்ளநரிபோலே குடிகெடுவான்திரியோதிரன்
பார்த்திருப்பானப்போது பல்லைதிறந்துக்கொண்டு
இந்தக்கதைகேட்டு இயலானமாயவரும்

சிந்தைகுளிர்ந்து திருமுகந்தானோக்கி
பின்னையுமேமமாயன் பிரியமுடன்சொல்லலுற்றார்
அல்லகான்சுந்தரியே அழகுமயிலாளே
திரியோதிரனுக்கு திரவியங்கள்மெத்தவுண்டு
இராச்சியங்களெல்லாம் ராகமுடியோனும்
ஒருகுடைகீழாக உலகமெல்லாமாளுகிறான்
ஆளும்திரியோதிரனார் அவன்மகன்லக்குணர்க்கு
பெருமையுள்ளமன்னன் பலத்தால்பெரியவர்கான்
உன்னழகுக்கேற்ற ஒளிவுள்ளலக்குணன்தானே
உன்-அத்தைமகனென்றாய் அழகுகெட்டவாலபீமன்
மொட்டாலையன் முட்டிக்கால்தட்டியவன்
நாடுதனிலேபிச்சை நலமாகயெடுக்கிறானே
என்றுபெருமாள் எடுத்துரைத்தாரிவ்வார்த்தை
மாயன்மகள்சுந்தரியாள் மனஞ்சலித்துத்தான்கேட்டு
திரியோதிரன்பணமோ திரளாகப்பேசுகிறாய்
ஆட்டிடையாகள்ளா அடடாகுடிகேடா
ஒருவன்பெண்ணை ஒருவன் இச்சித்தகதைகேளாய்
உபாத்தியாயர்கதைபோல் வருகுமடாயிப்போது
என்றுதான்சுந்தரியாள் இயலாககூறலுற்றாள்

இதுவும் உவமானமாகச் சொல்லிய உபாத்தியாயர்கதை.

அப்போதேகேட்டு ஆயன்மனமகிழ்ந்து
உபாத்தியாயர்தன்கதையை வகையாகச்சொல்லுமென்றார்
அப்போதுசுந்தரியும் அடைவாகச்சொல்லுகிறாள்
ஆயனேவுன்னைப்போல் அறிவுகெட்டமன்னவனும்
இராச்சியத்தையாண்டு நாடொருமைசெய்கையிலே
அவனுக்கொருமகள் அதிகசவுந்தரியாள்
அந்தநல்லபெண்ணை அழகுள்ளபூங்கொடியை
ஐந்துவயதில் அறிவறியவேணுமென்று
வைகுந்தனென்னும் உபாத்தியாயரையழைத்து
வாத்தியார்பள்ளியிலே மகளைப்படிக்கவைத்தார்
ஐந்துவயதில் அறிவுமுதலாக
ஆத்திச்சூடி அரிவானமுந்திலக்கம்
கல்விஒழுக்கம் கொன்றைவேந்தொருவேழமுகம்
ஒன்பதாம்வயதில் உயர்ந்தநீதார்எண்சுவடி
பத்துவயதில் பாரச்சுவடியுமே
நிகண்டுதிவாகரமும் நிகண்டால் இலக்கணமும்
காரிகையுரைச்சொல் கனல்நெடியவெண்பாவுடன்
இத்தனைதானபடித்து இயல்பாய்வரும்போது
ஒருநாட்பொழுதிலே உயர்ந்தபள்ளிக்கூடத்தில்
பொழுதுபோக்குமுன்னே பிள்ளைகளையனுப்பிவிட்டு

வைகுந்தனென்ற வாத்தியாரப்போது
மன்னன்மகளை வகையாகத்தானிறுத்தி
அடிபெண்ணேயுன்பேரில் ஆசைகொண்டேன்வெகுநாளாய்
மாய்கையென்றவாசை மறப்பதில்லை பெண்ணணங்கே
என்னாசைதீர்க்கவென்று இயம்பினார்வைகுந்தன்
அப்போதுமங்கையரும் ஐயையோவென்றழுது
என்னபுத்திநீதான் இயம்பலுற்றீர்சற்குருவே
ஐயாவேநீதானும் அவ்வார்த்தைபேசாதீர்
படிபபித்தஉபாத்தியாயர் பாங்காகஎன்தகப்பன்
கைச்சாரம்செய்யாதீர் கர்ணரேயென்குருவே
என்றுதான்மன்னன்மகள் இவ்வார்த்தைதானுரைக்க
அப்போவிசாரப்பட்டு ஆனந்தவைகுந்தன்
அல்லடிபெண்ணே ஆரணங்கேசொல்லுகிறேன்
நீஇதைமெத்தசொன்னாய் நிலைமைபுன்னவாய்மையிலே
நீசொன்னபடியே நிற்குதோபூவுலகில்
ஒருநாளைக்கானாலும் உயர்தபஞ்சணைமீதில்
இருவருங்கூடி இளமான்கனையதுபோல்
விளையாடிநீவாராய் வெற்றியுள்ளபூங்கொடியே
உபாத்தியாயர்சொல்ல மங்கையருமேதுரைப்பாள்
ஐயாஉனக்கடியாள் ஆண்பிள்ளை அல்லவே
மெய்யாகபேசுகிறீர் வீண்பேச்சுவிட்டுவிடும்
எனறுசொல்லிமங்கை வியலாகவுரைத்துவிட்டாள்
அப்போதுஉபாத்தியாயர் ஆனதயாமுடன்
மங்கையரைவீட்டிற்கு வகையாயனுப்பிவிட்டான்
உபாத்தியார்தானும் வஞ்சிபகைநெஞ்சில்வைத்தான்
இராசாமகளும் நடந்துசென்றால்வீட்டுக்கு
வீட்டுக்குத்தான்புகுந்து வீராமுள்ளமங்கையரும்
கூட்டத்தொகைகூட்டும் கொத்தானட்டத்தகத்தை
வைத்துமேதானும் மங்கையருமிருந்துவிட்டாள்
மற்றநாட்காலையிலே மங்கையரும்தான்திறண்டாள்
அப்போதுராஜன் அகமழிந்துகொண்டாடி
வைகுந்தனென்னும் வாத்தியார்தனையழைத்தான்
அப்போதுவாத்தியார் ஆனதொருவியாகூலமாய்
என்னசெய்வேனென்று எங்குமனந்தளர்ந்து
மன்னர்மனைக்கு வைகுந்தன்வந்துவிட்டான்
இராசாவுமப்போது நலமுடனேசொல்லுகிறார்
என்-அருமைமயிலாள் ஆரணங்குயென்மகளும்
வெள்ளிக்கிழமையிலே விடியவொருசாமமுண்டு
உத்திராடநட்சத்திரம் வுகந்தபிராதாமையில்
இந்தநல்லவேளையிலே இயலானயென்மகள்தான்
புட்பவதியானாள் புராணத்தைபாருமென்றார்

அப்போதுவைகுந்தன் ஆனதொருஏடெடுத்து
சாஸ்திரத்தைப்பார்த்து சலிப்பாகத்தானிருந்தான்
அப்போதுமன்னன் அடவாகத்தானுபார்த்து
உபாத்தியாயர்நீதான் மதிமறந்துயிருப்பானேன்
சொல்லுமையாவென்று சொன்னாரேராசாவும்
வைகுந்தவாத்தியார் மனதுதுயரமுடன்
என்னசெய்வோம்ராசாவே யியல்புடையவுன்மகள்தான்
உன்மகள்திரண்டதுதான் உலகுக்கழிவுவரும்
ஆண்டவனேராஜாவே அரண்மனைக்கழிவுவரும்
இந்தவொருபெண்ணைநீ இயல்பாகவைத்திருந்தால்
சீமையிலெங்கும் நீர்பிடிக்குமப்போதே
என்றுசொல்லிவாத்தியார் இவ்வார்த்தைதானுரைக்க
மன்னவனுமப்போது வாயிலடித்துக்கொண்டு
வைகுந்தவாத்தியார் வகைவார்த்தைஏதுசொய்வான்
பொன்பேழைகொண்டுவைத்து பெண்ணையதினில்வைத்து
தாலியுங்கூறையும் தரிக்குமுடமைகளும்
ஒருவரிசை உடமையெல்லாம் ஒப்பமுடனதில்வைத்து
ஐந்துகட்டுகட்டி அரக்குமுத்திரைதான்போட்டு
ஓடுகிறவாற்றிலே ஒழித்துவிடும்ராஜாவே
தோஷங்களெல்லாம் தொலைந்துபோமத்தோடே
அப்போதுமன்னன் ஆனவியாகூலமாய்
பொன்பேழைகொண்டுவந்து பெண்ணையதனில்வைத்து
ஐந்துகட்டுகட்டி அரக்குமுத்திரைதான்போட்டு
ஐயோமகளேயென்று அழுதானேமன்னவனும்
அத்தைமகனிருக்க ஆற்றோடேபோறாயோ
அழுதுபுலம்பிமன்னன் ஆற்றிலேதள்ளிவிட்டான்
உபாத்தியாயரப்போது வுபாயமாய்தானெழுந்து
பள்ளிக்கூடத்து பசங்களையிட்டுக்கொண்டு
புனலாற்றங்கரையில் பிரியமுடனோடிவந்து
பேழைவருகுதடா பிடியுங்களென்றுசொன்னான்
வழிபார்த்துக்கொண்டிருந்தான் வைகுந்தனப்போது
அப்படியங்கே யபார்ந்திருக்கும்வேளையிலே
பேழைவருகுதடா புனலாற்றங்கரையோரம்
அவனுடையஅத்தைமகனவ்விடத்தில்வேட்டைவாரான்
வேட்டைகளாடி வேங்கையென்றுதான்பிடித்து
கூண்டிலடைத்துக்கொண்டு கொற்றனுங்கொண்டுவாரான்
வேட்டையுஞ்சிக்காமல் விடுபட்டுவாரானும்
அவ்வேளைபேழை ஆற்றோடேவந்ததுகாண்
கண்டுமேமன்னவனும் தனித்துமனமகிழ்ந்து
ஆரடாசேவகரே ஆனதொருமந்திரியே
பேழையடாஉங்களுக்கு பேழைமுதலெந்தனுக்கு

என்றுசொல்லிராஜா இயல்பாகத்தானுரைப்பான்
நல்லதென்றேடியே நாலுபேர்பிடித்தார்கள்
பேழைதனைக்கண்டு பிரியமுடன்வைத்தார்கள்
பேழைபெண்ணுகிலொரு பொற்கொடியுந்தானிருந்தாள்
இராஜாக்களுக்கேற்ற நல்லதொருபெண்ணாச்சு
எங்களுக்கேவாழும் விலைவரியுந்தானாச்சு
நீ ஆரென்றுகேட்க அப்போதுரைக்கலுற்றாள்
பொல்லாதவேளையிலே புத்தியறிந்தேனென்று
ஓடுகிறதண்ணீரில் உள்ளேதான் தள்ளிவிட்டார்
வந்தவரலாற்றை வகையாகச்சொல்லிவிட்டாள்
கேட்டந்தராசாவுங் கிளிமொழியைத்தானெடுத்து
பெண்ணிருந்தபேழையிலே பெருவேங்கைதனையடைத்து
ஓடுகிறதண்ணீரில் விட்டுவிட்டானுத்தமனும்
மாமன்திருமகளை வகையாகத்தானெடுத்து
பல்லக்கில்வைத்துக்கொண்டு பண்புடனேவந்துவிட்டார்
அப்போபேழைவருகிறதைப் புனலாற்றங்கரைதனிலே
வாத்தியார்கண்டு மனதுசந்தோஷமுடன்
வாசிக்கும்பிள்ளைகளை வகையாகத்தான்பார்த்து
ஆற்றில்போம்பேழைதனை யன்பாய்ப்பிடியுமென்றான்
நீந்திபிடித்தார்கள் நேர்த்தியானபேழைதனை
எட்டிப்பிடித்துமே எடுத்தார்கள்தலைமேலே
எடுத்துவந்தபேழைதனை வைத்தார்கொலுதனிலே
பரிவுடனேதன்வீட்டில் பாங்காகத்தானிறக்கி
பள்ளிக்கூட்டத்து பசங்களைதானழைத்து
மங்கிலியந்தான்தரிப்பேன் வாழ்வேந்தன்மங்கையற்கு
தார்வேந்தர்வைகுந்தனார் சதாஸ்தொன்றுசொல்லுமென்றார்
அப்போதுவாத்தியா ரன்பாகத்தானழைத்து
சோபனக்கலியாணம் சீக்கிரமாய்முடிக்கவேணும்
தலைவாசலையடைத்து தாப்பாளும்பூட்டிவிட்டான்
பேழையுடன்வந்த பேடைமயிலாளேயென்று
பூங்காவனந்தனிலே போயிருக்கச்சொன்னானே
கலியாணசோபனம் கலந்துசெய்வோமென்றுசொல்லி
கட்டையவிழ்த்தானே கட்டழகன்வைகுந்தன்
வேங்கையுந்தானெழும்பி மிகவேபசிதீர
குடலைப்பிடித்துதங்கே குடித்துதேவைகுந்தனை
வேங்கையுமப்போது வெளிபட்டுபோனதுவே
அந்த-வேங்கையோடொக்குமையா விஜயன்மகன்மைத்துனரும்
வாத்தியோடொக்குமையா மடையன்பெற்றலக்குணனும்
மாயன்பெருமானே மன்னவனேகேளுமினி
கற்றாழைமேலே கல்லுவண்டிவந்தாக்கால்
கல்லுக்குசேதமோ கற்றாழைக்குசேதமோ

கல்லுவண்டிக்கொக்குமையா காண்டீபன்பெற்றபிள்ளை
கற்றாழைகொக்குமையா காண்டீபன்பெற்றபிள்ளை
கொக்குநதிரளிலே இராசாளிபூந்தாப்போல்
கொக்குக்குஒக்குமையா குருடன்பெற்றதன்மகனும்
இராசாளிக்கொக்குமடா நல்லத்தைதன்மகனும்
அவர்களுடைசவுரியம் அறிந்துமிகக்கண்டறிந்து
பஞ்சமர்கள்சாதிவகை பாவியறியாயோடா
ஐவருடவீரியமும் ஆண்மையறியாயோடா
முன்னேயுந்தங்கையரை மொய்குழலாளத்தையரை
இரியோதிரனும்வந்து தீவிரமாய்கொள்ளுகைக்கு
பலராமரிடத்தில்வந்து பரியமதுதான்கொடுத்து
மணமேலேதானிருந்தி மங்கிலியந்தானெடுக்க
அப்போதுஅர்ச்சுனரும் ஆகாயமாகவந்து
சந்நியாசிவேடங்கொண்டு தேர்விசயனப்போது
தாலியைதான்பிடுங்கி தாலிகட்டிஅப்போது
அர்ச்சுனனுர்தேவியென்று அறியவேதாலிகட்டி
வெட்கஅடித்தாரே விஜையனுரென்னம்மாள்
அப்படிக்கொற்றவரை அறிந்திருந்துஎன்தகப்பன்
பஞ்சையாநீயும் பணத்துக்குஆசைவைத்து
உன்னுடையசாதிபோலே வுத்தமனேபார்த்தாயா
மடபுத்தியாலே நினைந்தாயோமாட்டிடையா
பெண்சாதிதானிழந்து போனாயோமுன்பிறப்பில்
அரக்கனும்தேவியைத்தான் அழைத்தோடிப்போனானே
சீதையின்தேவியரை சிறையிலேவைத்தானே
ரோஷமுனக்குண்டோ துரோகிப்படுவானே
இப்படிசொல்லியல்லோ ஏகினாள்சுந்தரியும்
இன்பமுடன்கேட்டு இருதயத்தில்தானகைத்து
வாயைத்திறவாமல் மறுவார்த்தைபேசாமல்
தலையைக்குனிந்துகொண்டு சுவாமியிருந்துவிட்டார்

சுந்தரி தன்தகப்பனிடத்தில் சப்தமிட்டது.

அப்போதுசுபத்திரையும் ஐவர்மனமறிய
பரித்தியும்ஆமணக்கு பரிவாய்விளைத்திடுவேன்
துவாரகாபுரியெல்லாஞ் சுட்டுக்கரியாக்கி
இரியோதிரன்கூட்டம சேனைகளுள்ளதெல்லாம்
கரியாக்கிசுட்டு கடலிலேபோட்டுவைப்பேன்
ஆகாதலக்குணனை ஐந்துகுடுமிவைத்து
தலையைச்சிரைக்கசொல்லி சவுக்காலேதானடித்து
அரசாணிக்காலுடனே அவனையுங்கட்டிவைத்து
ஆயிரம்பெருந்தீயை அவன்தலையிலேதிவைத்து
மற்றுமுள்ளபேரையெல்லாம் மரத்துடனேகட்டிவைத்து

அத்தைமகனென்புருஷன் அபிமன்னராஜாவை
தத்துவமாகதாலி தப்பிக்கப்பண்ணிவைப்பேன்
என்றுசொல்லிசுந்தரியும் ஏசிசபதமிட்டாள்
மாயன்பெருமாளும் மனதுபிரியமுண்டு
தாயேமகளேநீ தாங்கவேசுந்தரியே
பஞ்சவர்களரன்மனையெல்லாம்பார்த்துமகிழ்ந்தேனம்மா
அவர்கள்காடேகுடியிருப்பு கானலைகைவிளக்கு
வீடேதுமில்லை மிகவாழத்தேசமில்லை
நாடேதுமில்லை நல்லமனை தானுமில்லை
காணியுமில்லை கமுகுள்ளநாடுமில்லை
ஏழையர்களானாலும் இந்தவுலகிலில்லை
ஊருமில்லைபேருமில்லை உற்றாநரவுமில்லை
ஆனபடியாலேதான் அஸ்தினைப்புரிக்கரசன்
தேசத்தழகன் திரியோதிரப்பெருமான்
ஆனையுள்ளான் சேனையுள்ளான் அண்டாதனமுமுள்ளான்
தேசமெங்கும்ஆளவல்லான் சேவகங்கள்பண்ணவல்லான்
அவனுக்கெதிருமில்லை அரசர்கள்யாருமில்லை
ஆனபடியினாலே அப்பாகேள்கண்ணேயிப்போ
இலக்குணர்க்கென்றுசொல்லி நாள்முகூர்த்தம்தானுமிட்டேன்
ஆளவிடந்தேடி அரசுபுரிந்தேனம்மா
வாழுமிடந்தேடி வாழைபதித்தேனம்மா
ஒன்றார்க்குறைவுமில்லை உத்தமியேயுந்தனுக்கு
அப்போதுசுந்தரியும் ஆனதுயரமுடன்
வந்தாளே தாய்மனைக்கு மாளிகையினுட்புகுந்தாள்
ஆத்தாளைக்கண்டு அடித்துப்புரண்டழுதாள்
அலமேலுமங்கையரே ஆட்டிடையன்தேவியரே
மங்கையரேநாயகியே மாட்டிடையன்தேவியரே
இப்படித்தான்செய்வாரோ ஈனங்களில்லாமல்
சாதிகெட்டவுங்களுக்கு சாவுசற்றுமில்லையோதான்
பணத்துக்கும்பொன்னுக்கும் பரதவித்துநிற்கிறீர்களோ
திரியோதிரன்சகுனி சீரைக்குலைத்தானே
பாவிதிரியோதிரன் பணமெத்ததந்தானோ
என்னையவன்கொள்ளவந்தால் இளமையிலேகெட்டழிவான்
வேசிமகன்லக்குணர்க்கு விரவிற்கொடுக்கநீதியுண்டோ
தாசிமகன்லக்குணர்க்கு தலைசாய்க்கநீதியுண்டோ
சுண்டுவிரல்பிடித்து சுத்திவரநீதியுண்டோ
ஒருதாலியென்றிருந்தேன் உலகத்திலுள்ளபடி
இருதாலியென்றிருக்க எந்தன்விதிவசமோ
ஜாண்கயிறுபஞ்சமோ என்னுயிரைமாய்ப்பதற்கு
நஞ்சுமலரியும் கிடையாதோராச்சியத்தில்
பொன்னுங்கயிரெடுத்து பொருந்தகழுத்திலிட்டு

பூப்போலஎன்னுயிரை போக்கவறியேனோ
ஆகாப்புனலுக்கு ஆரைதான்சொன்னீர்களோ
வெட்கந்தானில்லையோ மெல்லியரேதாயாரே
திக்கற்றவுங்களுக்கு தெய்வத்துணையாமோ
வயிற்றைக்கிழித்துதான் வாளைவாங்கிவைப்பேன்
இருவரையுங்கொன்று எமலோகமோட்டிடுவேன்
அனைவரையுங்கொன்று அனுப்புவேன்ஆகாசம்
என்றுசொல்லிசுந்தரியும் இட்டாள்சபதமெல்லாம்
மகள்முகத்தைப்பார்த்தாளே மங்கையலமேலும்
என்மகள்சுந்தரியே இந்தவகைநானறியேன்
கலியாணப்பேச்சுவகை காதிலேயுங்கேட்டறியேன்
திரியோதிரன்சேனை திரள்வந்ததென்றார்கள்
அவர்கள்தான்சொல்லக்கேட்டேன் மறுவார்த்தைநானறியேன்
பெண்வந்துகேட்ட பேச்சுகள்நாறியேன்
என்றுசொல்லிசுந்தரிக்கு எடுத்துரைத்தாலட்சுமியும்
நல்லதுமல்லவென்று நடந்தாளேசுந்தரியும்
தாதியுடன்கூட தன்மனைக்குவந்துவிட்டாள்
மாணிக்கத்தண்டிலேறி வந்தாளேசுந்தரியும்
அரன்மனைக்குவந்து ஆசனத்தின்மீதிருந்து
ஐந்துபேர்தாதிகளை அண்டையிலேதானழைத்து
ஆலோசனைசெய்து ஆங்காரக்கோபமுடன்
அபிமன்னராஜனுக்கு ஆளனுப்பவேணுமென்று
ஓலையெழுதென்று உத்திரவுசொன்னாளே
தாதிகளுமப்பொழுது சம்மதித்துக்கொண்டார்கள்

சுந்தரி அபிமன்னனுக்கு ஓலை யெழுதுவது

ஓலையெழுதவென்று உத்தமியாள்சுந்தரியும்
வண்ணக்குருத்தோலை வாரியலளொப்பமிட்டு
ஈழப்பனையோலை இருபக்கம்காம்பரிந்து
தாளிப்பனையோலை தலைப்பக்கம்காம்பரிந்து
விநாயகரைப்பூசைபண்ணி விக்கினரைத்தோத்தரித்து
சிவசிவாவென்று சிவனாரைதோத்தரித்து
வந்தெனக்குமுன்னடவாய் வள்ளிமணவாளா
மாயோன்மருகோனே மலர்ப்பாதந்தெண்டனிட்டு
மாமிசுபத்திரைக்கு மனமிரங்கிதெண்டனிட்டு

மைத்துனரேயுன்பாதம் மலர்தூவிதெண்டனிட்டேன்
அபிமன்னராஜனுக்கு அடிவணங்கிதெண்டனிட்டேன்
ஓலையெழுதுகைக்கு உண்மையொன்றுநானறியேன்
வாசகங்கள்தானெழுத வகையறியேன்மைத்துனரே
என்றுசொல்லிசுந்தரியும் எழுதுகிறுள்வக்கணைபாய்
தேசத்தழகுமன்னன் துரியோதிரன்சகுனி
கர்னனுடனே கடல்போலநிறைந்தது
வல்லமைபேசியங்கள் மாயவரைபெண்கேட்டான்
நல்லமுகூர்த்தம் ராசிகளுந்தானபார்த்து
லக்குணர்க்குவேணுமென்று நாள்பார்த்துகொண்டானும்
பொன்மெத்ததாரோமென்று பொருள்களைத்தான்கொடுததார்
மன்னர்பெருமாளும் மதிமயங்கியிப்போது
செல்லப்பெருமாளுந் திரவியத்தைவாங்கிவிட்டார்
பொன்மெத்தவாங்கி பெருமாளுடன்சம்மதித்து
என்னையந்தலக்குணர்க்கு இசைந்துகொடுக்கவே
பகல்முகூர்த்தமென்றுசொல்லி பாக்குகள்தான்மாற்றி
இன்றைக்குயெட்டாநாள் இசைந்தசுக்ரவாரமென்று
பெண்முகூர்த்தமிட்டு போனன்துரியோதிரனும்
தேசத்தழகுமன்னன் சூரியனும்போனபின்பு
இந்தவிசேஷமெல்லாம் என்தாதிகேட்டுவந்து
சொல்லிஞலெந்தனுக்கு தோழியவள்செங்கழனி
செங்கழனிசொல்லவேநான் சிந்தைகரைந்தழுதேன்
அப்போதுமாயாணடை அடித்துப்புரண்டழுதேன்
பேசாதுபேசி பெருமாளுடன்சண்டையிட்டேன
என்னசண்டைசெய்தாலும் ஏறெடுத்துப்பார்க்கவில்லை
என்தகப்பன்முன்பாக இட்டேன்சபதமெல்லாம்
அஸ்திஞபுரிநகரம் ஆனதுவாரகையும்
பரிசுத்தமாகக்சுட்டு பாழாக்கிபோட்டிடுவேன்
சுட்டுகரியாக்கி சூரைகளாடிவிப்பேன்
எட்டுதலைலக்குணனை எட்டிமயிர்பிடித்து
கொள்ளவந்தலக்குணனை குடிமிதனைசிரைத்துவைத்து
கள்ளன்குருடனைநான் கடுகதலைசிறைத்து
அபிமன்னர்வாளாலே ஐந்துகுடுமையிட்டு
அரசானிகாலோடே அவனையுங்கட்டிவைத்து
ஆவின்சாணிகொண்டு அவன்தலையில்லப்பிவைத்து
ஆயிரம்பெருந்திரியாய் அவன்தலையில்விளக்கேற்றி
மணமேலேநானிருந்து மைத்துனரேயுன்கையால்
மங்கிலியங்கட்டி மகிழ்ந்திருப்பேனென்றுசொல்லி
சபதங்கள்தானுமிட்டு தாய்மனைக்குநான்போனேன்
சண்டைமெத்தநான்கொடுத்தேன் தாயாருடன்கூட

சத்தியங்கள்கூறினாள் தாயாரறியேனென்று
பின்னையுமெத்த பேசிசபதமிட்டேன்
சபதமழியாதே தயவாகமைத்துனரே
சிவாசிவாமைத்துனரே செய்தருளுமங்கிலியம்
வந்துநீபெண்ணையிப்போ மங்கிலியங்கட்டுமெனறாள்
பள்ளிக்கூடந்தனிலே வளர்ந்திருப்பேனப்போது
பச்சைகிளிக்கியைப்போல் பத்தாவேனானிருந்தேன
கஞ்சைகிளிக்கியைப்போல் கூடத்திரிந்தானே
அப்படித்தானெண்ணாதே அபிமன்னராசாவே
வளர்ந்தேன சமைந்தேன வறிவுமிகவானேன
மயிரழகைக்கண்டாலே மயங்குவீர்மைத்துனரே
கொண்டையழகைக்கண்டால் கொற்றவனேநீதறியாய்
நெற்றியழகைக்கண்டால் நீபொருக்காய்மைத்துனரே
மூக்கழகைக்கண்டால் மூர்ச்சையாய்நீவிழுவாய்
கண்ணழகைக்கண்டால் கலைத்திடுவாய்மைத்துனரே
கண்புருவம்ரெண்டழகும் காமனார்வில்லதுபோல்
மேற்புருவம்யிரண்டு மேப்பிலைசாயலையும்
சீவிமுடிந்தகொண்டை சிறுத்தபம்பாம்போலே
மனவைவரைதான மயக்கும் மதிமுகத்தினதிசயமும்
வடிவானகாதரண்டும் வள்ளிக்கொடியதுபோல்
கூறியமூக்கிரண்டும் குமிழம்பழமதுபோல்
தாயழகைக்கண்டால் மயங்குவாய்மைத்துனரே
பல்வரிசையாணிப் பவழமுத்துபோலிருக்கும்
தோளழகுமைத்துனரே சொல்லுகிறேனநீர்கேளும்
மூங்கிற்தறுத்ததுபோல் மூளைத்தயிருதோளழகும
மார்பழகைச்சொல்லுகிறேன மைத்துனரேநீர்கேளும்
அகண்டமணிமார்பும் ஆபரணபூஷணமும்
இரண்டுஸ்தனமிரண்டும் செண்டானபந்ததுபோல்
ஒப்புடனேநானும் ஒளிவாயிருக்கிறேன்காண்
மட்டிடப்போகாது மைத்துனரேஎன்னழகு
ஆலிலைபோலாக அமர்ந்ததிருவயரும்
இடையழகுசொல்ல எனக்குத்தெரியாது
சிங்கத்துடையென்று செப்புவார்தோழியர்கள்
நடையழகுமைத்துனரே நல்லன்னம்போலிருக்கும்
முழங்காலின்பொழகோ முனைதிராசுபோலிருக்கும்
கணுக்காலின்சீரழகும் கணைத்தவிரால்போலிருக்கும்
குதிக்காலின்பேரழகும் குவிந்தசெண்டுபோலிருக்கும்
பொருந்தியபாதமிரண்டும் புத்தகம்போலிருக்கும
திருந்தியவிரலனைத்தும் செப்பமுடியாது
பவழம்பதித்தாப்போல் பாதவிரலழகும்

மைத்துனரேநீர்வந்தால் மயங்கிவிழுந்திடுவீர்
அரம்பயரைபார்க்கிலும் அதிகவழகாயிருக்கும்
மேனகைதிலோர்த்தமையு மெல்லியெனக்கீடல்லவே
மன்மதன்தேவியிலு மற்றமழகாயிருப்பேன்
இப்படியாகநான்வளர்ந்து இருக்கிறேன்பத்தாவே
கொஞ்சமென்றுபாராதே கோபங்கள்வையாதே
உம்மைநினைத்து உமதுகணையாழியைநான்
கண்களோடொத்தி களித்துப்படுத்திருப்பேன்
இப்படியாகசெல்வி யெழுதினாள்வோலையிலே
அவ்வேடுவிட்டு மறுவேடுதானெடுத்து
கோபித்தெழுதுகிறாள் கோபாலன்றன்மகளும்
பெண்ணினவயிற்றிலே பெண்ணாய்பிறந்தோனே
அருமைகுலைந்தேனே ஆக்கினைக்குள்ளானேன்
உளுத்தமரமானேன் வுள்ளூருசெக்கானேன்
பட்டமரமானேன் பாழுருசெக்கானேன்
கட்டைமரமானேன் கன்றுகட்டுந்தும்பானேன்
கெட்டமரமானேன் கேடுகட்டுந்தும்பானேன்
மட்டைமரமானேன் மாடுகட்டுந்தும்பானேன்
கானலிலேகாய்ந்த கல்லானேன்கண்மணியே
எட்டுப்புறத்திலே எழுத்தானேன்கண்மணியே
நாட்டுப்புறத்திலே நட்டநடவானேன்
ஆற்றில்கரைத்த புளியானேன்ஆணழகா
சேற்றில்கவிழ்த்த தேனானேன்தேர்வேந்தா
விழலுக்கிறைத்த நீரானேன்வித்தகனே
கானகத்திற்பெய்த மழையானேன்பத்தாவே
அங்காடிகிட்ட பதரானேன்ஆண்டவனே
இடையன்வெட்டுங்கொம்பானேன் என்னுடையபத்தாவே
மடையன்வெட்டுங்கொம்பானேன் மன்னர்பெருமானே
தாய்தகப்பனென்னை சதிசெய்துவிட்டார்கள்
நீரிப்போவந்தால் நிற்பேன்நிலைநிற்பேன்
வாராமற்போனால் மாண்டிடுவேன்மைத்துனரே
என்னுணை மைத்துனரே என்தகப்பனதன்னுணை
மாமனமாருணை மடிவேனுனமனனவனை
போகயனம்வருமோ புத்திகெட்டுப்போனேனே
ஓலைகண்டபோதேதா னோடிவாமைத்துனரே
ஆகாப்புலையன அறிவாளரண்மனையிலே
நீதிரனைசொனனேனே நின்னையங்கள்தப்பாது
நாளையதினந்தான நடக்தோடிவாருமெனறான்
வாருமங்நீயிருந்தாய் மானிடர்களெல்லோரும்
இருதாலிகட்டியெனறு எசுவரொத்தனையும்

நம்முடையஜாதியிலே நடக்குமோராஜாவே
புருஷனொருத்தனென்று பூரித்தேனராஜாவே
புருஷனிருவரென்று பிரித்தானேயாண்டவனும்
அதுவுந்தானில்லாமல் அபிமன்னராசாவே
கொண்டபெண்ணை விட்டாலும் குறித்தபெண்ணை விடுவாரோ
பெண்ணைவிட்டாரென்று பேச்சேச்சுமாகிவிடும்
கர்த்தாவேமைத்துனரே கடுகவேவந்திடுங்காண்
லக்குணனைக்கொண்டு ரணபேரிபோட்டுவைப்பேன
அவனையும்பிடித்துவந்து அரசாணிக்காலோடே
சிக்கெனவேதானகட்டி சிரசைக்குமிவிட்டு
மூக்குடிமைதானசிறைத்து மூன்றுவிளக்கேற்றிவைப்பேன
சபைமன்னர்பார்த்திருக்க தலையிலேசாணிவைத்து
ஆயிரந்திரிபோட்டு அணிவிளக்கேற்றிவைப்பேன
பார்த்திருக்கதாலிகட்டி பார்க்கவேயிப்போது
நேர்த்தியாய்தாலிகட்டி நிர்வகிப்பேனிப்போது
சொன்னசபதமிது சும்மாயழியாமல்
மன்னவனேநானசொன்ன வார்த்தையைத்தள்ளாமல்
என்னுமிதுவென்று எனபுருஷமைத்துனரே
மன்னவரேநீர்வந்து மங்கிலியந்தான தரியும்
என்றுசொல்லிசுந்தரியும் எழுதினளோலையிலே
சுத்தமுடனே சுருளோலைதான்சுருட்டி
ஒப்பமுடன்போட்டு யுக்தியுடன்தான்சுருட்டு
கடைவேலைவிட்டுக் கணையாழிமோதிரத்தில்
அரக்காலேமுத்திரையும் ஆணைங்குதான்போட்டு
ஓலைச்சுருளைவைத்து வுத்தமியுமப்போது
செப்பமுடன்சுந்தரியை சீக்கிரமாய்தான்நடந்து
வடக்குமுகமாக வந்துநின்றுமங்கையரும்
சிவாசிவாவென்றுசொல்லி செபித்தாளேமந்திரத்தை
பாட்டனைதானினைந்து பக்தியுடன்முன்பணிந்து

வாய்வுபகவான் சுந்தரியிடம்வருவது.

வடக்கேவெகுதூரம் வாயுபகவானதானகேட்க
பொட்டெனவேயோடிவந்து புகழ்பொருந்திமுனனேநின்று
பாட்டனைதானபார்த்து பைங்கொடியுந்தெண்டனிட்டு
வந்தீரேனபாட்டா மனதுநலேந்துவிட்ட
உபசாரஞ்சொல்லி உட்காரவைத்தார்கள்
பேத்தியைதானபார்த்து பேசுவாரப்போது
என்னைநினைக்கவந்த காரணமேனபேத்தியரே
வல்லவியேசொல்லுமென்று வாயுராசனகேட்க
சொனனளேசுந்தரியும் திரியோதனனனுடிக்கை
பெண்கேட்கவந்ததுவும் பெருமாளிசைந்ததுவும்

அர்ச்சுனனுமெனமாமன அவருடையபுத்திரனார்
ஓலையெழுதிவைத்து உம்மைநினைத்தேனென்றான்
எனறுசொல்லிசுந்தரியும் எடுத்துரைப்பாள்பாட்டனுக்கு

வாயுவுபகவான சொல்வது.

அந்தவிசேஷம் அதுகேட்டுவாயுபகவான
சுந்தரியைதானபார்த்து சொல்லுவானபாட்டனுமே
பஞ்சவர்கள்காடுறைந்து பணங்காசுமில்லாமல்
நாடுவிட்டுகாடுறைந்து நல்லபதியிழந்து
வில்லிழந்துவாளிழந்து வீமாபுரமிழந்து
காய்கிழங்குதினறு காட்டில்திரிகிறார்
சீமையில்லைபூமியில்லை செலவழிக்கபொனனில்லை
நாடுநகரமில்லை நல்லமனைவீடுமில்லை
ஊருமில்லைபேருமில்லை வுற்றாருறவுமில்லை
படுக்கவிடமுமில்லை பள்ளிகொள்ளத்தாவுமில்லை
சுபத்திரையாளுன்மாமி சோற்றுக்கழுகிறாள்
ரித்திரப்பட்டு தடமாட்டமாயிருக்க
பிமனனுக்குவாக்குபட்டா லாகாதுசுந்தரியே
இரியோதிரனவீட்டிற் றிரவியங்கள்மெத்தவுண்டு
கற்பக்குழலாளே காராம்பசுந்தேனே
இத்தனையுந்தானபார்த்து இசைந்தானேயுனதப்பன
வைக்குமிடமறிந்து வாழைப்பதித்தாண்டி
பூக்குமிடமறிந்து புனனைப்பதித்தாண்டி
காய்க்குமிடந்தேடி கமுகுபதித்தாண்டி
உண்ணநல்லசோறு உடுத்தநல்லபுடவையுண்டு
தினனநல்லபாக்குமுண்டு செலவழிக்கசெம்பொனுண்டு
எனக்குமெத்தசந்தோஷம் எற்றமுள்ளமாமயிலே
உத்தமியேஉந்தனுக்கு உறுதிகண்டாய்சுந்தரியே
எனறுமேசொல்லி யெடுத்துரைத்தானபாட்டனுமே

சுந்தரி கோபித்தல்.

சுந்தரியும்தானகேட்டு சுறுக்காயெழுந்திருந்து
சந்திராயுதமெடுத்தாள் தனபாட்டனதலையறுக்க
தலையையறுத்து சமுத்திரத்தில்போட்டிடுவேன
மார்பைப்பிளந்து வைகுந்தஞ்சேர்த்திடுவேன
பாட்டனெனறுபாரேனான பறக்கடிப்பேனுனனையெனறு
இட்டமுடனவாளுருவி சிரசைத்துணிக்கவந்தாள்

வாயுபகவான சொல்லது.

கண்டானேவாயுராஜன கனனியுடசத்துவத்தை
அல்லடிபேத்தியரே அறியாமல்சொனனேனடி
உனமனதறியசொனனேன மாதாவேசுந்தரியே
பரியாசஞ்சொனனேனடி பைங்கிளியேசுந்தரியே
நல்லதெனறுசொல்வாயோ நானமாட்டேனெனபாயோ

வல்லியேவுந்தன மனதறியசொனனேனண்டி
கோபித்துக்கொள்ளாதே கோபாலனருமகளே
போகவிடைதாருய் பூங்கிளியேசுந்தரியே
ஆவியழியுதடி அடிதொடைகள்நோகுதடி
நடக்கவுமாட்டேனண்டி நானபோறேன் நாயகியே
வயிறுபசிக்குதடி வாயுலர்ந்துபோகுதடி
வயிற்றுக்குசோறுவிட்டு மறுசோறுமூட்டைகட்டி
போகபலனகொடுத்தால் போறேனனான்சுந்தரியே
இப்படியாகசசொல்லி எடுத்துரைத்தானவாயுதேவன
சொனனவிசேஷமெல்லாம் தோகையுந்தானகேட்டு
சற்றேநகைத்தருளி தாதிகளை தானழைத்து
ஆயிரக்கலஅரிசி ளடிசில்சமையுமெனறுன
கட்டமுதுக்காயிரங்கால் கனிச்சமையுமெனருள்
அப்போதுஆதியர்க ளடிசில்சமைத்தார்கள்
செப்பமுடனற்கறிகள் திரளாய்சமைத்தார்கள்
வாழையிலைபோட்டு வட்டித்தாள்பாட்டனுக்கு
கொட்டினுள்கோபுரம்போல் குவித்தாள்மலைபோலே
சிறுமலைகள்போல சேரவைத்தாள்நற்கறிகள்
அந்தமுடனசுந்தரியும் அமுதுபடைத்தாளாம்
பாட்டனையுஞ்சுந்தரியாள் பசியாறுமெனறுசொனனுள
வந்தானமதுமுனனே வாயுராசனபாட்டனுமே
பிசைந்தானேசோற்றை யெல்லாமொருமிக்க
மூனறுபிடியாய்பிடித்து வுருட்டிமுகம்பார்த்து
சிவனேதுணையெனறு விழுங்கிவிட்டானவாயுராசன
கஞ்சியுஞ்சோறுமாய் கால்வயறுஆச்சுதுகாண்
கட்டமுதுசோற்றைக் கனமாய்படையுமெனறுன
மூவாயிரங்கலவரிஷி சமையுமெனறுள்மூப்பிகட்கு
சமைத்துப்படைத்தார்கள் தாதிசமர்த்திகளும்
மூவருக்குபிரீதியெனறு ஆவலாய்தானபுசித்து
யாவருக்கும்பிரீதியெனறு அனபாய்புசித்தபினபு
கைகழுவிவாய்துடைத்துக் கூடிவந்தானபட்டணமே
அரிபிளவுவெற்றிலை யள்ளிரொம்பகைகொடுத்தாள்
ஓலைச்சுருளெடுத்து வுத்தமியுந்தானகொடுத்தாள்
போடாபோடாவெனறு போற்றிவிடைகொடுத்தாள்
வாயுராசனதானவாங்கி மடியிலேவைத்துக்கொண்டு
மறுவார்த்தைசொல்லுகிறுன வஞ்சியாள்சுந்தரிக்கு
அடிபெண்ணேஓலையைத்தா னவனகையில்நானகொடுத்தால்
ஆக்கினைகள்செய்து அறுப்பாண்டிவாளாலே
பொல்லாதபையனவன பூங்கொடியேயுனபுருஷன
இட்டநினறுநானகொடுத்தால் வெட்டியெறிந்திடுவான
கண்ணுக்குகாணுமல் காற்றேடேபோட்டிடுவேன

ஓலையைநான் போட்டோடியேபோய்விடுவேன்
சம்மதியோ உந்தனுக்கு தயவாகச்சொல்லுமென்றான்
மாலைகுழலாளும் மறுவார்த்தைசொல்லுகிறாள்
இந்தசுருளோலை எப்படிதானானாலும்
அந்தமுள்ளமைத்துனரு ரவர்கையிலகப்பட்டால்
கொண்டுபோய்ஓலையைத்தான் கொடுவென்றாள்சுந்தரியும்
நல்லதென்றுசம்மதித்து நடப்போமென்றெழுந்திருந்தாள்
கட்டமுதுமூட்டைதனைக் கைகொடுத்தாராயிரம்பேர்
சுண்டுவிரலிலே தூக்கிகொண்டானே
போரேநான்பேத்தியரே போய்வாருமென்றுசொன்னாள்
பாட்டனைப்பார்த்து பட்சமுடன்தெண்டனிட்டாள்
அப்போதுதானு மடியெடுத்துவைக்கலுற்றான்
இருப்பானெழுந்திருபான் இளைப்பாற்றிதான்போவான்
பார்த்தாளேசுந்தரியும் பாட்டன்பயணமெல்லாம்
ஏதடாபாட்டா இப்படிநீநடந்தால்
ஆனைகுந்திபட்டண ஆறுமாதம்பயணமாச்சே
என்சபதமெல்லா மெலிந்துபுதைந்துவிடும்
அப்பாலவர்வந்து ஆகியகாரியமேன்
மோசமும்பண்ண விசைந்தாயோயென்பாட்டா
நாளையவரறிந்தால் நடக்குமோகாரியமேன்
இல்லாதேபோனால் என்னுயிரழிந்துவிடும்
என்றுசொல்லிசுந்தரியும் இருந்தாள்துயரமுடன்

வாயுராஜன் போகிறது.

அப்போதுவாயுராஜ னவள்முகத்தைதான்பார்த்து
மாலைக்குழலாளே மனுவொன்றுநீகொடுத்தால்
இப்போதேதானெழுப்பி ஏகமாய்நான்வளர்ந்து
ஐந்நூறுநாழிகையி லபிமன்னனிடம்போய்சேர்வேன்
என்றுசொல்லிபாட்ட னெடுத்துரைத்தார்சுந்தரிமுன்
ஒன்றுக்குமஞ்சாதே வுத்தமியேயென்றுசொல்லி
ஓலையைக்கொண்டே ஒருநொடியில்நான்வருவேன்
இமிட்டிவிழிக்குமுன்னே திரியோதிரன்படையை
அதட்டியரைக்கணத்தி லாடுபலியிடுவேன்
உன்னைமணம்புரிந்து உலகாள்வான்கண்டாயே
என்றுசொல்லிபாட்ட னெழுந்திருந்தான்கண்டாளே

ஆரோதெரியாதையா அறியாதபிள்ளையுமாய்
பார்த்தாலும்பாலகன்போல் பாய்ந்தாலும்புலியதுபோல்
வீரையுஞ்சூரையும் வென்றிடுவான்மன்னவரை
பொல்லாதபையலவன் போர்கள்கெலித்திடுவான்
எதிர்த்தவரைக்கொண்டு இருபிளவாய்போட்டிடுவான்
கண்டவரைவெட்டிக் கழுவிலேயேற்றிவைப்பான்
அத்தனைக்கும்வல்லவனு யறியாதபாலனுமாய்
தூர்வாசன்பட்டணத்தை சூரையடிக்கிறானே
நான்-யாசகத்துக்கின்று அறியாமல்வந்துவிட்டேன்
கண்டேனவனையங்கே கலங்கிபயந்துவந்தேன்
எவனோதெரியாதையா அறிந்துமெள்ளநீர்வாரும்
குன்றேறிநீபார்த்து குறிப்பாயறியுமென்றார்
என்னத்துக்காகநீ ரிப்போதுதேடுகிறீர்
அவனுடையகாரியம் ஆணழகாநீயுரைப்பீர்

வாயுராஜன் சொல்வது.

வாயுராஜனப்போ வயணமாய்ச்சொல்லுகிறான்
மாயன்மகள்சுந்தரியாள் வராவிட்டாளென்னையிப்போ
திரியோதிரனுடை செல்வனூர்லக்குணர்க்கு
தன்னைக்கொடுக்கவென்று சம்மதித்துஎன்தகப்பன்
பணமெத்தவாங்கியே பரியமிகைத்தானும்
அதுகேட்டுசுந்தரியும் அனலாகத்தான்சீறி
அபிமன்னரைக்கொண்டு அவன்பதியுமிவன்பதியும்
சுட்டுக்கரியாக்கி சூரையிடவேணுமென்று
ஓலையெழுதி உளவாயென்கைகொடுத்தாள்
அதனைநான்கொண்டுவந்து அபிமன்னனைத்தேடுகிறேன்
என்றுசொல்லக்கேட்டு எடுத்துரைப்பார்வேதியரும்

வேதியர் சொல்வது.

ஆனாலும்நீயவன் அண்டையிலேபோகாதே
சூரியனைநீநினைத்தால் சுருக்காககாயும்வெய்யல்
வெய்யலில்வேர்தது விடாய்பட்டுத்தான்வருவான்
அவ்வேளைநீபார்த்து ஆணழகர்தானெழுப்பி
மாயமாய்நீபோட்டு மறைந்துபோவென்றுசொன்னார்
அப்படியாய்ச்சொல்லி ஐயாநடந்துவிட்டார்
வாயுராஜன்தானுமப்போ வளர்ந்தகுன்றுதானேறி
உயரவேதானேறி ஊடுருகத்தான்பார்த்தான்
அப்போதுகண்டு அறிந்தானபிமன்னனென்று
வேதியர்சொன்ன விசேஷமதுமெய்யென்று
சூரியனைத்தான்பார்த்து சொல்லலுற்றாரப்போது
ஐயாவேயிப்போது அரைநாழிமாத்திரந்தான்
நீபதினாறுகண்ணாலும் பார்க்கவேவேணுமென்றார்

வாயுராஜனைப்பார்த்து வகுத்துரைப்பார்சூரியனும்
காய்ந்தால்களைவருமோ கட்டிழநாயிப்போது
காற்றடங்கிநீர்நின்றால் கடுவெய்யல்நாளுவேன்
களையுந்தவிர்ப்பும் கடுகனவேவந்துவிடும்
அப்படியேநீங்களும் அண்ணன் தம்பிகாளிருவர்
காதுங்கனிவாயும் நால்வருமூடிநின்றால்
யானுமேருட்டியாய் நன்றாய்நன்றாயெரிக்கின்றேன்பார்
என்றுதான்சொல்லி இதுவுமாய்கைதானென்று
வாயுராஜனப்போ வாய்நாடிதான்மறந்து
குகையில்கரைந்துமப்போ கூடாமல்தானினைத்தார்

அபிமன்னன் வேட்டையாடிப்பந்தடிக்கிறது.

அப்போதபிமன்னனருஞ்சூரைத்தாளடி
வெய்யலுங்கானலு மெத்தவெதும்பிநின்றார்
அபிமன்னர்தோழர்களும் ஆனதுரைமன்னர்களும்
மெத்தவெதும்பி விடாய்பட்டார்தண்ணீரின்றி
தண்ணீர்கிடையாமல் தாகவிடாயாளிலைத்தார்
கண்டானபிமன்னனும் களைபட்டுவீழ்ந்தவரை
தாகவிடாய்தீரவென்றால் தண்ணீருங்கிட்டவில்லை
மாயமாய்ப்போகவே செய்தார்மகாதேவர்
எங்குமவர்திரிந்து ஏசுலுற்றாரப்போது
ஆற்றருகேசென்று ஆறுவோம் தாகமென்று
அபிமன்னனுந்தோழருமா யாற்றருகேவந்தார்கள்
தண்ணீர்விடாய்தீர்த்து தாகந்தெளிந்தார்கள்
தாகந்தெளிந்தார்கள் தன்களைமாறினபின்
குப்பிகந்துபாயமணல் குவித்திடுமண்ணையெல்லாம்
மணலைக்குவித்து மன்னர்களுந்தோழர்களும்
பந்துகளாடியே பாலன்விளையாடுவதும்
ஒப்பமுடனோடுவதும் ஓடியடிப்பதுவும்
நூறுபேர்தோழருமாய் நிற்பாரொருபக்கலிலே
இவன்தானொருபக்கலிலே எகிரியடிப்பதும்
சென்றுவிளையாடுகிறதும் நின்றுவிளையாடுவதும்
ஒடியடிக்கிறதும் ஒருவன்மேல்பாயுவதும்
மோதிபடிக்கிறதும் முனைமுகத்தில்நிற்கிறதும்

வாயுராஜன் காற்றடிப்பதும் ஓலையைவிட்டு ஓடுவதும்.

கண்டானேவாயுராசன் காளையிடசத்துவத்தை
பாலனிடசத்துவத்தை பார்க்கவேயிவனுமென்று
வாயுராஜன்றானு மலையைவிட்டுதானெழும்பி
நான்குதிக்கும்பார்த்தானே நடுவாகநின்றுகொண்டு
ஆற்றின்கரையோரம் அதினருகேதோப்புகளும்
பார்த்துமேவாயுராஜன் புதரியெழுந்திருந்து
வேகமாய்க்காற்றடிக்க வெண்மணலாய்தானெரிக்க

வானமும்பூமிகளும் வளர்ந்திருக்குங்காட்டகத்தே
ஆகாயந்தான்பறக்க அடித்தானேகற்றாக
காடுமலைகளும் கரடிசிங்கம்யானைகளும்
ஓடிவந்துமேல்விழவே வுறுதியுடன்காற்றடித்தான்
நூறுபேர்தோழருமே காற்றோடேதான்பறந்தார்

அபிமன்னன் கோபித்து வாளுருவிப் புறப்படுதல்.

அபிமன்னராசாவும் ஆலோசனைபண்ணி
நின்றானொருவனுமே நெடுமூச்செறிந்தானே
அந்தமலைகளெல்லா மரஞ்செடிகளுன்ளதெல்லாம்
ஆண்சிங்கம்யானை அதிலுள்ளமிருகத்மல்லால்
வாளாளேவெட்டி எறிந்தான்மலைமலையாய்
வாயுராஜனுக்கிந்த வலுமைவந்தகாரணமேன்
சோதித்தவன்தலையை துணித்திடுவேனென்றுசொல்லி
பூரித்தெழுந்திருந்து புறப்பட்டான்வாளுருவி
வாளாலேவீசுரதும் மலைமரங்கள்சாயுவதும்
தோளாலகுவெடுத்து துறத்திவருகிறதும்
காற்றுக்கெதிராக காவலனார்வருகிறதும்
பார்த்தானேவாயுராஜன் பாலன்வருகிறதை
திரியோதிரன்படையை சேரவடித்திடுவேன்
நூற்றொருவர்தன்முடியை நொடியில்துரத்திடுவேன்
பதினெட்டக்ரோணி படையும்பரிகலமும்
கண்டபொழுதில்வெட்டி கைலாசம்போக்கிடுவேன்
சிந்தைகலங்கி செடிமரத்தைதான்பிடித்து
பந்துபோல்சுருண்டு படுத்திருந்தாரக்காட்டில்
அப்போதுவாயுராஜன் அன்பாகஓலையைத்தான்
ஓலைசுருளெடுத்து ஓட்டிவிட்டான்காற்றோடே
ஓலையைவிட்டபின்பு ஓடியேபோனானே

அபிமன்னன் ஓலையெடுத்துக்கொண்டு போகுதல்.

அந்தசுருளோலை அபிமன்னன்முன்னேவந்து
பந்துபோலதானெழும்பி பக்கத்தில்விழுந்ததுகாண்
கண்டானேஓலையைத்தான் காண்டீபன்தன்மகனும்
கணையாழிமுத்திரையும் மணஓலைசுற்றதுவும்
மணவாளசுந்தரிதான் வாரிவிட்டஓலையென்று
கனமாகத்தானெடுத்து கனிவாயால்முத்தமிட்டு
கோபித்துவாளுருவி கோபமுள்ளபாலனுமே
துணித்திடுவேனென்றுசொல்லி துரத்தினான்பாட்டனையும்
பார்த்தானேநாலுதிக்கும் பாட்டனைக்காணாமல்
போய்விட்டானென்றுசொல்லி பூரித்தான்பாலனுமே
திரும்பிநடந்தானே திக்குதிசைகொண்டுவர
தோழன்மார்தங்களுடன் சொல்லவேணுமென்று
தேடிப்புறப்பட்டு சேவகரைக்கண்டானே

அபிமன்னன் தோழருக்குச் சொல்லல்

அந்தஅபிமன்ன னனைவரையுந்தானெழுப்பி
சிந்தைதெளியவைத்து சிவனுரைத்தோத்தரித்து
காற்றீலகப்பட்டீர்களோ கட்டழகர்தம்பிகளே
வேற்றேலையாகவந்து விழுந்ததடாஎன்மேலே
ஓலையைக்கொண்டுநான் உங்களையுந்தேடிவந்தேன்
தப்பியிழைத்தீர்களோ சடமாட்டமாகாமல்
காற்றடித்தான்பாட்டன் கடலிலேபோயொளித்தான்
ஓலையைபோட்டுவிட்டு ஓடினனென்பாட்டன்
உங்களையான்பார்க்க ஓடிவந்தேனுத்தமரே
அரன்மனைக்குப்போவோமென் றழைத்தானேபாலனுமே
நல்லதென்றுசொல்லி நடந்தாரரன்மனைக்கு
அம்மாள்சுபத்தரையா ளாசாரமண்டபத்தில்
சிம்மாதனத்திலே இருந்தாள்சுபத்தரையும்
மன்னவர்கள்பிள்ளைகளும் மாயன்மருமகனும்
அம்மாளைச்சுற்றிவந்து அடிவணங்கிதெண்டனிட்டார்
வாழ்த்திவிடைகொடுத்து மருமகள்கேட்டாலே

அபிமன்னன் தாயாருக்கு ஓலைகொடுப்பது.

அப்போதபிமன்னனும் அம்மாளை தான்பார்த்து
காற்றோடேதம்பிமார் கண்டெடுத்தாரிவ்வேளை
பார்த்தெனக்குச்சொல்லுமென்று பாலுங்கைகொடுத்தான்
அந்தச்சுருள்வாங்கி அம்மாளும்வைத்திருந்தாள்
பொழுதுபுகுந்ததுகாண் புதுநிலாகாயுதப்போ
சலக்கங்களாடி சந்திசெபந்தான்முடித்து
சாப்பிட்டனைவரும் தம்பிமார்தூக்கினபின்

சுபத்திரை ஓலைவாசிப்பது.

அம்மாளெழுந்திருந்து அரன்மனையைத்தான்மூடி
ஒருவரைக்காணுமல் ஓலைச்சுருளெடுத்து
தூண்டாவிளக்குமுன் பார்த்தாள்சுபத்தரையும்
உருகிக்கலைந்தாள் உடம்பெல்லாம்புண்ணுனள்
அண்ணனைத்தானினைத்து யறைந்துகொண்டாள்மார்மேலே
கண்ணில்லான்பேரனுக்கு கலியாணம்வந்ததென்ன
வண்மகள்சுந்தரியும் வாழவெட்கப்படுவாளோ
என்னசெய்வேனென்று ஏங்கிமனந்தளர்ந்தாள்
தம்பியிந்தபேச்சறிந்தால் தரிப்பானேபூமியிலே
அந்தச்சுருளோலைத்தான் அன்பாகமறையவைத்தாள்
இந்தவிசேஷம் எடுத்துரைக்கப்போகாது
என்றுசுபத்திரையாள் இருந்தாள்மனதில்வைத்து

அபிமன்னன் சொல்லுவது.

பொழுதுவிடிந்தபின்பு போர்மன்னராஜாக்கள்
எழுந்திருந்துமுகங்கழுவி ஈஸ்வரரைத்தானினைத்து

திருநீறுபூ சிவனுரைத்தோத்தரித்து
தம்பியபிமன்னன் சாப்பிட்டபிற்பாடு
வாளபிமன்னன் மாதாவைத்தெண்டனிட்டு
தாயேநான்தந்த சுருளோலைவாசகத்தை
விபரமுடன்சொல்லுமென்று கேட்டானேநற்பாலன்

சுபத்திரை சொல்லுவது.

தாயார்சுபத்தரையும் தம்பிமுகம்பார்த்து
யாருக்குவந்துதோடா மகனேயிவ்வோலை
மாயமாய்வந்துதோடா வகையொன்றுமில்லையடா
வாசித்துப்பார்த்தேனடா வகையொன்றுமில்லை
கிழித்தெறிந்துபோட்டேனென்று சொன்னாள்சுபத்தரையும்
சொன்னவுடன்பாலன் துள்ளியெழுந்திருந்து, கோபித்தெழுந்திரு ந்து கொக்கரித்துப்பற்கடித்து, தாயாரைக்கோபித்துதம்பியபிமன் னனும், ஓலையைநீதந்தால் உயிருடனிருப்பேன்
என்று-வாளையுருவியவன் மண்ணில்தானட்டி
வாளின்மேல்நான்விழுந்து மடிந்திடுவேன்மாதாவே
தோழன்மார்கண்டு தங்கள்துடைகளும்தானடுங்க
கண்டுசுபத்திரையாள் கைவாளை தானபிடுங்கி
கிழித்தெறிந்தஓலை வருமோதான்கொற்றவனே
பழிக்குப்பிறந்தாயோ பாலகனேஎன்வயிற்றில்
இப்படியாகச்சொல்லி எடுத்துரைத்தாளேந்திழையும்
என்னதான்சொன்னாலும் ஏந்திழைநான்கேளேன்
செத்துமடிந்திடுவேன் உன்சிந்தைகலங்கவேதான்
சௌரியங்கள்பேசி சப்தமிட்டானப்போது
பெற்றசுபத்திரையாள் பிரமைகொண்டாளப்போது

சுபத்திரை ஓலையைக்கொடுத்து அபிமன்னன்வாசிப்பது

பார்த்தான்மகனுடைய பட்சங்களும்பத்திரங்களும்
காற்றுடனேடிவந்த ஓலையவன்கைக்கொடுத்தாள்
ஓலைச்சுருள்விரித்து பார்த்தானேவுத்தமனும்
மச்சினியாள்தானெழுதி வரவிட்டான்வாசகத்தை
நிச்சயமாய்க்கண்டு நிதானமிட்டான்பாலனுமே
இப்படித்தான்செய்வானோ எந்தாயேஉன்தமயன்

அபிமன்னன் சொல்வது.

காணியிழந்தாலும் கற்பழியப்போமோதான், இடபுத்திபிடரியில் என்பாரேவையகத்தில், மடபுத்தியாலேயல்லோ மாராட்டஞ்செய் தானே, தென்னமுடிவேந்தன் திரியேதிரன்பாவி
என்மகன்லக்குணனை தலையெடுக்கப்பார்த்தானே
பூமியிழந்தாலும் பெண்டிழந்துபோவேனோ
காணியிழந்தாலும் காதலியைவிடுவேனோ
ரோஷமெனக்கில்லையோதான் லோகமெல்லாமேசாரோ
கொண்டபெண்ணை ஒருவருக்கு கொடுப்பாராவையகத்தில்

4234

வண்டார்குழலாளும் மாதுதாலிகட்டுவாளோ
என்தகப்பனர்ச்சுனன்தான் இந்தபிழைகேட்டாக்கால்
உன்னையுங்கொன்று உலகமெல்லாங்கொளுத்தி
அந்ததிரியோதிரனை அனைவரையுந்தானறுப்பான்
நீபாயெறிப்பானே திரள்விசயனென்தகப்பன்
இப்படியென்று எடுத்துரைத்தான்பாலனுமே
இடையனுடன்பிறந்து இளப்பமாய்போனாயோ
மடையனுடன்பிறந்து மதியில்லாளானாயோ
நான்போகளன்தாயே நல்லவிடைதாருமம்மா
என்றுசொல்லிபாலனுமே எதிர்நின்றுகேட்டானே

சுபத்திரை சொல்வது.

தாயார்சுபத்திரையும் தம்பிமுகம்நோக்கி
மாயனும்சுந்தரியாள் வரவழைத்தாள்ஓலதனை
மெய்விசேஷம்பொய்விசேஷம் வேணதெல்லாந்தானெழுதி
பகைவெல்லவேண்டி கபடோலையனுப்பிவைத்தாள்
இந்தவிசேஷமெல்லாம் என்மனதுதானதிர
யான்போயறிந்து யனுப்புகிறேனுன்னையென்றாள்
இந்தவிசேஷம் இதுமெய்யோதாயாரே
அப்படியேசெய்கிறேன் என்றாள்சுபத்திரையும்

சுபத்திரை துவாரகைக்கு பயணப்படல்.

பாங்கிகளைதானழைத்து பல்லக்குசோடியென்றாள்
அப்படியேதாதியர்கள் அலங்கரித்துவைத்தார்கள்
அப்போ-சுபத்திரையும் அன்பாகத்தானெழுந்து
ஆயிரம்பேர்தாதியரும் அம்மாள்சுபத்திரையும்
நேயமுடன்கூடி நிதானமிட்டாரப்போது
துவாரகாபுரிக்கு துரிதமிட்டாரப்போது
அம்மாள்சுபத்திரையும் ஏறினாள்தண்டிலேதான்
பயணம்பயணமென்று பாரதமுக்கடித்தார்
அதிரவேமேளமெல்லாம் அடித்தார்களப்போது
எக்காளம்பூரிகையும் பிடித்தார்களப்போது
ஆலவட்டம்வீசுரதும் அல்லம்பிடிக்கிறதும்
மேல்வட்டம்வீசிவர வெண்சாமரம்போடுவதும்
ஆயிரம்பேர்தாதியரும் அருகேநடந்துவர

சுபத்திரை அபிமன்னனுக்கு புத்திசொல்வது.

தம்பியபிமன்னனையும் தன்னருகேதானழைத்து
அப்பாமகனேநீ அறிவுள்ளகண்மணியே
ஒப்பமுடன்போய்வாரேன் உத்தமனேநீகேளும்
அரண்மனைவாசல்விட்டு அப்புறத்தேபோகாதே
தோழன்மார்தன்னுடனே சுகமாகயிருங்காணும்
சொக்கட்டான்சதுரங்கஞ் சுகமுடனேதானாடி

உண்டுசுகித்து ஒருநினைவுமெண்ணமல்
சந்தோஷமாகத் தப்பியிருங்களென்று
துக்கங்கள்கொண்டுநீ சுந்தரிமேலாசைவைத்து
வெட்கத்தைவிட்டு வெளிப்பட்டுவாராதே
ஐந்துநாளையிலே அங்கேநான்போய்வாரேன்
அந்தவிசேஷம் அதுகேட்டுபாலனுமே
தாயாரைச்சுற்றிவந்து சாஷ்டாங்கதெண்டனிட்டு
தெண்டனிட்டதன்மகனை சீக்கிறமாய்தானெடுத்து
வாழ்வாய்வளருவாய் வைத்திருப்பீர்ருத்திருப்பீர்
தாழ்வுகுறையாமல் சம்பத்தையுண்டாவாய்
காத்திருங்களென்றுசொல்லி கடுகயுரைத்தாளே

சுபத்திரை துவாரகாபுரிவந்தது.

முப்பத்திரண்டுவகை மேளங்களுள்ளதெல்லாம்
தப்பாமல்கொஞ்சிவர தனிச்சங்கந்தான்முழங்க
வாராள்சுபத்திரையும் மாயனுடபட்டணத்தே
காடுகடந்து கரியமலைதான்கடந்து
நாடுகடந்து நல்லமனைதான்கடந்து
இஞ்சிவனங்கடந்து எலுமிச்சைதான்கடந்து
மஞ்சள்வனங்கடந்து மாதுளையினுட்புகுந்து
சிங்காரத்தோப்புகளும் தெருவும்பலகடந்து
அண்ணனரண்மனைக்கு வந்தாள்சுபத்திரையும்
ஆயன்பெருமாள் அவரிருக்குமண்டபத்தே
தண்டிகைவிட்டிறங்கி தங்கையாள்சுபத்திரையும்
தமையனுடகால்மேலே மாலைகன்னிதெண்டனிட்டாள்
தெண்டனிட்டதங்கையரே ஸ்ரீராமன்தான்பார்த்து
வாருமம்மாதங்கையரே மகனுஞ்சுகமோதான்

சுபத்திரை சொல்வது.

அண்ணரைதான்பார்த்து அரிய்வேசுபத்திரையும்
என்னவென்றுகேட்டாளே ஏலங்குழலாளும்
கண்ணிலான்பேரனுக்கு கற்புடையசுந்தரியை
என்னென்றுநீர்கொடுக்க இசைந்தீர்பெருமாளே
நம்முடையசாதியிலே நடக்குமோவண்ணாவே
கண்டவர்க்குநன்று யிருக்குமோகர்த்தாவே
அண்டத்தில்வானவர்கள் ஏசாரோவண்ணாவே
என்னையும்பார்க்காம லேக்கற்றுபோனீரோ
அண்ணனென்றுநானிருந்தேன் அநியாயஞ்செய்தீரோ
உம்முடன்நான்பிறந்து உலகத்துக்குப்பேசாச்சே
என்றுசொல்லிதான்புலம்பி யேலங்குழலாளும்
அடித்துப்புரண்டழுதாள் அண்ணர்கொலுமுகத்தில்

தாதிகளெல்லாந் தலைமேலேகையைவைத்து
கெக்கலிகளிட்டு கூக்குரலுந்தான்போட

சுந்தரி விலக்குவது

கேட்டாளேசுந்தரியும் கிருபையுடன்வோடிவந்து
பார்த்தாளிருவரையும் படுகின்றதுன்பமெல்லாம்
ஓடிவந்துமேல்விழுந்து ஒருத்திதலைமயிரை
மாமிதலைமயிரை வாங்கிவிட்டாள்சுந்தரியும்
தாயார்தலைமயிரை தனியவேவாங்கிவிட்டாள்
மாதுசுபத்திரை மருமகளுந்தான்பார்த்து
அத்தையரேயிப்பேச்சு அம்மாளறிந்ததில்லை
நானறிந்துசண்டையிட்டு நாயகியேசொன்னேன்காண்
அப்போதறிந்தாள்காண் அலமேலுமங்கையரும்
அறியாதவள்போலே அடித்துவிழக்காரியமேன்
மாமியார்தன்னுடனே வகையாகச்சொன்னாளே

இருவருஞ் சாட்சியாகவந்தது.

சாட்சியின்பேரண்டையிலே தாம்போவோம்வாருமென்று
அன்றுமுழுகின அக்குளமுந்தான்தேடி
சுபத்திரையுமப்போது சொல்லியுரைத்தாளே
கங்கைமாதேவியாரே கிருஷ்ணனுடற்பிறப்பே
தங்கையுரைக்கிறதை தயவாகநீகேட்டு
உண்மையாகக்கேட்டு உத்தமியேநீகேட்டு
அலமேலுமங்கையரே யறியவேநீயுமிப்போ
சாட்சியுரையுமம்மா தயவாகயெங்களுக்கு
லட்சுமியுநானுமிப்போ நாலாநாள் தானும்வந்து
சூதகமாய்தலைமுழுகி துய்யகரைவந்துநின்று
ஒருவர்க்கொருவர் வுகந்துமனமகிழ்ந்து
இந்தமுழுக்கோடே இதுகெற்பமுண்டாகி
உன்வயிற்றிலாண்பிறந்து என்வயிற்றில்பெண்பிறந்தால்
உன்மகனுக்கென்மகளை உத்தமியேதாரேனென்று
என்மகனுக்குன்மகளை ஈந்திடவேணுமென்று
இருவருஞ்சொல்லி இசைந்துவைத்துக்கொண்டோமே
அப்படியேயென்வயிற்றில் ஆண்பிள்ளையுதித்தது
அவள்வயிற்றில்பெண்பிறந்து அதுவும்வளர்ந்ததுகாண்
அன்றுசொன்னவார்த்தையெல்லா மதுவுமவள்மாற்றிவிட்டு
லக்குணர்க்குத்தான்கொடுக்க நாளுமேயிட்டாளும்

கெங்கை சாட்சிசொல்லுவது.

ஏதென்றுகேட்டாள் இல்லையென்றாளட்சுமியும்
நீங்களறிவீரென்று நிண்ணயங்கள்பண்ணியதை
அப்போதுவுங்களையும் யறிந்தீரென்றுசாட்சிவைத்தோம்
அதுகேட்கவந்தோமே அவளறியநீயுரையும்

என்றுசொல்லக்கங்கையரும் இதுமெய்தானென்றுசொல்லி
குமளியிட்டுபொங்கிற்று குளக்கரையின்மேலாக
கண்டீரோலட்சுமியே கங்கையுடசாட்சிதன்னை

இலட்சுமி கங்கையின்சாட்சி பொய்யென்பது.

அப்போதலமேலும் அல்லவேசாட்சியென்று
மாமாங்கம்பொங்கும் வருஷமிதுமாதம்
அதனாலேயெனக்கு மமர்ந்துமேபொங்கிவிடும்
அல்லடிசாட்சியென்றே அலமேலுமங்கையரும்
சொல்லவேதான்கேட்டு சுபத்திரையுமப்போது
ஆலமரந்தன்னை அண்ணாந்துதான்பார்த்து
விக்கினருமங்கே வீற்றிருந்தான்கீழேகாண்
முழுகவந்தபோது முன்னமேமொழிந்தவற்றை
அறிந்தீரென்றுவும்மையப்போ யறியவேசாட்சியென்று
அந்தவிசேஷ மறியவேயத்தாட்சி
சொல்லுஞ்சொல்லுமென்று சுபத்திரையுங்கேட்கையிலே
அலமேலுமங்கையொன்று அப்போதேயெண்ணுகிறாள்
ஆலடியிற்பிள்ளையாரே ஐங்கரத்தோனே
இவ்வார்த்தைநீயுமிப்போ சொல்லாதிருக்கவேண்டும்
அப்பளமும்வடைதோசை யதிரசமும்பழமும்
செப்பமுடனுந்தனுக்கு திறமாகயான்படைப்பேன்
குன்றாய்குவிக்கின்றேன் கூறாதேசாட்சியென்றாள்
நல்லதென்றுவிக்கினரும் நட்டார்போலேயிருந்தார்

ஆலமரமும் விநாயகரும் சாட்சிசொல்வது.

அசையாமல்தானிருக்க ஆயனதுவறிந்து
வண்டாகவேருடலைத் துளைக்கிறார்மாயவரும்
ஆலமரமானது அசைந்ததுகாணப்போது
அப்போதுவிக்கினரும் அப்பம்வடையாசைவிட்டு
சாட்சியிதுமெய்யென்று தானசைந்தாரப்போது
சுபத்திரையும்லட்சுமியும் சோதனைப்பார்த்தார்கள்

இலட்சுமி இதுவும்பொய்யெனல்.

அப்போதுலட்சுமியும் ஆலமரத்தடியில்
பிள்ளையார்தானுமங்கே பிலனாயிருக்கையிலே
மேல்காற்றுநன்றாய் வீசியடிக்கையிலே
ஓசையாய்விக்கினரும் விநாயகர்தானசைந்தார்
இதுசாட்சியல்லவென்று இடைஞ்சாளாம்லட்சுமியும்
ஆனால்தானுந்தனுக்கு ஆர்சொன்னால்மெய்யென்பாய்

இலட்சுமி சொல்வது.

ஆகாயவாணியரும் ஆட்டிடையன்சொன்னக்கால்
மெய்தானுந்தனுக்குஎந்தன் மெல்லியரைத்தாரேனென்றாள்
அன்றிருந்தாலாகிரிய மறுபதுமேல்நாற்பதுவும்

சென்றுயிருந்தானே செலவழிந்துபோகாமல்
இந்திரரும்வானவரும் இருந்துசொல்லப்போருரோ
ஆகாயவாணியரும் அவளுஞ்சொல்லப்போருளோ
இவளுமிசைந்திடுவா ளிதுவேயுபாயமென்று
அப்போதுயிடையனும் அன்றிருந்தார்போலிருந்தார்
இவனிருந்தபோதே இவள்கடையுமீடேறும்
எண்ணியேலட்சுமியும் இருந்தாள்மனதுடனே
சுபத்திரையுமப்போது சுந்தரியேலட்சுமியே
வாடியென்றணையழைத்தாள் ஆட்டிடையன்தன்னருகே
ஆட்டிடையனண்டையிலே அருகாகவந்துநின்று
அண்ணேதான்கோபாலா அன்றிருவர்நாங்கள்வந்து
சம்பந்தம்பேசியே சாட்சிவைத்துபோனேமே
அலமேலுமங்கையின்று ஆகடியம்பேசுகிருள்
உண்டோதானில்லையோதான் உத்தமனேசொல்லுமென்ருள்

பெருமாளும் ஆகாயவாணியுஞ்சொல்வது.

ஆமாண்டிஎன்பிறப்பே அகடிசுபத்திரையே
கொள்வேன்கொடுப்பேனென்று கூசாமலப்போது
என்முன்னேசொன்னதுண்டு அனேகநாளாச்சுது
ஆறுலிடைச்சியல்லோ அகந்துமதிகெட்டாளே
சொன்னதுண்டுகேட்டதுண்டு சுபத்திரையேமெய்யென்று
ஆட்டிடையன்சொல்லுகையில் ஆகாயவாணியும்
மெய்தான்காணென்று விளம்பினுள்மேலாக
கேட்டீரோலட்சுமியே கீர்த்தியுமப்போது
என்றுசுபத்திரையா ளெடுத்துரைத்தாளட்சுமிக்கு

இலட்சுமி அதுவும்பொய்யெனல்.

இடையனர்சொல்லியது ஈடல்லஎந்தனுக்கு
பெரியவயதிலே பினத்தினன்கோனரும்
முன்பின்னுந்தோன்ருதது மூவயதும்பெற்றதினல்
ஆகாயவாணியரும் அதுவுநான்நம்பேண்டி
மேகமதிர்ந்ததினல் விளம்பினர்போலாச்சு
சாட்சியிதுவல்லவென்று நானடந்தாளட்சுமியும்
எந்தவரிசையுடன் என்பெண்ணைக்கேட்டாரோ
ஊருமில்லைபேருமில்லை வுறங்கவுமிடமுமில்லை
நாடுமில்லைவீடுமில்லை காட்டிலேயும்பாதியில்லை
காணியில்லைபூமியில்லை கானகத்துவேடருக்கு
என்பெண்ணைகேட்க இசையுமோவுந்தனுக்கு

இலட்சுமிக்குஞ் சுபத்திரைக்குஞ் சண்டை.

என்றுசொல்லலட்சுமியும் எட்டியேயப்போது
மயிரைப்பிடித்தாள் மங்கைசுபத்திரையும்
அலமேலுமங்கையரும் அவள்மயிரைத்தான்பிடித்தாள்

அடித்தாளேசுபத்திரையும் அலமேலுமங்கையுந்தான்
அவளிழுக்கவிவளிழுக்க யிடுப்பிலேதானுதைக்க
அடிதடிகள்மிஞ்சுதுகாண் ஆங்காரக்கோபமுடன்
வெய்யலிலேதான்விழுந்து மேதினியில்தான்விழுந்தார்

சுந்தரி விலக்குவது.

மாயன்மகள்சுந்தரியு மறுபடியுமோடிவந்து
பார்த்தாளேயத்தையரின் பரிதாபந்தாளாமல்
ஓடிவந்துமேல்விழுந்து ஒருத்திதலைமயிரை
மாமிதலைமயிரை வாங்கிவிட்டாள்சுபத்திரையும்
தாயாரைத்தான்விலக்கி தள்ளிவிட்டாளப்போது
என்னமனதுகுறை என்றுமேகேட்கலுற்றாள்
காணிங்குதானிருக்க நடக்குமோசண்டைகளும்
ஏனம்மாவுங்களுக்கு இத்தனைகோபமென்ன

சுந்தரி சொல்வது.

ஆகாப்புலையன் அழிவான்கழுசிறையான்
தேசத்தரசன் திரியோதிரன்பாவி
மோசம்பண்ணசகுனி மூதேவிசண்டாளன்
சதிக்கும்சமர்த்தன் சகுனிபடுபாவி
ஆதரித்துக்கொள்ளவே நினைத்தானரும்பாவி
உங்களுக்குவந்ததென்ன ஒருவர்க்கொருவர்சண்டை
க்ஷமித்துமனங்கொள்ளென்று சாஷ்டாங்கதெண்டனிட்டு
மாமிசுபத்திரையை மருமகள்தான்பார்த்து
அத்தையரேயப்பேச்சு அம்மாளறிந்ததில்லை
கலியாணபேச்சுகளைக் காதாலேகேட்டதில்லை
அறியாதவள்மேலே அருஞ்சண்டையேதுனக்கு
மாமியார்தன்னுடனே வகைபாகச்சொன்னாளே
கோபம்குறையாதென்று கூறினாள்சுந்தரியும்
என்மைத்துனரைசீக்கிரமாய் வரவிடுங்காண் அத்தையரே
தலைமுழுகிப்பூசைசெய்து சாப்பிடவேவாருங்கள்
சாப்பிடேன்மருமகளே தயவுமறவாதே
போய்வாரேனென்று புறப்பட்டாள்பூவையரும்
தாதிகளைத்தானழைத்து தண்டிகைபிடியுமென்றாள்
மருமகளுமோடிவந்து மாமிக்குதெண்டனிட்டு
பாலமுதுகொள்ளாமல் பட்டினியாய்ப்போவாரோ
என்னுடையத்தையரே இருந்தமுதுகொள்ளாமல்
இத்தனைசண்டையிலே அமுதுகொண்டாரேசாரோ
அமுதயிரங்குமோடி அன்னப்பசுங்கிளியே
இருவென்றேசொல்லி ஏறினாள் தண்டிகையில்

சுந்தரி சொல்வது.

சுந்தரியுமோடிவந்து சொன்னாள் ஒருவிசேஷம்
என்மைத்துனரைநாளையிங்கே வரச்சொல்லுமத்தையரே

அவர்-வாருமல்தானிருந்தால் மடிந்திடுவேன்மாமியாரே
அக்கினியில்நான்விழுந்து அபகீர்த்திவைத்திடுவேன்
ஐயமார்தம்மாணை அனுப்பிவிடுமத்தையரே
தாலியுங்கூறையுந் தரிக்குமுடமையெல்லாம்
நேயமாயிருக்கிறது நிலவாமாயிங்கனுப்பும்
இன்றுடேமூன்றுநாள் இருக்கிறதுகலியாணம்

சுபத்திரை ஆனைகுந்திப்பட்டணம் போகிறது.

நல்லதுநல்லதென்று நடந்தாள்சுபத்திரையும்
போனாள்சுபத்திரையும் பொன்கிளிபோல்தான்பறந்து
ஆனைகுந்திப்பட்டணத்தே போனாள்சுபத்திரையும்
அப்போதபிமன்னன் அழகுராதமேறி
பார்த்தானேதாயாரை பார்த்தன்மகனாரும்
மதிலையும்விட்டுகீழ் குதித்தானேமன்னவனும்
தாயாரும்வந்து தண்டிகையும்விட்டிறங்கி
அரண்மனைக்குள்ளே போனாளேதாயாரும்
தம்பியபிமன்னவனும் தாயாரைச்சுற்றிவந்து
சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டார்வேந்தர்
வாழ்த்திமகனை மடியிலெடுத்தணைத்தாள்
நூறுபேர்தோழருட னபிமன்னன்வந்து
வந்தீரோதாயேயென்றே மலர்தூவிதெண்டனிட்டான்
தெண்டனிட்டபிள்ளைகளை சீருடனேவாழ்த்தியம்மாள்
இருக்கச்சிங்காதனங்க ளிட்டாளிளங்கொடியாள்
அப்படியங்கே யமர்ந்திருந்தவேளையிலே

அபிமன்னன் கேட்பது.

பாலபிமன்னவனும் மாதாவைதான்பார்த்து
போய்வந்தகாரியத்தை புதுமைகளைச்சொல்லுமென்றார்
உங்கள்-தமையன்பெருமாள் சமுகங்கிடைத்ததோகாண்
அலமேலுமங்கையிட அதிசயத்தைக்கண்டீரோ
கலியாணங்கூடினதுங் காரியங்கள்பேசினதும்
நிண்ணயமாய்கேட்டீரோ நீதியுள்ளதாயாரே
பின்னையுமுண்டான பேச்சுகளுள்ளதெல்லாம்
நன்றாககேட்டீரோ நானறியச்சொல்லுமென்றார்

சுபத்திரை சொல்வது.

ஏதென்றுகேட்டு ஏசினேன்மாயவரை
தலைகுனிந்தாப்போலே இருந்தார்தனஞ்சயனும்
உள்ளபடி தப்பாது என்றார்ஒருவிசேஷம்
அலமேலும்மங்கையண்டை வந்தேன்மகனாரே
பேசாமல்தானிருந்தாள் பெண்பெருமாள்நாயகியும்
ஏசினேனவளை எண்ணிக்கையில்லாமல்

அவளுமென்னையேசினாள் அடிதடிகளாச்சுது
நான்-மயிரைபிடித்து இழுத்தேனேமங்கையரை
என்-மயிரைபிடித்து இழுத்தாளிளங்கொடியும்
இருவருஞ்சண்டை இசைவாகத்தான்போட்டோம்
அடிதடிகள்மிஞ்சுது ஆக்கரித்துகொக்கரித்து
கிடுகிடென்று பூமியிலே கீழவுந்தான்விழவே
தாதிகளெல்லோரும் தவித்தழுதிற்கையிலே
ஓடிவந்தாள்சுந்தரியும் ஓகோகோதாயேயென்றே
மயிரைப்பிடித்திழுத்த கையையும்வாங்கிவிட்டாள்
தாயார்மயிரை தயவாகவாங்கிவிட்டாள்
குறுக்காகநின்றுகொண்டாள் கொம்பேரிடையாளும்
கோபமெல்லாந்தீர்ந்தபின்பு குனிந்துமேதெண்டனிட்டான்
இன்றைக்குமூன்று இருக்குதென்றுகலியாணம்
நாளைக்குவாங்கவென்று சொன்னாளேசுந்தரியும்
என்றுசொல்லக்கேட்டு எழில்விஜயன்புத்திரனும்
ஆலித்துவாளபிமன் ஆச்சியற்குதெண்டனிட்டான்
என்னஎன்னமாதாவே இன்னமொருக்காலுரையும்
அல்லகாண்சுந்தரியா ளாயன்மகளாரும்
உன்மாமியாருநானு மாதர்பொருதும்வேளையிலே
வந்துபதம்பணிந்து மயிரைவிலக்கிவிட்டு
என்-மைத்துனனார்தன்னைப்பேர வரவிடுங்காண்மாமியரே
அபிமர்வராதிருந்தால் அக்கினியில்விழுவேனென்றாள்
இதுவேயுரைப்பாள்காண் இனியொன்றுநானறியேன்
அல்லகாண்மாதாவே இன்னமொருக்காலுரையும்
அடித்தவடிக்காகவல்லோ ஆயன்பதியழிப்பேன்
மங்கைமகள்சுந்தரியும் வாக்குபட்டாளாமாகில்
காணவும்போரேனே கன்னிநல்லாள்சுந்தரியை
ஆகையால்சொன்னேன்கா ணாச்சியரேகோபம்வேண்டாம்
தாய்தகப்பன்வேண்டாத தாரமெனக்கேனோ
பெற்றதாய்வேண்டா பெண்டாட்டிநான்வேண்டேன்
உலகத்தில்வார்த்தை உரைக்கவிடமாச்சு
பஞ்சவர்கள்பொக்கிஷத்தில் பார்த்தன்மகனுருக்கு
பெண்கேட்கப்போயிருந்து பெருமானிடதேவிகையில்
அடிபட்டுவந்தேனென்று அனைவருமேசாரோ
தாயாதியேசாரோ சத்துருக்களேசாரோ
காணியாளன்கேட்டால் கனகுலையேசாரோ
வாளையுருவி வலதுகையில்தான்பற்றி
சாவேனேயென்றழுதான் தனஞ்சயனார்புத்திரனும்
கண்டாள்சுபத்திரையுங் கலங்கவேதானடுங்கி
பழிக்குப்பிறந்தாயோ பாலகாவென்வயிற்றில்

வாடாமகனே வையகத்தில்பெண்ணிலையோ
பஞ்சவர்கள்புத்திரனும் படைபொருதமாட்டாமல்
பொருந்திமணஞ்செய்யாமல் போக்கிரிவாளபிமன்
மாண்டாரேயென்றுசொல்லி வையகத்தில்வார்த்தையல்லோ
மாதுதிருவாணை மன்னவர்கள் தம்மாணை
என்னாணைநீமகனே என்வார்த்தைதள்ளாதே
வாடாமகனேஎன்று வாள்பறித்துகீழ்போட்டு
மைந்தனுமாதா மனதுவரவார்த்தைசொல்ல
இத்தனையுங்கேட்டு எழும்பியேவாளபிமன்
அண்டங்கிடுகிடென்ன ஆகாயந்தானதிர
மீசையின்மேல்கைப்போட்டு வீரியமாய்வாளெடுத்து
இலக்குணரைக்கொன்று ரணபெலிபோட்டுவைப்பேன்
திரியோதிரன்கூட்டம் சேனைபடுகளமும்
அர்ச்சுனனார்தான்புறத்தே அடியோடேதானிடித்து
அதிரவேவெட்டி அவலோகஞ்சேர்த்திடுவேன்
பருத்தியும்ஆமணக்கும் விரைக்குறேன்பாருமம்மா
சுந்தரியைகொண்டுவந்து சுகமாகத்தாலிகட்டி
உந்தனரண்மனையில் ஊழியங்கள்பண்ணிவைப்பேன்
என்னையனுப்புமம்மா எனக்குவிடைதாருமம்மா
தம்பிசொன்னவார்த்தைகளை தான்கேட்டுசுபத்திரையும்
அப்பாமகனே அறிவுள்ளபாலகனே
எப்படிபோகவிட்டு இருப்பேண்டாபூமியிலே
பாலுங்குடித்தறியாய் படைமுகத்தில்நின்றறியாய்
இருவரியாய்ப்பகலறியாய் படைமுகத்தில்நின்றறியாய்
அறியாதபாலகனே அனுப்பவேஞாயமுண்டோ
கொஞ்சமொருபாலகனை கூட்டவேஞாயமுண்டோ
உங்கள்-ஐயமார்வந்தபின்பு ஆளவிடந்தேடி
தையலரேகொண்டுவந்து தாலிகட்டிவைக்கிறேன்
பூமியிலேபெண்கள் கிடையாதோபுத்திரனே
ரூபசவுந்திரிகள் உலகத்தில்மெத்தவுண்டு
சுந்தரிக்குமிஞ்சினபெண் தேசத்தில்மெத்தவுண்டு
அந்தமுள்ளகன்னியரை யழைத்துமணஞ்செய்கிறேன்
எந்தனிசைகேளும் இல்லாதசண்டைகளும்
வெட்டுவதுங்குத்துவதும் வெறுத்தவரைவெல்லுவதும்
கொண்டாலுமாகாது குலத்திலிகழ்ச்சியடா
இப்படியாகச்சொல்லி எடுத்துரைத்தாள்சுபத்திரையும்
மாதாமுகம்நோக்கி மைந்தனெடுத்துரைப்பான்
பூமியிழந்தாலும் பெண்டிழந்துபோவாரோ
தாரமிழந்தாலும் தாலியிழப்பதுண்டோ
நாட்டுக்குள்ளேச்சல்லோ நாயகியேயென்தாயே
ஐவர்குலத்திலே அழும்புண்டோஎன்தாயே

சாவேன்கெடுவேன் சமுத்திரத்தில்போய்விழுவேன்
சுந்தரிமேல்போய்விழுந்து துணிந்துகழுத்தறுப்பேன்
என்தன்கழுத்துகூட சரியாயறிந்திடுவேன்
இப்படியாகச்சொல்லி எழில்வீரன்தானுரைத்தான்
தாயார்சுபத்திரைக்கு சரீரமெல்லாந்தானடுங்க
வயிற்றில்பெருநெருப்பை வாரியெறிந்தாப்போல்
எறிந்துகுலைநடுங்கி எல்லாநினைவுமற்று
மயக்கம்பிறந்ததது மங்கையருந்தான்விழுந்தாள்
தாதியொருத்தி தலைமாட்டில்நின்றுகொண்டு
சாதிமணக்கவரி சந்தனத்தால்நீர்பூசி
வீசினார்தாதியர்கள் மேனியெல்லாந்தானிருக்க
விழித்துமுகம்பார்த்தாளே விஜயன்மகனுரை
இகழ்ச்சியாய்ச்சொன்ன விருப்பாரேவாளபிமன்
இதுவுமொருவிசை அறிவோமேயென்றுசொல்லி
வாடாநீவாளபிமா கேளாயொருவார்த்தை
ஆரென்றுசொல்லி அறியாயோசுந்தரியை
மாடாடுமேய்க்கும் மடையரிடக்குலந்தான்
செத்தாடுதின்பான் சினையாட்டைமேய்த்திடுவான்
தண்டுகடைதோறும் தயிர்விற்குஞ்ஜாதியடா
பாளையங்கள்தோறும் பால்விற்குஞ்ஜாதியடா
கண்பசப்பினாலே காசுபிடுங்கிடுவாள்
பெருமாளவனுமொரு பெரியவிடையண்டா
எக்குலங்களானாலும் இடைக்குலங்களாகாது
அந்தகுலத்திலே அடுக்குமோயென்மகனே
ராசக்குலத்திலே நடக்குமோயினிமேலே
லட்சுமியாளுன்மாமி நாட்டிந்தகன்னடச்சி
உனக்குநிகரான வுலகத்துராசாக்கள்
மன்னவர்கள்பெற்றதொரு மங்கையாள்தானிருக்க
பெருமாள்மகளொழிய பின்னொருத்தியாகாதோ
பெருமாள்மகளாரை போட்டுவிடுமகனே
மாயன்மகளாரை மச்சினியாள்சுந்தரியை
நான்-மறவேன்மறவேனம்மா வாழ்விசையன்தேவியரே
உந்தனதுகுலத்தை வுச்சிதமாய்சொல்லவந்தாய்
இந்தமிரட்டுக்குப் பயமெடுத்துப்போவேனோ
எச்சாகயிடகுலத்தை என்தாயேநீபழித்தாய்
கூடப்பிறக்கிலையோ கூட்டுப்பாலுண்ணலியோ
ராசாவுக்குகையீந்து ராசாத்தியானையோ
வாடாநீயெனமகனே கேளாயொருவார்த்தை
ஆகாதசுந்தரியை அபிமாநீமாலையிட
ஆரைக்கழுத்தியடா அரண்மனைக்காகாது

கற்பகக்காயுளும் கரியவனந்தாண்டி
காடுகடந்து கரியவனந்தாண்டி
ஆயன்பெருமாளும் ஆனைகுந்திவந்தமர்ந்தார்
வீதியும்வீதி தெருவும்பலகடந்து
தேரோடும்வீதி தெருவும்பலகடந்து
ராஜர்பெருந்தெருவில் நாராயணர்வருவார்
தரணியளந்தவரும் தங்கைமனை தனிலே
சுபத்திரையாள்வாசலிலே ஸ்ரீராமர்வந்தமர்ந்தார்
தாதியரைத்தான்பார்த்து தார்வேந்தர்கூறுவார்
ஆரடிதாதியரே ஆர்தங்கைமாளிகைதான்
சொல்லடிதாதியரே சுபத்திரையாளெங்கேயடி
தாதியருங்கேட்டு சரணமென்றுதான்பணிந்தாள்
வேதியரைநீரெங்கே மெல்லியரைக்காணவந்தீர்
இந்தவரண்மனைதானேந்திழையைக்காணுமென்றார்

பெருமாள் சொல்வது.

வந்தமறையவரும் மாதுமுகம்நோக்கி
சேஷையரிசியிட்டு தெர்ப்பையுங்கைகொடுத்தார்
பஞ்சாங்கங்கைபிடித்து பார்ப்பானும்கற்கலுற்றார்
மாதுசுபத்திரையு மறையோர்க்குதெண்டனிட்டு
வந்தபிராமணரை வணங்கியெழுந்திருந்து
வாருமையாவென்றுசொல்லி மண்டபத்தில்கொண்டுசென்று
ஆசனத்தில்தானிருத்தி அடிபணிந்துதெண்டனிட்டு

சுபத்திரை சொல்வது.

மறையவரைநோக்கியந்த மங்கையருங்கூறுவாள்
வேதியரேநீரும் விருத்தகிழவனையா
எங்கிருந்தெங்குவந்தீர் எனக்கறியக்கூறுமென்றார்
மங்கையரேகேளீரென் வார்த்தையுரைத்திடுவேன்
காசிவள்நாடு கன்னியாகுமரிதேசம்
தூரம்வடக்கேயம்மா துவாரகாபுரிக்குமப்பால்
புண்ணியதீர்த்தம் புனலாகபூசைபண்ணி
காசிக்குபோயிருந்து வந்தேன்காண்காரிழையே
தேசத்தழகன் திரியோதிரன்வீட்டில்
ஏர்நிறைந்தலக்குணர்க்கும் ஏலக்குழலாட்கும்
கலியாணமென்றுசொல்லி கன்னியரேநான்போறேன்
மெத்தவிடாயினாலே மெல்லியேயிங்குவந்தேன்
மற்றொருகன்னியிடத்தை மங்கையரேநானறியேன்
மாயனிடதங்கையென்று வள்ளற்கெதிரேவந்தான்
எந்தன்விடாயாற்றி இங்கிருக்கப்பண்ணுமம்மா
ஆரடாவாள்வீரு அபிமன்னராசாவே
தாகத்துக்குமோர்கொடுத்தால் சாப்பிட்டுநான்போறேன்

அபிமன்னன் பிராமணரைக்கேட்பது.

பாணக்கந்தான்கொடுத்தேன் பாலனபிமன்னன்
அரிபிளவுவெற்றிலையும் ஐயருக்குத்தான்கொடுத்தான்
ஆரூடம்பார்த்து ஐயாவேசொல்லுமென்றான்
ஆரூடம்பார்த்து ஐயருரைத்தாரே
பெண்மேல்கவலையாய் புகழ்வீராகேட்கிறாய்
உனக்குஇருந்தபெண்ணு ஒருவனுக்காகுதென்று
நினைததுநீகேட்பாய் நீதியுள்ளராஜாவே
பயப்படத்தேவையில்லை பார்த்தன்மகனாரே
போய்வாருமென்று பிராமணரும்வாழ்த்துகிறார்

அபிமன்னன் துவாரகைக்கு வருகிறது.

நல்லதென்றுபாலன் நடந்தானப்போது
வந்தான்வெகுதூரம் மலைநாடுதான்கடந்து
ஆரண்யமான அடவியிலேதான்புகுந்தான்
அந்தவிடம்விட்டு அப்புறமேபோகையிலே
பம்பையென்னுமாறு பரவிவெள்ளந்தானோட
காக்காய்குருவி பறக்கவும்போகாது
அக்கரைக்குயிக்கரைக்கும் ஆள்போகக்கூடாது
பரந்தவெள்ளமாகவே பம்பைநதிபெருகிவர
அங்கேவந்துநின்றான் அபிமன்னன்ராஜாவும்
எப்படிபோவோமென்று எண்ணிவிசாரமிட்டான்
பிராமணனைப்போலேயங்கே பெருமாளுமோடிவந்து
நேராகவந்துநின்றாரேஆற்றருகே
ஐயரைக்கண்டாளே அபிமன்னராசாவும்
வயதுசென்றபார்ப்பானைக் கண்டானேபாலகனும்
கண்டவுடனேயவன் கையெடுத்துகும்பிட்டான்
எங்கிருந்தெங்குவந்தீர் எங்கேபயணமென்றான்
கலியாணமென்றுசொல்லி கட்டழகாநான்வந்தேன்
துவாரகாபுயிலே சுந்தரர்க்குமலக்ஷணர்க்கும்
பெரியகலியாணமென்று பிரண்டதுலகமெல்லாம்
அதினாலேவந்தேன்காண் ஆரடைத்துகொண்டதிங்கே
என்னசெய்வோமென்று எண்ணிவிசாரமிட்டார்
அந்தவிசேஷம் அபிமனுந்தான்கேட்டு
சிந்தைகலங்கி சிவசிவாவென்றுசொல்லி
நானுங்கூடவாரேனென்று சொன்னானேநற்பாலன்
ஆற்றிலேநீந்திவரத் தெரியுமோஐயாவே
நீந்திக்கரையேற நின்னையங்கள்தான்வருமோ
என்றுசொல்லிபாலனுமே எடுத்துரைத்தானையருடன்
நல்லதுஎன்றுசொல்லி நடந்தாரிருவருமாய்

அபிமன்னன் ஆற்றில்நீந்துவது.

ஆற்றிலேயிறங்கினார் அரையளவுதண்ணீரில்

கைகோர்த்துக்கொண்டார்கள் கட்டழகனையனுமே
மார்மட்டுந்தண்ணீர் வந்துபம்பைநதி
அதுநீந்திப்போகற்சே யாரும்பெருகிமெத்த
மேல்வெள்ளம்வந்து முழுகியிருவருமே
அந்தச்சமயம் அறிந்துபிராமணரும
ஆற்றுச்சுழலிலே அழுந்திவிட்டுபோனாரே
தயபிசயர்ந்தை தானறியவேணுமென்று
வெப்பிட ஆற்றிலேதான் விட்டார்பெருமானும்
சுழட்டுவதுமிருக்கிறதுஞ் சொருகிறதுமணலிழே
இளம்புவதும்தாக்கிறதும் இறுகிறென்றுசுழட்டுவதும்
தூக்கியடிக்கிறதுஞ் சுழலமிட்டுநீந்துவதும்
ஐந்நூறுகாதவழி கடந்திருக்குமப்பாதை
அரியரிநாரணனுசொல்லி ஆண்டவனைநினைக்கிறதும்
அபிமன்படுந்துயரம் ஆயனுந்தானறிந்து
தெர்ப்பைப்புல்லாகவந்து நின்றார்பெருமானும்
பார்பானைப்பார்த்தானே யாலபிமனும்
ஐயாபிராமணரே ஆற்றில்விட்டுப்போனீரோ
பார்பானதுணையுமல்ல பயிற்றங்காய்கரியுமல்ல
பார்ப்பானைநானும் படைத்துணைபாய்நம்பிவந்தேன்
என்றுவிசாரமிட்டுஎழில்வீரன்தானிருந்தான்
வாளுடன்கேடயமும் வைகையிலேபோச்சுது
ஆறுவடிந்தபின்ரி அக்கரைதான்திரும்பி
வாள்கேடயங்கொண்டுவருவோமேயென்றுசொல்லி
மாயன்பதிதன்னிலே மன்னரவர்வந்திருந்து
மாதுநல்லாள்சுந்தரியை மணஞ்செய்வார்தப்பாது
மாதாவும்மை வாவொட்டாளென்றுசொல்லி
கச்சைவரிந்துகட்டி கைக்கொன்றுமில்லாமல்
ஆற்றங்கரையைவிட்டு ஆபாபதிநோக்கி
காடுகடந்து கடியவனங்கடந்து
குன்றுபருவதமும் குளிர்ந்தமறத்தோப்புக்களும்
சுற்றுப்பதிங்காதஞ்சூழ்ந்தவனத்தோப்புகளும்
மெத்தகரடிகளும் வெம்புலியுஞ்செம்புலியும்
காட்டானையாளிகளு கருங்குசெங்குரங்கும்
அப்படிக்கொத்த ஆரண்யகானகத்தில்
நடையாகபாலனுமே நடந்தானே அக்காட்டில்

அபிமன்னன் வல்லரக்கன் பாறைமேல் படுத்துக்கொண்டது.

மெய்யானவல்லரக்கன் வீற்றிருக்குமக்காட்டில்
வல்லரக்கனுண்மைகளை மட்டுரைக்கபோகாது

ஐம்பதுகாதம் அகண்ட திருமார்பும்
எண்பதுகாதவழி கடந்திருக்குமப்பாறை
நானூறுகாதவழி யுண்டாமவனுக்கு
ஐந்நூறுகாதவழி மூக்குமுயர்ந்திருக்கும்
வல்லரக்கன்சிரசு மகாமேருபருவதம்போல்
இப்படிக்கொத்த இடும்பனும் வல்லரக்கன்
கமலகன்னியுடன்பிறந்த கசடனெந்த வல்லரக்கன்
அந்தவனத்திலே அபிமன்னன்ராசனுமே
போகும்வழிதப்பி பொல்லாதகானகத்தில்
அந்த அரக்கனவன் தூங்குமந்தகற்பாறை
விந்தைவிந்தையாகமைந்த அழகாகவே இருக்கும்
அந்தமாய்தானிருக்கும் அழகானபாறையின்மேல்
ஆற்றிலடிப்பட்ட அபிமன்னராஜாவும்
கைசோர்ந்துமெய்சோர்ந்து கனத்தமுடிசோர்ந்து
மெய்சோர்ந்துடம்பெல்லாம் வெகுவாய்கடுப்பெடுத்து
தூக்கம்போல்வந்து சோர்ந்துபடுத்தானே
பல்லிக்கையானுனே பாறையின்மேற்றான்படுத்து
வல்லரக்கனிரைதேடப் போயிருந்தானடைநிசையின்

சுபத்திரை அபிமன்னனைத்தேடுதல்

இனி-ஆனைகுதிரைப்பட்டணத்தை அடைவுதனைக்கேளீர்
தோகைசுபத்திரையுந் தோழிமார்தன்னுடனே
தோட்டமுந்தோப்புந் துறவுகளுந்தானதேடி
எங்கெங்குந்தேடி இராசாவைக்காணுமல்
பூங்காவனங்களும் புல்லின்கரைதேடி
வாளிமனைசிற்றடியு மறையோன்பெருவழியும்
புனலின்கரைநோக்கி போற்றஅடிபார்த்து
ஐயோ அபிமன்னுவிக்கொருமருந்தே
என்செய்வேன்வானபிதா ஏழைமதியாவேன்
பார்ப்பானம் பாதவித்தேன்பாவிநான்
நம்பினேன்வேறியனை நட்டாற்றில்விட்டாரோ
திக்கபுகழுடையா தருமருமிங்கேவாரு
வெற்றிமதயானை வீமருமிங்கேவந்து
நம்முடையநகுலா தமக்குளனைசொல்வேன்
தோழுவடிவாகி திரோபதையுமிங்கேவந்து
ஆணழகனிருவர் அபிமன்னனெங்கேயென்றால்
திக்கபுகழுடைய தருமருக்கேதுசொல்வேன்
வெற்றிமதயானை வீமருக்கென்னசொல்வேனே
நம்முடையநகுலர் தமபியர்க்கென்னசொல்வேன்
ஆச்சியர்க்கென்னசொல்வேன் ஆணழகர்க்கென்னசொல்வேன்
கோணுதமாதவத்துக் குந்தியருக்கென்னசொல்வேன்

ஐயோ அபிமாநீ ஆற்றில் விழுந்தாயோ
ஆயர்மகள்சுந்தரிக்கா யாற்றில்விழுந்தாயோ
என்னென்றுசொல்லி எடுத்துரைப்பேன்வெட்காமல்
மன்னவர்கள்முன்பாக மணத்தாளப்பண்ணினையே
ஐயோ அபிமாவென் றலறியேதானழுது
அபிமருடனே யாற்றிலேவிழுவேனென்று
பொய்கையில்விழுவேனென்று பொற்கொடியுந்தான்பனித்து
அழுதுமனத்துவிர்த்தாள் ஆச்சிசுபத்திரையும்
இப்படிக்கொத்த இக்கட்டுவேளையிலே

துரோபதை கனவுகண்டு தருமருக்குச் சொல்லுதல்

அப்போவனத்திலிளைவ துரோபதையும்
சொற்பனங்கண்டு தோகையருந்தானெழுப்பி
ஐவர்கொலுவிலே ஆச்சியுமே துரைப்பாள்
கண்டேன்காண் காவல்தா கடமொருசொற்பனங்கள்
ஆயனுடன்பிறந்த வழகுசுபத்திரையும்
வைகைக்கரையிலே மரிப்பேனென்றுசொல்லியே
மைந்தனைப்போகவிட்டு தங்கையழுகிறாள்
என்னபுதுமையிட என்கனவுதப்பாது
என்னசகாதேவா வெழுந்திருந்து அப்போது
தாமமுடியானுஞ் சாஸ்திரத்தைத்தான்பார்த்து
தர்மர்முகம்பார்த்து சகாதேவன் கூறலுற்றான்
ஆர்காணுமண்ணாவே வுள்ளபடி தப்பாது
ஒக்குமிதுஅண்ணாவே வுள்ளபடி தப்பாது
மாயன்மகளார் மருந்தாளி சுந்தரியாள்
ஆளப்பிறந்த அபிமருக்கிருந்தபெண்ணை
மன்னன் இரியோதிரன் தன்மைந்தன்லக்குணற்கு
பரியம்போக்கினான்காண் பாரளந்தார்தன்மகளை
இந்தவெள்ளிகிழமையிலே எம்பெருமான்தன்மகளை
வணஞ்செய்யவேண்டுமென்று மன்னவர்கள்தானேறார்
அந்தவிசேஷம் அபிமருந்தானறிந்து
மாயனருளாலே வாளபிமன்தானறிந்து
மாதாவையறியாமல் மாயபதிநோக்கி
புலவின்கரைதாண்டி போனானே வாளபிமன்
சேர்ந்துமணம்புரிந்து திரும்புவான்தப்பாது
ஆகையினாலே அழகுசுபத்திரையும்
ஆளபிறந்த வபிமன்னைத்தான்தேடி
புனலின்கரையருகே புலம்புகிறாள்மங்கையரும்
ஆற்றில்விழுவேனென்று அழுகிறாளென்றுரைத்தான்

தருமர் அருச்சனனை சுபத்திரையிடத்துக்கு அனுப்புதல்

தக்கபுகழுடைய தருமரதுகேட்டு
காண்டாவனமெரித்த காளைமுகநோக்கி

ஆபர்பதிநோக்கி அபிமனும்போனாரும்
மைந்தன்நிமித்தியமாய் மங்கைசுபத்திரையும்
மாளனைநிதாலாம வாள்விசையயுந்தேவி
வைகைக்கரையிலே வந்தேபுலம்புறாளாம்
மாறுவேடமாகி மாயவனைப்போலக்
வேகமுடனே தான் விசையனேநீயும்போய்
உன்மாதுக்குப்போல்யுரைத்து மனதைமிகதிருத்தி
ஆனைகுந்திக்கோவிட்டு அர்ச்சுனவாருமென்றார்
திக்குபுகழுடைய தருமருமைக்கனுமே

அருச்சுனன் மாறுவேடங்கொண்டு சுபத்திரைக்குச் சொல்வது

அங்கேவிடைபெற்று அர்ச்சுனர்வீரியனும்
வாயுவேகமாக வந்தாராந்தமபுனலருகே
தெண்டுகமண்டலமுமசேர்ந்தொருபுத்தகமும்
பின்குடுமைநூலு பிரப்பங்கோல்கைபிடித்து
திருமால்தன்மைத்துனருஞ் சிதபிஷைபோலாக
தன்தேவிக்கெதிராக தோவிசையன்வந்துநின்று
ஆர்காணும்பெண்ணே ஆற்றங்கரைதனிலே
ஏன்காணும்பெண்ணே யிருந்தழுதாயிப்போது
உன்மைந்தனொருவனிந்த வைகைகரைதனிலே
விழுந்தானென்றழுவதாய் விழவில்லைதானுமவன்
பெண்சேயேநீயுமிப்போ போப்போமெனவுரைத்தான்
மாதுசுபத்திரையு மனதுமிகக்கலங்கி
இக்கென்றெழுந்திருந்து தோவிஜையன்முன்பாக
மூக்கால்வலம்வந்து முன்னேவந்துதெண்டனிட்டு
சித்தரேநீரும் என்சிந்தையறிந்துரைத்தீர்
மற்றுமுரைக்கவென்றாள் வாள்விஜையன்தேவியரும்
காண்டவனமெரித்த காளையுங்கூறுவான்
மாயன்சகோதரி யல்லவோமங்கையரே
நீவாள்விஜையன்தேவியல்லோ மறையாமல்கூறுமென்றான்
உன்மைந்தனொருவனல்லா மாதேஒளியாதே
மாயன்மகளொருத்தி உண்மையிலேயோமங்கையரே
உன்மாற்றுமைமணம்புரா வந்ததுவுங்கண்டிலையே
ஒன்றுமொளியாதே உத்தமியேகூறுமென்றான்
மாதுசுபத்திரையும் வாள்விஜயனைப்பார்த்து
சித்தரேநீருந் தெரிந்துரைத்தீரப்போது
ஒளிப்பதெங்கேவேதியரே வுள்ளபடி சொல்லிவிட்டீர்
அபிமனென்றன்மைந்தன் ஆற்றிலவிழவில்லையென்றீர்
பிழைப்பானோவென்மகனும் பிராமணரேகூறுமென்றாள்
வேதியனுமொரு விஜயனுங்கூறுவான்
மங்கையரேவுன்மகனும் மாயன்பதிதனிலே
மாற்றானைவென்றுதிரு மாயன்மகளாரை

மணஞ்செய்துமீண்டு திரும்புவான்மங்கையரே
எதுக்குமஞ்சாதேஎம்பெருமான் தங்கையரே
எட்டாநாளும்மகனு மிளங்கொடி மையமாலையிட்டு
மன்னர்மதிக்க வருவான்காண்மங்கையரே
அஞ்சாதேயமாதே அரண்மனைக்கேகுமென்றான்

சுபத்திரை தன்னரண்மனைக்குப் போய்விடுவது

ஆச்சிசுபத்திரையு மருச்சுனற்குதெண்டனிட்டு
சித்தசனார்சொன்னதெல்லாம் திருவுளத்தில்தானிருத்தி
கப்பாமல்நடயி நடுவேயரமனைதாய்
அபிமருடனினைவாய் ஆனைகுந்தீபோய்ச்சேர்ந்தான்
காண்டாவனமெரித்த காளைமிகத்திரும்பி
ஆணழகர்கோமானும் ஐவருடன்போய்ச்சேர்ந்தான்

அருச்சுனன் தர்மருக்குச்சொல்வது:

தக்கபுகழுடைய தருமருக்குதெண்டனிட்டு
நாமமுடைய நகுலனைத்தான் தழுவி
தாமமுடைய சகாதேவனைச்சென்றணைத்து
தீயில்பிறந்தவனை துரோபதையைச்சரித்து
ஐவருடனுக அர்ச்சுனனுமேதுரைப்பார்
போனனைபிராமணன் போலேவடிவுகொண்டு
மெய்யாகவந்திருக்காள் மெல்லிசுபத்திரையும்
உள்ளபடி சாஸ்திரங்க ளுரைத்தேன்காணுத்தமிக்கு
வருவானேஎன்மகனு மென்றேவணங்கினாள்காண்
மணஞ்செய்துவருவானைகாண் லாளபிமன்னென்றுரைத்தேன்
தக்கபுகழுடைய தருமர்மனமகிழ்ந்து
ஆயர்மகிமை அறிந்தோமேயென்றுசொல்லி
ஆலோசனைகள்பண்ணி இருந்தாரேஐவர்களும்

வல்லரக்கன் பாறையண்டை வருவது,

அப்போவனத்தனிலே லபிமன்னன தூங்குகையிலே
அந்தவனங்காக்கும் ஆங்காரராட்சதனும்
இரட்டைப்பொழுதாறு இரைதேடவேண்டுமென்று
எழுநூறுயானைதனிறங்கியேபெயுதங்கே
ஆனைஎழுநூறு மறுநாவில்தான்பொசித்து
கீழ்கடல்நீரையெல்லாம கிலாரித்துத்தானிரந்து
அதிலுள்ளமீனையெல்லா மடைவாகததான்பொசித்து
வாய்மூக்கில்நீரைவிட மறுகடல்தானிரையும்
மச்சமபொசித்தபின்பு மதயானைதான்பொசித்
வயிறுநிரம்பாமல் மாற்றுடித்தான்வருவான்
தான்தூங்குப்பாறையண்டை வந்தான்அரிதலையன்
அபிமன்னன்நித்திரையை வல்லரக்கன்தான்கண்டு

வல்லரக்கன் அபிமன்னனை எழுப்புவது.

கண்டானே பையனைத்தான் கண்கள்பொறிபறக்க
எனகாட்டிக்குவந்தவனோ காட்டையழித்தவனோ
ஈயெறும்புபூராத வென்னுடையகாட்டுக்குள்ளே
மானிடன் றங்கவா நாளோச்சோலன்காடு
கோபித்துகண்சிவந்து கோபமதிகமதாய்
பாம்புபோல்சீறி படபடப்பென்றுசொல்லி
பாபியரக்கனவன் பாறையின்மேலேறி
ஆடாமையிலே அஞ்சாமல்தூங்கவந்தாய்
நான்தூங்கும்பாறையின்மேல் நரிகுட்டிபோலேவந்து
தூங்கவக்காரியமேன் று கெடிப்பேண்டா
நித்திரையில்நான்பொசித்தால் நினையாதுபாபமென்று
பாலமிருக்குமவரும் பரிகரிக்கக்கூடாது
எழுப்பிவிடுங்களென்று இராட்சதனுங்கையெடுத்து
அரக்கன்றரைகட்டடுமே அந்தவனங்களெல்லாம்
கோடையிடிபோலிடித்துக்குமுறினதுபோலாக
அண்டையிலேநானிருக்கும் அதிரமலைமாமுழும்
துண்டுதுண்டாகத் துணிந்துவிழுந்தது காண்
இடித்தசத்தமதான்கேட்டு இயலபிமன்தான்புரண்டு
வலதுகைதான்மாறி இடதுகைகீழ்போட்டு
மற்றுமந்தபாறையின்மேல் வாளபிமன்னன்பள்ளிகொண்டு
நித்திரைதான்சுத்தருவு என்பதுவுங்கண்டோமே
காலின்பெருவிரலால் தன்பாறைதான்போக
பாறையுடனேந்தி பையனைக்கொண்டுசென்று
கல்சுனையில்போடவென்று கடிவொருன்ராட்சதனும்
கல்சுனைதன்னருகே கனபாறைதானிருக்க
அரக்கனக்கரையேறி அபிமன்னனைத்தின்னவென்று
அரக்கனுதன் றடையினைரதானிடிபோல
மனதுடிக்கிடவே வாளபிமன்தானெழுந்து

அபிமன்னனெழுந்தது.

சொற்பனங்கண்டெழுந்தான் சுபத்திரையாள்தன்மகனும்
பாரளந்தார்தன்மகனை பவளவாய்சுந்தரியை
வட்டமுலைசுந்தரியை வலக்கையைத்தான்பிடித்து
சரசங்கள்செய்வதுபோல் தான்கண்டேன்கனவுபோல
படுக்கைகனவுகண்டேன் பாவியெழுப்பிவிட்டான்
மடையா அரக்காநீ வன்னரகில்போய்விழுவாய்
என்றுசொல்லிவாளபிம னிருந்துவிட்டான்நித்திரையை
என்று அரக்கனெழுந்துமிகக்கனைத்து
உன்கதையைச்சொல்லி வுரைத்தாய்சிறுபயலே
எங்குமிரைதேடவில்லையமிங்குவந்தேன்
எண்டசியாதுன்னையிப்போ வெனக்களித்தாரீஸ்வரனும்

என்பசிதீர்த்தாலே யென்பாலருன்னுடனே
அகப்பட்டாயென்கையில் ஆயுசமாண்டதிறல்
பசிக்குதடாயெந்தனுக்கு பயலேஎழுந்திரென்றான்
தூக்கத்தைவிட்டு துரைமன்னன் கண்விழித்து
அப்போ-பார்த்தானேபாலன் காருமுள்ளராட்சதனை
கண்டானேராட்சதனை கைபிசகுவந்ததென்று
அப்போ-ஈஸ்வரனைத்தானினைந்து இருபாதந்தெண்டனிட்டு
மாயர்பெருமாளை மனதிலேநினைந்து
தேவேந்திரனுரை சிந்தையிலேதானினைந்து
எழுந்திருந்தராட்சதன்முன்னேதான்சொல்வேனென்றான்
கைகட்டிவாய்மூடி கதைதனிச்சேதியெல்லாம்
மெய்யாகவேசொல்லி விளக்கொண்டபாலனுமே

வல்லாக்கனிடத்தில் அபிமன்னன் தலைமுழுகி
வருகிறேனென்றது.

ஐயாவேநீகேளு மடியேன்றன்னினைப்பம்
உன்கையில்தான்மடிய வுதியவிருக்கேன்
உன்னிடந்தேடிவந்தேனொருநிட்டமறியேன்
செத்தபிடமோட்சம் சேரவேணுமையாவே
நித்திரைகொண்டதாலே செத்தமரியாதையல்லோ
ஐயாவேயென்னுடம்பு அழுக்காய்இருக்குதுகாண்
முழுகிகுளித்துமே முன்வந்துநிற்கிறேனுன்
பசியாலேஎன்னையிப்போ பசியாத்திகொள்ளுமென்றான்
நல்லதெனவல்லாக்கன் ஞாயமுள்ளமன்னனென்று
ஆற்றுக்குநீயே யப்படியேதான்முழுகி

அபிமன்னனிந்திரனை வரங்கேட்கத்தவஞ்செய்தல்.

நல்லதென்றுபாலனுமே நடந்தானேயப்பொழுது
கைபிசகுவந்ததே கையாருமில்லையென்று
எண்ணவிசாரமிட்டு ஈசர்செயலென்று
ஆற்றிலேபோயிறங்கி அபிமன்னராசாவும்
முழுகிதலையற்றி மூக்கணைப்பூசைபண்ணி
கிழக்குமுகமாக யிருந்தேகிருபையுடன்
சூரியனைதெண்டனிட்டு தோத்திரங்கசெய்தானே
கடலிலேமுழுகிநின்று கதிரோனேசரணமென்றான்
பச்சைகுதிரையுள்ளாய் பணிப்பதையாவலனே
அழகுபணிரணுடைய ஆதித்தாசரணமென்றான்
அர்ச்சுனர்புத்திரனபிமன்னனடைக்கலமே
அப்போகதிரோனும் அதிசயமாய்த்தான்பார்த்து
கண்டறியவேணுமென்று கதிரோனிறங்கிவந்து
கூறடாபையா கூப்பிட்டவயணமென்ன
ஆரியரேஎன்வரவு சொல்லுகிறேன்கேளுமையா

தருமருடன்பிறந்த தனஞ்சயனார்புத்திரனன்
என்பேரபிமன்ன னெனபட்டனிந்திரன்காண்
மாயன்மகள்சுந்தரியை மணஞ்செய்யவேணுமென்று
வழிதப்பிஇங்குவந்தேன் வல்லரக்கன்போகவொட்டான்
எதிர்த்துப்போர்செய்யவென்று லென்கையில்வாளுமில்லை
அதனாலகானகத்தி லகப்பட்டேனசூரியனே
வல்லரக்கன்கையாலே மடிந்துவிடநாளாச்சி
பொருதவென்றால்வாளுமில்லை போகவென்றால்போகவொட்டான்
ஆதித்தாநீசேனும் ஆகையினாலழைத்துவந்தேன்
வல்லரக்கனை செயிக்க வலுமையில்லையெந்தனுக்கு
இலுக்கெழுத்துநாங்கள் கிரணங்கள்தன்னுடனே
என்றுசொல்லிஇந்திரனும் இளையவனைகற்பமிட்டார்
கதிரோனைத்தானழைத்து கனத்ததோர்நடத்துமென்றார்
பின்னையுமிந்திரனார் பெருகவேதானினைந்து
வாளொன்றுபோதாது மன்னனபிமருக்கு
பாணமும்வில்லும பத்திரகாளிகோயிலிலே
அடைக்கலமாய்வைத்தார்கள் ஐவருட ஆயுதங்கள்
வகையுடனேவாங்கி மன்னனுக்குத்தருகவென்று
நாற்பத்தெண்கோடி சத்தரிஷிபோகும்
இந்திரனுதேவருமெல்லோரும்வந்தார்கள்
வந்தார்கள்பூமியிலே காளிகோவிலண்டை
தேவரைகண்டு திடுக்கிட்டுமாகாளி
வீரமாகாளி வினவினள்கோவிலண்டை
வந்தவரைஎன்னவென்று மனங்குளிரகேட்டாளே
தேவேந்திரனாருந் தெரியவேசொல்வாரு
என்னிடபேரனுக்கு இளைப்புமெத்தவந்ததுகாண்
உந்தனடைக்கலமாய வைத்திருக்குமாயுதத்தை
என்னிடபேரனுக்கு எடுத்துதரவேணுமென்றான்
அருச்சுனனார்காண்டீபம் அம்புறாதூணியமும்
இப்போலேநீதா னெடுத்துக்கொடுங்களென்றான்
தேவேந்திரனுரைக்க் தீவிரமாய்கேட்கலுமே
வீரமாகாளி விசேஷமுமறந்தாளே
ஐவருமவந்து அடியேனையண்மையில்
அடைக்கலமாய்வைத்து ஆயுதத்தையான்கொடுத்தால்
நடக்குமேஞாயங்கள் நானகொடுப்பதில்லையென்றாள்
அதை-தேவேந்திரன்கேட்க தேவுமுகம்பார்த்து
மாகாளிதனக்கு மறுவார்த்தையேதுரைப்பார்
பாரமுள்ளராட்சதனும் பாலனைகப்பட்டதுவும்
பொல்லாதராட்சதனும புசிக்கநினைத்ததுவும்

நல்லதென்றுபாலன் நம்மையினைத்ததுவும்
எல்லோருங்கூடி யிளப்புவந்ததென்றுசொல்லி
பாலனைத்தப்பிவைத்து வந்தோமோகாரிமையே
நீமாட்டேனென்றுசொன்னால் மடிந்திடுவான்பாலகனும்
அபிமன்னன்மடிந்தாலே அர்ச்சுனனுந்தான்மடிவார்
மெத்தப்பழிகள் விளைந்திடுதேபாலனுக்காய்
காண்டீபவில்லுங் கடுகெனவேவகைகொடுத்தால்
ஒருநாழிகைக்குள் ஒப்பிவைப்பானுன்கையில்
என்றவனுஞ்சொல்லி இதமாயெடுத்துரைப்பார்
வீரமாகாளியரும் விரும்பிமனதுவந்து
அர்ச்சுனராயுதத்தை அவர்கையிலொப்பிவைத்து
பார்த்தாரேஇந்திரரும் பாரவில்லுவாயுதத்தை
ஆயிரஞ்சூலவண்டி அடங்காதபாரமிது
போயுதவமாட்டாது பிசகுவருமென்றுசொல்லி
என்றுவிசாரமிட்டு இந்திரருமப்போது
ஓலைப்பூவாக ஒளிவுடனே தான்சபித்து
காளியைப்பார்த்து கதிரோனுமிந்திரனும்
நாங்கள்கொண்டுபோக நடக்காதுகாளியரே
இப்படியேபோனால் இராட்சதன்தான்பார்த்து
எங்குந்திரியவொட்டான் எமகண்டசண்டாளன்
அதனாலேநாங்க ளஞ்சுவோமவன்றனக்கு
கொண்டுபோய்நீகொடுங்காண் உன்குமாரனபிமருக்கு
என்றுசொல்லகாளியரு மிதுவேதலைபாரமென்று

காளி அபிமன்னனுக்கு வாள்கொடுப்பது.

வாளைச்சடையிலே மங்கையருந்தான்சொருகி
வில்லம்புபாணமெல்லா மேனியிலேபூஷணமாய்
கடகத்தைவாய்தனிலே கவ்வியந்தகாளியரும்
மச்சத்தைவிச்சுளித்தால் வந்தொருக்கால்பாய்ந்ததுபோல்
தந்தொருதுர்க்கையருஞ் சலத்திலேபோய்ப்பாய்ந்தால்
நீர்க்காகம்போலேயல்லோ நீந்திவாருள்கடையாற்றி
வாருள்காண்நீரில்வரு மாதாவைக்கண்டாளே
ஆலித்துவாளபிம னம்மனையுந்தோத்தரித்து
மாயனிடதங்கையரே மகாதேவன்தங்கையரே
நீலிதிரிசூலி நிரஞ்சனியேகவல்லி
பிள்ளையைக்காப்பாற்றும் பெருமையுள்ளமாதாவே
மைந்தனைக்காப்பாற்றும் மாதாவேநின்சரணம்
வாழ்த்தியேவாள் தாரும் வல்லரக்கனைச்செயிக்க
என்றதொருவாசகத்தை யேகவல்லிதான்கேட்டு
மைந்தனைப்பார்த்து மகிழ்ந்துரைப்பாள்காளியரும்

மாற்ருனைவென்றிடுவாய் மகாபலமுண்டவீரா
எதிர்த்து அமர்பொருதி இராட்சதனைவென்றெடுத்து
என்றுவாயாரவாழ்த்தி வாள்கடகங்கைகொடுத்தாள்
வில்லம்புபாணம் வீரமாகாளிதந்தாள்
செயம்பொருந்துமகனேயென்று தேவியும்போய்மறைந்தாள்
வாள்கடகம்வாங்கி வருவதற்குமுன்பாக

அபிமன்னன் வல்லரக்கனேடு எதிர்க்கிறது.

அரக்கனுமப்போது அபிமனைத்தானழைப்பான்
வாடாசிறுப்பயலே என்வயறுபசிக்குதடா
காலைபசியெடுத்து கடுகியிளைப்பாருதடா
நரைபெலிதின்ருல் நாவில்ருசியுமுண்டு
எத்தனைநேரமாய் நீமுழுகப்போயிருந்தாய்
வாடாநீபயலேயென்று வல்லரக்கன்கூப்பிடவே
வந்தானேவாளபிமன் வல்லரக்கன்தன்னெதிரே
வாடாநீவல்லரக்கா வலுமையுண்டோவுன்கையில்
நில்லடாவல்லரக்கா நிலைதப்பிப்பேசாதே
ஓடியொளித்து உயிர்தப்பிப்போகாது
கேளடாராட்சதனே கோபமேனூந்தனுக்கு
இந்தவனத்தி லிருந்ததொருமிருகமெல்லாம்
கொன்றுதின்ருலின்றெருநாள் உன்குடலைப்பிடுங்கவந்தேன்
என்றுசொல்லராட்சதனும் ஏங்கிமிகச்சிரித்து
வாடாசிறுபயலே வாயாடவேண்டாங்காண்
சாவுதுணிந்தல்லவோ சட்டையற்றுப்பேசுகிருய்
கசக்கிப்பிழிந்துஉன்னை என்ஞவில்தடவுவேண்டா
கெருவமேனுந்தனுக்கு கிட்டவாவென்ருளே
வீரிட்டெழுந்திருந்து வில்வாங்கிஅம்புதொட்டு
ஆக்கரித்துபற்கடித்து அரக்கனைத்தான்பார்த்து
ஏண்டாநீவல்லரக்கா என்னையழைக்கிருய்
காண்டாவனமெரித்த காளைமகாநான்தாண்டா
வாடாநீசண்டைக்கு மாவீராவல்லரக்கா
என்றுசொல்லிபாலனுமே எடுத்தெறிந்துவார்த்தைசொன்ஞன்
பார்த்தானேவல்லரக்கன் பையனிடவார்த்தைகளை
அறியாதபாலனுக்கு ஆண்மைகள்வந்ததென்ன
நன்ருச்சுநன்ருச்சு நரியெதிர்த்தாற்பாழாச்சு
நரியெதிர்த்தாற்சிங்கமோ நாயெதிர்த்தாற்புலியாச்சு
என்று-நீட்டினன்கைகள் ரெண்டுமலைபோலே

அபிமன்னனுக்கும் வல்லரக்கனுக்குச் சண்டை.

கண்டானேபாலகன்தான் கைவருஞ்சத்துவத்தை
அம்புரதபாணமதை அபிமனும்வில்வளைத்து
துண்டாகரைபடவே தொடுத்தானேபாலனப்போ

பாணம்வருகிறதைப் பார்த்தந்தவல்லரக்கன்
பூணிக்கையாகவே பிடித்துப்பிசைந்துவிட்டு
பின்னையும்வல்லரக்கன் பாணம்வருகுதென்று
கல்லுமலைகளுக்கும் கனமனைகளுள்ளதெல்லாம்
எல்லாம்பிடிங்கியிடிபோலேதான்சொரிந்தான்
வந்தமலைகளும் மற்றுமுள்ளநாடுகளும்
பஞ்சுபோல்தான்பறக்கப்பார்த்தானேபாலகனும்
வல்லரக்கன்கோபம் மட்டிடப்போகாது
வெல்லும்வெருமலையை வேரோடேதான்பிடுங்கி
நல்லஅபிமன்ன னடுத்தலையிற்போட்டானே
வாரபெருமலையை வாளபிமன்தான்கண்டு
அன்றுகணைதொடுத்து அறுத்தான்பொடியாக
இரண்டுமலைபிடுங்கி இராட்சதனும்விட்டெறிந்தான்
இரண்டுமலைநாலாக இணைவாளால்விட்டெறிந்தான்
இருநூறுகாதவழி எடுத்துவந்தோம்தின்னவென்று
எடுத்துவிழுங்கிவிட்டா வின்னேரஞ்செறித்துவிடும்
நரியெதிர்த்தால்சிங்கமென்று நாட்டிலதைகேட்டோமே
இவனேசிலபாரமென் றெழுந்தானேவல்லரக்கன்
மூன்றுமலைபிடுங்கி முகத்தின்மேல்விட்டெறிந்தான்
மூன்றுமலைதூளாக முறியடித்தான்வாளபிமன்
நாலுமலைபிடுங்கி ராட்சதனும்விட்டெறிந்தான்
ஐந்துமலைதான்பிடுங்கி அபிமன்மேல்விட்டெறிந்தான்
ஐந்துமலைதூளாகி அபிமனெழுந்திருந்து
ஏழுகணைதொடுத்த இராட்சதன்மேல்விட்டானே
மார்பிலேபட்டு வருகுதுவுதிரமங்கே
வல்லரக்கன்கோபித்து மலையிடிக்கிகைபிடித்து
பூமியதிர்ந்துவிழ பூலோகம்நெக்குவிட
கதிரோனுஞ்சந்திரனும் விதிதப்பிபோய்மறைய
வனத்தில்மிருகமெல்லாம் மருவனமோடிவிட
சிங்கங்களெல்லாம் சீறியெழுந்தாற்போல்
ஆனைகளெல்லாம் அடித்துவிழுந்தாற்போல்
கீழேழுலோகமெல்லாம் கிடுகிடென்றுதானதிர
எதிர்த்தாரிருவருமே இருண்டவனந்தனிலே
ஒருவர்க்கொருவர் உரத்ததுதெப்பையங்கே
ஆறுமலைபிடுங்கி அபிமன்மேல்விட்டெறிந்தான்
வாடாநீவல்லரக்கா உன்வாறுலருக்கவந்தேன்
கேளடாவல்லரக்கா உன்கெருவமழிக்கவந்தேன்

நில்லடாவல்லரக்கா நீயோடிப்போகாதே
என்றுசொல்லவல்லரக்க னிதுபுதுமையென்றுசொல்லி
ஏழுமலைபிடுங்கி எதிர்த்தானேவல்லரக்கன்
ஏழுபதினூலா விழவடித்தான்வாளபிமன்
எட்டுமலைபிடுங்கி விட்டெறிந்தான்ராட்சதனும்
எட்டுமலைபட்டுவிழ இணைவாளால்வீசிவிட்டான்
பத்துமலைபிடுங்கி பையன்மேல்விட்டெறிந்தான்
பத்துமலைசிதற பறக்கடித்தான்வாளபிமன்
கோபம்வந்துவல்லரக்கன் கோடையிடிபோலே
வேகாளம்வந்து விழுந்தானேவல்லரக்கன்
பார்த்தானேபாலன் பாவியிடசத்துவத்தை
அறுத்தானேவாளபிமன் அவனங்கம்பொடியாக
இழுத்தானேவல்லரக்கன் மேனியெல்லாந்தானடுங்க
கண்டானேபாலன் கபடானராட்சதனை
வாளுருவியோடிவந்தான் மாயன்மருமகனும்
காளையவன்வல்லரக்கன் கடுகெனவேதானெழும்பி
மலைகளெல்லாமாண்டிடவே மரம்பிடுங்கியோடிவந்தான்
வாடாநீவல்லரக்கா கேளாயொருவார்த்தை
மலைபட்டபாடுதான் மரங்களென்னசெய்யுமடா
கிட்டவாடாராட்சதனே வெட்டியெறிந்திடுவேன்
கார்கொண்டுவல்லரக்கன் கைகொண்டுதானீட்டி
ஈரலிலேகுத்தி எடுத்துவிழுங்கவென்று
நீட்டினன்கையை நெடியமரம்போல
வல்லரக்கன்தான்வரவே வாளபிமனுஞ்சிரித்து
எத்தனைநேரம் இவனுடனேபோருட்டம்
மந்திரவாளெடுத்து வாளபிமன்கைபிடித்து
அரக்கனிடகையிரண்டு மறுத்தானேபொடியாக
கூவுகிறன்வல்லரக்கன் கொடிமுடிதானதிர
ஆவென்றசத்தம் அண்டங்கிடுகிடென்ன
ஆகாயம்பூமி யதிர்ந்துநடுங்கிடவே
சத்தசமுத்திரம் ஜலம்வற்றியுள்ளடங்க
சந்திரசூரியர்கள் தானடுங்கியோடிடவே
முப்பத்துமுக்கோடி தேவர்களும்முனிவர்களும்
தேவேந்திரன்கூட திகைத்துமுகம்பார்த்து
வல்லரக்கன்சண்டை பலவந்தமாச்சுதென்று
சொல்லிநகைக்கிறதும் சூட்சங்கள்பேசுவதும்
இப்படியாகயிருக்கின்றவேளையிலே
பையவேமனனன் பாணசரத்தாலே

வல்லரக்கன் இறந்துவிட்டது.

விழுந்தானரக்கனுமே மேருமலை துண்டதுபோல்
அசைந்துகிடக்கச்சே அபிமன்னராசாவும்
அரக்கன்முழங்காற் றரித்தானேயந்நேரம்
தலையறுந்துதரையில்விழ தன்வாளால்வெட்டினன்
அறுந்துவிழும்போது ஆவென்றுவாய்குளறி
தங்கைகமலகன்னி தாயேயென றுகூச்சலிட்டான்
பட்டானேவனந்தனிலே பையன்கைவாளாலே
அறிந்தாள்கமலகன்னி அண்ணனிடகூச்சல்தனை
கேட்டேகமலகன்னி கடோற்கசாவென்மகனே
மயங்கிவிழுந்தவளு மகனுரைத்தேடலுற்றாள்
வல்லரக்கன்முண்டமது மலைமரங்களுள்ளதெல்லாம்
உருண்டுபுரண்டு பொடிப்பொடியாவருகுதுகாண்
திட்டமுடன்கொன்று திரண்டதுகாண்முண்டமது
பூமியொருஅம்மியுமாய் அவனொருகுழவியுமாய்
அவ்வனத்தில்மிருகமது அம்மியின்மேல்மிளகதுபோல்
அரைத்துவைக்குதுகாண் அரக்கனிடமுண்டமது
அப்போதுவாளபிம னரக்கனண்டைவந்துநின்று
ஏதடாஇவனுக்கு இந்தபலம்வந்ததென்று
அமிர்தவலசம் அடிவயிற்றிலுண்டோதான்
என்றுசொல்லிபாலனும் எதிராகவந்துநின்று
வாளாலேகுத்தி வயிற்றைக்கிழித்தானே
அறுத்தானேகவசத்தை ஆற்றிலேபோட்டுவிட்டான்
போனானேவல்லரக்கன் புலம்பியேஆகாயம்
அவனுயிர்தானு மழுத்திவிட்டார்பெருநரகில்
இந்திரனுந்தேவர்களு மெல்லாமனமகிழ்ந்து
பூமாரிதான்பொழிந்தார் பேரபிமைந்தன்பேரில்
அப்போவபிமர்வந்து ஆற்றிலேதான்முழுகி
கைகால்கழுவி கனிவாயைக்கொப்பளித்து
மேலேறிவந்து முழுகிப்பசியதனால்
கானகத்திலுள்ள கனிபழங்கள்வேணதெல்லாம்
பண்டுபலாதிகள் பலாப்பழம்மாம்பழங்கள்
திட்டமுடன்புசித்து தீர்த்தான்பசியதனை
வாள்வில்லைகைபிடித்து வாளபிமனேதுசொல்வான்
அரக்கன்விழும்போது ஆவென்றுதான்கூவி
மருமகனைத்தானினைத்து வரட்டும்சனுவையென்று
சனுவைவருமளவும் செடியிலேவாள்சொருகி
வழிபார்த்துவாளபிமன் மலைபோலேவீற்றிருந்தான்
ஆலமரத்திலே அதின்விழுதைஊஞ்சலிட்டு
ஏறிவிளையாடி இருந்தானேவாளபிமன்

அப்போ-கமலகன்னிதன்மகனை கடுகவேதானழைத்து
வாடாகடோற்கஜா மதவீமர்தன்மகனே
உன்-அம்மானரக்கனுக்கு ஆபத்துவந்ததென்று
என்னைநினைத்து இடிபோலேகூச்சலிட்டு
போயறியவேணுமடா போர்புரியும்வேந்தனே
ஏதடிதாயாரே எங்களம்மான்றனக்கு
ஆபத்துதான்வருமோ அம்மாளேநீர்கேளும்
தேவர்களாலும் ஜெயிக்கவேபோகாது
எங்களம்மான்வல்லரக்க னிடிக்குச்சமானமுள்ளான்
என்றுகடோற்கஜனு மெடுத்துரைத்தானப்போது
அப்படியல்லவடா அறியநீதம்பியரே
போயறிந்துவாருமென்று போகவிடைகொடுத்தாள்
அப்படியேநல்லதென்று அடிவணங்கிதெண்டனிட்டு
எட்டுதேர்கட்டி இடிபோலேகொக்கரித்து
மறித்துமவனுரைப்பான் மாதாமுகம்நோக்கி
அம்மானுக்காபத்து வந்ததென்றுசொன்னீரே
அவனைஜெயிக்கிறவ ராருமில்லைவையகத்தில்
சிவன்விஷ்ணுபிர்மாவுந் தேவேந்திரன்முதலாய்
எமதர்மராலு மெதிர்நிற்கப்போகாது
அப்படிக்கொத்தவன்மே லார்சண்டைசெய்வார்கள்
கூப்பிட்டானென்று கோதையரேசொன்னீரே
அப்படியேமெய்யானு லாபத்தேயாலும்
கஞ்சிகொண்டுபோனால் தனக்குதவுமாதாவே
அவ்வசனங்கேட்டு அம்மாதுகமலகன்னி
கடுகவேதாதியரைக் காதலுடன்தானழைத்து
பதினாயிரக்கலம் பச்சரிசிதானெடுத்து
கொள்ளுயிருகலமும் கூடவேதான்கலந்து
கஞ்சியாய்க்காச்சி காவடியில்தானெடுத்து
பண்ணைப்பரடை பருந்தும்பைமின்னேயுடன்
குன்றுபோல்தான்பிடுங்கி கொப்பறையில்தான்சமைத்தாள்
புகட்டியுருட்டி பெருமலைபோல்தான்திரட்டி
கஞ்சியொருபக்கம் கறிகளொருபக்கமுமாய்
வைத்தார்கள்காவடியில் மலைபோலேராட்சதர்கள்
எடுத்தான்கடோற்கஜனும் யிருதோளுந்தானசைய
சீக்கிரமாய்த்தான்வந்தான் சிறுவன்கடோற்கஜனும்
கால்நடையாய்த்தானடந்து கடுகவருவானே
பச்சைமலைதேடி பவழமலைதான்தேடி
கொல்லிமலைஆராய்ந்து குடகுமலைதான்தேடி

சொன்னானேவாய்திறந்து சூதான்வார்த்தைகளை
ராட்சதனைக்கொன்ற நற்பாலனிப்போது
வடக்குமுகமாக போனானேமலைபோல
திக்கென்றுதானோடி தீவிரமாய்ப்பார்க்கலுமே
அப்படியேபோனானவன்சொன்னசாடையெல்லாம்
தேடியேகாணாமல் திரும்பிவந்தான்பாலனண்டை
காணேனென்றுசொல்லி கவலையுடன்கேட்டான்
தெற்குவடக்கு தென்மேற்குதென்கிழக்கு
நான்குதிக்குமோடி நலமாகப்பார்த்தானே
அரக்கனைகொன்றவனை கைப்பவொனென்றுசொல்லி
ஓடிவாருமென்று உத்தாரம்பண்ணினனே
பூமியையானையைப்போல் பெரும்புலிபோல்நான்திரிந்து
தேடிபிடித்தவனைசீக்கிரமாய்கொல்லுமென்று
அவ்வார்த்தைக்கேட்டு அப்படியேதானோடி
நாலுதிக்குமோடி நாட்டமுடன்பார்த்தானே
காடுமலையும் கடிபவனந்திரமும்
வடகடலுந்தென்கடலும் நடுமுள்ளதீவுகளும்
திட்டமுடன்பார்த்து திரிந்தெங்குங்காணாமல்
எங்கேயுங்காணாமலேங்கிவிசாரமிட்டு
மனமடியுந்தானலந்து வருத்தமுடன்கேட்டானே
கேட்டவுடனே இருவையுள்ளபாலனுமே
உன் அம்மானைக்கொன்றவனை யவனைநீகண்டாக்கால்
என்னநீசெய்வாய் எனக்கறியகூறுமென்றான்
அச்சொல்லுகேட்கலுமே சருக்கரதாலுரைப்பார்
என் அம்மானைக்கொன்றவனை யறிந்தானேயாமாகில்
வெட்டிபலியிடுவேன் வீரமகாளியற்கு
குத்திவலித்து குடலீல்தான்பிடுங்கி
வெட்டிதலைபிளந்து விட்டெறிவேன்நாலுதிக்கும்
கன்றாய்யுடல்பிளந்து நாலுதிக்கும்போட்டிடுவேன்
வன்னகீடோர்களுமே அனையப்பாண்பாலனுமே
கோபித்துகண்சிவந்து கொக்கரித்தப்பொழுது
அடங்கிவிருந்தா லரக்கனுஞ்சட்டைசெய்யான்
ஆலித்தடியாய்ந்து அபிமனுங்கொக்கரித்து
வெட்டினவனிருக்கப் பட்டிமகன்தேவதேன்
ஆடாராட்சதனே அரசனுக்குநீயுரவோ
யாருயரக்கனிட பாடுபடப்போறாயோ
வாடாநீதிடத்தில் மஞ்சனமாட்டிடுறேன்
போராடசெய்குவேனுன் புத்திபோகாதே
கொன்றவனுநான்கண்டாய் கோலமுள்ளராட்சதனே
உன் அம்மானைக்கொன்றதொரு ஆண்பிள்ளைநான்தானே

கடோர்கஜனுக்கும் அபிமன்னனுக்கும் யுத்தம்

என்றுடேசன்னடைக்குசகுத்தவாரென்றுசொன்னார்
தாவியேவில்லெடுத்து சரபாணந்தான்றொடுத்தானே
காளையபிமனுடன் கடோர்கஜனுமேமுனைப்பான்
வாலுயிருடையலே எங்கம்மானைக்கொன்றவனார்
உனக்குதுணைதானே நனித்துவைத்தால்சொல்லுமென்றான்
உன்றனையுங்காண்டா யுன்னம்மானைக்கொன்றவனுன்
நீயெதிர்த்தவுன்னையும் இருபிளவுசெய்வேனுன்
என்றுசொல்லவேயபிமன் ஏங்கிக்கடோர்கஜனும்
பக்கத்திலானைவைத்து பட்சமாய்ச்சொல்லுகிறான்
உள்ளேபகைமுத்துக்கொண்டு அன்னித்திரியுகிறான்காண்
மடிந்தவனைப்பார்த்தான் மலைபோல்பெரியவன்காண்
துணிந்தவனைப்பார்த்தான் அரும்பிலிளியவன்காண்
முன்னைபெரியோர்கள ஞானமொழிப்படியே
சிறியதென்னாம்பெரியதுக் கிறையென்றுசொல்வார்கள்
பெரியதெல்லாம்சிறியதுக்கு இரையாச்சதையாலே
இந்தபுதுமையை இனியறியவேணுமென்று
மூன்றுமுழுக்கச்சை மூனுசுற்றுமிறுக்கி
எழுநாகபாசம் பிழுக்கவொண்ணுதென்கே
சுற்றியெடுத்து தோளின்மேல்லைத்துக்கொண்டு
பொறுமப்பாவென்றுசொல்லிப்போர்களத்திலேவந்துநின்று
இருபுலக்கையெடுத்து எறிந்தானவன்றலைமேல்
வருவிருந்தனையபையன் வாளாலேதட்டிவிட்டான்
காதவழிபெழும்பி கால்மேலேவந்துவிழும்
பாரமலைபிடுங்கி பாலவன்மேல்விட்டெறிந்தான்
அந்தமலையை அபிமன்னராசாவும்
பந்தடிக்குந்தன்மையைப்போற் பறக்கடித்தான்வானபிமன்
கடோர்கஜனுமப்பொழுது கணைகோபங்கொண்டெழுந்தான்
வில்லிலெய்த்தாவிரிட்டுக்கடோர்கஜனும்
ஆயிரம்பாணமபிமன்மேல்போய்விழவே
உபதேசம்பண்ணிவுக்கிரமாய்விட்டானே
பாணதுகண்டேயரிவில்லெடுத்து
ஜராசிப்போகிறசெத்தவனேயிர்பாணம்
பாணமும்பாணமும் பறிந்தெயிர்கொண்டு
பாளையாகப்பறந்து அணிந்துவிழுந்ததுகாண்
ஐந்துபாணம் அபிமன்னராசாவும்
அரக்கன்றலைமேலே அக்கோம்விட்டானும்
கடோர்கஜன்கணைமேகையாலேதட்டிவிட்டான்
மடக்கேகைமறித்துவிட்டான் வாளபிமன்பாணத்தை
சோபித்தபாலனுமே கோட்டையிடிபோலே

வாய்விட்டுக்கூறி மகுடபாணந்தான் தொடுத்தான்
ஆயிரத்தெழுநூறு அதிகபாணந்தான் தொடுத்தான்
வாணக்கடோர்கஜனும் வந்ததொருபாணமெல்லாம்
ஒப்பாகத்தட்டி உதிரடித்தான் பூமியிலே
கடோர்கஜனுந்தொடுத்தே வந்ததொருபணமெல்லாம்
வாளபிமன்னன் வருமுன்னடை தட்டிவிட்டான்
தென்னடைப்படையளவாக்க இமைத்தமனம்வெருக
மூத்தமுடிக்கிசைந்த முத்துமெல்லகையைனைத்து
இந்தவுளி வெருமனதிலே
அச்சகட்டு முள்வடியுங் கடுமைத்திரவாளமுதும்
ஒட்டியாகுறவைம் உடையும்நடையமுதும்
சம்பூடையவலிகவான் போலேயிருக்குதென்று
சல்லுசீஜுவிஷ்ணுவோ எமுதம்பிரமனோ
ரூபத்மனிச்சேயித்த சுப்பிரமண்யதேவனோ
கஜமுகனைக்கொல்லவந்த சண்முகவிக்கினேசனோ
தக்கன்தமறுத்த தனிவீரபத்திரனோ
ஐவர்க்குநீலவனோ ஆதிநாராயணனோ
ஆடாமயிலையென்ன நாட்டியேகேட்கலுற்றான்
ஏவக்கேட்கக்கடோர்கஜனு மேதுரைப்பான்பாலனுமே
வாரப்போர்சதனே கௌரவருவர்கதை
காவலழிக்கவந்தேன் கட்டுரைப்பேசவந்தேன்
உன் வில்லைத்தனைக்கருவறுப்பேன் வல்லுயிரைக்கொள்ளைகொள்வேன்
பொருதடாவென்றான் போகாதேநில்லென்றான்
அனவீரன்பெற்றெடுத்த கடோர்கஜன் தான்கேட்டு
வாடாகிருபனே கௌரவருவர்க்கு
என்னம்மான்பழிதீரமன்னவனைஅடிப்பேன்
போனீரேயாகில் போகவொட்டேனம்மை
என்றுசொல்லியப்பொழுது இருவருமேயுரணைந்தார்
தெண்டாலகோதக்கடோர்கஜனும் தீவிரமாய்தானடித்தான்
பரந்துவிழுக்கார்போல் வந்துவிழுங்காலத்து
அப்போ பாலனுமே அவனையெதிர்பார்த்து
வாளாலேவெட்டினான் மன்னன்கடோர்கஜனை
நூலாலாகவே சேர்த்தவன்கழுத்தில்
கண்டான்கடோர்கஜனும் கடுகேதாவென்றுசொல்லி
எறிந்தான்தனை எண்ணயிட்டுகடோர்கஜனும்
இதயறியேவனுமென்ன அபிமன்னடைவத்துநின்றான்
தம்பிதம்பிள்ளாய் சமர்த்தரீசன்னடையனுய்
வித்தையாவென்மனதில் சந்தோஷத்தாறுச்ச
உன் பேருமைச்சொல்லி போருமடாவென்றான்
வாடாகிராட்சதனே மாமன்பழிவாங்கவந்தாய்

ரண்க்களத்தில்பெருமைத்தால் றுட்சியத்தில்கேட்பாரே
படுகளத்திலெப்பரி கேட்பாரோ தார்வேந்தா
ஊர்பேர்தான்கேட்பார்க ளுற்றகவிவாணவர்
என்பேரைநீகேட்க என்பேரில்கவிபாடுவாயோ
பேருமில்லையூருமில்லை பொருதவோம்வாடாவென்றான்
அப்போதுகடோற்கஜனும் அபிமனுடனேதுசொல்வான்
மிற்பாடுசொல்லுமிறையோ பெருமையுள்ளசிறுபிள்ளாய்
ஊர்பேரைக்கேட்கவென்றே உம்முடையஆயுதத்தை
கடக்கவெறிந்துவிட்டுகைகட்டிவாய்புதைத்து
விந்தவர்போலேதான் விவரத்துடன்கேட்டாலே
சொல்லுவனேசொல்லேனே அபிமன்னனெப்படியோ
என்றுசொல்லிவாளபிம னெழுந்திருந்தப்பொழுது
உயர்ந்தமரந்தனிலே உற்றவன்தான்சாற்றி
கால்மேல்கால்போட்டு காலையுட்கார்ந்தானே
அப்போகடோற்கஜனு மபிமனைத்தான்பார்த்து
ஆகாதவழிபயலேயுன் அன்னைதந்தைசொல்லுக்கு
வெட்குவையேயாமாகில் விளம்புகிறேன்கேளடாநீ
என்னோடேசொல்லாதே எதிர்மரத்தின்சொல்லுமென்றான்
சுண்டையிட்டுவாளபிமன் சிரிக்கவீற்றிருந்தான்
காளைமுகம்பார்த்து கடோற்கசனே துரைப்பான்

கடோர்கசனும் அபிமன்னனும் சமாதானமானது

தருமர்பெரியப்பன் நமக்கிளையரென்தகப்பன்
அருச்சுனன்சிற்றப்ப னவர்க்கிளையரென்தகப்பன்
நகுலசகாதேவர் நல்லதொருசிற்றப்பா
ஐவருக்குந்தேவி யழகானதுரோபதையாள்
எந்தனுக்காசியென்று எடுத்துரைத்தான்கடோர்கஜனும்
உறன்றுவானேரண்டு உருட்டுவான்தின்கலையை
இணைகாயலேகளெல்லாம் னருப்பொதியாகும்
விஷமாகவிருசையுண்ணி வீமசேனனென்தகப்பன்
என்மாதாகமலகன்னி யென்பேர்கடோர்கசன்காண்
என்றுசொல்லகடோர்கஜனு மெங்கேயேவாளபிமன்
கேட்டிருந்துபாலன் விம்மிடன்தானேங்கி
முத்திரைகலந்துகொண்டு மூர்ச்சையாய்த்தான்விழுந்தான்
மூர்ச்சைதெளிந்தபின் முகம்பார்த்தவனுரைப்பான்
அண்ணேகடோர்கசனே அநியாமக்கொடுமைசெய்தேன்
அண்ணனோடேமற்பொருத பகேதோஷம்வந்ததுகாண்
தமயனோடமர்பொருதி சமதுரோகியானேன்
என்று பச்சைதழைகொடுத்து பாதத்தின்மேற்போட்டு
ஐவர்குலத்தில்வந்த அழகான அண்ணாவே
அருச்சுனனார்பிள்ளை யபிமன்னன்நானே

என்தாயார்சுபத்திரையா ளென்கைப்பனருச்சுனனூர்
இருவரும்ஒருகுளத்தி விழக்கவிருந்தோமே
என்றுசொல்லியப்போ இருவருங்கையெழுந்து
கட்டியணைத்து கனிவாயைமுத்தமிட்டு
அப்பாநீயெங்கேவந்தாய் அபிமன்னராசாவே
வல்லரக்கன்கையிலே மாளாதிருந்தாயே
மெத்தவிசாரமிட்டு வெகுவாய்மனமுருகி
இதைகலியாண சேதியெல்லாஞ்சொன்னாயே
அப்படியாகுது அபிமன்னராசாவே
ஒப்பமுடன்சொல்லி யுரைத்தான்கடோற்கஜனும்
அம்மானைதானெடுத்து அடக்கம்பண்ணவேண்டுமென்று
பட்டமரங்கள் பருக்கட்டையுள்ளதெல்லாம்
எடுத்துவைத்துமூட்டி எரித்தனலுமிட்டார்கள்
கொள்ளியும்வைத்துகுடமுமுடைத்தார்கள்
செய்யும்வரிசையெல்லாம் செய்துமுடித்தார்கள்
ஆற்றிலேவந்தார்கள் அறந்தலைமுழுகி
சத்திசிவபூசையெல்லாம் செய்துமுடித்தார்கள்
வந்தார்களஞ்சிறண்டை பாலனுங்கடோற்கஜனும்
கஞ்சிதயிலைக்கறியும் கண்டானபிமருசன்
ஏதடாஅண்ணாவே இலைக்கறியுங்கஞ்சிகளும்
என்றுஅபிமாகேட்க எடுத்துரைத்தானப்பொழுது
அம்மாள்கமலக்கன்னி யனுப்பிவைத்தாளண்ணனுக்கு
கொண்டுவந்துவைத்தேன் குடிப்போம்வாதம்பியரே
அப்படியேயண்ணாவே யமர்ந்துகுடியுமென்றார்
இன்பமுடன்கொப்பரையை யெடுத்தவர்க்குவைத்தானே
அஞ்சிசிரங்காகஞ்சி யபிமனுங்குடித்தபின்பு
கஞ்சிவிடாய்தீர்த்து கலைகளுந்தானுதி
கொப்பரையில்கஞ்சியெல்லாம் குடியுங்காணண்ணாவே
இலைக்கறியுங்கஞ்சியு மெல்லாங்குடித்துவிட்டான்
வந்தார்களாற்றிலே வாய்கலைத்தான்கழுவி
கொப்பெணவேதானுங் கூடியிருவருமாய்
அம்மாள்கமலகன்னி யரண்மனைக்குத்தான்வரவே
வந்தாரிருவருமாய் தலைமறவில்வந்துநின்றார்
பாலனபிமன்னனும் பகல்வார்த்தைகூறலுற்றான்
அண்ணாவேநானும் அரண்மனைக்குவரவில்லை
என்னையுங்கொல்லுமென்று சொல்வாளோதாயாரும்
அம்மாள்மனதை யறியவேபோகாது
அண்ணாவேமுந்திப்போய் அறிந்துநீவாருமென்றான்
நல்லதுதம்பியென்று நடந்தானே கடோற்கசனும்
அம்மாள்கமலகன்னி ஆசாரச்சாவடியில்

கண்டாளே தாயாரைக் கைகுவித்துத்தெண்டனிட்டான்
அப்பாமகனேயுங்க ளம்மானைக்கண்டீரே
நன்றாயிருக்குறாரோ நாயகமேயென்றிறப்பே
உன்மாமன்முகத்தை உறுதியாய்க்கண்டாயோ
காரியமர்மசொல்லென்று கமலகன்னிதான்கேட்க
மாதாவுஞ்சொல்ல அறுவார்த்தைச்சொல்லலுற்றான்
அபிமனைக்கொன்றுவிட வல்லாக்களுங்கண்ணன்
இருவருமகப்பட்டு எமலோகம்போனார்கள்
என்றுசொல்லிக்காதுமைந்தா வினள்மனதைதானறிய
அவ்விசேஷங்கேட்டபின்பு அம்மாள்கமலகன்னி
அடித்துப்புரண்டு அழுதுக்கொண்டாள்மார்மேலே
அபிமன்னராசனை அவன்கொல்லக்காரியமேன்
அறியாதபாலகனை அடித்திழுத்துப்போட்டானே
பாவிபழிக்காரன் பாலகனைக்கொன்றானே
ஆதாவல்லாக்க ஐயையமைத்தடலாகாதே
பாலனபிமன்னன் மாண்டான்மனம்பொறுத்தேன்
சாவேனெக்கிலேனே சமுத்திரத்தில்போய்விழுவேன்
அபிமன்னன்தனையுடனே பாவிதனைப்போக்கிடுவேன்
மகனையிழந்தநான் மண்ணில்லிருப்பதில்லை
ஐவர்வெளியாலே பருக்கானதுங்கேட்டாக்கால்
எந்தனுக்குப்பேச்ச இடையூறுவந்துவிடும்
அபிமன்னன்தன்னுடனே என்னுயிரைப்போக்கிடுவேன்
அப்போமடியாத ஐவர்முகம்பாரத
இப்போமடிந்திடவே னென்மகனார்தன்னுடனே
அப்பாமகனே வளர்த்திவிட்டே யுக்கினியை
என்றுகமலகன்னி எழுந்தாள்தயாமுடன்
அம்மாள்மனநொந்து மயக்குமேகொற்றதனும்
அப்பிசேந்திலேயம்மா தாயாரேநான்றுசொன்னான்
என்றுசொல்லிக்கேட்டதற்கு மிருபாதந்தெண்டனிட்டு
தெண்டனிட்டமகனைத் திவிரமாய்த்தாவெடுத்து
பாலனைக்கிவென்று பரிவுடனேதானகேட்டாள்
இட்டேருதிற வென்தாயேமாகவே
வைத்தான்கடோர்ஜனும் வாளபிகர்தன்னுடனே
அம்மாளைத்தந்தா ஆவலாய்ச்சொன்னதுவும்
அண்ணனைவிட்டு அபிமனைக்காட்டிவைதூர்
இட்டோமென்றுசொல்லி எனையனுப்பினதும்
பாலனுக்குச்சொல்லியப்போ பட்சமுடன்தானுரைத்தான்
நல்லதென்றுசொல்லி கடோத்தரிருவருமாய்
நயனுமதம்பியும் சந்தோஷமாகவேதான்
அம்மானைச்சற்றிவந்து அடிவணங்கித்தெண்டனிட்டு

று தண்டனிட்டபின்னேவைத்தான் தீவிரமாய்த்தானெடுத்து
பாலனையுமன்னணைத்தான் பட்சமுடன்தானெடுத்து
மகனேமகனேயென்று வாய்திறந்துமுத்தமிட்டான்
உச்சிமுகந்து உடம்பெல்லாந்தான்தடவி
வல்லரக்கன்காட்டு வழியாகஎன்னைத்தாய்
அந்தரக்கனெத்த ஆகாதபாவியடா
பொல்லாதராட்சதனை போராடிக்கொன்றுமே
ஐயாமகனே அவனைக்கொன்றுலேதுசெய்வேன்
தாரார்புகழ்வேந்தர் தருமருக்கேதுசொல்வேன்
நாமக்கொடிவேந்தர் நகுலனுக்கேதுசொல்வேன்
சாஸ்திரமிகுந்த சகாதேவனுக்கேதுசொல்வேன்
தோருவடிவழகி துரோபதைக்கேதுசொல்வேன்
கொடுவினையல்முன்னை சுபத்திரைக்கேதுசொல்வேன்
என்றுமலர்க்கண்ணி இருக்கும்பொழுது
கண்டானபிமனும்அப்பலகண்ணிமாதாவை
கொண்டாடிகொண்டாடி முறைகளெல்லாந்தான்தீர்த்தான்
அபிமனைத்தான் பார்த்தாள் அழகுமலர்கண்ணி
என்றுவந்தாயென்மகனே இந்தஅடவிலே
வந்தவனக்கியனுடனே வழியாகக்கொல்லுமென்றாள்
மாயர்பெருமான் மகளாரைசுந்தரிக்கு
பங்கமறசண்டாளன் பாவிதுரியோதனனும்
எனக்கிகன்றிருந்தபெண்ணை எட்டுதிக்கலக்குளார்க்கு
கொடுக்கவிசைந்தானும் குருடனுடையோனுக்கு
நாளைக்குகலியாணம் நல்லமுகூர்த்தமிட்டு
பகல்முகூர்த்தமென்றுசொல்லி பாக்கும்பகிர்ந்தார்கள்
அந்தவிசேஷமதுகேட்டுசுந்தரியும்
சாவேனேகெடுவேன் சமுத்திரத்தில்போய்விழுவேன்
அத்தைமகன்வாராட்டால் மலைந்துவிழுவேன்
வாளபிமன் மணவாளனென்றுசொல்லி
வளர்ந்தாசீர்த்தை மண்ணுளிசிறைகொடுப்பேன்
வந்தாலபிமரு மதிநீயாவதருளாக
என்றுபிழைப்பேனமென்றாளென்றுசொல்லி
எந்தனுக்கீசா எழுதாவிட்டான்காண்
இந்தவியெடுத்தார்த்தவிவரவிவரமென்றுசொல்லி
வந்தவதானப்ப வணங்காமலிருந்த
அந்தமனையை பதிந்தோடியேனும்
மனமிருக்கமட்டாதே வந்தோடியேனும்
வழியுந்தெரியாதே வல்லரக்கனவனத்தில்
வந்துநினைத்து வழியறியமாட்டாதே
பயந்துநடுங்கியத பாறையின்மேல்தான்படுத்தேன்

அப்போதுவல்லரக்க னைத்துவிழுந்துவந்தானே
இத்தினைதோத்திரித்து எங்களப்பா ஆயுதத்தை
தாவென்றுவாங்கியம்மா சண்டைபண்ணியேஜெயித்தேன்
பின்னையுண்டான பேச்சுவகையுள்ளதெல்லாம்
என்றுந்துறையாய உரைத்தானபிமராசர்
தாயார்க்கமலக்கன்னி சந்தோஷந்தானுமி
அபிமனைக்கட்டி யணைத்துமுத்தந்தானுமிட்டு
ஆறுலழகுமன்ன னருச்சனன்றேவி
நாககன்னிபுத்திரர் நல்லரவானென்றொருவன்
உந்தனுக்குதம்பி யுடற்பிறப்புகல்லாவான்
பாலனுக்குநேர்மூத்தோன்தான் பட்சகுருள்ள அண்ணனவன்
அவனுடனேமூவருமாய் ஆயர்மனைபுகுந்து
தம்பியபிமன்னனை தலைமறைவாயங்கேவைத்து
நீங்களிருவருமே நேருவொடிதுளாக்கி
சுந்தரியைதாலிகட்டி சுகமாகவாங்களென்று
நாககன்னிசொற்படியே நடவுங்கள்பிள்ளைகளே
என்றுகமலகன்னி எடுத்துரைத்தாள்வாசகங்கள்
நல்லதென்றுசொல்லி தாயார்க்குதெண்டனிட்டு
தெண்டனிட்டபிள்ளைகளை சீராகதெண்டனிட்டு
என்வர்தாய்மகனே இந்தஅடவிலே
வாழ்த்திவிடைகொடுத்து மாதாவுமனுப்பினள்

கடோர்கஜனும் அபிமன்னனும் கமலகன்னியினண்டை விடைபெற்றுக்கொண்டு வருகிறது.

கடோர்கஜனும்பாலனுமே கடுகநடக்கலுற்றார்
காடுகடந்து கரியமலைதானகடந்து
ஆறுகடந்து அரியகனைகடந்து
நாடுகடந்து நல்லமலைதான்கடந்து
இஞ்சிவனந்தாண்டி எலுமிச்சையுட்புகுந்து
வாரவரும்போறவரும் மட்டிடப்போகாது
உறுவிடந்தார்கள் கனமானராசாக்கள்
அங்கேயிரண்டுமலைக ளாகாயமளாவிநிற்கும்
வல்லரக்கனைபோல மதவிமன்கண்டதுபோல்
வானத்தைதழுவ வளர்ந்திருப்பான்வல்லரக்கன்
ஒருமலைமேல்சாய்ந்துகொண்டு ஒருமலைமேல்கால்நீட்டி
இப்படியேதானிருந்தா னிடும்பனாவானும்
வந்தாரிருவருமே மலையருகில்நின்றார்கள்
தேகத்திலுள்ளவர்கள் துரியோதிரக்கூட்டமெல்லாம்
கிருபர்திருபாச்சாரி கீர்த்தியுள்ளவீஷ்மரும்
தேருஅசுவத்தாமன் துரைமன்னரெல்லவரும்
பதினென்படைத்தலைவர் படைமன்னரெல்லவரும்

சந்திரருஞ்சூரியருந் தானோடிப்போனார்கள்
தேவேந்திரனாரும் திகைத்துமிகப்பார்க்க
இப்படியாக இணைபிரியாசண்டைபண்ணி
கண்கள்சிவக்கிறதும் கடுங்கோபமாகிறதும்
மீசைதுடிக்கிறதும் வெகுகோபமாகிறதும்
கடியம்புதானெடுத்து விட்டானரவானும்
கடோற்கசனும்தண்டாலே கடுகிமுடிக்கிவிட்டான்
சரமாரிதான்பொழிய தானமர்ந்தான்பீமராசன்
பாணமுபாணமு மேவிப்போர்செய்யுதங்கே
ஒருவர்க்குதாங்காம லோடியேபோகுதுகாண்
பாணப்புகையிலே மடியுதேபட்சிகளும்
பார்த்தானேநல்லரவான் பசங்களிடசத்துவத்தை
ஆரோதெரியா தறிந்திடுவோமென்றுசொல்லி
கேட்டானேநல்லரவான் கிளிபவளவாயாலே
தம்பிசிறுவரே சவுரியத்தில்வல்லவரே
உங்களிடவங்கிஷத்தை யுரையுமெனக்கென்றான்
படுகளத்திலொப்பாரி கேட்பாரோபார்வேந்தர்
உன்னாலேயானது வுத்தமரேபார்வேந்தர்
ஆனாள்கேள் தம்பியரே ஆனதைச்சொல்லுகிறேன்
கேளுங்கள் தம்பியரே கெலிப்பாகச்சொல்லுகிறேன்
என் தகப்பனருச்சுனனார் என்பேரோநல்லரவான்
என்தாயார்பேர்நாககன்னி தருமரிடவங்கிஷந்தான்
இப்படியாய்ச்சொல்லி எடுத்துரைத்தான்நல்லரவான்
அந்தவிசேஷ மடைவாககேட்டிடவும்
எங்களுடவங்கிஷத்தை கேளுங்களண்ணாவே
என் தகப்பன்வீமசேனன் னென்பேர்கடோற்கஜன்
தாயார்கமலக்கன்னி தர்மரிடவங்கிஷந்தான்
தம்பியபிமன்னன் தனஞ்சயனார்பிள்ளையடா
அர்ச்சுனனார்பெற்றெடுத்த அபிமன்னனிவன்தாண்டா
சுபத்திரையாள்பெற்றெடுத்த துய்யநற்பாலனவன்
இப்படியாகச்சொல்லி இருவருரைக்கலுற்றார்

நல்லரவானும் கடோற்கசனும் அபிமன்னனும் சமாதானம்.

உண்மைகளைச்சொல்லி வுறவுகொண்டாடினபின்
வளைத்தவில்போட்டுமவன் வாகாகவோடிவந்து
கட்டியணைத்து கனிவாயைமுத்தமிட்டு
அண்ணனுந்தம்பியையு மரவானெடுத்தணைத்து
தாழவுட்கார்ந்து தம்பியைமடிமீதில்வைத்து
கேட்டானேனல்லரவான் கிளிபவளவாயாலே
அப்பா அபிமன்னா அர்ச்சுனனார்புத்திரனே
எங்குவந்தாய்தம்பியரே எனக்கரியச்சொல்லுமென்றான்
அண்ணேகடோற்கசரே யரியவேசொல்லுமென்றான்

அவ்விசேஷங்கேட்டு அபிமன்னராசாவும்
சுந்தரியையெந்தனுக்கு சொல்லியிருந்தாரே
பெண்சாதியென்று பெரியோர்முந்நாளிலே
அத்தனைநாள்முதலா யமர்ந்திருந்தகாரியத்தை
தள்ளித்திரியோதிரன் றன்மகன்லக்குணர்க்கு
செல்வக்கலியாணம் செய்யவேபோறானும்
அந்தவிசேஷமது கேட்டாளேசுந்தரியும்
எந்தனுக்குஓலை யெழுதிவரவிட்டார்கள்
பின்னையுமுண்டான பேச்சுவகைபுள்ளதெல்லாம்
நன்றாயெழுதி யனுப்பினாள்நாயகியும்
அதுகண்டேனண்ணாவே அடியேன்புறப்பட்டேன்
மனம்பொருக்கமாட்டாமல் வந்தேன்கானண்ணாவே
வல்லரக்கன்தன்வனத்தில வழிதப்பிவந்துவிட்டேன்
கொல்லத்துணிந்தானே கொடும்பாவிவல்லரக்கன்
வல்லரக்கனவனுடனே வருத்தமாய்சண்டைபண்ணி
கொன்றேனவனை கொடுமையுள்ளராட்சதனை
அவ்விசேஷங்கேட்டுதான் அண்ணன்கடோற்கசனும்
என்னையறியாமலென்மேலேசண்டைசெய்தார்
அண்ணனுநானுமாய் ஐந்தாறுநாழிமட்டாய்
சண்டைகள்பண்ணினோம் மெத்ததோர்வையில்லாமல்
வங்கிஷம்பேசி யறிந்தான்காணண்ணாவே
பின்னையுமெத்த போகவகையுள்ளதெல்லாம்
மற்றுங்குறையில்லாம லுரைத்தானேபாலகனும்
அம்மாள்கமலக்கன்னி அனுப்பிவைத்தபூஷணமும்
அண்ணனையுங்கூட்டி அனுப்பிவைத்தஆண்மைகளும்
உன்னுடன்பேசி உங்களம்மாள்கமலக்கன்னி
தன்னுடையவித்தையெல்லாம் தப்பாமல்தானுரைத்து
உன்னுடனேமூவருமாய் உறுதியுடன்சண்டைபண்ணி
சுந்தரியைத்தாலிகட்டி சுகமாகவாங்களென்று
அனுப்பினாள்கமலக்கன்னி அண்ணாவேயிங்குவந்தோம்
என்றுசொல்லிபாலனுமே எடுத்துரைத்தானுள்ளதெல்லாம்
நல்லதென்றுதான்கேட்டு நல்லரவானப்போது
சந்தோஷப்பட்டு தலையசைத்துக்கொண்டானும்
நல்லதென்றுமூவருமாய் நடந்தார்களப்பொழுது
தாயிருக்கும்பாதாள லோகத்திடமறிந்து
நாககன்னிகாவலுக்கு நடந்தார்கள்மூவருமாய்
அம்மாளிருக்குமந்த ஆசாரசாவடிலே
கண்டார்கள்தாயாரைக் கைகுவித்துத்தெண்டனிட்டார்
பிள்ளைகளைப்பார்த்து பெருமையுடன்வாழ்த்தி
ஏதடாநல்லரவான் இவர்களியாவரிடவங்கிஷங்காண்
சொல்லடாவென்று செவிகொடுத்துத்தான்கேட்டாள்

நல்லரவான் அபிமன்னன்சேதியை தாயார்க்குகூறல்.

வெற்றிமதயானை வீமன்குமாரனம்மா
தாயார்கமலக்கன்னி தன்மகன்கடோற்கசந்தான்
ஆணலழகுமன்னன் அருச்சுனனார்பெற்றபிள்ளை
உந்தன்புருஷனுக்கு ஏற்றகுமாரனும்
சுபத்திரைக்குபிள்ளையம்மா சுந்தரிக்குமாப்பிள்ளைகாண்
சுந்தரியைதாலிகட்ட வந்தானபிமன்னனுமே
என்றுசொல்லிநல்லரவா னெடுத்துரைத்தானப்பொழுது
காரியமாய்வந்த கலியாணப்பேச்சையெல்லாம்
பூரணமாய்ச்சொல்லியல்லோ போதித்தாநல்லரவான்

நாககன்னி கூறுவது.

அவ்வசனங்கேட்டு அம்மாள்எறிபறந்து
கோபித்துக்கண்சிவந்து கூறியவளெழுந்து
திரியோதரன்சேனை தேசத்திலுள்ளதெல்லாம்
அதிரவேவெட்டி ஆகாயம்போக்கிடுவேன்
என்றுசொல்லிசபதமிட்டு எழுந்தாளேநாககன்னி
கண்டானேநல்லரவான் காலிலேபோய்விழுந்து

நல்லரவான் கூறுவது.

நானிருக்கநீபோக ஞாயமோதாயாரே
சிமிட்டிவிழிப்பளவில் துரியோதனன்சேனையெல்லாம்
அமிட்டிஅரைட்சணத்தி லாடுபலிகொண்டிடுவேன்
எட்டியடித்து எமலோகம்போக்கிடுவேன்
தூக்கியடித்தவரைச் சுந்தரிக்குமாலையிட்டு
தம்பிகையில்மங்கிலியம் தரிப்பித்துநான்வருவேன்
எனக்குவிடைகொடம்மா என்தம்பிதன்னுடனே
என்றுசொல்லிநல்லரவா னெடுத்துரைத்தான்தாயாற்கு
தாயார்மனங்குளிர்ந்து சம்மதித்தாளப்போது
கோபந்தணிந்தபின்பு கொம்பனையாளப்போது
அரவான்கடோற்கஜனும் அவர்முகத்தைதான்பார்த்து
என்பிள்ளைபாலனைத்தான் இங்கேயிருக்கவைத்து
அங்கேயிருவரும்போய் அர்ச்சுனனார்புரம்புகுந்து
பங்கப்படவடித்து பதறுக்கிதூத்திவிட்டு
துவாரகாபுரியை பிச்சிட்டுதணலாக்கி
சுந்தரியைபல்லக்கில் சுகமாகஎடுத்துவந்து
என்முன்னேதான்விடுங்கள் எதிரில்லாமக்களேநீர்
என்றுசொல்லியப்பொழுது எடுத்துரைத்தாள்நாககன்னி
தம்பியவருஞ் சாஷ்டாங்கதெண்டனிட்டு
உத்தமியேன்தாயே ஒருவார்த்தைசொல்லுகிறோம்
தம்பியையிங்கேவைத்து தவராமல்கொண்டுவாறோம்
சுந்தரியைக்கொண்டுவந்தால் சூதாயிருக்குதம்மா
களவிலேகொண்டுவந்தால் கள்ளனென்றுசொல்லுவார்கள்

பந்தலிலேதானிருந்து பார்த்திருக்கத்தாலிகட்டி
விந்தையுடன்மன்னவர்கள் வெட்கிதலைசாய்ந்திருக்க
மங்கிலியந்தரித்து வரவேணுந்தாயாரே
என்றுசொல்லிநல்லரவான் இதமாயெடுத்துரைத்தான்
அவ்விசேஷங்கேட்டு அதுகேட்டுநாககன்னி
நல்லதப்பாஎன்மகனே நாயகமேநீர்கேளும்
தம்பிஅபிமன்னனை சண்டையிலேகாட்டாமல்
இராஜமுடிமன்னவனை ரணமுகத்தில்காட்டாமல்
மறவாகத்தான்வைத்து மகாசண்டைநீங்கள்பண்ணி
தண்டுமுறித்து தளங்களழிந்தபின்பு
சுந்தரிக்குமங்கிலியஞ் சுகமாய்த்தரியுங்கள்
என்று-பெட்டியைத்தான்திறந்து புலிவர்னப்பட்டுடுத்தி
திட்டமுடன்மங்கிலியம் திரள்பூஷணமுள்ளதெல்லாம்
பட்டுரவிக்கைகளும் பருமுத்துத்தாழ்வடமும்
சுட்டித்தலைகுப்பி சுந்தரிக்குஆனதெல்லாம்
திட்டமுடன்பெட்டிகட்டி சீராகத்தான்கொடுத்தாள்
சொன்னபடிசெய்யுமென்று சொல்லிவிடைகொடுத்தாள்
அப்படியேநல்லதென்று அனுப்பிவைத்துக்கொண்டார்கள்
அம்மாளைச்சுற்றிவந்து அடிவணங்கிதெண்டனிட்டார்
தெண்டனிட்டமக்களதனை சீருகத்தானெடுத்து
வாழ்த்திமனமகிழ்ந்து மாதாவுமப்பொழுது
போய்வாருமென்றுசொல்லி போனார்கள்மூவருமாய்
வாசல்கடந்து மண்டபங்கள்தான்கடந்து
சாத்திரக்கொடிவேந்தன் சகாதேவன்மகனார்
தொந்திசெட்டிவீற்றிருக்குந் தூயமலைவந்தார்கள்
அந்தவனத்தி லழகானதொந்திசெட்டி
உயர்ந்தமலைமீதிருந்து ஒருகையில்திராசுகொண்டு
மற்றொருகையிலே மலையிறக்கிகுண்டாக்கி
வருவாரைப்போவாரை மறித்துத்திராசுகொண்டு
நிறுத்துநிறைக்கொரு நிண்ணயப்பொன்வாங்கி
வாங்கியப்பொன்னையெல்லா மலைபோலத்தான்குவித்து
இன்னம்வருவோர்க்கும் எதிர்பார்த்துஅங்கிருந்தான்
அரவான்கடோற்கஜனும் அபிமருமங்கேவந்து
சகாதேவன்மகனார் சாத்திரவான்தொந்திசெட்டி
வருகிறபேர்களைத்தான் வங்கிஷமென்றறியாமல்

தொந்திசெட்டி யுத்தம்.

கண்டந்தமூவரையும் கானகதொந்திசெட்டி
கைவீங்கக்காசு கடுகெனவேதாருமென்றான்
காளையரவான் கடோற்கஜனுமேதுரைப்பான்
ஆரடாபையலே ஆகடியம்பேசுகிறாய்
வழியில்தராசுகளை வாங்கடாநான்போக

பாரடாபயலே பயணந்துரிதமடா
தருசுதனேவாங்கடா சனுதியில்போகவேணும்
கேட்டந்ததொந்திசெட்டி கிளிபவள்வாயாலே
ஆரடாமானிடரே அடிபடப்போரீர்கள்
துரியோதனனுடைய சேனைபரிகலமும்
பதினெண்படைத்தலைவர் பாங்காய்நிறுத்தேனே
அவர்களிலும்பெரியவரோ ஆண்மையுள்ளவீரியரே
அரவான்கடோற்கசரும் அபிமன்னராசாவும்
சீறிஎரிபறந்தார் சிங்கக்குட்டிபாய்ந்ததுபோல்
அதுகண்டுதொந்திசெட்டி அவனுமெழுந்திருந்து
மூவருடன்போர்பொருத முருகினன்தொந்திசெட்டி.
அபிமன்னராசாவை அமர்த்தியிருவருந்தான்
தெண்டுடனேவில்லுகளும் தீவிரமாய்த்தானெடுத்து
தொந்திசெட்டிமேலே தொடுத்தார்கள்பாணசரம்
அவனுடனெதிர்த்துஅப்போ ஆயுதத்தைத்தானெடுத்து
மூவருடனேஅவன் முழுகியப்போசண்டைபண்ணி
பாணங்களப்போது மழைமாறிபோல்வழிய
பூமிகிடுகிடென்று பூலோகந்தானதிர
மலைகள்பருவதங்கள் யிருதுண்டர்யற்றுவிழ
எதிரானதன்மலைகள் யிருதுண்டாயற்றுவிழ
இப்படியாகஇருசாமஞ் சண்டைபண்ணி
ஒருவர்க்கொருவர்காயம் யுறுதியுடன்பட்டதில்லை
இந்தப்புதுமை ஏதென்றுதொந்திசெட்டி
நம்மிடவங்கிஷத்து ராஜமன்னன்தானிவரோ
அறிந்திடுவோமென்றுசொல்லி ஆணழகன்தொந்திசெட்டி
மன்னவரேராசரேநீ வழிபட்டுமூவருந்தான்
ஆறுடையவங்கிஷங்காண் அறியவுரையுமென்றான்
அப்படியேசொல்லுமென்று அங்கிருந்தமூவருந்தான்
படுகளத்திலொப்பாரி கேட்பாரோதார்வேந்தா
சண்டைமுனையிலே தாய்வுறவுகேட்பாரோ
சத்திமுனையிலே கனவுறவுகேட்பாரோ
என்றுஅரவான் இடும்பானவார்த்தைசொன்னான்
சொன்னவிசேஷமது தொந்திசெட்டிதான்கேட்டு
மூவரையுந்தான்பார்த்து முடிமன்னன்தானுரைப்பான்
நீங்களுரையாமல் நிண்ணயமாய்த்தானிருந்தீர்
என்பிறப்பைச்சொல்லி எடுத்துரைப்பேன்நீர்கேளும்
பாண்டுமகாராஜகுலம் பாண்டவரைவர்களில்
தருமருக்குநேரிளையான் சகாதேவனென்தகப்பன்
நகுலரும்அருச்சுனரும் நல்பெரியவீமருந்தான்
தளராதனஞ்செயனார் தருமர்பெருமாளும்
நால்வருமெந்தனுக்கு நல்லபெரியப்பர்மார்

ஐவரிடவங்கிஷங்காண் என்தாயும்வீரகெங்காள்
என்றுசொல்லிதொந்திசெட்டி எதிரானமூவருந்தான்
கையாயுதத்தை கடுகெனவேவரவழைத்து
மோசம்வரப்போச்சென்று மூத்தோன்கடோற்கசனும்
அரவான்கடோற்கசனும் அண்டையிலேதான்வந்து
கட்டியணைத்தவனை கண்மணியேநாங்களுந்தான்
பஞ்சவர்கள் தங்களிட பாலனென்றுதான்கூறி
கடோற்கசன்தானுங் கனிவாயெடுத்துரைப்பான்
தருமர்பெரியப்பன் தமக்கிளையறென்தகப்பன்
தெண்டாயுதம்படைத்த திரள்வீமனென்தகப்பன்
என்தாயார்கமலக்கன்னி என்பேர்கடோற்கசன்தான்
அருச்சுனருஞ்சிற்றப்பன் அவர்குமாரர்தானிருவர்
நாககன்னிதன்மகனும் நல்லரவான்தானுமவன்
சுபத்திரையாள்தன்னுடைய துய்யவபிமன்னனவன்
என்றுகடோற்கசனும் எடுத்துரைத்தானப்பொழுது
அதுகேட்டுதொந்திசெட்டி அண்ணன்தம்பியென்றறிந்து
மூவரும்நீங்களிங்கே முடிகிவந்தீரிப்போது
சொல்லுமண்ணாவென்றுசொல்ல தொந்திசெட்டிதான்கேட்டான்
அப்போதுகடோற்கசன் அறவானுமேதுரைப்பான்
தம்பிஅபிமருக்கே தாரமென்றசுந்தரியும்
மாயன்பெருமாளே மகளாயிருந்தாளே
அவளை-திரியோதிரனுருந் தன்மகன்லக்குணர்க்கு
கொள்ளவேவந்து குலப்பெருமாள்தன்னுடைய
நாள்முகூர்த்தமிட்டு நலமாயிருக்கையிலே
அந்தவிசேஷம் அதுகேட்டுதம்பியும்
அவன்வந்தான்பயணம் மல்லரக்கன்தன்வனத்தே
அவன்சண்டைதொடுத்து சங்கரித்தாரம்மானை
அந்தச்சமயத்தில் அடவியிலேநான்போனேன்
கண்டேனபிமரையுங் கலந்துறவாடியங்கே
என்தாயார்கமலக்கன்னி தம்மனைக்குயிட்டுவந்தேன்
அவளுமதுகேட்டு அநேகமாய்கொண்டாடி
தாலியுங்கூறையும் தங்கப்பொன்பூஷணமும்
எடுத்துக்கொடுத்தவளும் என்னையும்போவென்றுசொன்னாள்
இருவருங்கூடி இப்பால்வருகையிலே
அரவானுங்கண்டு அரியவுரவாடி
மூவருங்கூடியப்போ மூர்க்கமுள்ளநாககன்னி
அம்மானைக்கண்டு அடிவணங்கிதெண்டனிட்டு
கலியாணகாரியத்தை காதலுடன்நாங்கள்சொன்னோம்
அப்போதறிந்து ஆணிப்பொன்பூஷணமே

செம்பணிபட்டுத் திரளாயவள்கொடுத்தாள்
அண்ணனவர்களையும் அனுப்பிவிடைகொடுத்தாள்
மூவருமாய்க்கூடி முனைகவன்சோமிப்பொழுபாது
என்றுசொல்லக்கேட்டு எழுந்திருந்துதொந்திசெட்டி
வாங்களென்றுசொல்லி மாதாவரண்மனைக்கு
அழைத்துவந்துவிட்டு அம்மானைதெண்டனிட்டு
மூவர்வந்தசேதியெல்லாம் முடிகியவனுரைத்தான்
கைகட்டிவீற்றிருந்தான் காவலர்கள் தங்களுடன்
மக்களைபார்த்துமப்போ மனமகிழ்ந்துவீரசெங்காள்
வாழ்த்தியெடுத்து மடிமேலேதானிருத்தி
உச்சியைமுகந்து வுண்மைசொல்லிமுத்தமிட்டு
தாதிகளை தானழைத்து சமையலதுபண்ணிவைத்து
மயிர்கோதியெண்ணெயிட்டு வரிசையாய்மக்களுக்கு
தலைமுழுக்குபண்ணிவைத்து சாப்பாடுதானுமிட்டு
அடைக்காசுருள்மடித்து ஆபரணந்தானெடுத்து
பிள்ளைகள் தங்களுக்கும் பெரும்பணிதான்பூட்டி
மக்களுக்கேற்றதொரு வரிசைபணிதான்பூட்டி
ஆபரணம்பூட்டி அழகாய்பணிதான்பூட்டி
அபிமன்னராசனுக்கு அதிகபணிபூட்டி
பட்டுபலகணியும் பாலகனுக்குத்தான்கொடுத்து
அரவான்கடோற்கசனை யவள்மகனைத்தானழைத்து
சுந்தரிக்குமாலையிட சுகமாகநீங்களும்போய்
அறியாதபாலகனை அபிமன்னராசாவை
திரியோதிரனுடைய திரள்தனையோகட்டாதீர்
ஆனைகடைசேனைகள் அவன்கண்ணில்காட்டாதீர்
பாலனபிமன்னனும் படைமுகன்பார்த்தறியான்
தாகங்குடித்தறியான் சண்டைசெய்துதானறியான்
அபிமன்னராசாவை அப்பால்நிறுத்திவைத்து
திரியோதனன்சேனையெல்லாம் செண்டாடிதான்கெலித்து
மாற்றான்பகையாளி மாபாவிசத்துருக்கன்
அவன்-ஆனைகுதிரைகளை அவனியிலேமடியவைத்து
மாயன்மகள்சுந்தரியை மணஞ்செய்துவாருமென்று
பூமியைக்கிள்ளி பொருந்தவேகாப்புமிட்டு
வாளபிமன்னன்னையே மகன்கையிலொப்பிவைத்து
போய்வாருமென்று பிள்ளைகட்குவிடைகொடுத்தான்
அங்கேவிடைபெற்று அலைகெங்கைதானோடை

நால்வரும் துவாரகாபுரிக்கு வருவது.

அப்போதுநால்வருமாய் ஆயன்பதிநோக்கி
இரவுபகலாக இராசாக்கள்தானடந்து
காடுகடந்து கரியவனந்தான்கடந்து

காணாறுதோப்பும் கடந்துவழிகடந்து
இஞ்சிவனங்கடந்து எலுமிச்சையுட்புகுந்து

நால்வரும் ஔவையார்வீட்டில்வந்து இறங்கினது.

ஔவையார்தன்னிடத்தி லரசமக்கள்புகுந்து
தாரூர் தனஞ்செயனார் தருமரிடசத்திரமாம்
ஏராளமாக எத்தனைபேர்வந்தாலும்
நாழியரிசி சமைத்திடுவாள்நாயகியும்
அப்படிக்கொத்த ஔவையார்தன்மாளிகையில்
போனார்கள்நால்வருந்தான் புதுமையுள்ளராசாக்கள்
கண்டாளேஔவையரும் காரணமாய்வந்தவரை
வந்தவரைக்கண்டவளும் வாங்களிருங்களென்றாள்
எந்தவூரெந்ததேசம் எனக்கரியகூறுமென்றாள்
அப்போதுநால்வரும் அரியவுரைப்பார்கள்
காசிவளநாடு கலியாணம்பார்க்கவந்தோம்
மெத்தபசிக்குதம்மா வெம்பிவிடாய்த்துவந்தோம்
பாட்டிகிழவியரே பழஞ்சோறுமுண்டோதான்
நல்லக்கிழவியரே நாணயக்காரியரே
பசிக்குதுஔவையரே பாலமுர்தம்வேணுமென்றார்
பழஞ்சோறேன்பிள்ளைகளே பரமர்க்கிருபையினால்
நாலாயிரம்பொன்னீந்தால் நற்போசனமிடுவேன்
இன்றொருவரில்லாமல் எதிர்பார்த்துநிற்கும்போது
நீங்களும்வந்தீர்கள் நீலவர்ணன்புண்ணியத்தால்
சமைக்கவொருநாழிசெல்லும் தம்பியரேயென்றுரைத்தாள்
சுந்தரிக்குப்பூமாலை தொடுத்துவைத்தபிற்பாடு
அப்போசமைத்திடுவே னென்றாளேஔவையரும்
அந்தவிசேஷ மதுகேட்டுப்பாலனுமே
சுந்தரிக்குப்பூமாலை தொடுத்துவைக்கிறேன்யான்
எங்களுக்குச்சமைத்து இடுங்காணும்பாட்டியரே

ஔவையார் அபிமன்னனுக்கு புட்பங்கொடுப்பது.

அப்படியேநல்லதென்று ஔவையாருஞ்சம்மதித்து
மல்லிகைமுல்லை மருக்கொழுந்துசெண்பகமும்
நார்பெரியகுங்குமப்பூ சூரியகாந்திபூவும்
பாதரிப்பூசெவ்வலரி பாரிஜாதபுட்பங் களும்
எங்கெந்தபுட்பமெல்லாம் எடுத்துவந்துதான்கொடுத்தாள்

அபிமன்னன் சுந்தரிக்கு மாலைதொடுப்பது.

பார்த்தானபிமன்னன் பாட்டியந்தபூவையெல்லாம்
வகையாலொருசெண்டுகளும் மாலைகளுங்கட்டலுற்றார்
பொன்னிழைத்தநாராலே பூச்செண்டுகட்டலுற்றார்
ஐந்நூறுவகை ஆண்செண்டுமாலைகளும்

4234

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

நிசுநிகென்றுதான்மின்ன நிதானமிட்டுகட்டுகிறான்
மல்லிகைப்பூச்செண்டதிலே தான்வந்தவயணமெல்லாம்
சொல்லியொருசீட்டிலே சுருக்கமாய்தானெழுதி
கணையாழிமோதிரத்தைக் கழட்டியதற்குள்ளே வைத்து
பூமாலைதான்கட்டி பூப்பெட்டியுள்ளே வைத்து
ஔவையாரைதானழைத்து ஆச்சுதுமாலையெனறான்
பசிக்குதுபாட்டியரே பசியாரவேணுமென்றான்
அப்படியேயாகுதென்று ஔவையாருஞ்சம்மதித்தாள்
முழுகிக்குளித்து முகங்கழுவிபூசைபண்ணி
எழுந்திருங்களென்றுசொல்லி மனங்குளிரசொன்னாளே
அசம்பொருந்துமென்று ஔவையாரையழைக்கலுற்றான்
சாணுக்குமூன்றடிதான் தள்ளாடிதானடந்தாள்
அசட்டுக்கிழவியவள் அசனமெங்கேபோடுவாள்
மாற்றான்திரியோதிரன் வந்தாரோநாமறியோம்
மாற்றான்பகையாளி மாபாவிமைந்தனவன்
தேசத்தழகன் திரியோதிரன்பாவி
அண்ணா அவன்செய்தவினை அறியீரோஅண்ணாவே
நச்சுமுள்ளை தான்பரப்பி நடக்கும்வழிதனிலே
கொல்லத்துணிந்த குருடன்மகனாரும்
ஆயனருளாலே அன்றுபிழைத்துவந்தார்
பஞ்சவரைவரையும் பட்சமாய்தானழைத்து
அரக்குமாளிகையில் அவனடைந்துதீக்கொளுத்தி
மடிக்கத்திரிந்தானே மாபாவிசந்துருக்கன்
அன்றுபிழைத்தாரே ஆயர்திருவுளத்தால்
காளையபிமருடன் கடோற்கசனேதுரைப்பான்
நல்லதுதம்பிமாரே நாமுமேஔவையரை
ஆக்கினசாதம் அடைவானகாய்கறிகள்
கொண்டுவந்துவையுங்கள் கிழவியெனவுரைப்போம்
பாட்டிஒருஉண்டை தின்னுமென்றுகைகொடுப்போம்
மருந்தானால்தின்னாள் மயங்குவாள்கூன்கிழவி
மற்றச்சோறுணுக்கால் வாழிவிழுங்கிடுவாள்
தின்னாதேபோனால் தெண்டால்நறுங்கடிப்போம்
என்று-எண்ணியிருந்தார்நால்வருமாய் ஏகாந்தம்பேசியபின்
ஔவையார்வாசலிலே அரசமக்கள்வந்துநின்று
பாட்டியரைதான்பார்த்து பசிக்குதுஎன்றுரைத்தார்

ஔவையார் நால்வரை இலைபறிக்கச்சொன்னது.

அப்போதுபாட்டியார் அரசமக்கள் தான்பார்த்து
வாழையிலைபோட்டு மறித்தெடுத்தாருமில்லை
இருநாற்றுக்காதவழி எல்லையுள்ளதூரமெல்லாம்
சுற்றமுற்றியெங்கும் ஓங்கிவளர்ந்ததுகாண்
அரவாணைப்பார்த்தந்த ஔவையார்சொல்லுவாள்

நாலுயிலைகிள்ளி நால்வரும்வாங்கவென்றாள்
சுருக்கானவைபயலே சுரைகிள்ளிவாருமென்றாள்

அரவான் சுரையிலையை வேரோடுபிடுங்கினது.

என்னகிழவியரு மெழுந்திருந்துநல்லரவான்
இருநூற்றுகாதவழி படர்ந்தகரையுள்ளதெல்லாம்
அப்போதுஅரவானும் மலையோடேதான்பிடுங்கி
வேரோடேதான்பிடுங்கி வேந்தன்மலைபோல்சுருட்டி
வைத்துதலைமேலெடுத்து வாறானேநல்லரவான்
சுருட்டிவருந்தம்பிதனை துரைமன்னர்தான்பார்த்து
சீதைசிறையிருக்க ஸ்ரீராமரைபடைகூட்டி
இலங்கைபுகுந்து இராமர்படைவெல்லும்போது
மாற்றான்கையம்பாலே யிருக்குதென்றுசஞ்சீவி
அப்போதனுமார் அவிழ்தத்தைக்கொண்டுவந்தார்
இமயமலையிலே யிருக்குதென்றுசஞ்சீவி
சஞ்சீவிகொண்டுவர தாண்டியேபோம்பொழுது
மருந்துடையபேர்மறந்து மலையோடுபிடுங்கிவந்தான்
அரவான்சுரைபிடுங்கி ஔவையார்முன்போட்டான்

கிழவி விசனப்படுவது.

கண்டாளேஔவையரும் கைநெரிந்துகாலசைந்து
அண்டாதராட்சதனே அடியோடேஇச்சுரையை
மிரண்டாய்பிடுங்கிவந்து மோடியாடபோவையோ
ஆகாயம்பூமியுள்ள அன்றுமுதலின்றளவும்
எப்போதுமிச்சுரைதா னென்றுமிருந்ததுகாண்
தருமர்கையால்வைத்தசுரை சத்திரத்திற்கேற்றதுகாண்
அந்தச்சுரையை அடியோடேபிடுங்கினையே
நின்று-கையைநெறித்தவ்வையார் கற்சுவரின்மேல்சார்ந்து
என்றுபுலம்பி யிருந்தாளேஔவையரும்

அபிமன்னன் சுரையிலைநடுவது.

ஔவையார்தானழுகிறது யபிமனுந்தான்கண்டு
நல்லரவான்பிடிங்கினதை நட்டிடுவோமென்றுசொல்லி
பாதாளந்தான்பரித்து பரும்வேரையுள்ளேவிட்டு
தருமரைதானினைத்து தள்ளிமண்ணைநிறைத்தான்
எப்போதும்போலே இளகிகடிகாடாகி
எங்கும்படர்ந்து யிருந்ததுகாணச்சுரையும்
கண்டாளேஔவையாருங் கைகொட்டித்தான்சிரித்து
நகைத்தந்தஔவையாரும் நால்வர்க்கும்பந்திவைத்து

ஔவையார் நால்வருக்கும் அன்னமிடுதல்.

சுரையிலைபூமியிலே துலக்கமுடனேபோட்டு
இலையிலேநீர்தெளித்து எதுசெய்தாரவ்வையரும்
ஆயிரம்பொறிக்கறிகள் அமுதுவகையுள்ளதெல்லாம்

குந்திவழிகடந்து கொப்பெனவேஓடலுற்றாள்
போகாதேபாட்டியென்று பின்பிடித்தநல்லரவான்
எடுத்துவிழுங்கவந்தார் என்றேமிகப்பயந்து
ஆற்றருகேவோடிவந்து ஔவையும்மேதுசொல்வாள்
பரமர்திருவடியி லிருக்குமந்தபார்வதியே
எங்கும்நிறைந்தாயே என்பக்கல்மாதாவே
மயேஸ்வரியேநீ மாயன்திருதங்கையரே
மகாதேவர்திருச்சபையில் மங்கையரேதங்கையரே
ஆரேறுதெரியாது அறியேனேராட்சதரை
என்னைவிழுங்கவந்தார் என்னசெய்வேன்மாதாவே
ஆபத்தைகாருமம்மா ஆகாததங்கையரே
பாலாபசிதீராய் பார்வதியேநான்பிழைக்க
ஆதிகெங்கைபாதம் ஔவையாருந்தெண்டனிட்டு
சோருங்கரியுந் துலங்கவேவெண்தயிரும்
ஆற்றிலுள்ளநீரையெல்லாம் அடிசியில்கரியாக்குமம்மா
பார்வதியேயென்று பணிந்தாளேகூன்கிழவி
ஔவையார்நினைத்தபடி அப்படியேவுண்டாச்சு
பார்த்தாளேஔவையார் பசங்களண்டையோடிவந்து
அசனஞ்சமைத்தேனடா அப்பாலேவாருங்கள்
இட்டுவந்துநால்வரையு மிரங்குமென்றாளாற்றிலே
ஆற்றிலிரங்கி அசனம்பொருந்துமென்றாள்
வயர்நிறையவுண்ணுங்கள் மக்களேஎன்றுரைத்தார்
அரசமக்கள்நால்வருமாய் யாற்றிலேபோயிரங்கி
கச்சைகளைந்துவைத்து கனக்கவேநீருடி
அசனம்பொருந்தினபின் அரசமக்கள்வந்துநிற்க
வெள்ளிலைகற்பூரம் வேண்டியதுதானருந்தி
சந்தனங்கஸ்தூரி சாந்துமிகவணிந்து
ஔவையிடவாசலிலே அரசமக்கள்வந்துநிற்க
அப்போதுஔவையை ரடிசியில்மிகவருந்தி
அப்போதுமங்கே ஆயன்படைவீட்டில்
மேளவகைசத்தமும் வெகுவாய்முழங்குமல்லோ
தாரைவிருதுகளுந் தம்புருமுழங்கிறதும்
மத்தளங்கொட்ட வலம்புரிநின்றாத
பேரிகைசத்தம் பெருக்கமுழங்கிறதும்
வேந்தரிந்தநால்வர்களும் வினவாகவேகேட்டிருந்து
விந்தைமுழங்கிறதை விசாரிப்போமென்றுசொல்லி
ஆச்சிகிழவி அரிவையரேநீர்கேளும்
இசைவானமேளசத்தம் எங்கேநீசொல்லுமென்றார்
அரசமக்களைப்பார்த்து ஔவையாரேதுரைப்பாள்
மாயன்மகள்சுந்தரியை வாளபிமர்க்கென்றபெண்ணை
தென்னமுடிவேந்தன் திரியோதிரப்பெருமாள்

தன்மைந்தன்லக்குணர்க்கு மாலையிடவாராளும்
ஆகையினால்முழங்கும் அனந்தவகைமேளமெல்லாம்
என்னகடோற்கசனும் எடுத்துரைப்பானவ்வையுடன்
அபிமரைநீரு மறிவீரோ ஆச்சியரே
சொன்னாலறிவேன்காண் சொற்பெரியவீரியனே
அறிவேன்காண்பிள்ளைகளே அடையாளஞ்சொல்லுகிறேன்
கேளுங்கள்பிள்ளைகளே கிளைசூழ்ந்துவாழ்ந்திருப்பீர்
தாரார்புகழ்வேந்தன் தர்மரண்டைநானிருந்தேன்
அப்போதறிவேன்காண் அபிமப்பெருமானை
தர்மரைநீரறிந்தால் சற்றுகுறிசொல்லுமென்றான்
தருமருக்கடையாளந் தாழ்தொடையில்மச்சமென்றாள்
ஒக்குமடிஆச்சியென்று ஓடிவந்துதெண்டனிட்டார்
தெண்டனிட்டபிள்ளைகளை சென்றவ்வையார்தானெடுத்து
ஆரடாதம்பியரே அடையாளஞ்சொல்லுமென்றான்
வீமனிடபிள்ளை யரவான்கடோற்கசனும்
ஔவையாருடனே அடையாளமேதுரைப்பார்
தர்மர்க்கிளைய தாக்குடையவீமசேனன்
என்பேர்கடோற்கசன் என்றாச்சிகமலக்கன்னி
அர்ச்சுனனார்புத்திரனு ரரவானிவர்காணும்
சகாதேவர்புத்திரனார் தாக்குடையதொந்திசெட்டி
என்றுசொல்லக்கேட்டு எழுந்துமேஔவையரும்
கட்டிஎடுத்தணைத்து களிவாயைமுத்தமிட்டு
எங்குவந்தீர்மக்களே இத்தனைதூரமென்ன
அர்ச்சுனனார்புத்திரனு மரவானுங்கூறுவான்
மாயன்மகளசுந்தரியை மணஞ்செய்யவந்ததொரு
மாப்பிள்ளையாகவந்த வாளபிமன்தானேயிவன்
வாளபிமன்என்றனுமே வாரியெடுத்துரைத்து
வாரியெடுத்து மடிமீதிற்கொண்டுசென்று
ஐவரையுங்கண்டதுபோல் ஆச்சுதுகாணப்போது
மாயனருளாலே மக்களையுங்கண்டோமே
தன்னுடையசிங்கா தனத்தருகேவந்து
உட்காருமென்று வுபசாரணைசொல்லியிவள்
மணஞ்செய்யவேணுமென்று வந்தீரேமக்களே
ஆனையணியும் அரசமக்கள்வந்ததுண்டோ
வீமன்மகனார் நலமானகடோற்கசனும்
வாறாய்நீபாட்டியரே மாயர்துணையாகவந்தோம்
இதுபுதுமைஇதுபுதுமை என்றாளேஔவையரும்
மாயர்தயவாலே வார்த்தைநடந்ததுண்டோ
துரியோதனனுடைய திரள்வருகுதென்றாக்கால்
பருந்துதன்கூண்டதனி ற்குகோழிக்குஞ்சிருந்து

அதிகாரம்பண்ணுநீபோ லல்லவரும்வாறுறும்
மூப்படிவாசலிலே முகிர்ந்தவெள்ளாட்டுமயிர
அமுர்ததநிறுத்தி வருகுதுஅக்ரோணி
அக்கப்படிபதினொரு அக்ரோணிச்சேனையுடன்
ஆனைகுதிரையது அறுநூறுஅக்ரோணி
இரதனைசேனையுடன் எமபெருமாள்தன்பதிக்கு
வாறான்திரியோதனனும் மகுடமுடிவர்தனர்கூட
என்றுசொல்லக்கேட்டாள்காண் என்னுடையபிள்ளைகளே
ஆனால்கேளென்றாச்சி அடியேன்கள்சேவகத்தை
யானைதிறமெல்லாம் அண்ணர்கடோர்கஜனுக்கு
குதிரைதிறமெல்லாங் குமாரராவானுக்கு
சேனைதிறமெல்லாஞ் செல்வன்தெரந்திசெட்டியற்கு
மாப்பிள்ளைராயனும்மே வாளபிமன்வசங்காண்
அதுவேசிலபாரம என்றீரேளைமாட்டி
மாயன்மகள்சுந்தரியாள் வார்த்தைதெரியவில்லை
வாளபின்மைந்தனுக்கு வாராளோயில்லையோ
ஆமல்லவென்றுசொல்லி அமிர்துவாஆச்சிபரோ
தருமைப்பற்றியொரு தனித்துதூதுபோய்வருவீர்
என்னைக்கிழவியரும எங்கிமிச்சிரித்து
ஏவல்காரியைப்போல் என்னையேபோகவிட்டால்
எப்படியாகிலு மிப்போதுருதாது
போய்வாருமென்று போற்றியேதெண்டனிட்டார்
அப்படியேயாகுதென்று ஆச்சியங்கஔவையரும்
கந்தையுடுத்தி கையிலேகோலூன்றி
கக்கத்திபூட்டி கழலாமல்தான்தூக்கி
போய்வாறேனமக்களென்று புறப்பட்டாளவ்வையரும்
அப்போகடோர்கஜனும் ஔவைமுகம்பார்த்து
நாகமாய்சுந்தரிக்கு நாலுபேர்மாமியர்கள்
பொன்னுலேபூஷணங்கள் பொற்கொடிக்குத்தான்கொடுத்தார்
நாங்களும்கொண்டுவந்தோம் நாயகிக்குபூஷணங்கள்
கொண்டுபோய்பூட்டுமென்று கொற்றவனுந்தான்கொடுத்தார்
அப்போதுஔவையரும் அரவானைப்பார்த்துரைப்பாள்
மாற்றானுடமையென வாங்காளேசுந்தரியும்
என்றுசொல்லக்கேட்டு இபலபிமன்கூறுவான்
பள்ளிவிருக்குமப்போ பாடங்கொடுப்பாள்காண்
அப்போகழட்டியிட்ட அம்பொன்திருவாழி
பூச்செண்டுதனிலே போகாவகட்டிவைத்தேன்
அந்தஅடையாளம ஆரணங்கேகாட்டுமென்றாள்
பூச்செண்டுக்குள்ளிருக்கும் போனதிருவாழிதனை
ஔவையார்காட்டினாள் ஆனந்தவாழ்மார்பன்

நல்லதென்றுசொல்லி நகைத்தாலே அம்மையரும்
அப்பாலேநீங்களிந்த அடவிவிட்டும்போகாதீர்
நாராயணர்பதிக்கு நான்போய்த்தருமளவும்
இங்கேயிருமென்று எழுந்திருந்தாளவ்வையரும்
சாணுக்குமுன்னறையாய் தள்ளாடிபோய்நடந்தாள்
அவ்வையுடநடையை அதமனுந்தான்பார்த்து
அவ்வையார்நடக்கவே ஆறுமாதஞ்செல்லுமென்று
நாயகருஞ்சொல்லி நடந்துதருக்கையிலே

ஔவையார் சுந்தரிக்கு ஓலைகொண்டுபோனது.

வாயிலடித்தாற்போல மாயர்பதிநெருக்கி
ஓடினாளவ்வையார் எருகொடியில்மாயர்பதி
அப்போதுமாயவனார் அலங்கரிப்பான்தன்பதியை
பலத்தால்நிறுத்தி பந்தலதுபோட்டுவிட்டார்
கொச்சியில்சந்தனத்தை கொடுங்கையதுபோட்டுவிட்டார்
சப்பரங்கண்ணாடிவைப்பார் தலைவாழைகட்டிவைப்பார்
எட்டுத்திசையிலேயும் இயல்பெண்கள்நின்றாட
கண்ணாடிகட்டி கவரியலங்கரித்து
மண்டபங்கள்தோறு மகாதோரணசட்டி
எலுமிச்சைவெட்டிவேர் எத்திசையும்வீசவிட
முக்காமணல்பரப்பிமுழுவழிநக்கால்நீட்டி
தண்ணீர்தெளித்துசாம்பிராணிதூபமுடன்
ஐந்துதலைநாகத்தின்மேலமர்ந்திருந்தார்மாயவனார்
அப்போதுமாயவரு மங்கேவருவாரே
குந்திரும்பாலாபிரும்பிக் கூன்கிழவிவந்தாளே
தடியைத்தரையில்வைத்து சற்றேவுட்கார்ந்தாளே
மூன்றூனைப்போட்டு முடக்கிப்படுத்தெழுந்து
மெல்லவருகிறதை மேகவர்ணர்தான்பார்த்து
அபிமரிடதூதர் ஔவையாரும்வாராளே
குலுங்கநகைநகைத்து கோவிந்தரேதுசொல்வார்
வாசலதுகாப்பாளை மாயவருந்தானெழுந்து
காசான்வனத்திலே கடுங்கானகத்திலே
தருமரிடசத்திரத்தில் தாம்வாருமவ்வையரும்
கோலமொழிசுந்தரிக்கு கொண்டைமுடிக்கைக்கு
இப்போவருவா ளினிசற்றுநேரத்தில்
அவளைத்தடுத்தவரை ஆக்கினைகள்பண்ணிடுவேன்
அப்படியேயாகுமென்று அருந்துதாதெண்டனிட்டார்
அப்போதுஔவையரும் அசந்துதடியூன்றி
சாணுக்குமூன்றடியாய் தள்ளாடித்தானடந்தாள்
அங்கிருக்குந்தூதுவர்கள் ஔவையரைத்தான்பார்த்து
எங்குநீபோனாய் இனியகிழவியரே
காசான்வனமதிருந்து கரியமல்புத்திரிக்கு

கொண்டைமுடிக்கவே கொப்பெணவேநானுமிங்கே
ஆகையாலவந்தேன்கா ணூரியரேயென் றுரைத்தகள்
இடுப்பில்தடியேன் என்னயிதமுட்டை
அவளோபலாவிரையோ அள்ளியிடுமெங்களுக்கு
வடதோசைசர்க்கரையே மற்றுமதிரசமோ
என்னவிருதானே எங்களுக்குக்கொடுத்துவிடு
பின்னேநடவுமென்றா போற்றிபரெல்லோரும்
ஒன்னகிழவி இவரகளைத்தான்பார்த்து
அல்லகாணூரியரே ஆயன்மகள்சுந்தரிக்கு
பின்னையென்னகொண்டுவந்தேன் பெருமனுடன்சொல்வேனே
வாணூங்காண்மாதரவே வழிட்டோம்போமென்றார்
அப்போதுஔவையாரு மாண்மனையில்போய்புகுந்து
ஓராம்படிதளமாம் ஓலைப்பூமண்டபமாம்
இரண்டாம்படிதளமாம் இரத்தினக்கால்மண்டமாம்
மூன்றாம்படித்தலமாம் முத்துக்கால்மண்டபமாம்
நான்காம்படித்தளமாம் நவரத்தினசாவடியாம்
ஐந்தாம்படித்தளமாம் பஞ்சரத்தின மண்டபமாம்
ஆறும்படித்தளமாம் யானைகடுஞ்சாவடியாம்
ஏழாம்படித்தளமாம் கண்ணைக்கால்மண்டபமாம்
எட்டாம்படித்தளமாம் குதிரைகட்டுஞ்சாவடியாம்
ஒன்பதாம் படித்தள ஒட்டைகற்றுசாவடியாம்
பத்தாம்படித்தளத்தில் வந்தாளேஔவையரும்
வாங்களடிதாயரே மாயர்மகளெங்கேயென்றாள்
எழாந்தளத்திலே இயலாணபெண்களுடன்
அம்மானார்பந்துகளின் அபிமருடபேருலே
அத்தைமகன்போலே ஆடுகிறாள்பாருமென்றான்
தாதிகள்சொல்லுமே தரியாளேஔவையரும
மாயர்மகலாரு மாமனூர்தான்பிருந்தி
பலகணிதான் திறந்து பார்த்தார்கள் திசைதோறும்
மைத்துனர்வாளபிமர் வாருரோவென்றுசொல்லி
பார்த்தாள் திசைதோறும் பங்கயர்ஞ்சீகண்ணூறும்
பார்த்தவழிகளெல்லாம் வேற்றுவழியாச்சுதல்லோ
பார்த்தானமர்களையின்னம் பார்க்கவிதியில்லையோ
முத்துமுலைஸதனங்கள் சொருகுதடாமைத்துனரே
மோகனசிங்காரம் அழியுதடாவாளபிமா
சொல்லுமழிந்தேன் செல்வழிந்தேன்மைத்துனரே
வில்விசையர்தன்மகனே வேந்தர்பெருமானே
சிக்கவெள்ளையாள்ள தேவேந்திரபேறு
உன்மாதுபடேந்துயரம் மாற்றுயாமைத்துனரே
யானைக்கிடுக்கரும்பா எங்கள்குலேந்தனே
வேழமுண்டவிளாவின் கனியானேனமைத்துனரே

மத்தூக்குள்ளகப்பட்ட வீரனேன்மைத்துனனே
மாயர்மகளாருமழுதுநெடுநேரம்
அன்னவளர்த்தெடுத்த தாயிமடிமேலே
பொய்யுறக்கமாயிருந்து பொற்கொடியும்பள்ளிகொண்டு
சொற்பனங்கண்டுமேசுந்தரியுமப்பொழுது
தோகைநல்லசுந்தரியும் திடுக்கிட்டெழுந்திருந்து
கனவுகண்டெழுந்திருந்து தாயியர்க்குச்சொல்லவேதான்
என்னகனவுகண்டா யென்தாயேயென்றுசொல்ல
எங்கொழுநைமூவருமா யெலாலபிமருடன்
மாற்றுனத்தென்டாலே மகாராசர்போய்புகுந்து
மகுடமுடிவேந்தர்களை மண்மேலெரிந்தார்ப்போல
உயர்ந்தபனைமேற்க்காசம வுட்கார்ந்துக்கொண்டு
கழுத்துவனுயாமல் காகழுதிரமுண்ண
காகழுதிரமுண்ண கண்டேன்காண்சொற்பனங்கள்
தேர்யுறவிகளானுங் தெப்பமாய்தாமிதிக்க
மாண்டுமேயப்போதுமன்னவர்கள்மிதக்க
கொள்ளவந்தலக்கினை குடிமிவைத்துக்கலைசோர்த்து
அரசாணிகாலுடனே அவனேபகட்டிதைவது
சாணிஇரட்டிவைத்து தலைமேலேவளக்கேற்றி
இரட்டைபனைமேலே இயலானவபிமருடன்
ஒக்கவிருந்துகொண்டு ஓமங்கள்தான்வளர்த்தி
மங்கலியங்கட்ட மகிழ்ச்சிருக்கக்கண்டேன்
அபிமனைக்கைபிடிக்க அரசாணிசுற்றிவந்தேன்
ஐயனுர்நீர்வார்க்க அபிமனுர்கைபிடிக்க
இப்படிகண்டேன்காண் என்தாயேயென்றுரைத்தாள்
இப்படியாகயிருக்குமந்தவேளையிலே
அப்போதுஔவையரு மாயர்கள்முன்னேவந்து
ஆயிரம்பெண்களிலே எங்களபிமருட்டேவியரே
என்றுஔவையார்கேட்கலுமே எழுந்துவந்துசுந்தரியும்
தூவாழைஎண்ணைதனை பொற்கொடியுங்கொண்டுவந்து
அபிமருக்கேயொக்குமென் றுரியர்க்கென்னையிட்டாள்
எலுமிச்சங்காயிழந்து இணையாள்பாதந்துளக்கி
சீக்காய்நெல்லு சிருபருப்புகஸ்தூரி
பச்சிலைமஞ்சள் பனிநீருல்தான்தெளி
சாந்துகஸ்தூரி தடவிச்சிறுக்கருத்து
மல்லிகைபுல்லை இருவாட்சிதான்சூழ்ந்து
சப்பிரத்தின்மீதிலே படமாக்கத்தான்பரம்பி
மெத்தைதமடித்திட்டு மேலேபனைகோலி
பட்டைமடித்தேரிட்டு பலபுட்பம்தான்பறப்பி
வெல்விலைகற்பூடி வேண்பெண்கள்நின்றெடுக்க
ஆழியபிமனொன்று அணைத்துடனேபள்ளிகொண்டார்

வேறேயடையாளம் வுண்டோதான்றோழியரே
மற்றுமடையாளம் வாங்கிவந்ததுண்டோதான்
மாயன்மகளுடைய மனதறியவேணுமென்று
அடையாளமநானறியேன் யாரையுநாங்காணேன்
பெருமான்மகளாரே பூஷணங்கள்பூட்டுமென்றாள்
சுந்தரியுங்கோபமாய்த்தோழியரைதானபார்த்து
இந்தக்கிழவியை இழுத்துத்துரத்துமென்றாள்
தாதியர்களோடிவந்து தாமுமருயிழுப்பாரும்
அனியாயக்கொள்ளையிது யாருமில்லையோமனைக்கு
வாறாய்நீசுந்தரியே மனதறியச்சொல்லுகிறேன்
பாலனபிமனுடன் பள்ளியிலிருக்குமப்போ
பார்த்தன்மகனைகைதனிலேபாடங்கொடுப்பீராம்
அப்போதுனக்கந்த யாழியடையாளம்
இப்போதந்தமாலையிலே யிருக்குதடிசுந்தரியே
ஆழியென்னபோதேநீ யெங்கவததபம்மாவென்றுசொல்லி
சுந்தரியுமோடித்தொழுதிறங்கித்தெண்டனிட்டாள்
தெண்டனிட்டசுந்தரியைத் தீரமாயெடுத்தணைத்து

ஔவையார் சொல்வது

மாலையில்தானிருக்கு மணிவயிரஆழிதனை
ஆழியைத்தானவிழ்த்து மாயர்மகள்கைகொடுத்தாள்
இருகையிமேற்றி யெடுத்தணைத்துக்கண்ணிலொத்தி

சுந்தரி சொல்வது

வாடிநீதோழியரே மைத்துனரும்வந்தார்காண்
ஆழிவந்தபோதேயிப்போ யபிமரேவந்தார்காண்
ஆழிகையைவிட்டு யாண்மனையிலுட்புகுந்து
மஞ்சநீர்ச்சாலையிலே வாயர்மகள்போய்புகுந்தாள்
நான்தான்காணவ்வையரே அல்லபிமர்தேவியென்றாள்
நான்தான்காணென்றதுமே நகைசெய்துஔவையாரும்

சுந்தரிக்கு ஔவையார் பூமாலைக்கொடுப்பது

மாலையேன்செண்டோகாண் மைத்துனரூரில்லாதே
என்கணவன்வாளபிமனை என்பனையல்லநதாலே
கண்வடமுத்துவடம் களபதக்கம்வந்ததம்மா
மூன்கைமுகதாரி கோகனமாலைகளும்
கந்தைவிரித்தவ்வையார் கரியமால்புதிரிக்கு
இந்தாருமென்று எடுத்துமுன்னேவைத்தாளே
அந்தபூஷணத்தைதீண்டாதே பொரிநீகொடியுமேதுரைப்பாள்
கட்டிபிடித்துகணமார்புடன்சேர்த்து
தூங்கியெழுந்திருந்து சுந்தரியுமேதுரைப்பாள்
தெண்டனிட்டசுந்தரியை சென்றவ்வையார்தானெடுத்து
வாராய்மருமகளே வாளபிமர்தேவியரே

தூதுவந்தஎன்னை தொந்திரவுபண்ணாதே
அத்தையிடமைந்த னபிமரிங்கேவந்தாரோ
அபிமரிடவாழிதனிலாறிளேனென குறையை
அத்தையின்மந்தரிப்போ ஆனைகுந்திகுள்ளிருந்து
உந்தன்மடத்திருந்து உம்மைவரவிட்டாரோ
எங்கிருந்துதூதுவிட்டார் பெணக்கறியசொல்லுமென்றான்
கான்-பண்டபத்திலிருந்துஎன்னைவரவிட்டார்கள்
ஆனாலுமத்தையரே அபிமருக்குபடைத்துணையால்
ஆதுனையாகவந்தார் அத்தையெனக்குறைப்பாய
உங்கலத்தைதகமலகன்னி அவள்மகன்கடோற்கசன்
நாககன்னிபெற்றெடுத்த நல்லரவான்வந்தான்காண்
வீரகெங்காள்பெற்றெடுத்த வேந்தனும்தொந்திசெட்டி
மூத்தார்கள்மூவருடன் உன்புருடனபிமருடன்
வந்திருந்துவீட்டில் வரவிட்டாரென்னையிப்போ
என்மூத்தமார்வந்தாலே முகூர்த்தம்முடியுமென்றாள்
ஆயர்மகளுடனே அவ்வையுமேதுரைப்பாள்
உன்-மூத்தாருட னுரைக்க வார்த்தைவிசேடமென்றாள்
கொழுநர்மார்வந்தாலே கூடுமுகூர்த்தமென்றாள்
மூத்தார்கள்மூவருக்குங் முக்கால்வலம்வந்தேன்
கொண்டபெண்ணைவிட்டாலுங்குறித்தபெண்ணைவிடலாமோ
மாற்றானேகொள்ளவந்தால் மானங்கொடுப்பாரோ
எந்தன்-கொழுநர்தன்னுடனே என்விசனஞ்சொல்வாயோ
எந்தன-கொழுநர்மார்களை இப்போவரச்சொல்லியே
இலக்குனற்குமாலையிட என்றதொருநாள்முதலாய்
பச்சிலைமஞ்சல் பழுக்கக்குளித்தறியேன்
பாரக்குழல்கோதி பந்தாய்முடித்தறியேன்
வெள்ளிலைகற்பூர மென்றறியேனத்தையரே
வண்ணானுக்கிட்டதுகில் வாங்கியுடுத்தறியேன்
எங்களத்தைமகனினைவாயணந்தசுதம்மண்வளரேன்
ஏழுபனையோலையல்லோ மெழுதிவரவிட்டாலும்
என்விரகந்தீராது என்னுடைய அத்தையரே
வாளைவரச்சொல்லு ராமர்மருமகனை
ஆகலழைத்துப்போய் அபிமருக்குறையுமென்றாள்
அக்கினியில்வேகமாய் அனுப்புமம்மாமைத்துனரை
அன்றுசூட்டியிட்ட அபிமருடஆழியிதோ
ஆழியடையாளம் அபிமருடகைகொடுப்பார்
ஆடர்மதனாரும் அத்தைபோய்வாருமென்றாள்

சுந்தரி ஔவையாரை பயணப்படுத்தி யனுப்பினது.

ஔவைபயணமிட்டு அசந்துவழிகடந்தாள
ஒழுவிடமந்தேடிக்குந்திநடையாய்கடந்து

வாடிமனந்தளர்ந்து வருவாளைப்போய்வருவாள்
ஔவைவருமதை அரசமக்கள்காத்திருந்து
அரசர்கள்நால்வருமாய் நடந்தும்யெதுமவருவார்
ஔவைக்கெதிராக அரசமக்கள்தெண்டனிட்டு
மாயர்மகள்சேதிகளை மாதாவேசெப்புமென்றார்
என்னவென்றுசொல்வேன் னென்னுடையபிள்ளைகளே
மாற்றானிலக்குணனும் மாயர்மகள்சுந்தரியை
மாயர்மகள்சுந்தரியை மணஞ்செய்தபோதனும்
என்றுசொல்லக்கேட்டு ஏங்கினனேவாளபிமன
அண்ணற்கடோற்கஜனும் அபிமனைத்தான்பார்த்து
வாராயநீதம்பியென்று மாயர்மகள்சுந்தரியை
பெண்ணுக்குமேங்கினள் பெருமாளுமேசுவார்காண்
கலங்காதேதம்பியென்று கடோற்கசனுந்தானெழுந்து
மூன்றுமுழக்கச்சை மூன்றுசுத்தாய்தானிருத்தி
தெண்டெடுத்துதோளில்வைத்து மன்னர்கடோற்கஜனும்
பாவிதிரியோதிரனர் பட்டணமேபோய்புகுந்து
யானைகுதிரைகளை யத்தனையுஞ்சாவடித்து
சுந்தரியாள்பாடிசென்று தூக்கிமுதுகில்கட்டி
கொண்டுவந்துகூட்டில் குலமேகனென்றுசொல்லி
மற்றுமுள்ளராசாக்களை மனிகளிலேபெண்தேடி
வாளபிமர்தம்பியரே மணஞ்செய்துவைக்கிரண்டா
என்றுசொல்லக்கேட்டு எழுந்திருந்துவாளபிமர்
அப்படியேயெல்லாமா மண்ணைகடோற்கஜனே
ஔவைக்கிழவிமனம் அறிந்தவுடனாகுமென்று
மாதாவேஆச்சியரே மாயர்மகள்சுந்தரிக்கு
மாற்றானிலக்குணர்க்கு மாலையிட்டாளென்றீரே
மெய்யாவுரைத்தாளோ மேன்மையுள்ளமாதாவே
மாயர்மகளாரு மணஞ்செய்ததுண்டானல்
நாங்கள்கொடுத்தவொரு நற்பூஷணங்களெங்கே
தாவம்மாவென்றுசொல்லி தர்மமகன்கேட்கவுமே
ஆச்சிகிழவியவள் ஔவையுமேதுரைப்பாள்
மாலைக்குழலாளை மணஞ்செய்தபோகிறவர்
வழியிலேமறித்துபெண்ணை மார்பூஷணம்பறித்தார்
என்றுசொல்லக்கேட்டு எழுந்திருந்துநல்லரவான்
வாடாநீவாளபிமா மசக்கிறுளவ்வைபரும்
தெத்தியவள்நிம்மூடனே திரியவாமுரைத்தான்
அவள்கந்தையுரிந்தாக்கால் கலக்கந்தெளியுமென்று
கந்தையைக்கழட்டி உரியவந்தான்நல்லரவான்
ஔவையுமப்பொழுது அரவான்முகம்பார்த்து
ஆழியெடுத்தவ்வையார் அபிமனர்கைகொடுத்தாள்

வாங்கினனே வாளபிமன் வயிரமணியாழிதனை
அண்ணனிருந்தமூவரையு முடிபணிந்தார்வாளபிமன்
திருவாழிகடந்தானே சுபத்திரைதன்மகனும்
ஆழிவந்தபோதனக்கு மர்மமாய்ச்சொல்வதேது
வாருங்கள்மக்களே மாற்றான் திரியோதனனும்
மாயர்மகள்சுந்தரியை மணஞ்செய்தானென்றக்கால்
உங்கள்நினைவறிய உரைத்தானவாண்பிள்ளைகளே
மைத்துனர்வந்தாரென்று மாயர்களுக்குரைத்தேதன்
கொழுநாமர்வந்தாரென்று கொம்பனைதான்மகிழ்ந்து
எனக்குமனமுருகி என்னெண்ணஞ்சித்தியாச்சு

ஔவையார் நால்வருக்குச் சொல்வது.

எந்தனிடகொழுநருக்கு இட்டைசாணமென்றாள்
கொண்டபெண்ணைவிட்டாலுங் குறித்தபெண்ணைவிடலாமோ
ஏலாலமூவரையும் என்கொழுநரபிமனையும்
கடுகவாச்சொல்லுமென்றாள் கரியமால்புத்திரியும்
என்றந்தஅபிம னிசையவேதானழைத்து
என்தேவிசுந்தரியாள் எனக்கென்னசொன்னார்காண்
மாற்றான்மணஞ்செய்ய வந்தவொருநாள்முதலாய்
பச்சிலைமஞ்சள் பூசிக்குளித்தறியேன்
பாலகுழல்கோதி பந்தாய்முடித்தறியேன்
வண்ணானுக்கிட்ட துயில் வாங்கியுடுத்தறியேன்
வெள்ளிலைகற்பூரம் மெல்லவில்லைமெல்லியரும்
அபிமாஉன்னினைவாலே அசனம்பொசிக்கவில்லை
ஏழுபனையோலை யெழுதினேனென்துயரம்
முகாதுகாணுமப்போ அவ்வையாரேயென்றுரைத்தாள்
நம்பினனுமகளை நணையறுப்புமென்றாள்
என்மைத்துனனுஞ்சொன்னவொருவாசகங்களென்றுசொல்லி
நாளைமணம்போகவேணு மென்றாளேஔவையரும்
அகமகிழ்க்கோலம் பாவியப்பால்கொண்டுவந்து
சென்னலரிசிகொண்டு தெனகற்றேன்பொங்கவிட்டு
வாளபிமர்தனையழைத்து மனைமேலுட்காரவைத்து
மன்னவர்கள்மூவரையும வரிசையுடனிருத்தி
வாளபிமர்தனக்கு மாகிக்கைதாங்கழித்தாள்
வெள்ளிலைகற்பூரம் வேணதெலாந்தான்கழித்தாள்
மக்கள்நாலருக்கும் வரிசையாயன்னமிட்டு
மணம்போவோமவாருமென்று வாழ்த்தியந்தஒளவையரும்
ஆயுதங்கள்கையிலேந்து அரசமக்களவந்தார்கள்
துரியோதனனுடைய சேனைகளத்தனையும்
எச்சரிக்கையாயிருப்பா ரெல்லோருமென்றுசொல்லி

ஆயுதங்கள் தன்னையே ஔவையாரும்பாருமென்றாள்
எடுப்பாயேபாட்டியரே எங்களுடைய ஆயுதத்தை
இந்தாருமென்று எடுத்துவைத்தாராயுதத்தை
திருநீறு தான்தரித்து தெரிந்தந்த ஆயுதத்தை
கங்கையில்தான்சுருட்டி கக்கத்திலேயிடுக்கி
கடோர்கஜன்தெண்டவ்வையார் கையில்தடியூன்றி
வீசிநடந்தாளே வேந்தர்கள்பார்த்திருக்க
வழியிலிதுவென்னவென்றாள் மாதாவேயேதுசொல்வாய்
கடோர்கஜன்தெண்டவ்வையார் கையிலேதடியென்பேன்
அரவானுடவில்லெனக்கு ஔவைக்கோல்தானென்பேன
காலையபிமர்கைவாள் கண்ணுக்குப்புல்லருக்கு
புல்லருக்கும்வாளென்று பெருமையுடனுரைப்பேன்
வாருங்கள்தம்பியென்று மாதாவுமுன்னடந்தாள்
கூனுகிழவிநம்மை கொஞ்சமேபண்ணாளே
கூனகிழவிவாருமென்று குலுங்கவேதானகைத்தார்
ஔவையாருமுன்னடக்க அரசமக்கள்பின்னடக்க

ஔவையார் நால்வருக்குந் துவாரகை
யிருப்பைக் காட்டுவது.

மாயனிடபூங்காவிலே மன்னவரைக்கொண்டுசென்று
மாயன்படவீட்டை மன்னவர்க்குக்காட்டலுற்றாள்
செம்புமதிலுகளுஞ் சிங்காரத்தோப்புகளும்
சன்னர்கதவுகளும் கரும்புவிளாம்பிஞ்சுகளும்
உப்பரிகைமெத்தைகளும் உயர்ந்ததொருமண்டபமும்
வாழைகமுகுகளும் மாமரத்தோப்புகளும்
தென்னமரச்சாலைகளும் தேக்குமரச்சோலைகளும்
புன்னைமரச்சாலைகளும் புளியமரச்சோலைகளும்
பாலைமணம்வீசும் பச்சைகுயில்கூவும்
பச்சைத்துளசி பரிமளிக்குமெத்திசையும்
பாருங்கள்மக்களே பாரளந்தார்தன்பதியை
திரியோதிரனுடைய தண்டிரங்குமிவ்விடத்தில்
ஊருக்குத்தெற்கே உருமாமரக்குளமும்
உயர்ந்ததொருமாமரமும் ஒருநாழிவழிநிழலும்
அந்தவனத்தருகே ஔவையாருமங்குநின்றாள்
அரசமக்கள்நால்வருந்தா னவ்வையற்குதெண்டனிட்டார்
ஔவையாரெடுத்தணைத்து அள்ளியேமுத்தமிட்டாள்
வாழ்த்தியந்தஆயுதத்தை மக்கள்கையில்தான்கொடுத்தாள்
மக்களேநீங்கள் மணம்புரிந்துவாங்களென்று
வாழ்த்தியேஔவையரும் மனைநோக்கிப்போகலுற்றாள்
மாமரத்தின்கீழே மன்னவர்களிருந்தார்கள்
இப்படியாகவே யிவரிருக்கும்வேளையிலே

கலியாணம்போகிறவர் கணக்கிடவேபோதாது
அண்டத்துநட்சத்திரம் அளவிட்டுக்கூறலாம்
தேசத்தழகுமன்னன் திரியோதிரன்சேனை
பதினெண்படைத்தலைவர் படைமன்னரெல்லோரு
கர்னன்விதுரன் காங்கேயன்தேத்தராசன்
மன்னர்குருக்கள்மார் மகாசேனைவாராரே
அந்தவழியிடையர் அடிக்கிவந்தபாற்குடங்கள்
ஆயிரங்காவடியி லடுக்கிவந்தார்பாற்குடங்கள்

அரவான் இடையர்களை மிரட்டுகிறது.

அரவானெழுந்திருந்து அதட்டியிடையர்களை
இறக்கடாபாற்குடத்தை யெனறுகொடிபிடுங்கி
மாரியெடுத்தரவான் வழிமரித்துநிற்கலுற்றான்
அடிக்குப்பொருந்தாமல் அதிர்ந்துகுழம்பிநின்றார்
பாற்குடத்தினுள்ளே பதுங்கிருந்தநால்வருமாய்
வாய்சோறுகையேந்தி மன்னர்குடித்தபின்பு
குட்டிதெப்பைகோடாலி கோலோபணைகயிறு
உப்புசட்டிவாய்க்கரிசி உடுத்தகம்பிளியுடனே
பிச்சைநெருப்பும் பிதிர்ந்ததொருநற்சிலையும்
கட்டுஅரணுரும கையில்முழக்கயறும்
மாயயிடையர்கையில் வகையாகத்தான்பிடுங்கி
அடித்துத்துரத்தியுன் ஆண்டவர்க்குச்சொல்லுமென்றார்
ஒடிவரையமென்று ஒட்டியுந்துறத்திவிட்டார்
பாலைப்பறிகொடுத்து பறிந்தயிடையரெல்லாம்
தலைமேலேகையைவைத்து தரணியளந்தோன்பதிக்கு
அபயமபயமென்று அலறியேஓடலுற்றார்
கெருடனுவந்துநின்று கிருஷ்ணனைதெண்டனிட்டு
பஞ்சவர்கள்பிள்ளைகள் பசங்களிங்கேவந்தார்கள்
எங்கேயிருக்கிறார்கள் இப்போதுஅரியுமென்று
கெருடனுமப்பொழுது கேசரத்தில்தானெழும்பி
கோவில்குளங்கள் குன்றுகள்தான்தேடி
பூங்காவனந்தேடி புதியதோர்மாப்பிள்ளையை
ஒருமாமரத்தருகே ஒடிவந்தார்கருடனுமே
மன்னவர்கள்நால்வருமே மாயவரைப்பார்க்கலுற்றார்
கெருடனுமப்பொழுதே கிளைமேலேஉட்கார்ந்தார்
தர்மரிடபிள்ளைகளே தப்பாதுஎன்றுசொன்னேன்
மாயவற்குபோயுரைத்து வருகுவோமென்றுசொல்லி
ஆயனெழுந்திருந்து அரண்மனையினுட்புகுந்து
பசங்களிந்தநால்வருக்கும் பாங்காயமுதனுப்பி
வாழைப்பழமும் வகையாய்பலாச்சுளையும்
மாம்பழமும்பாலும் வலியதயிர்சர்க்கரையும்

கொம்பில்சிறுதேனும் கோதுபடாசர்க்கரையும்
வெற்றிலைப்பாக்கும் மிகுந்தபூசந்தனமும்
ஆயிரங்காவடியி லடிக்கியனுப்பலுற்றார்
வந்ததொருகாவடியை மாமரத்தின்கீழிறங்கி

நால்வருக்கும் அன்னமிடுகிறது.

மாயன்மகளுக்கு மற்றபேர்மூவருக்கு
மாம்பழந்தேனும் வாரியிற்சர்க்கரையும்
வாரியமுது படைத்தார்கள்மன்னவர்கள்
அமுதுண்டுநால்வருமாய் ஆயாசந்தீர்ந்தபின்பு
பூமுடித்தசந்தனங்கள் பூசினார்மார்நிறைய
வெற்றிலைகற்பூரம் வேண்டும்படிதிமிர்ந்து
மன்னன்மனம்திமிர்ந்து மரத்தின்கீழ்வீற்றிருந்தார்

அஸ்தினபுறத்து வேடிக்கைகள்.

இனிஅஸ்தினபுரத்து அடைவுதனைநீர்கேளும்
அப்போதுதிரியோதிரன் அஸ்தினபுரிதனிலே
கலியாணப்பந்தலின் காட்சிப்பெருமைகளும்
பவழத்தால்கால்நிறுத்தி பச்சைவடிப்புசெய்து
இட்டதொருபந்தல் எலுமிச்சம்வேர்பரப்பி
வாழைக்கமுகுநாட்டி கவரியலங்கரித்து
கண்ணாடிகட்டி கவரியலங்கரித்து
எட்டுத்திசையு மியலானசப்பிரத்தேர்
சப்பிரத்தேர்களெங்கும் தனியாகத்தானிருத்தி
தூணுக்குத்தூணொருபெண் சோபனங்கள்பாடிநிற்க
வீதியிருபக்கலும் வேதியர்கள்நின்றாட
பூவாலேதோரணங்கள் போடுவித்தஎத்திசையும்
பந்தலுக்குப்பந்தல் பரிவட்டம்கட்டிவைத்து
பந்தல்திசைதோறும் பட்டாலலங்கரித்து

பந்தல்வேடிக்கைகளை பாரமுடிவேந்தர் பார்க்கிறது.

பந்தல்பெருக்கத்தை பார்த்தான்திரியோதிரன்
பவுஞ்சித்திரள்காலாளும் பார்க்கவேதானெழுந்தார்
அஸ்தினபுரியேறி ஆற்றிலடக்காக
கூடாரம்போடுமென்று கொற்றவனும்வந்துநின்று
கருணனைத்தானழைத்து கணக்கிடுவானைகளை
நம்மானைக்கூட்டத்தில் ரணஞ்செய்யுமானைகளை
எத்தனையானை கடக்கமிருக்குதென்றான்
கணக்கரைத்தானழைத்து கணக்கிடுவான்யானைகளை
ஆனைக்கணக்கெழுது மையாயிரங்கணக்கர்
ஓடிவந்துஅக்கணக்கர் ஓட்டமிட்டாருனைகளை
தினாயிரங்கோடி பந்திகடர்தார்காண்

பந்திபரிந்தி பவுஞ்சிகட்டவேந்தன்காண்
யானைபணியுள்ளதெல்லாம் அழைத்துபசரித்து
குதிரைபணியுள்ளதெல்லாங் கொண்டுவந்துவிட்டார்கள்
ஆசாரியர்கள்தம்மை யழைத்துவரச்சொல்லுமென்றான்
தேரைநடத்துமென்றான் தென்னன்திரியோதிரனும்
சிங்கம்புலியானை தேரிலலங்கரித்து
அஞ்சுருணிவைத்து அதற்குமேலேதானேறி
தேருக்கலங்காரி தேசந்தரசனையனுப்பி

திரியோதிரன் ராசாக்களெல்லோரையும்
அழைக்கச் சொல்லுகிறது.

வில்லாளிக்காரரெல்லாம் விதவிதமாய்த்தானழைத்து
ஈட்டிமன்னர்காலாளும் யிருநூறுகோடிகளும்
பாணவகைகாலாளும் பந்திபந்தியாயனுப்பி
சேரனுஞ்சோழனுந் தேசமன்னர்பாண்டியருஞ்
சோழியர்சோனகருந் துலுக்கர்மலையாளர்
தினமன்னர்காலாளர் சேர்ந்துபரிசனங்கள்
கோடாகவுண்டா ருகுத்தர்கிங்கிலியர்
கொங்கணர்கன்னடியர் குத்ரிலியமராட்டியர்கள்
குறவர்மலைநாடர் குருநாடுவேடர்களும்
ஐம்பத்தாறுதேசம் அரசமன்னர்சேனையெல்லாஞ்
சேனைபணியுள்ளதெல்லாத் தேர்மன்னன்தானனுப்பி
கணக்கரைத்தானனுப்பி கடுகசீட்டெழுதுமென்றான்
தேசத்தழகன் திரியோதிரப்பெருமான்

திரியோதிரன்சொற்படி கணக்கர்கள் ஓலையெழுதுகிறது.

தன்மைந்தனிலக்குணன் மனம்போறேனென்றுசொல்லி
மலைநாட்டிலெல்லோரும் வரிசையனுப்பினதும்
வாழைப்பழந்தேங்காயும் மாங்காய்பலாக்கனியும்
கத்தரிக்காயுங் கரியவெள்ளரிக்காயும்
பாலுந்தயிர்குடமும் பந்திப்பலாப்பழமும்
பதினாயிரக்கலம் பாளைசம்பாவரிசியுந்தான்
மூவாயிரக்கலம் மூளைப்பயிருந்தேங்காயும்
பந்தலுக்கெண்ணை பதினாயிரக்கலமும்
நெய்சித்தைஆயிரம் கிண்ணயமாய்த்தான்பிடித்து
இந்தப்படியா இராச்சியத்திலுள்ளவர்கள்
பட்டணங்களுள்ளவர்கள் பலவரிசைகொண்டுவர

திரியோதிரன் மல்லர்கையில் ஓலைகொடுப்பது.

தேசங்களுள்ளதெல்லாம் சீட்டெழுதிபோகவிட்டு
கலியாணநாளையென்று கடுகஅனுப்புவதும்
அனுப்பாமலேயிருந்தால் அந்தந்தராச்சியத்தில்
வைத்தஅதிகார மாற்றிவைப்போமென்றுசொல்லி

என்றுசொல்லக்கேட்டு இனியதொருராசாவும்
துரோணர்முகம்நோக்கி திரியோதிரனுரைப்பான்
கையில்ஒருலட்சம்பொன வாங்கிடுவான்தப்பாது
என்றுசொல்லியப்போது ஏழாயிரந்தூதுவர்கள்
அப்போதுஓடவிட்டு ஆனை திரியோதிரனும்
மாளிகையிற்போய்புகுந்து மைந்தனிலக்குணற்கு
அப்போதுலக்குணர்க்கு ஆனமணப்பொங்கலிட்டு
திருட்டுதிதிபண்ணுமென்று சிரித்துமனமகிழ்ந்தாள்
அப்போதுதாதியர்கள் ஆசனமமைத்தோமென்றார்
சொன்னதுகேட்டு திரியோதிரன்சொல்வானே
பாரமுடிமன்னர்களை பந்திக்கெழுந்திரென்றான்
படைமன்னர்க்கெல்லாம் பந்தியமர்த்தினர்கள்
ஆனகறிசோறும்நீ அன்பானபாயசமும்
பொறித்தபொறிக்கறியும் பொன்போல்சிறுபருப்பு
புத்துருக்குநெய்வார்த்து போதவேயுண்ணுமென்றான்
உண்டெழுந்தபிற்பாடு வுடுப்பைகள்கொண்டுவந்து
கருணர்முகம்நோக்கி கட்டுவுப்பைகள்யெனவோசியுங்காண்
பாரமுடிவேந்தன் பந்தலிலேவையுங்கள்
தேசத்துமன்னரைச் சேரவேதானழைத்து
முடிமன்னரெல்லோரு மொய்யெழுதுமென்றுரைத்தார்

இராசாக்கள் மொய்யெழுதுவது.

பாரமுடிமன்னவர்கள் பதக்கங்கள்மொய்யிடுவார்
கோலமன்னரெல்லோரும் கொலுசுகள்மொய்யிடுவார்
யானைகள்மொய்யிடுவார் யரசுமுடிமன்னவர்கள்
குதிரைகள்மொய்யிடுவார் கோடிபேர்முடிமன்னர்
பட்டுபட்டாவளியும் பாங்கானசேலைகளும்
இழையாயிரம்பெற்ற இந்திரவர்னசேலைகளும்
முப்பத்துபதகங்களும் மோகனமாலைகளும
வச்சிரபதக்கங்களும் வைடூரியமாலைகளும்
பட்டுசுகந்தாட பருத்தநல்லதாவடமும்
கோடிமுடிமன்னர் கொண்டுவந்துமொய்யிடுவார்
மூவாயிரக்கல் பொற்றிட்டபொன்னதிந்தார்
மொய்யிட்டபொன்னையெல்லாம் முன்னிட்டுப்பார்த்தார்கள்
பூஷணங்கள்மொய்யாவும் பொன்னுயிரக்கலமாலை
ஆனைகள்மொய்யாவும் ஆயிரங்கோடிலட்சம்
குதிரைகள்மொய்யும்ஒரு கோடிலட்சம்பேரணியாம்
உக்கிரானகணக்கர் லகையில்கொடுமென்றுரைத்தார்
எழுநூறுஒட்டகம்பொன் னெடுமென்றுரமரர்பதி
ஆயிரம்பெட்டிகளி லழுத்தினர்பூஷணங்கள்
ஐயாயிரம்பெட்டிகளி லானபட்டாடையுந்தான்

மாவுங்கமுநூலும் மஞ்சளுடன்நெல்உரையுங்
குலைபாக்குவெற்றிலையும் கெந்தம்பழத்துடனே
ஆயிரங்கோணியிலே அமர்ந்கதுவர்பாக்கு
மாலையுஞ்சந்தனமும் மங்கிலியநெய்க்குடமும்
மங்கிலியமாலைகளும் மங்கையர்கொண்டுவந்து
மேளவகையாவும் விதவிதமாய்த்தான்முழங்க
வெற்றியிலக்குணனும் வேந்தருமதேரேறி
மாயன்பதிநோக்கி மனைபோகதானெழுந்தார்

கர்னரைதிரியோதிரன் அஸ்தினபுரத்திலே நிறுத்துவது.

கர்னமகாராசன கடுகியேயோடிவந்து
திரியோதிரனுடைய செவிதனிலேயேதுரைப்பான்
மணக்கோலம்போனல் மாயன்கபடுசெயவான்
இந்தப்பெண்போனல் இனியபெண்கிடைக்காதோ
ஆளப்பிறந்த அபிமர்பெருமானுக்கு
அஸ்தினபுரியை அமர்த்துபட்டங்கட்டுமென்றான்
மெய்தான்கருணா விளம்பினயிப்பொழுது
யாரைநிறுத்திவைப்போம் அஸ்தினபுரிதனிலே
கர்னரேநீயிருந்தால் காரியமாகுமென்றார்
இதுவேசமக்கமையும் எனறுசந்தோஷமுடன்
பட்டணத்தில்வந்திருந்தான் பாரமுடிகர்னனப்போ

திரியோதிரன் துவாரகைக்கு வருவது.

கர்னனைத்தானனுப்பிக் காவலனும்போய்நடந்தான்
மன்னன்திரியோதிரனும் துரோணர்முகம்பார்த்து
வழிநமித்தம்பாருமையா மன்னன்துரோணச்சாரியும்
சாரைகுறுக்கிடுமாம் சிரசின்மேல்பல்லிசொல்லும
சாரைகுறுக்கிடு கூகைநரிவூளையிடும்
குத்திபிடித்தாப்போல் கோட்டானுமோலமிடும்
பச்சைமரந்தேடி பசித்திருந்தகாகமது
பட்டமரத்தோடி பலபலென்றுகூவிடுமாம்
வடக்கேயிருந்தமொரு வடகாகமோடிவந்து
கிழக்காகநின்றுகொண்டு கூவிடுமாமப்பொழுது
இந்தநிமித்தமெல்லாம் இனியகுருக்களறிந்து
சொல்லாதிருந்தாக்கால் தோஷங்கள்வந்துவிடும்
திரியோதிரன்செவியில் துரோணருங்கூறுவார்
கண்டநிமித்தமெல்லாங் காவலர்கள்காகாது
பார்த்தநிமித்தமெல்லா பார்த்திபர்க்காகாது
என்றுசொல்லக்கேட்டு இனியதொருராசாவும்
துரோணர்முகநோக்கி திரியோதிரனுரைப்பான்

எள்ளுபோட்டாயெள்ளுவிழா என்சேனைபோகையிலே
நிமித்தங்கள்குற்றமென்று நீர்மினைத்திரையாவே
ஆகாச்சகுனமதை அறிந்துவருவேனென்று
தம்பிமார்தன்னுடனே தார்வேந்தர்போய்நடந்தார்
மைத்துனன்மார்தன்னுடனே மாயன்பதிபோக
செந்தூள்பறந்திடவே திரியோதிரனுமப்போ
பாரமுடிமன்னர்களைப் பவுஞ்சுடனேநடவுமென்றான்

ஆரடைத்துக்கொள்வது.

திரியோதிரன்வரவே திருமால்மிகவறிந்து
சித்தம்நாம்வருவோமென்று சொன்னேமொருவார்த்தை
சேனைபெருக்கமுடன் திரளோடேவாரான்காண்
மன்னவர்க்கெதிராக வழிமறிக்கவேணுமென்று
வற்றிக்கிடந்த வறும்புனல்ஆறுதனை
மெத்தப்பெருக்கவென்றார் வேதநாராயணரும்
கரையைவிட்டுநாற்காதம் கருகிப்பெருகிடுமாம்
நிறைந்துவருமாறுதன்னை திரியோதிரன்பார்த்து
துரோணரிடநிமித்த மதித்தோரேஆறுதன்னில்
கூடாரம்போட்டு குதிரையைநிறுத்துமென்றான்
ஆறுவடியவே ஐந்தாறுநாட்செல்லும்
மாயவருங்கோபிப்பார் மணமுகூர்த்தம்போச்சுதென்று

திரியோதிரன் ஆற்றில்நடந்து கரையேறுவது.

இங்கிருக்கவொண்ணாது என்றேயெழுந்திருந்து
ஆர்கடக்கவேணுமென்றான் அரவக்கொடியோனும்
யானைபணியுள்ளதெல்லாம் ஆற்றில்நிறையுமென்றான்
தேரணியுள்ளதெல்லாந் திரளாற்றில்நிறுத்துமென்றான்
குதிரைபணியுள்ளதெல்லாம் குறையாற்றில்நிறுத்துமென்றான்
ஆற்றிலேதானிருத்தி அக்கரையேறுமென்றான்
யானைக்குடித்ததுவும் மக்களைபட்டதுவுங்
குதிரைகுடித்ததுவுங் குலமன்னர்நீந்தினதும்
காலாள்குடித்ததுவுங் காலொருதேரேறினதுவும்
மத்தநீரெல்லாம் மண்ணில்சுவரினதால்
தூளாய்ப்பறந்துமணல் சூரியனைப்போய்மறைக்க

திரியோதிரன் துவாரகைக்கு வந்துவிட்டது.

ஆறுவடிந்து அரசர்கரையேறி
சேனைத்திரள்ராசாக்கள் தெருவீதிசேர்ந்து
அரிசிக்கடலைப்பயறனைச்சாயமுடன்
கஞ்சாவுமெள்பொரியுங் கலந்தபொரியவலும்
தேங்காய்பலாகனியும் சீனிவிலாங்கனியும்
வெற்றிலைபாக்குகளும் விற்பார்கடையோரம்

தென்னன்திரியோதிரனும் தேர்ந்தயிலக்குணனும்
தமையன்மார்நூற்றுவரும் தக்கதுரைகளுடன்
ஆற்றுமணல்சுடவே அரையர்கள்தேரேறி
மாயற்பதிநோக்கி மன்னவர்முகம்நோக்கி
செந்தூள்பறக்க தீவிரமாய்த்தானடந்தார்

சுந்தரி தோழிகளுக்குச் சொல்வது.

அப்போதுவாரகையில் ஆயனரண்மனையில்
மாயன்மகளார் மருதவல்லிசுந்தரியாள்
ஏழாந்தளமேரி இயலானசுந்தரியாள்
பலகணித்தாள்திறந்து பார்த்தாள்திசைதோறும்
திரியோதிரனுடைய சேனைவரவுகளை
பார்த்திருகண்ணும் பாங்கியுடனுரைப்பாள்
வாருய்நீசெங்கமலம மாற்றான்பெருக்கமிதோ
எத்தனைசேனையுட னென்னுயிரைக்கொல்லவந்தான
குறையில்லாச்சேனைகளை என்கொழுநர்படைவெல்லுவரோ
காலமுடிந்ததடி தகப்பனிடதீங்கலவோ
பெண்ணாயபிறந்தகொள்ளை போதுமடிதாதியரே
இருக்கமுடியாதோ இராமரிட்டதீயெனக்கு
என்றுசொல்லிதாதியரை இளங்கொடியுநதானழைத்து
ஆறுமறியாமல் அக்கினியைவளர்த்துமென்றாள்
சட்டையாசட்டை தையுமென்றாள்தார்குழலும்
புற்றும்புதுமுரமும் பொற்கொடியுந்தாருமென்றாள்
சற்றேமடிக்கயிறு சாற்றுமென்றாள்தார்குழலும்
சேஷைபரிசி திருமுடியின்மீதுவைத்து
மாயன்மகளாரும் மனதுதுணிந்திருந்தாள்

அரவான்முதல்நால்வரும் திரியோதிரன்படையை
அசட்டைசெய்வது.

அப்போதரவானு மபிமன்கடோற்கஜனும்
தொங்கிசெட்டிதன்னுடனே துரைமன்னர்நால்வருந்தான்
மாடத்தின்மீதேறி மாற்றான்படைபார்த்தார்
திரியோதிரனுடைய சேனைப்பெருக்கமெல்லாம்
பார்த்தான்திசைதோறும் படைமன்னர்தண்டையெல்லாம்
மாமரத்திலேறினதை மாயவரும்பார்த்தாக்கால்
பஞ்சவர்கள்புத்திரர்கள் பயந்துமரமேறினார்கள்
என்றுசொல்லியேசுவார்க ளீடழிவோமென்றுசொல்லி
அப்போதபிமன்னனும் அண்ணார்முகம்பார்த்து
தருமரப்பாதன்றனக்குத் தாயாதிநூற்றுவர்க்கும்
பாதிநகரம் பகந்தரசுஆளாமல்
வனவாசம்போவதென்ன மாற்றானரசாள்வதென்ன
என்றுசொல்லக்கேட்டு எழுந்தான்கடோற்கசனும

அப்படிவந்ததுவும் ஐயர்செய்தீங்கல்லவோ
திரியோதிரனுருஞ் சீமைகளத்தனையும்
நம்மதேயாக்குவோம் ராஜாக்களைச்செயித்து
என்று-அரவான்கடோற்கஜனு மபிமருந்தானுரைப்பார்
அண்ணன்முகம்நோக்கி அபிமருக்குதானுரைத்தார்
திரியோதிரன்கூட்டந் திரளானசேனைகளை
வாவென்றுசொல்லுவார்கள் மகுடமுடிமன்னவர்கள்
என்றிருவர்பேசி யிருந்தார்கள்நால்வருமாய்
அங்கேதிரியோதிரனு மரையரைதானழைத்து

திரியோதிரன் கூடாரம்போடச்சொன்னது.

கூடாரம்போடுமென்றான் குலமன்னராசர்களை
துவாரகாபுரிக்கருகில் தூரவெளிதனிலே
கூடாரம்போடலுற்றார் கொற்றவர்கள்மன்னவர்கள்
வேந்தருக்கும்வேதியர்க்கும் வேறேயொருபுறமும்
கடையுங்கடைத்தெருவும் காவலர்கள்வீதிகளும்
நட்டுவனார்கட்டுவனார் நாடோரொருபுறமும்
வீதிக்குவீதி பிறந்தந்தவேந்தருடன்
மன்னவர்கள்தன்னுடனே மகுடமுடியோருங்
கேளிக்கைபார்த்திருந்தார் கிளிபவளவாயாலும்

அரவான் ஆலமரம்விட்டுக் கீழிறங்கியது.

அப்பொதரவானு மாலமரமிரங்கி
அரவானுமப்போ ஆற்றிலேபோய்முழுகி
பாற்குடங்களனைத்தையும் பாரித்துநீபரப்பி
குடமேற்குடம்நிறுத்தி கோபுரம்போலடுக்கி
ஆற்றிலேமுழுகிவந்து ஆதித்தனைத்தோத்தரித்து
கொங்காணிமேல்போட்டு கோணச்சீலைகட்டி
கழிகோலணைக்கயிறும் கையில்குடுவையுடன்
பட்டைபட்டையாக பன்னிரண்டுநாமமுடன்
இட்டதிருநாமமெத்திசையுஞ்சோதிவிட
எற்றியந்தபாற்குடத்தை ஏற்றிதலையில்வைத்து

அரவான் அண்ணரண்டைவருவது.

அண்ணனிருக்குமந்த ஆலமரத்தருகே
வீசிநடந்தரவான் மூடுக்காகஓடிவந்து
அண்ணருக்குந்தண்டனிட் டகலவேபோயிருந்தான்
ஏண்டாயிடையா எனக்குவந்துதெண்டனிட்டாய்
என்றுகடோற்கஜன் இடையனைக்கேட்கலுமே
அல்லாகானண்ணுவே அரவானென்றுரைத்தான்
ஏன்காணுந்தம்பியரே இவ்வேடங்கொண்டதென்ன
உன்னையடையாளம் ஒருவரும்பிடித்தறியார்
ஏதுக்காய்நம்பியரே இவ்வேடங்கொண்டதென்ன
அண்ணன்முகம்நோக்கி அரவானுமேதுரைப்பான்

மட்டுபடாசேனையெல்லாம் வந்துகரைதேறி

அரவானண்டை விடைபெற்றுக்கொண்டு துவாரகைக்கு வருதல்.

திரியோதிரனுடைய சேனைதிரளுள்ளதெல்லாம்
குத்தும்படையிதுவோ கூலிப்படைதானே
பார்த்துவருகிறேன் பவுஞ்சிட்டமன்னவரை
கண்டுகடோற்கஜனும் கண்ணுறுகழட்டிவிட்டு
குங்குமத்திண்டோளன் குலுங்கமிகநகைத்து
போய்வாருந்தம்பியென்று போற்றிவிடைகொடுத்தான்
அப்போதரவானும் ஆயன்வடிவுகொண்டு
தண்டுநடுவேபோய் தார்வேந்தரைப்பார்த்து
தென்னன்திரியோதிரனும் தேசத்தரசன்மைத்துனனும்
தம்பிமார்நூற்றுவரும் தமையனிலக்குணனும்
கூத்துகள்பார்த்திருந்தார் குலமன்னரெல்லோரும்

அரவான் கூடாரத்தருகில்வந்து அரசர்களைமிரட்டுகிறது.

அந்தப்பெருக்கத்தி லரவானும்வந்துநின்று
பார்த்தானேபாலகனும் பங்கயஞ்சீர்கண்ணாலே
உற்றுற்றுப்பார்த்தான் ஒளிபறந்தகண்ணாலே
யானைகுதிரைகளும் அரசமக்கள்வீற்றிருக்க
ஆடுமாடாக அரவான்மனதிலெண்ணி
கண்டானரவான் கனக்கவேகோபமெய்தி
கூலிப்படையிதுவோ குத்தும்படைதானே
பார்ப்போமென்றுசொல்லி பார்த்தன்மகனாரும்
கையில்தடியிடுப்பில் கட்டழகன்தானூன்றி
ஒருகால்முடக்கி உயர்ந்தமுழங்காலில்வைத்து
கோட்டையிடிந்து குமிறினதுபோலாக
டேயோடேயோவென்று தீவிரமாய்கூச்சலிட்டான்

அரசர்களெல்லோரும் அரவானிட்ட கூச்சலைக்கண்டு ஓடுகிறது

அரவானிட்டசத்தங்கேட்டு அரியபரிவாரமெல்லாம்
யானைகள்தும்பருந்து அரசர்மேலோடுவதும்
குதிரைகள்தும்பருந்து குலமன்னர்மேலோடுவதும்
வில்பிடித்தமன்னரெல்லாம் வீதிவிட்டோடலுற்றார்
ஈட்டிபிடித்தமன்னர் எறிந்துவிட்டோடலுற்றார்
கத்திபிடித்தமன்னர் கைசோர்ந்துவிட்டெறிந்தார்
ஓடியொளிப்பாரும் உடனேவிழுவாரும்
வந்தானேவாளபிமன் வாளுமுழக்குகைக்கு
என்றேவரசர் இடிந்துவிழுவாரும்
அதோவந்தான்வாளபிமன் என்றேபயந்தோடி
இதோவந்தானென்று அலறிவிழுவாரும்
கானுடன்திரியோதிரனும் காதிரண்டுசெவிடுபட்டு
கோடையிடிபோலே குமுறலதுஎன்றுரைத்தான்
கோடையிடியல்ல கோணரிடகூந்தல்

திரியோதிரன் அரவானையழைத்து வரச்சொன்னது.

அழைத்திங்குவாருமென்றார் அரசன்திரியோதிரனும்
யானைத்திரளுள்ளவர்கள் அரவானருகில்வந்து
வாடாயிடையா வெரிகொண்டுவந்தாயா
மன்னன்திரியோதிரனார் வரவழைத்தார்வாருமென்றார்
தலைமேலேபாற்குடங்கள் தரிக்கமுடியாது
இறக்குவாரில்லையே உங்களிழவுகொண்டுவந்தேன்
தலையெரிப்புபார்த்து தாழயிறக்குமென்றான்

துரோணர் தூதர்களை யழைப்பது.

சொல்லச்சபையில் துரோணரதுவறிந்து
தூதரைத்தானழைத்து சொல்லுவார்தானுமப்போ
உலுப்பைகள்வந்திருக்கும் உக்கிராணந்தன்னருகே
பாற்குடந்தானிரக்கிப் பதியவேதானிருத்தி
இடையனைதானழைத்து இங்கேவாவென்றுரைத்தார்
பாற்குடத்தைத்தாக்கி யிறக்கவந்தார்பார்மன்னர்

அரவான் பாற்குடங்களை உடைத்துவிட்டது.

அரவானும்பாற்குடத்தை அசட்டையாய்விட்டுவிட்டான்
பாலாறுபோலே பரவுதேகுடமுடைந்து
உக்கிராணத்திலுள்ளே வுலுப்பைகளத்தனையும்
மாங்கனியுந்தேங்கனியும் வாழைக்காயும்பழமும்
பாற்குடந்தானுடைந்து பாலாறுபோலோட
அதிலிருந்தகாய்கறிகள் அலைந்தோடிபோய்விடுமாம்
ஆயிரம்மல்லர்களை ஆற்றிலடித்தோட
கெடுத்தானிடையனென்று கெடிமன்னரோடலுற்றார்
கையில்தடிபிடித்து காவலர்கள்மேல்விழுந்தான்
மாறியடித்து வழிபார்த்துதானடந்தான்
திரியோதிரனிருக்குஞ் சேனைநடுவாக
கூத்துநடுவே குலமன்னர்போய்புகுந்து
துரோணர்முகம்நோக்கி துரைமன்னர்தெண்டனிட்டு
அரவானிவனென்றறிந்து ஆசீர்வாதம்புகன்றார்
இடுப்பில்தடிபிடித்துஏகாந்தமாயிருக்கிறது
அரவான்திரியோதிரனை யாரென்றுகேட்கலுற்றான்
அரவான்வினவிலுமே அரசன்திரியோதிரனும்
ஏண்டாயிடையா உனக்கித்தனை கோபமடா
ஆயனிடையனென்ற தாகையினால்பொறுத்தேன்
மற்றவருனாலே மாறியடித்திடுவேன்
என்னத்துரோணர் இராசர்முகம்நோக்கி

பெருமாள் இடையனுக்கு வெகுமானங் கொடுத்தனுப்புதல்.

என்றுசொல்லக்கேட்டு இராசன்திரியோதிரனும்
தாதியரையழைத்து தார்வேந்தன்கூறுவான்
கொண்டுவாபச்சைவடம் கொடுப்பாக்குவெற்றிலையும்

அரவானுக்கு திரியோதிரன் வெகுமதிசெய்தது.

இழையாயிரம்பெற்ற இந்திரவர்னப்பட்டுடுத்தி
கொண்டுவந்தாரப்பொழுது கொற்றவர்தன்னருகே
திரியோதிரனெடுத்துத் திருமாலிடையனுக்கு
இந்தாடாவென்று எடுத்துக்கொண்டுவந்தான்
பார்த்தன்மகனுரும் பச்சைவடம்தாங்காமல்
குடுவையைக்கைபிடித்து கோலையேநீட்டிஞன்
துரோணர்முகம்நோக்கி திரியோதிரனுரைப்பான்
இந்தயிடையன்னம்மை எண்ணுமல்செய்ததுபார்
எண்ணத்துரோணர்கிட்ட அடுத்ததுகோல்குடுவை
அன்னவென்னலாமோ அரசர்திரியோதிரனே
என்னத்திரியோதிரனும் இசைந்துமனமகிழ்ந்து
குடுவையில்பாக்கிலையில் குலவேடன்தானடைத்து
தடிமேலேபச்சைவடம் தார்வேந்தன்போட லுற்ருன்
வாங்கியரவானும் வட்டமணல்மேல்விரித்து
ஆட்டுக்குச்சீலையிட அடுக்காய்கிழிக்கலுற்ருன்
முகத்துமேல்சீலையென்று முடிமன்னனுங்கேழ்க்கலுற்ருன்
பாக்கிலையைவாங்கிப் பாயின்மேல்வைத்தவனும்
வாய்த்தபலமென்று மன்னனுமாக்கலுற்ருன்
குலமன்னர்நூற்றுவற்கு குடிப்பிறந்தபிள்ளைகாண்
குடமுடைக்கவேணுமென்று குடுவையாய்ப்போட்டுடைத்தான்

திரியோதிரன் சொல்வது.

திரியோதிரனுருக்குத் திக்கென்றுகோபம்வந்து
குருக்கள்முகம்பார்த்து கொற்றவனுங்கூறலுற்ருன்
இந்தயிடையன்நம்மை எண்ணுமல்செய்ததுபார்
என்ன அரவானும் இராசர்முகம்நோக்கி
சித்திரைவெய்யலில் சினைபசுக்களத்தனையும்
தண்ணீர்கிடையாமல் தவித்துவிழும்பொழுது
அள்ளியெந்தன்றன்பலத்தே ஆவினுடவாயிலிட்டால்
தண்ணீர்சுரக்குங்காண் தார்வேந்தர்அவைகளுக்கு
பட்டைகிழித்து பரியாசஞ்செய்ததெல்லாம்
வெள்ளாடுகன்று மிருக்குமோபால்சுரந்தால்
ஆட்டுக்குச்சீலையிட ஆகுமென்றுநான்கிழித்தேன்

அரவான் சேனைகளை யடிப்பது.

என்று-அரவானும்தன்னுடைய ஆடுமாடுதேடுதல்போல்
கோடையிடியைப்போல் குலவேந்தர்மேல்விழுந்து
கால்வாரிகைபிடித்து கனக்கவேதானறைந்தான்
மண்டைசிதறவே மண்ணில்விழவடித்தான்
தலையுடைந்துமன்னவர்கள் தரணிமேல்தான்விழவே

மாயன்கிலாறினுன் மந்தையில்பால்சுமப்பேன்
மாயன்மனேயில் வளர்ந்தேன்காண்மன்னவனே
ஆயன்மனேயில் அனேகநாள்வளர்ந்தேன்
இடையரிலேநான்பெரியோன் என்பெருக்கும்நீர்கேளீர்
வேணலட்சம்மாடு மேய்ப்பேன்தலைதனிலே
கொல்லிமலைநடுவே கோவுக்குநீர்காட்டி
காட்டில்கிடைகட்டி காத்திருப்பேநானிடையன்
நடுகாட்டில்யானியென்று நான்போய்படைத்தேன்காண்
வந்தாற்குஅன்னமிட்டு வருவாற்குஇலைமாத்தி
அன்புமிகவுண்டாகும் ஆயன்கிலாரிகண்டாய்
பெருமாள்தன்சோறிடுவார் நீங்கள்பிரண்டுவிழுந்தீர்கள்
தோகையிளமயிலாள் சொகுசானசுந்தரியை
மாலையிட்டுக்கொள்ளவந்த மாப்பிள்ளையைநான்பார்க்க

அரசர்கள் சொல்வது.

மகாராஜன்மைந்தனுங்கள் மாப்பிள்ளையிலக்குணனே
காணவந்தபேர்க்குக் கண்ணுயிரம்வேணும்
என்னஅரவானும் இகழ்ச்சியேபண்ணிவைத்து
ஆயிரம்கண்ணே அதுவோசிலபாரமென்று
நான்மேய்க்கும்பசுவிலே நாலாயிரம்கண்ணிருக்கும்
பார்க்கவந்தால்நாளை பகலைக்குவாருமென்ருர்
சாணத்தியம்மாவென்று சந்தோஷத்துடனெழுந்து
மாப்பிள்ளலக்குணனே மாட்டிடையாவென்ருர்
பார்த்துசிரித்து பார்த்தன்மகன்கூறுவான்
பொட்டிட்டுபட்டுடுத்தி பொன்சிலதுபூண்டாலும்
கட்டழகிசுந்தரியாள் கால்தூக்கஒவ்வாது
என்றுநகைத்து இடையனும்போகலுற்ருன்
யானேதேர்குதிரையும் அண்ணரிடதண்டுக்கரம்
காலாளெல்லாநாகமது கைவில்லுக்கிரையாகும்
தோற்ருேடிப்போனதெல்லாம் தொந்திசெட்டிகைவசந்தான்
விளையாடப்போரவன்போல் மேடுபள்ளமாருய்ந்து

அரவான் அண்ணரண்டைவருவது.

ஆருய்ந்துநல்லரவான் அண்ணரைத்தேடிவந்து
அண்ணன்கடோற்கஜனுக்கு அரவானுந்தெண்டனிட்டு
வாழ்த்தியந்ததம்பியரை மாற்ருன்படைநடுவே
போனீரேதம்பியரே புதுமையென்னசொல்லுமென்ருன்
என்னபுதுமையண்ணே நான்போனதண்டிலே
கூவினேனெருசத்தம் கூவினபோதவர்கள்
யானேமுறிந்தோட அரசமக்கள்பார்த்தார்கள்
மாதுக்குஒப்பான மாப்பிள்ளையைகட்டிவைப்போம்
குதிரைமிரண்டோடக் குலமன்னர்பார்த்தார்கள்

கட்டிபிடித்தமன்னன் எறிந்துவிட்டோடலுற்றார்
யானைக்குதிரைஎல்லாம் அண்ணையதுவுந்தனுக்கு
காலாள்பரிசனங்கள் என்கைவில்லுக்கொப்பமிட்டேன்
தோற்றோடிப்போனதெல்லாந் தொந்திசெட்டிகைவசந்தான்

அபிமன்னன் அரவானுக்குச் சொல்வது.

என்னஅபிமன்னன் எழுந்தரவானைப்பார்த்து
அண்ணையென்மந்திரவாளுக் காருமிறையில்லையே
வாணமப்பாதம்பியரே மாப்பிள்ளையாகையினால்
ரணமுகம்பாராதே யுத்தந்தெரியாதே
இங்கேயிருந்துகொண்டு ஆரிங்கேவந்தாலும்
கட்டிப்பிடித்து காவலில்வையுமென்றான்
அப்போதிரியோதிரன் ஆயன்மகள்சுந்தரிக்கு
மல்லரைத்தானழைத்து மகாபூஷணந்தானெடுத்தார்
மாயன்மகள்சுந்தரிக்கு மகாராஜன்போகவிட்டான்
ஆயனரண்மனைக்கு அத்தூதர்கொண்டுவந்தார்
திருமால்மகளாரும் சேதியதுதான்கேட்டு
மாற்றான்பணிதி ரவிட்டான்தோழியரே
என்னங்கத்தையுரிய அடைவளவோ தோழியரே
மாற்றானிலக்குணற்கு வாழ்க்கைப்படுவதிலும்

சுந்தரி அக்கினியில் விழப்போகிறது.

அக்கினியைமூட்டி அனலுக்கிரையாவோமென்று
மஞ்சனச்சாலையிலே மகாதீர்த்தமாடிவந்து
மஞ்சள்வைத்தபட்டாடை மாயன்மகளுடுத்தி
பூச்செண்டெலுமிச்சை பெருமாள்கைபிடித்து
கண்ணாடிகைபிடித்து கட்டழகிசுந்தரி
அக்கினிமுன்பாக ஆனைமுகச்சாலையின்மேல்
சேஷையரிசி திருமுடியின்மீதில்வைத்து
சாகத்துணிந்து தார்குழலும்வீற்றிருந்தாள்
தாதியர்கள்செங்கமலம் சற்றுமனங்கொள்ளாமல்
பதறாதேசுந்தரியே பார்த்தமகன்தான்வாறான்
என்றுசொல்லிஅப்போது ஏங்கிமனந்தளர்ந்து
அப்போதுதாதியர்கள் அரிவையருந்தானெழுந்து
இங்கேயிருமென்று ஏந்திழையைக்காவல்வைத்து

பெருமாளண்டை தாதிவருகிறது.

மாயனருகாக மங்கையருமோடிவந்து
மங்கைநல்லாள்சுந்தரியு மாளவேதீவளர்த்தி
சாவத்துணிந்தாள் தரணியளந்தவரே
என்னப்பெருமாளும் ஏங்கிமிகநகைத்து
இனியொருநாழிகைதான் என்மகளார்சுந்தரியை
பத்திரமாய்வைத்திருந்தால் பாங்கியரேஎன்றுரைத்தார்
முகூர்த்தங்கள்தப்பாமல் முடிமன்னரேபாருமென்றார்

மாப்பிள்ளை தன்னை வரவழைத்துவாருமென்றார்
பூஷணப்பெட்டியெல்லாம் புழக்கடையில்போட்டுவைத்து
மாயாவர்வரச்சொன்னார் வாருமென்றுபோயழைத்தார்
திரியோதிரன்மகிழ்ந்து சேனைகளை வாருமென்று
அப்போதிரியோதிரனுந் தன்மகன்லக்குணற்கு
யானையலங்கரித்து ஆனைசிம்மாதனத்தில்
யானைமேல்சிம்மாதனம் தனியேயலங்கரித்து
வெற்றியிலக்குணரை வெள்ளானைமேலேற்றி
சேனைபரிவாரமெல்லாஞ் சேரவேகொண்டுவந்து
குதிரையின்மேல்ராசாக்கள் குலுங்கியேதான்வருக
யானையின்மேல்ராசாக்கள் அணியணியாய்தான்வருக
நாலால்கள்பரிவாரமெல்லாம் கடுகியேதான்வருக
சுட்டுவர்கைகொட்டிவர நாடகங்களாடிவர
வெண்கலக்கொம்பூத வெற்றிமுரசறைய
வேசியர்கள்கோடி தெருவீதியாடிவர
நாகசுரமூதிவர நாட்டியங்களாடிவர
பேரிகைகொட்டிவர பெரியதமபுருமுழங்கிவர
பூரிகைகொட்டிவர பெரியடமாடோலடிக்க
தப்பிமுழங்கிவர தவில்முரசுகொட்டிவர
செப்புமுரசுகள் சேரமுழங்கிவர
மேளமுழங்கிவர விண்மண்டலமசைய
தாளமுழங்கிவர தரணிமன்னர்தானடக்க
சல்லரிகொட்டிவர சரவரிசைகொட்டிவர
மல்லரிகொட்டிவர மத்தளங்கள்கொட்டிவர
வீணைமுழங்கிவர வேந்தர்நடந்துவர
தண்டுமுழங்கிவர தார்வேந்தர்கொட்டிவர
மாப்பிள்ளையிலக்குணனும் மனக்கோலம்வாறானே
அப்போநடக்கிற அதிசயத்தைதான்கேளும்
பஞ்சவர்கள் புத்திராள் திரியோதிரன் சேனைகளிடத்தில் வருவது
பஞ்சவர்கள் புத்திரர்கள் பராக்கிரமந்தான்கேளும்
அப்போகடோற்கசனும் அரவனுந்தொந்திசெட்டி
மாயன்பெருமாளை மனதிலேதானினைந்து
ஆயன்பெருமாளே அடியார்கள்பக்கிலே
வில்லெடுத்துவாளெடுத்து வேந்தர்கள்கைபிடித்து
வாரார்களப்போது மாயனைமனதிலெண்ணி
வடக்கேகடோற்கசனும் மேற்கேயரவானும்
கிழக்கேயபிமன்னனும் தெற்கேதொந்திசெட்டியுந்தான்
இப்படியாகயிருந்தார்களப்பொழுது

கடோற்கசன் சண்டை.

வடக்கேகடோற்கசனும் கனதண்டுகைபிடித்து
யானையணியிலே அதிவீரன்போய்புகுந்து

ஒட்டகசேனையிலும் உற்றகுதிரையிலும்
கட்டழகன்போய்புகுந்து கதித்துக்கொதித்தெழுந்து
அண்டங்கிடுகிடென்ன ஆகாசந்தத்தளிக்க
பூமிகிடுகிடென்ன பூலோகந்தானதிர
வாரானையப்பொழுது மகாகெதயைத்தானேந்தி
தண்டைசுழட்டி தீவிரமாய்விட்டானே
சத்தசமுத்திரமும் சலம்வற்றியுள்ளடங்க
தேவாதிதேவரெல்லாம் திகைத்துபயந்தோட
கெற்பங்கலங்கவே கிரிகள்மிகக்குலுங்க
மந்திரதூபமிட்டு வாங்கிசுழட்டிவிட்டான்
வருகிறதேதாகோதண்டம் மதயானைக்கூட்டத்தில்
யானைத்தலையை அடவாய்பிளக்கிறதே
குதிரைத்தலையை குரிப்பாய்பிளக்கிறதே
யானையதுவிரிட அரசர்பயந்தோட
திரியோதிரனுடைய சேனைபரிகளமும்
கர்னன்விதுரனுங் கனத்தசபைமன்னர்களும்
மன்னர்குருக்கள் மகாசேனையுள்ளவரும்
கண்டுபயந்தார்கள் கடோற்கசனென்றறிந்தார்
யானைமேலிருந்ததுரை கொக்கரித்துமண்ணில்விழ
காளைகடோற்கசனும் கனசண்டைசெய்யலுற்றான்
நான்குநாள்மட்டும நல்லசண்டைசெய்தானே

கடோற்கஜனை தேவர்கள் கொண்டாடல்.

தேவாதிதேவரெல்லாஞ் சொல்லுவாரொருவார்த்தை
இராமரதுசண்டையென்பார் இராவணன்சண்டையென்பார்
இந்திரனது சண்டையென்பார் இலட்சுமணர் சண்டையென்பார்
சூரபத்மன்சண்டையென்பார் சுப்ரமணியர்சண்டையென்பார்
வீரபத்திரன்சண்டையென்பார் வேள்விதக்கன் சண்டையென்பார்
கடோற்கசன்போல் சண்டைசெய்தார் யாருமில்லை யென்பார்கள்
இப்படியாகவே இவர்கள்சொல்லும்வேளையிலே
காளைகடோற்கசனும் கனத்தபடைமுகத்தில்
முன்னும்பின்னும்பாராமல் முனைவீரன்சாடுகையில்
மாளுஞ்சனங்களென்றால் மட்டிடப்போகாது
செத்தசனங்களென்றால் சொல்லமுடிபோகாது
யானைமேலிருந்தவர்க ளறுந்துவிழுவார்கள்
குதிரைமேலிருந்தவர்கள் சொக்கரித்துவிழுவார்கள்
ஒட்டகத்தின்மேலிருந்தவர்க ளோலமிட்டுவிழுவார்கள்
ஈரல்குடல்சரிந்து இங்கிலத்தில்விழுவாரும்
மணிக்குடல்வான்சரிந்து மண்ணில்புரளுவாரும்
சண்டைசெய்யமாட்டாமல் காலஞ்செய்துஓடுவாரும்

அம்புமதா...
அண்டங்கிடுகிடு...
அக்கினிபாணங்கள் அனேக...
வாய்வுநல்லபாணங்கள் வருணனதுபா...
இராமனுடையபாணங்கள் இலட்சுமணர்பாண...
சாங்கோபசாங்கமாய் சரமாரிதான்பொழிந்தான்
ஆகாயமுள்ளதெல்லாம அம்பாலேபந்தலிட்டு
பாணசரத்தாலே பந்தலிட்டானப்பொழுது
பாணம்வரும்விதங்கள் பார்க்கமுடியாது
அம்புவரும்விதங்கள் ஆற்றமுடியாது
ஐப்பசிமாதத்திலே அடர்ந்தமழைகள்வந்ததுபோல்
புரட்டாசிமாதத்திலே பெருமழைவந்ததுபோல்
கார்த்திகைமாதத்திலே கனத்தமழைவந்ததுபோல்
சோனமழைபோலே சொரிகிறான்பாணங்கள்
இப்படியாக யிவன்செய்யும்வேளையிலே
மாண்டஜெனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
செத்தஜெனங்களென்றால் சொல்லமுடியாது
தேர்மேலிருந்தவர்கள் சிதறிவிழுவாரும்
பார்மேலிருந்தவர்கள் பதறிவிழுவாரும்
நாய்களுணிபோலே நசிந்துவிழுவாரும்
நிலப்பூச்சிபோலே நிலத்தில்நசுங்குவாரும்
கால்போனமன்னர்சிலர் கைபோனமன்னர்சிலர்

...டை,

...மெளாடிவந்து

...புங்காணாமல்

...ற்றிருக்குந் தெருவீதியோடிவந்தார்

தொங்னிதருக்கு மகாபயந்தீர்ப்பவர்போல்

...டி ஒளிப்போரைக் கோணிக்குள் பூருமென்றான்

அப்போதுமன்னவர்கள் அடைவாகவந்தார்கள்

கோணிக்குள் பூருமென்று கொற்றவனும்சொன்னானே

கோணிநிறையைக் குலமன்னர்சேர்ந்தார்கள்

அப்போதுமன்னவனும் அடைவாகத்தான்பார்த்து

வாரிபிடித்தமன்னர் மண்மேலேடேசாடலுற்றான்

மாண்டுமடிந்தார்கள் மகாசேனையதனையும்

நெஞ்சழுந்துவிழுவாரும் நிலத்தோடேசாய்வாரும்

மண்டையிளந்து மண்மேலேசாய்வோரும்

வயிறுகிழிவாரும் மணிக்குடல்சரிவாரும

காலொய்ந்துகைமடங்கி கண்பிதுங்கிசாவாரும்

ஐயோவிதியேயென்று அலறிவிழுவாரும்

குய்யோமுறையோவென்று கூச்சலிட்டுசாவாரும்

வைக்கோல்போற்சேர்ந்தார்போல் மனிதரைபோகவிட்டு

கூடிவந்தமன்னவரைக் கொன்றதுபோர்செய்யலுற்றான்

பிலையற்றமன்னவற்கு தங்கவிடமில்லாமல்

நட்டுவர்பாடவே நல்லகிடாபோருட
சிட்டிகள்மல்யுத்தஞ் செய்துமேகாட்டிவர
வேந்தர்சமுகத்தில் வேசியர்களாடிநிற்க
இப்படியாக யிருக்குமந்தவேளையிலே
அங்கேரணக்களத்தில் அரசர்கள்மூவருந்தான்
வெட்டிப்பொருந்தினதும வேந்தர்மடிந்ததுவும்
யானைகுதிரை அரசமக்கள்பட்டதுவும்
இரத்தாறுவோடிவர ரணமுண்டன்கொக்கரிக்க
கூளிகுடல்பிடுங்க குலைமாலைதான்மிதக்க
குத்துவயிரோட குலமன்னரோலமிட
பருந்துகழுகுகள் பசிதீர்ந்தேப்பமிட
பூதப்பிசாசங்கள் புகழ்ச்சியாயாடுமோம்
தேர்புரவியானைகளுந் தெப்பல்போல்தான்மிதக்க
உயர்ந்தபனைமேற்காசும் உதிரமதுதானுண்ண
ஓடுமுதிரத்தால உத்தமர்கள்தானமுழுகி
அரவானும்தொநதிசெட்டி அண்ணன்கடோற்கஜனும்
தாமரைப்பொய்கையிலே தார்வேந்தர்போய்முழுகி
ஆயுதங்கள்தானகழுவி அரசர்திரும்பிவந்து
மாமரத்தின்கீழாக வாளபிமனைத்தேடி
வார்த்தைகள்பேசியே வாறார்கள்ராசாக்கள்
அபிமன்னன்வீற்றிருக்கும் அம்மரத்தினருகில்வந்தார்
கண்டானபிமன்னன் காவலர்கள்வருகிறதை
அபிமனெழுந்திருந்து அண்ணற்கெதிராக
அண்ணமார்மூவருக்கும் அடிவணங்கிதெண்டனிட
இவர்களெங்கேசிக்கினார் எழில்விசையன்புத்திரனே
மன்னவரைத்தேடி பிடித்தாயேவாளபிமா
எங்கேயகப்பட்டார்கள் இராசமுடிமன்னவர்கள்
அண்ணர்முகம்நோக்கி அபிமனுங்கூறுவான்
எங்கெஙகுந்திரிந்து இருக்கவிடமில்லாமல்
மன்னன்திரியோதிரனும் மாப்பிள்ளைலக்குணர்க்கு
தாயாதிநூற்றுவரும் சகுனியுடன்தேத்தரசன்
வீஷ்மர்துரோணர் விளங்குந்துரைமன்னவரும்
வாடிமனந்தளர்ந்து வந்தார்மரத்தருகே
வழிதப்பியங்கே வந்தார்களரசருமே
ஏதென்றுசொல்லக்கேட்டு ராஜகுலவேந்தன்
இடும்பரைக்கட்டி எடுத்தமைததானப்பொழுது
நாங்கள்படைபொருந்தி ராமர்மருகோனே
மூட்டைசுமப்பாரும் முடிபொருக்குங்கொல்லர்களும்
அமிஞ்சிக்கிவந்தவரை அவர்கள்பிபந்தர்களை
கூலிப்பரிதேசிகளை கொன்றோம்காண்வாளபிமா

நால்வரும் ஆலோசனை செய்வது.

முடிமன்னர்நூற்றுவரை முதலானவன்னியரை
உயிரோடேகட்டிப் பிடித்திரோமன்னவனே
என்றுமகிழ்ந்து இராசாக்களேதுரைப்பார்
நாமிங்கேவந்து நெடுநேரமாச்சுதல்லோ
மாயவரும்மை மதியாமலேயிருந்தார்
அமராபதிபுகுந்து ஆயனைக்கட்டிவைத்து
அழகியசீர்சுந்தரியை அபிமன்னனுக்குமாலையிட்டு
மாயவனைக்கட்டி வருவோம்வாதம்பியரே
என்றிவர்பேசி எண்ணமிட்டிருக்கையிலே

சுந்தரிக்கு தோழிகள் சொல்லுவது.

கண்டார்கள்தாதியர்கள் கடுகெனவேயோடிவந்து
சுந்தரியாள்தன்னுடனே சொல்லுகிறார்தாதியர்கள்
ஓடிப்போகுங்குருக்கள்தன்னை உன்புருஷன்வாளபிமன்
திரியோதிரனுடைய திரளானநூற்றுவரை
மாயவரைத்தான்பிடிக்க மன்னவர்கள்வாறார்கள்
என்றுசொல்லத்தாதியர்கள் எடுத்துரைத்தார்சுந்தரிக்கு
அந்தவிசேடம் அதுகேட்டுசுந்தரியும்
சந்தோஷப்பட்டு தலையசைத்துசுந்தரியும்
குஞ்சிரிப்புகொண்டு குலுங்கநகைநகைத்து
ஊழியப்பேரையெல்லாம் ஓடியழையுமென்றாள்

தோழியர்கள் பந்தல் அலங்கரிப்பது.

அப்படியேதாதியர்கள் அழைத்துவந்துவிட்டார்கள்
வந்துநின்றஊழியப்பெண் வஞ்சியர்க்குதெண்டனிட
என்தகப்பன்வாசல் என்வாசலுள்ளதெல்லாம்
பந்தல்கள்போட்டு பட்டாலலங்கரித்து
அந்தமுள்ளசுந்தரியா ளலங்கரிக்கச்சொன்னாளே
நல்லதம்மாவென்றுசொல்லி நடந்தார்களோடிப்போய்
பார்க்கமுடியாது பந்தலிட்டசிங்காரம்

சுந்தரி ஓலை எழுதுகிறது.

இப்படியாயிங்கே யிருக்குமந்தவேளையிலே
சுந்தரியாள்நால்வருக்கும் தூதோலைதானெழுதி
நால்வருக்குந்தெண்டனிட்டேன் நானடியாள்சுந்தரியும்
நாநினைத்தகாரியத்தை நன்றாய்முடித்தீரே
என்சபதந்தப்பாமல் இப்போமுடித்தீரே
மன்னவரேயுங்களிட வல்லமைகள்கண்டேனே
அபிமன்னராசாவே அவ்வோலைவாசியென்றாள்
அப்படியேநல்லதென்று அபிமன்னன்தானெடுத்து
ஒப்பமுடனோலைதன்னை வுள்ளபடிவாசித்தான்
நல்லதென்றுதூதுவரை நலமுடனேயனுப்பிவிட்டார்
தூதுவருமோடிவந்து சுந்தரிக்குத்தெண்டனிட்டு

ஓலைகொடுத்து உரைத்ததொருவாசகத்தை
சொல்லியேசுந்தரிக்கு தூதுவருந்தாமுரைத்தார்
சந்தோஷமாகவேதா னிருந்தாளேசுந்தரியும்
இப்படியாக யிருக்குமந்தவேளையிலே

பெருமாள் வருவது.

மாயன்மகிழ்ந்து மண்டபத்தைவிட்டிறங்கி
பசங்கள்மெத்தபொல்லாதார் பரிகாசம்பண்ணுவார்கள்
பரிகாசஞ்செய்வாரே பார்வேந்தரப்பொழுது
நாமுமெதிரே நடந்துபோய்காண்போமென்று
ஆனந்தவாழ்மார்பர் ஆனையின்மேலேறிவர
மாயரதமேறி மன்னவர்கள்தம்முடனே
வேசியர்களாடிவர வேந்தர்கள்புடைசூழ
தப்புமுழங்கிவர தாதியர்களாடிவர
மல்லரிகொட்ட மணித்தாளமுழங்க
மேளவகையானதெல்லாம் விதவிதமாய்த்தான்முழங்க
மாமரத்தின்கீழாக மாயவரும்வந்தமர்ந்தார்
பாரளந்தானிவகுவரப் பஞ்சவர்கள்புத்திரரும்
நால்வரும்வந்துநன்று நமஸ்காரம்பண்ணினாரே

பெருமாள் நால்வரையும் வினவுதல்.

வந்துபணிந்தவரை வகையாகச்சென்றெடுத்து
என்காணுமதம்பியரே இப்பொழுதுவந்தீரோ
திரியோதிரனுடைய சேனைபெருக்கமெல்லாம்
மானப்பொருத்தீரோ மாபாவஞ்செய்தீரோ
என்னஅரவான் இராசர்முகம்நோக்கி

அரவான் சொல்வது.

எங்களுக்குத்தோஷமில்லை ஏழுலகையாண்டவரே
மாண்டவர்பாவமெல்லாம் மாயவரேவும்மதுகாண்
செத்தவர்பாவமெல்லாம் திருமாலேவுமமதுகாண்
என்னவேமாயவரும் இருதோளும்பூரித்து
ஒன்றுக்குநூறு வுரைப்பார்கள்மக்களென்று
ஆயன்பெருமாளும் ஆலோசனையாகி
பாவங்கழிக்குதற்கு பசுக்கள்கொண்டுவாருமென்றார்
பாதையில்பசுக்கள் மடக்கிவந்தார்மெய்பிடையா
ஆயிரம்பாற்பசுவை அந்தணர்க்குதானமிட்டார்

பெருமாள் திரியோதிரனை வினவுதல்.

கட்டுண்டதிரியன்பக்கம் கபடமானமாயவரும்
முனனுகவந்துநின்று முகம்பார்த்துமேயதுரைப்பார்
வாருங்கள்ராசாக்கள் மாப்பிள்ளையார்சொல்லுமென்றார்
திரியோதிரனாரே சீக்கிரமாய்சொல்லுமென்றார்

பரிகாசம்பண்ணவந்தீர் பைங்கொடியைக்கொள்ளவந்தீர்
எழுத்தாளிபண்ணவந்தீர் என்மகளைக்கொள்ளவென்று
வணங்காமுடியோனே மாப்பிள்ளையார்சொல்லுமென்றார்
இப்போதுசொல்லுமென்றார் இராசர்கள்முன்பாக

திரியோதிரன் நாணிச்சொல்லுதல்.

என்னதிரியோதிரனும் ஏங்கிமனந்தளர்ந்து
மற்றொருவார்த்தைசொன்னால் மதியார்களென்றுசொல்லி
மாயன்பெருமாளே மருமகளைக்காணீரோ
என்தம்பிமகனார்க்கு தாலிமுகூர்த்தமென்றான்
என்மைந்தனபிமருக்கு மணஞ்செய்யுமென்றானே
ஆயன்பெருமாளே அபிமருக்குச்செய்யுமென்றான்
மாயனதுகேட்டு வன்னியரைசாட்சிவைத்து

பெருமாள் அபிமன்னருக்குக் கூறல்.

தங்கிற்றுவுடமையென்று சபதமுடிந்ததென்று
மன்றனேவாளபிமா மணமுடித்துபோவதற்கு
சீக்கிரமாய்வாளபிமா சுந்தரியைமாலையிட்டு
முந்தவேவாளபிமா மணமுடிந்துபோகுதுகாண்
வாளபிமாவாருமென்று வாகனமேறுமென்றார்

அபிமன்னன் ஊர்கோலம்வருவது.

இலக்குணனேறிவந்த யானைகொண்டுவந்தார்கள்
யானையின்மீதேறி யபிமனும்வீற்றிருந்தார்
மாயன்ரதமேல் வாளபிமன்யானையின்மேல்
எக்காளமூதி யிராசாக்கள்தன்னுடனே
யானையுந்தேர்புரவி யதன்பின்னடந்துவர
மல்லரிகொட்ட மணித்தாளமும்முழங்க
விருதுமுழங்கிவர வெண்சாமரம்வீச
கடோற்கஜன்தொந்திசெட்டி கருத்துள்ளநல்லரவான்
திரியோதிரனுடைய திரள்மன்னர்நூற்றுவரை
தேசத்தரசனமைத்துனனை திரளானவன்னியரை
வீஷ்மர்துரோணர் மிகுந்ததோராசாக்கள்
துரோணரசுவத்தாமா செப்பரியமன்னருடன்
வெற்றியிலக்குணனை வேந்தர்நடுவாக
வாமணியைக்கட்டி தடுமாறிபோல்மடக்கி

அபிமன்னன் மாமியாரை வணங்குவது.

சேர்ந்துதுவாரகையில் திருமாலரண்மனையில்
வந்திறங்கிவாளபிமன் மாயனதுமாளிகையில்
அந்தபுரம்புகுந்தார் அபிமருடனால்வருமே
மாமியார்லட்சுமிக்கு வாளபிமன்தெண்டனிட்டான்
வந்துபணிந்து மருமகனைச்சென்றெடுத்து

வாயாரவாழ்த்தி மதிமுகத்தைமுகந்துகொண்டு
முறையில்லாதந்தை முதல்வர்முகுந்தா
என்-முந்தாணிக்குள்ளே முடுகிவளர்த்தமன்னை
அணைத்துமருமகனை அரண்மனையில்கொண்டுசென்று
வயிரமணிமண்டபத்தில் வாளபிமன்னன்வந்து
ஆரவான்கடோற்கஜனும் அபிமன்னன்பக்கத்தில்நின்றார்
ஆயன்மகளாரும் அபிமன்னன்வரவுகண்டு
வற்றிக்கிடந்த வருள்பெரியகாவேரி
மெத்தப்பெருகி கரைபுரண்டுவந்தாற்போல்

சுந்தரிக்குதாதி அலங்கரிப்பது.

தேகங்குளிர்ந்து இருதோளும்பூரித்து
பூரித்திருதோளும் பொன்னுதிரபூஷணங்கள்
ஆலித்துசுந்தரியும் அபிமனைப்பார்க்கவென்று
மஞ்சனச்சாலையிலே மங்கையரும்போய்புகுந்து
ஜலக்கமதுவாடி தார்குழலும்பட்டுடுத்தி
மஞ்சள்குளித்து வரிவிழிக்குமையெழுதி
இட்டதிருநாமம் ஏழுலகந்தான்பெறவே
கஸ்தூரிபொட்டுமிட்டு கார்குழலுங்கொண்டைகட்டி
கொண்டைக்குப்பூமுடித்து கொம்பனையும்பொன்சூட்டி
முத்தாபரணமும் மோகனமாலைகளும்
கொலுசுபதக்கங்களும் கோர்வைமுத்துமாலைகளும்
அஸ்தகடகமும் அரிபுரிவளையல்களும்
மூக்குத்திசிந்தாக்கு முன்னரையில்பொன்வளையல்
பட்டுடுத்திநல்மருங்கும் பாடகத்தாற்சிலம்பு
பொன்பூஷணமுடித்து பொற்கொடியாள்சுந்தரியும்

சுந்தரியைதாதிகள் கலியாணவாசலில் அழைத்துவருவது.

தாதிமாரழைத்துவர தகப்பனதுபந்தலிலே
கொழுநன்மார்மூவருக்கும் கொம்பனையாள்தெண்டனிட
அபிமனைப்பார்த்தே அழகுநல்லசுந்தரியும்
அத்தைமகனுக்கு அடிவணங்கிதெண்டனிட்டாள்
இருந்தாளிடபுறத்தே யிருடனும்வேறுடலாய்
ஆயிரங்கன்னியர்கள் ஆலாத்தியேந்திநிற்க
பேரிகைகொட்ட பெருஞ்சங்குநின்றூத
தோழியைத்தானழைத்து சுந்தரியுங்கூறுவாள்
செங்கழனிதன்னுடனே தோகைசிலதுரைப்பாள்
அப்போதுசெங்கழனி அடைவுடனேதான்கேட்டு

செங்கழனிதாதி அரவானண்டைவருவது.

அரவானருகாக அரிவையருமோடிவந்து
வணங்கியெழுந்திருந்து வார்த்தைசொல்வாள்செங்கழனி
மங்கைநல்லாள்சுந்தரி வார்த்தைசொன்னாள்கேளுமென

என்னென்னகாரியங்கள் எனக்கறியச்சொல்லுமென்றார்
மாப்பிள்ளையிலக்குணனை மடல்விரியக்கொண்டுவந்து
அரசாணிக்காலுடனே அவனையேகட்டிவைத்து
அஞ்சுகுடுமைவிட்டு அழகாய்த்தலைசிறைத்து
நல்லாவின்சாணி நடுதலையிலப்பிவைத்து
காடைவிளக்கெரிய கன்னிநல்லாள்பார்த்திருக்க
சபதநிறைவேற்றுமென்ன தார்குழலுந்தெண்டனிட்டாள்
என்னஅரவான் எழுந்துமிகநகைத்து

அரவான் இலக்குணனைப் பிடித்துக்கட்டுவது.

என்றேஅரவான் இலக்குணனைகொண்டுவந்து
செஞ்சொல்மொழிநாவிதனை தேடியழைத்துவந்து
அஞ்சுகுடுமைவைத்து அழகாய்தலைசிறைத்து
அரசாணிகாலுடனே அசையாமல்கட்டினன்
ஆவினுடசாணம் அவன்முடிமீதில்வைத்தான்
ஐங்கலநெய்பிடிக்கும் மகலுமுள்ளகொப்பரையை
லக்குணன்முடிமீதி லிருத்தியரவானும்
ஆயிரந்திரிபோட்டு அழகாகஏற்றிவிட்டான்
நட்டுவர்பட்டுவர்கள் நாடகங்கள்செய்துவர
தாளங்கள்மேளங்கள் தப்பட்டைநாகசுரம்
புள்ளாங்குழலூத பெரியடமாதான்முழங்க
துரோணர்கிருபர் சொற்பெரியவீஷ்டுமர்
மூவரையுந்தானழைத்து முதலோமஞ்செய்யுமென்றார்
ஆயிரம்வேதியர்கள் அடைவாகவேள்விசெய்ய
மற்றப்பிராமணர்கள் வரிசைசடங்குசெய்ய

பெருமாள் ஓடிவந்துவிடுவது.

அந்தசமயம் அதுபார்த்துமாயவரும்
காவலர்நூற்றுவரை கட்டவிழ்க்கவேண்டுமென்று
திரியோதிரன்மனதை சிக்கறுக்கவேணுமென்று
நல்லரவான்சேவகத்தை நாமறியவேணுமென்று
மாயன்பெருமாளுமறைந்தோடிப்போகலுற்றார்
அப்போதுமாயவரும் ஆலோசனைசெய்வார்
ஐவரையுமிட்டுவர ஆலோசனையாகி

பெருமாள் பிராமணவேடந் தரிப்பது.

வேதநாராயணரும் வேதியர்போல்வடிவாய்
பஞ்சாங்கத்தைப்பிடித்து பார்ப்பாரவேஷமுடன்
மீரக்குடைபிடித்து பிடித்தநுயிலெடுத்து
வனத்தைமிகநோக்கி மாயவரும்போய்நடந்தார்

காடுகடந்து கரியவலங்கடந்து
பஞ்சவர்கள்தானிருக்கும் பாரவனந்தனிலே
மாயன்பெருமாளும் மறையவரைபோல்வருவார்
கண்டார்திருமாலுங் காவலர்களைவரையும்
ஆர்காணும்தம்பியர்கள் அடவியில்வீற்றிருப்பார்
என்று-வழியுந்தெரியாமல் உங்கள்வனமருகேவந்துவிட்டேன்
ஆனந்தவாழ்மார்பா அழைக்கிறதுகேழ்க்கிலையோ
வழிதப்பிவந்தாற்போல் மன்னரண்டைவந்துநின்றார்
தாரார்புகழ்வேந்தர் தர்மரெழுந்திருந்தார்

4234

தர்மர் பிராமணரைக் கேட்பது.

ஆர்காணுந்தம்பியரே அடவியில்வந்துவிட்டீர்
மாயன்பெருமாளே மறைபவர்போலவந்தீர்
ஐவருந்துரோபதையும் ஐங்கால்வலம்வந்து
பதிங்கால்வலம்வந்து பன்னிருகால்தெண்டனிட்டு
ஆயன்பெருமாளே மர்மமாயிருப்பானேன்
அல்லகாண்தம்பியரே ஆயன்மகள்சுந்தரியை
மாயன்மகள்சுந்தரியை வாளபிமனுக்கென்றபெண்ணை
தென்னமுடிவேந்தன் திரியோதிரப்பெருமான்
தன்மைந்தனிலக்குணர்க்கு மாலையிடப்போறானும்
துவாரகைக்குப்போனால் துரைமன்னரங்கிருப்பார்
எனக்கு-அமுதுபடிகொடுப்பார் ஆனந்தவாழ்மார்பா
ஆகையினால்போகவுந்தன் அடவியில்வந்துவிட்டேன்
எனக்கு-வழியுந்தெரியவில்லை மன்னவனேயென்னசெய்வேன்
துவாரகைக்குப்போரவழி சொல்லியனுப்புமென்றார்
ஐயருமப்போது ஆலோசனைசெய்து
மாயவரேதப்பாய் மறையவர்போலவந்தீர்
ஆயன்பெருமாளை அடிபணிந்துயேதுரைப்பார்
காரியங்கள்சொல்லி கரியமாலிப்போது
அத்தையெமக்குசொல்லி அறிக்கைபிடவந்தீரோ
ஏதுகருமம் எங்களுக்குச்சொல்லுமென்றார்
ஐயருடன்தெண்டனிட்டு அடிபணிந்துகேழ்க்கலுற்றான்
மாயன்பெருமாளும் மர்மமாயேதுரைப்பார்
தேசத்தழகன் திரியோதிரப்பெருமான்
தன்மைந்தனிலக்குணர்க்கு மணஞ்செய்யவேணுமென்று
பெண்தேடவேணுமென்று பிரியத்துடனப்பொழுது
மாமன்சகுனியரும் வரவிட்டானென்னருகே
மாமன்சகுனியரும் வந்துவணங்கினாரு

திரியோதிரன்மகனார் செல்வனிலக்குணர்க்கு
பெண்தரவேணும் பெருமாளேயெனமொழிந்து
நாக்கறுப்பேனமூக்கறுப்பேன் நாணங்குலைத்திடுவேன்
வார்த்தைகள்சொல்வதொரு வாயைக்கிழித்திடுவேன
என்னசகுனியருமெழுந்துமிகவணங்கி
நான்-வந்ததொருகாரியத்தை மாயவரேகேளுமென்றான்
பணத்தின்பெருமையினால் பாவிதிரியோதிரன்
பெண்கேட்டுவாருமென்றார் பெருமாளேயிங்கவந்தேன்
மன்னன்திரியோதிரனார் மதத்தையடக்குகையில்
பாவிதிரியோதிரனார் பணமெல்லாம்வாங்குகைக்கு
பெண்கொடுக்கச்சம்மதியென பெருமாளெனமொழிந்தார்
நல்லதுபெண்தருவோம் அவர்மனதில்சந்தோஷந்தான்
திரியோதிரனாரைச் சீக்கிரமாய்வாருமென்றேன்
மாமன்சகுனியரு மறுத்துப்போய்வேதுரைப்பான்
பெண்கொடுக்கசம்மதித்தார் பெருமாளெனமொழிந்தார்
பரியம்பொருநதுகைக்கு பாரளந்தான்தானபதித்து
திரியோதிரனுக்குச் சீக்கிரமாயேதுரைப்பான்
தேசத்தழகன் திரியோதிரனாரும்
யானைதிரளுடனே அப்பொழுதேவந்துவிட்டான்
பரியமபிடியுமென்று பாவியவனுரைத்தான்
அரையன்திரியோதிரன் அப்போமனமகிழ்ந்து
ஏழாநாள்வாருமென்று இன்பமுடனுரைத்தான்
ஆளப்பிறந்த அபிமர்பெருமாளும்
கோதைநல்லாள்சுந்தரியும் தூதோலைதானனுப்பி
ஆளப்பிறந்தவர்க் கறிக்கையிடுவித்து
ஆனைகுந்திதன்னைவிட்டு அபிமர்பெருமாளும்
தாயுடனேசொல்லாமல் தனிவழியேவந்துவிட்டு
ஆற்றில்விழுந்து முழுகிக்கரையேறி
வல்லரக்கனதன்வனத்தில் வாளபிமன்தூங்கையிலே
வல்லரக்கன்விழுங்கவந்தான் வாளால்தரித்துவிட்டான்
கடோற்கஜன்தன்னுடனே காலையுறவாடி
கமலவல்லியார்வீட்டில் கலந்தேயமுதுகொண்டு
அங்கேவிடைபெற்று அபிமாகடோர்கஜனும்
அரவான்வனத்திலே அங்கேவுறவாடி
நாககன்னிதன்வீடடில் நல்விருந்தமுதுகொண்டு
அங்கேவிடைபெற்று அபிமர்கடோர்கஜனும்
வீசிநடந்தார்கள் வீரகங்கைநன்னுடர்
தொந்திசெட்டிதனனுடனே துறைகளுறவாடி
வீரகங்காள்தன்வனத்தில் விருந்தமுதுதானுண்டு
அங்கேவிடைபெற்று அவ்வனத்தில்தானும்வந்து
ஔவைவனத்தில்வந்து அரசர்விருந்தமுண்டு

அழகியசுந்தரிக்கு ஔவையைதூதனுப்பி
ஒருமாமரத்தருகே உத்தமர்களவந்துநின்று
திரியோதிரனுடைய சேனைப்பெருக்கமெல்லாம்
அரவான்போய்சோதித்து அவன்வந்தபிற்பாடு
திரியோதிரனும் சேனைப்பெருக்கமெல்லாம்
மணக்கோலந்தான்வரவே மன்னன்பயணமிட்டான்
அந்தசமயத்தில் அரவான்கடோர்கஜனும்
தொந்திசெட்டிதன்னுடனே துரைமன்னர்போய்புகுந்தார்
மன்னன்திரியோதிரன் மகாசேனையுள்ளதெல்லாம்
மாளப்பொருதி மடித்தார்கள்சேனையெல்லாம்
ஆயிரங்கோடி அரசமக்கள்பட்டார்கள்
ஏழாயிரங்கோடி இராசாக்கள்பட்டார்கள்
பதினாயிரங்கோடி படைமன்னர்பட்டார்கள்
அப்போதரசரெல்லாம் அலைந்துவழிதேடி
ஒத்தைமரத்தருகே ஓடிவரும்போது
அங்கேயபிமர் அதட்டிகொடிபிடுங்கி
தாமணியாய்சேர்த்து தரியாடுபோல்மடக்கி
திரியோதிரனுடனே திரள்மன்னர்நூற்றுவரை
மற்றுமுள்ளமன்னவரை வாளபிமன்கட்டிவைத்து
கன்னியுங்கட்டத் துணிந்தார்களப்பொழுது
சீக்கிரமாபோடிவந்து தேனையுடனுகை
வந்துவினவினேன்காண் வாளபிமர்தன்னுடனே
மன்னர்சபையிலே வாளபிமர்தன்னுடனே
பெண்ணவர்க்கென்று பிரிவித்துகூறினேன்
திரியோதிரனுரைச் சீக்கிரமாகச்சொல்லுமென்றேன்
வாளபிமற்கென்று வசனமதுரைத்தான்
அப்படியேயாகுமென்று அரண்மனையில்போய்புகுந்து
ஆளப்பிறந்த அரவானெழுந்திருந்து
காவணக்காலுடனே கட்டினான்மன்னவரை
இலக்குணனைக்கொண்டுவந்து இயல்பாகக்கட்டினான்
ஐந்துகுடுமைவைத்து அம்பலத்தில்தலைவிரித்து
சாணியைவைத்து தலையிலவிளக்கேற்றி
வாளபிமர்தன்னுடனே மங்கைநல்லாள்சுந்தரியும்
மனையிலேஉட்கார்ந்து மணஞ்செய்யும்வேளையிது
தாமிஷங்கள்பண்ணாதே தருமர்பெருமானே
ஐவருடனுகை அலங்காரத்துரோபதையும்
என்தங்கைதுரோபதையும் தார்வேந்தரைவருமாய்
சீக்கிரமாய்வாருமென்று ஸ்ரீராமர்தானழைத்தார்
அப்போதுதருமர் அடைவுடனேதான்கேட்டு
பாவிதிரியோதிரனர் பார்த்தானேயாமாகில்
மறித்துவைப்போமென்று வழக்குரைப்பான்தப்பாது

எப்படிநாம்வருவோம் எங்கள்பெருமாளே
தாமமுடியானே தருமரேநீர்கேளும
வேதியனைப்போலாக வேடங்கள்மாற்றுகிறேன்
காசிப்பிராமணர்போல் கனவேடமபோட்டாரே
ஐவர்க்குவேடம் மாற்றினார்மாயவரும்
மாதுதுரோபதையும வடிவெடுத்தாளப்படியே
அங்கிருந்துமாயவரும் அழைத்துவருகலுற்றார்
காடுகடந்து கரியவனங்கடந்து
நாடுகடந்து நகரும்பகைடந்து
துவாரகாபுரியருகே சென்றாரேமன்னவர்கள்
அங்கொருசாவடியில் ஐவரைதானிறுத்தி
அரவானையிங்கே அனுபபுகிறேனென்றுசொலலி
சீக்கிரமாய்வந்து திருமாளிகையினுட்புகுந்தார்
அரசாணிமுன்பாக வந்தாரேஆயனுமே
கட்டுண்டமன்னவரைக் காவலரைதான்பார்த்து
கண்டாரேலக்குணனை கையால்வாய்மூடி
ஐயோமகனே ஆபத்துவந்ததென்ன
காரணமோவுங்களுக்கு கட்டுண்டிருப்பானேன்
தலைமேலேசாணிவைத்து சாஞ்சியிருப்பானேன
பணமுப்பறிகொடுத்து பரதேசியானீர்களா
என்றுசொல்லியெம்பெருமா ளில்லாவிசாரமிட்டார்
குருக்கள்மார்தங்களண்டை கோபாலர்வந்துநின்றார்
இந்தயவதிகளே னையாவந்ததென்றார்
தலையிலெழுத்துப்படி தப்புமோமாயவரே
கலியாணமென்றுசொல்லி கண்குளிரப்பார்க்கவந்தேன்
அனியாயமாக அகப்பட்டுக்கொண்டோமே
இனியென்னசெய்வது எங்கள்பெருமாளே
ஆனபடிசெய்யுமென்று ரந்தக்குருக்களுமே
என்றுசொல்மாயவரும் இருக்கட்டுமென்றுசொன்னார்
மாயன்பெருமாளும் மகாதேவரேதுசெய்வார்
கட்டுண்டமன்னவரை கட்டவிழ்க்கவேணுமென்று
நல்லரவான்சேவகத்தை நாமறியவேணுமென்று
அசைந்தாற்போலாக ஆயருந்தான்மறைந்தார்
மாயனரண்மனையில் வாளபிமன்சுந்தரியும்
இருவருமொன்றாக யிருந்தார்களப்பொழுது
உத்தமர்கள்வேதியர்கள் வேதங்களோதிநிற்க
ஆளப்பிறந்த அரவான்முகம்நோக்கி
மாயன்பெருமானை வரவழைத்துவாருமென்றார்
அரவானும்மாயவரை அதட்டியேதானழைத்து
சுற்றித்திரும்பி திசைதோறும்பார்க்கலுற்றார்
பாரளந்தமாயவரை பந்தலிலேகாணாமல்

எங்கெங்குந்தேடி இராஜமுடிவேந்தன்
வேந்தர்பெருமாளும் வெளியேபுறப்பட்டார்
அஞ்சனத்திருஷ்டியிலே அரவானும்பார்க்கலுற்றான்
மண்டபத்தைவிட்டு வருகிறார்மாயவரும்
கண்டானரவானுங் கடுகிப்பிடிக்கவென்று
மாயன்பெருமாளும் மச்சவடிவுகொண்டு
அரவானும்விக்களியாய் ஆயனைப்பார்க்கலுற்றான்
மாயன்பெருமாளு மறைவாகவோடிவந்து
அரவானெதிராக ஆணசிங்கம்போல்வாரார்
சிங்கவடிவாக சீறிவருகிறதை
கண்டானரவான் கடுங்கணவேதான்பார்த்து
சிங்கவடிவாக சிவுக்கென றுமேற்குதித்தான்
அப்போதுமாயவரும் அவனுக்குதப்பிவந்து
அப்போதுதப்பிவந்து ஆயருமேதுசெய்தார்
மாயவருமப்போது மான்வடிவாயோடலுற்றார்
பார்த்தானேகல்லரவான் பதுங்கியெழுந்திருந்து
சிங்கவடிவாகத் துரத்திபிடிக்கலுற்றான்
அப்போதுமாயவரும் அரவானைத்தப்பிவந்து
அப்போதுதப்பிவந்து ஆயருமேதுசெய்தார்
ஆயன்பெருமாளும் ஆமைவடுவெடுத்து
புதருஞ்செடியகமே போய்புகுந்தார்மாயவரும்
அஞ்சனத்திருஷ்டியிலே அறிந்தாரேமாயவரை
ஆனந்தவாழ்மார்பன் அரவான்குறவனைப்போல்
சில்லாக்கோல்கைபிடித்து சிக்கெனவேகுத்தலுற்றான்
அப்போதுமாயவரும் அரவானெதிரில்வந்து
காட்டிலொருபன்றியைப்போல் கடுகியேஓடலுற்றார்
பார்த்தானரவான் பன்றியாயோடுவதை
வேட்டைநாய்போலரவான் பிஜத்தையோட்டிமூப்பான்
ஆயன்பெருமாளை அரவானும்பின்னிழுக்க
ஆயன்பெருமாளுக்கு ஆபத்துவாச்சுதல்லோ
தவித்துத்தடுமாறி தப்பித்துமாயவரும்
கொக்காய்வடிவுகொண்டு கோபாலரோடலுற்றார்
அஞ்சனத்திருஷ்டியிலே அறிந்தானேமாயவரை
சீக்கிரமாய்கல்லரவான் டேகையைப்போல்வடிவுகொண்டு
கீழேவிழுவரைந்து கெட்டியாய்த்தான்பிடித்தார்
வேதநாராயணரும் மெத்தனவேதப்பிவந்து
எலிபோலேவடிவுகொண்டு எலிவளையில்தானுழைந்தார்
அரவானதுகண்டு எலிவளையில்தானுழைந்தார்
பூனைவடிவாக பதுங்கியிருக்கலுற்றான்

பெருமாளுமங்கிருந்து போனேனையனென்று
எட்டியேகொஞ்சலுற்றார் எலிபோலமாயவனார்
ஒளித்திருந்துநல்லரவான் மென்னியைப்போய்ப்பிடித்தான்
உறுதியாய்ப்பிடித்திடவே உள்ளம்கலங்கிடவே

பெருமாள் சொல்வது.

மண்டைபிதுங்கிடவே மேகவர்ணர்தான்பார்த்து
மெச்சினேன்மருமகனே விடுவிடுமெனவுரைத்தார்
விட்டால்வருவீரோ விண்ணளந்தமாயவரே
வருகிறேனென்றுசொல்லி மாயவனார்போய்மறைந்தார்
பார்த்தானேநல்லரவான் பகவானைக்காணுமல்
திகைத்தானேநல்லரவான் திருமாலைகாணுமல்
அப்போதுமாயவனார் ஆயனிடையனைபோல்
எம்பெருமாளப்போது இடையனைப்போல்வந்தார்
கண்டானேநல்லரவான் கடுகெனவேயோடிவந்து
பாளையக்காரனைப்போல் படபடென்றோடிவந்து

அரவான் சொல்வது.

இடையனைக்கட்டிப் பிடித்தந்நல்லரவான்
அரண்மனைவாசலுக்கு ஆட்டுகிடாவேணுமென்று
பாலுந்தயிரும் பதினகலம்வேணுமென்று
கொண்டுவாடாயிடையா நீ கொப்பெனவேயென்றுசொன்னன்
அண்ணுந்தாள்போட்டு அடித்தானேநல்லரவான்
பாராகல்தானெடுத்து பாரளந்தார்மீதில்வைத்தார்
தலையெடுக்கவொட்டாமல் தார்வேந்தனடிக்கலுற்றான்
அறிந்தாரேமாயவனார் அரவான்சவுரியத்தை
மெச்சினேன்நல்லரவான் விடுவிடுமென்றுரைத்தார்
இனிவிடும்நல்லரவான் எனறாரேமாயவனார்
என்னலுமேநல்லரவான் இழுக்கலுற்றானப்பொழுது
மாயவரைப்பற்றி யிழுக்கலுற்றானப்பொழுது

பெருமாள் சொல்வது.

அப்போதுமாயவரும் அரவானுக்கேதுரைப்பார்
மனிதனைக்கொன்றவர் மணஞ்செய்யக்கூடாது
பாவமிருந்ததுகாண் பந்தலிலேயிப்பொழுது
காசியிலேபோய்முழுகிக் கலியாணஞ்செய்யவேண்டும்
அப்போதகந்திரு மதுவுமேதண்ணீரிலே
காசிப்பிராமணரை கலியாணப்பந்தலிலே

இட்டுவெந்துவிட்டால் எண்மகளைத்தருவேனப்பா
அல்லாதுபெண்கொடுக்கேன் அரசர்கள்தானறிய

அரவான் சொல்வது.

என்னஅரவானும் இராமர்முகம்நோக்கி
காசிப்பிராமணர்கள் வேண்டுமென்றூர்காவலரே
இப்போதுவேதியர்கள் எங்கிருப்பார்சொல்லுமென்றான்
மாயன்பெருமாளும் மறைவாகயேதுரைப்பார்
காசிக்குப்போய்வருவார் வந்திருப்பார்வேண்டியபேர்
வழியிலேஓரிடத்தில் வந்திருப்பார்வேண்டியபேர்

அரவான் காசிப்பிராமணரைக் கண்டுபிடிப்பது.

அப்போதுநல்லாரவானுக்கரித்துப்பறக்கடித்து
பந்தலைவிட்டு பார்மன்னன் வெளியேவந்து
எங்கெங்குந்தேடி இராஜமுடிவேந்தன்
அலைந்தெங்குந்தேடிவாரா ஆணழகன்புத்திரனும்
ஊருக்குமேற்கே ஒருமண்டபந்தானிருக்க
மண்டபமொன்றிருக்கு மாயனருளாலே
காசிப்பிராமணர்போல் காவலர்களங்கிருந்தார்
கண்டானரவானுங் கடுகெனவேயோடிவந்து
மண்டபத்தைநோக்கி வரலுற்றான்மன்னவனும்
பஞ்சவர்களைவரும் பாப்பாரைப்போலாக
காசிபிராமணரைப்போல் காவலர்களங்கிருப்பார்

காசிப்பிராமணரை அரவான்கேட்பது.

காசிப்பிராமணரைக் கண்டானரவானும்
மண்டபத்தைச்சேரவந்து வணங்கியெழுந்திருந்து
ஐவரையுங்கண்டணிட்டு அரவானுங்கூறலுற்றான்
யார்காணுமையரே அரியபிராமணரே
எங்கிருந்தெங்குவந்தீர் எனக்கரியச்சொல்லுமென்றான்

காசிப்பிராமணர் சொல்வது.

மாயப்பிராமணர்கள் வார்த்தையங்கேதுரைப்பார்
காசிக்குநாங்கள்போய் வந்தோங்காண்காவலரே
எங்கிருந்திங்குவந்தாய் எனக்கறியச்சொல்லுமென்றார்
ஆளப்பிறந்த அரவானுங்கூறுவான்

அரவான் சொல்வது.

ஐவரிடபுத்திரன்காண் அர்ச்சுனனென்றகப்பன்
என்பேர்அரவான்காண் என்னாச்சிதுரோபதைகாண்

மாற்றான்பொருட்டால் வனம்போனார்பாண்டவர்கள்
ஆயன்மகள்சுந்தரியை அபிமருடதேவியரை
மாற்றான்தன்மைந்தனுக்கு மணஞ்செய்யவந்தார்கள்
அந்தவிசேடம் அடியேன்தான்தெரிந்தோம்
மாயன்மகள்சுந்தரியை வாளாலபிமருக்கு
கலியாணஞ்செய்யவந்தோம் கரியமால்புத்திரியை
காசிப்பிராமணர்கள் கரியமால்வேண்டுமென்றார்
ஆசையினால்வந்தேன் ஐயரேவாருமென்றான்
ஐவரையுங்கண்டாற்போ லாச்சுதானிப்பொழுது
வாருமையாவென்று வணங்கியெழுந்திருந்தான்
ஆனாற்கேள்தம்பியரே அப்படிநாமவருவோம்
பாவங்கண்டாலே பந்தலிலேநாங்களிரோம்
பாவங்களுண்டானால் பரிகரித்தால்நாம்வருவோம்
இப்படிக்குச்சம்மதித்தால் இப்போதேநாம்வருவோம்
ஆளப்பிறந்த அரவானுங்கூறுவான்
அப்படியேயாகுதென்று அரவானழைத்துவாரான்.

காசிப்பிராமணர் வருவது.

மாயனரண்மனையில் மாணிக்கப்பந்தலிலே
ஐவருமாச்சியரும் அரியபிராமணர்போல்
கண்டாரேமாயவரும் கடுகியெழுந்திருந்து
தாணியளந்தவற்கு தருமரும்தெண்டனிட்டார்
பார்த்தாரேதர்மரிந்தப் பந்தல்திசைதோரும்

காசிப்பிராமணராகிய பாண்டவர்வந்து
பெருமாளைக் கேட்பது.

மன்னவரேஉங்களிலே மணஞ்செய்வதிப்படியே
கட்டிவைத்தோரிவ்வுலகில் கலியாணஞ்செய்யக்காரணமோ
மனிதரைக்கட்டி மணஞ்செய்யக்காரணமோ
அரசாணிக்காலண்டை ஆர்காண்சிறுமனிதன்
தலையைமழுங்கடித்தீர் சாணிதலைமீதில்வைத்தீர்

பெருமாள் சொல்வது.

மாயன்பெருமாளு மறையவர்க்கேதுரைப்பார்
காவணக்காவலண்டை கட்டுண்டாரென்றீரே
திரியோதிரன்மகன்காண் செல்வனிலக்குணனும்
திரியோதிரனார்காணும் தெரியுவுரையுமென்றார்
இதோபந்தலிலேகட்டுண்ட பாருமுடிமன்னவனும்
திரியோதிரப்பெருமான் சீமைக்கதிகாரன்

இந்த-மன்னவர்களெல்லாம் மகாராசன்தம்பிமார்
இவருடையமைந்த னிலக்குணர்காணுமின்

காசிப்பிராமணர் சொல்வது.

என்னபிராமணரும் இராமர்முகம்நோக்கி
மனையில்உட்கார்ந்தமாயவரும் வேதியர்க்குயே துரைப்பார்

பெருமாள் சொல்வது.

பாண்டவரைவருண்டு பாருலகோர்தாமறிய
தருமரென்றும்வீமரென்றும் தாஷ்டிகவிசையனென்றும்
ஐவர்நடுவில் அர்ச்சுனனார்புத்திரன்காண்
அர்ச்சுனனார்புத்திரர் அபிமரிவர்காணும்
மணையின்மேலுட்கார்ந்த வாளபிமன்தான்காணும்
மாயப்பிராமணரும் மாயவர்க்குயே துரைப்பார்
திரியோதிரனுக்கும் திரள்குமாரர்பஞ்சவற்கும்
உறன்முறைதத்துவங்க ளுண்டோநீகூறுமென்றார்

பெருமாள் சொல்வது.

மறையவர்கேட்க மாயவருமே துரைப்பார்
திரியோதிரனுக்கும் திரள்வீரர்பஞ்சவர்க்கும்
உறன்முறைதத்துவங்க ளுண்டோநீகூறுமென்றார்
மறையவர்கேட்கவே மாயவருமே துரைப்பார்
திரியோதிரனுக்கும் திரள்வீரர்பஞ்சவற்கும்
பங்காளிதத்துவத்தால் பகையுண்டுபாலகற்கும்
தம்பிமகன்தேவியரை தமயன்மகன்கொள்ளவந்தான்
ஆகையினால்கட்டிவைத்தார் அரியப்பிராமணரே

காசிப்பிராமணர் வருவது.

மாயப்பிராமணரும் மறுவார்த்தையே துரைப்பார்
பஞ்சவர்களிங்கில்லையோ பாராளந்தமாயவரே
இட்டுகீர்வார்க்கவும் இங்கில்லையோபஞ்சவர்கள்
பெரியப்பாரல்லவோ பெருக்கமுடன்செய்யவேண்டும்
தகப்பன்மாரில்லாமல் தரிப்பாரோமங்கிலியம்
தம்பிமனதறிய தான்மணம்செய்வாரோ
பாவமிதுபாவம் பந்தலிலேகாங்களிருேம்
அறியாமல்வந்துவிட்டோம் அதிகாரப்பந்தலிலே
ஆடாபயலே அழைத்துவந்தாயெங்களைநீ
தோஷமிதுதோஷம் சொல்லாமலிட்டுவந்தார்
இங்கிருக்கப்போகாதென்று எழுந்திருந்தார்வேதியர்கள்

பெருமாள் சொல்வது.

அப்போதுமாயவரும் அரவானுடனேதுரைப்பான்
வேதியர்கள்போனுக்கால் விசையன்மகனுற்கு
பெண்கொடுப்பதில்லையென்று பெருமாளுன்கூறலுற்ருர்

கடோற்கஜன் சொல்வது.

அப்போதுகடோற்கசனும் அரவான்முகம்நோக்கி
தம்பியரேகேளாய்நீ சமயத்துக்கேற்றபடி
ஆயனர்சொற்படிக்கு அரவானெழுந்திருந்து
ஆனந்தவாழ்மார்பன் ஆவலுடனெழுந்திருந்து
மாயப்பிராமணரை வணங்கியெழுந்திருந்து
வேதியரேவுங்கள் மனதுபடிசெய்கிறேன்
மறையவரேநீங்களிப்போ மணமுடிக்கவேணுமென்றுன்

காசிப்பிராமணர் சொல்வது.

வேதப்பிராமணரும் வேதியருங்கூறுவார்
பந்தலிலேகட்டிவைத்த பாரமுடிமன்னவரை
கட்டவிழ்த்துவிட்டு கலியாணஞ்செய்யுமென்ருர்
காலோடேகட்டிவைத்த காளையிலக்குணரை
கட்டவிழ்த்துபோட்டு கடுகழுழுக்காட்டி
ஆனபொன்பணிதியிட்டு அழைத்துவந்துவையுமென்ருர்
அப்படியேயாகுமென்று அரவானுமோடிவந்து
திரியோதிரனுடனே திரள்மன்னர் நூற்றுவரை

அரவான் திரியோதிரன் முதலானவரைக் கட்டவிழ்த்துவிடுதல்.

கட்டையவிழ்த்துவிட்டுக் கருத்துள்ளநல்லரவான்
மாற்றுனிலக்குணனை வரிந்தகட்டைதானவிழ்த்து
விளக்கையெடுத்து வேந்தரைதானெழுப்பி
தாதியரைத்தானழைத்து ஜலக்கங்கள்வாருமென்ருர்
பொன்பூட்டிபட்டுடுத்தி பூவையிலக்குணனை
ஆனந்தவாழ்மார்பன் அரவானதுபார்த்து
தம்பியிலக்குமணனை சதிராயிருமென்ருர்
காசிப்பிராமணரும் கலியாணபந்தலிலே
மாயனருகாக மறையவருந்தானிருந்தார்
தென்னமுடிவேந்தன் திரியோதிரன்மனதில்
காசிப்பிராமணரவர் கட்டவிழ்ந்தபுண்ணியத்தால்

ஊர்வலம் வருவது.

திரியோதிரனும் திரள்தம்பி நூற்றுவரும்
மாமன்சகுனியும் மைத்துனன்தேத்தாசன்
காசிப்பிராமணற்கு கைகுவித்துதெண்டனிட்டார்

மதுரைத் தமிழ்ச் சங்கம் THE MADURA TAMIL SANGAM
4

மற்றுமுள்ளமன்னவரும் வணங்கியெழுந்திருந்து
துரோணர்கிருபர்சோம் பெரியவீரியரும்
ஐயரேயென்றறிந்து ஆசீர்வாதம்புகன்றார்
மாயன்மகளை மணஞ்செய்யுமென்றுரைத்தார்
பேரிகைகொட்ட பெருஞ்சங்குநின்றூத
ஒற்றைச்சங்கூத ஒலிகள்பணிமாற
மல்லரிகொட்ட மணித்தாளந்தான்முழங்க
வேதங்களோதிவர வேதியர்கள்
வெற்றிமுர
தப்பட்டை
கட்டுவர்கள்
தத்தோடிங
மத்தளஞ்செ
அம்மிகுழ
சாலுங்காக
மங்கிலியப்
மேளவகை
மங்கிலியந்தெ
திரியோதிர

மாய ... ளும்

மாயப்பிரா
மாதுதுரோ
வேதப்பிரா
மங்கிலியந்

மாயவரைத்
சூரியனைத்தெண் ... ளுக்குத்தானதர்ததான
அரகராவென்று ... தனைமங்கிலியம்
மும்மூர்த்திகளைத்தானினைந்து மூன்றுமுடிபோட்டானே
சுந்தரிக்குவிபூதி தரித்தானேபிமனும்
மாயன்பெருமாளும் மகிழ்ந்துமேயேதுரைப்பார்
கரும்புகுழலாளை கோமையில்சுந்தரியை
தோகைமயிலாளை சுந்தரியையுந்தனுக்கு
தந்தோமுனக்குமப்போ தனஞ்சயமூர்புத்திரனே
இந்தாருந்தம்பியென்று இராமருந்நீர்வார்த்தார்



பெருமாள் கடோற்கஜனுக்குச் சொல்வது

கரியபெருமாளும் கடோற்கஜனைத்தானழைத்து
தகப்பன்மாரிங்கிலையோ தார்வேந்தருங்களுக்கு
எழுப்பியழைத்துவந்து ஏலாலபிமருக்கு
இட்டுநீர்வாற்பீரென்று இராமருங்கூறுவார்

கடோற்கஜன் கூறுவது.

காளைகடோற்கஜனும் கடுகியெழுந்திருந்து
திரியோதிரனருகே சேரவந்துயேதுரைப்பான்
பெரியதனத்தில் பெரியப்பாரல்லவோ
ஆளப்பிறந்த அபிமன்னபெருமானுக்கு
இட்டுநீர்வாருமையா யெங்கள்பெருமாளே
எழுந்திருந்துவாருமையா யெங்கள்பெருமாளே 423
தேசத்தழகன் திரியோதிரனும்
மெள்ளவெழுந்திருந்து மேகமலைபோலே
மாற்றானபிமருக்கு மணமிடுவோமென்றுசொல்லி
நின்றுநடுங்கி நெடுமூச்செரியலுற்றான்

திரியோதிரனைக் கடோற்கஜன் குத்துவது.

கண்டான்கடோற்கஜனும் கண்கள்மிகச்சிவக்க
ஏண்டாபெரியப்பா யெறிந்தாய்பெருமூச்சு
முறுக்கிவிட்டஆறதுபோல் முறடாகநிற்கின்றாய்
முழங்கையைநீக்கி இடித்தானடிமுதுகில்
கடுக்கென்றுதான்வளைந்து காளையபிமன்கையில்
மறையோரெழுந்து வாழ்த்தியேசேஷையிட்டார்
வீஷ்மர்துரோணர் வில்விதுரர்தன்னுடனே
இருந்தசபையோரும் திகைத்தாற்போல்தானிருந்தார்
காளைகடோற்கஜனும் கனகோபந்தானுகி
பின்கைநோக்கி பிடரியிலேமோதலுற்றான்
சேஷையிட்டுமீண்டுவந்தான் திரியோதிரனும்
அபிமருஞ்சுந்தரியும் அரசாணிமுன்பாக
சுந்தரியைவாளபிமன் சுண்டுவிரல்தான்பிடித்து
அபிமருஞ்சுந்தரியும் அரசாணிசுற்றிவந்தார்
அருந்ததிபார்த்து அனைவோருமனமகிழ்ந்து
மன்மதனும்ரதியும்போல் வாழ்மனைவீற்றிருந்தார்
இராசர்காணென்பாரும் இந்திரன்காணென்பாரும்
சந்திரர்கள்சூரியர்கள் தம்பிமகனென்பாரும்
மங்கைநல்லாள்சுந்தரிக்கு மைத்துனன்காணென்பாரும்
மாயன்மருமகன்காண் வாள்விஜயன்தன்மகன்காண்

அபிமருக்குஞ்சுந்தரிக்கும் அழகியசீர்பந்தலிலே
கலியாணம்வாழ்த்தியே காவலர்கள்கொண்டாட
பெண்ணாய்ப்பிறந்தவர்கள் பெருமைசொல்லக்கேட்டிருந்து
அரவாணெழுந்திருந்து அழகுமண்டபந்தனிலே
மணப்பாக்குவெற்றிலையும் மறையார்க்குவழங்கி
மன்னவர்கட்கெல்லாம் வரிசைப்படிவழங்கி
சந்தனங்கள்பூசியே தார்வேந்தரெல்லோரும்
பாக்குகள்வெற்றிலையும் பலபேர்க்குத்தான்வழங்கி

பெருமாள் காமதேனுவை யழைப்பித்தது.

கலியாணம்பார்க்கவந்த கனமானமன்னவற்கு
போசனங்களிட்டு பூரிக்கவேணுமென்ன
மாயன்பெருமாளும் மனதிலேதானினைந்து
காமதேனுவென்னுங் கனமானபசுக்கள்தம்மை
வருகவருகவென்று வரவழைத்தார்மாயவரும்

காமதேனு வருவது

வந்ததேகாமதேனு மாயவரைத்தெண்டனிட்டு
என்னையழைத்தபணி ஏதுக்கருமமென்று
கேட்டுதேகாமதேனு கிருபையுள்ளகிரீடியை
மாயன்பெருமாளும் மறுவார்த்தைசொல்லலுற்றார்
திக்குதிசையாறும திரியோதிரன்சேனைக்கும்
மற்றுமுள்ளராசாக்கள் மன்னவர்களடங்கலுக்கும்
யானைகுதிரைகளும ஆள்பெருஞ்சேவகர்க்கும்
போசனமும் நல்ல பொறிக்கறியும்பச்சடியும்
பருப்பும்புளிக்கறியும் பாயசமும்பசுநெய்யும்
அறுபத்துநானகுவகை யதிரசமும்முப்பழமும்
கற்கண்டுசர்க்கரையும் காட்டுபலாப்பழமும்
வாழைப்பழமுடனே மாங்கனியுந்தேங்கனியும்
பாலுந்தயிருடனே பலவிதமாயுள்ளதெல்லாம்
பந்திவைத்துஇத்தனையும் பகுந்துவிடச்சொன்னாரே

காமதேனு விருந்திடுவது.

அந்தமொழிகேட்டு அன்புடனேகாமதேனும்
தேசமன்னரத்தனைக்கும் வாசலிலேபந்திவைத்து
சொன்னமொழியிருந்து கொடுத்துவரவிட்டதுகாண்
பாலாறும்நெய்யாறும் பந்தலிலேதான்வழங்கி
பாயசங்கள்தாமருந்தப் புறப்பட்டார்தார்வேந்தர்
யானைகுதிரையுடன் நால்பெருங்கூட்டமுடன்
அனந்தனருந்துகள் நாலுலட்சமைந்துலட்சம்
அந்தவிந்தகால்நடைக்கு வேணுமென்றதீனியெல்லாம்
காமதேனுதான்கொடுத்து நடக்கப்போய்கின்றதுகாண்

மாயன்பெருமாளும் வரிசையாய்தான்பார்த்து
சந்தோஷப்பட்டு தலைபசைத்தார்மாயவரும்
காமதேனுதனைப்பார்த்து கரியமாலேதுரைப்பார்
நாளையொருபொழுது நானழைக்கவாருமென்றார்

திரியோதிரன் அரசர்கள்மகிழுவதும புகழுவதும்சொல்வது.

அந்தயிரவில் அரசமன்னராசாக்கள்
தென்னமுடிவேந்தன் திரியோதிரன்குருக்கள்
மற்றுமுள்ளமன்னவற்கு வகைவகையாயிருந்து
குருக்களுடனுரைப்பான் கோமான்திரியோதிரன்
கண்டீரோயிப்பொழுது காமதேனுவந்ததுவும்
வேணுமென்றபாக்கியத்தை விருந்திடச்சொன்னதுவும்
பெருமாள்பிரதாபம் கண்டீரோமாயவரே
மாயன்தபசுநிலை மனதறியப்போகாது
பத்துலட்சந்தாதியர்கள் சமைத்தால்விருந்தாமோ
நம்முடையசேனைகட்கு நல்விருந்துசெய்யாதே
இவருடன்சரியானபேர் யாருமில்லைவையகத்தில்
நாம்நினைத்தால்தான்வருமோ நலமானகாமதேனு
அன்பாகச்சொல்லி யுரைத்தான்குருக்களுடன்

குருக்கள்சொல்வது.

அந்தவிசேடமது கேட்டுமேஅக்குருக்கள்
சொன்னாரேமாயரிட சூத்திரங்களுள்ளதெல்லாம்
வைகுண்டவாசவன்காண் மாயவனாய்வந்தவதரித்தார்
பூமிபாரந்தீர்க்க பிறந்துவந்தார்மாயவரும்
மானிடசென்மமென்று மனதில்நினைக்கவேண்டாம்
பஞ்சவர்களைவரையும் பாரளந்தாருண்டுபண்ணார்
மாயனருளாலே வந்துபிறந்தார்கள்
பஞ்சவர்கள்தங்களுடன் பகைபண்ணிகொள்ளாதே
வனவாசம்போனவரை மன்னவனழைத்துக்கொண்டு
பாதியரசு பாண்டவர்க்குங்கொடுத்து
கூடியேவாழ்ந்தாக்கால் குலமன்னர்மெச்சுவார்கள்

திரியோதிரன் சொல்வது.

குருக்களுரைக்கவுமே போரான்திரியோதிரனும்
மறுவார்த்தைசொல்லி யுரைக்கலுற்றான்மன்னவனும்
பாண்டவரைத்தாமழைத்து பாதியரசாளுமென்று
நாமமுடையார்க்கு நல்லவன்போனேனும்
மாமன்சகுனியுட வார்த்தையைநாம்கேட்டு
நியாயங்கள்கேட்டு நலந்தப்பிநின்றோமே
என்னசெய்வோமென்று யேங்கிமனந்தளர்ந்து
மகனைத்தலைசிறைத்து வாசலிலேகட்டிவைத்து
காலோடேகட்டி கலியாணஞ்செய்ததுவும

வெட்கமுங்கெட்டு விருதாவாய்போனதுவும்
எப்போதெளியுமையா யீஸ்வரனேயெந்தனுக்கு
என்றுவிசாரமிட்டு யெழில்வீரன்தான்படுத்தான்
எல்லாருமப்படியே யெண்ணிவிசாரமிட்டார்

அரவான்முதல் நால்வருஞ்சொல்வது.

படுத்தார்களெல்லோரும் படைமன்னர்தான்கூட
நல்லரவான்தொந்திசெட்டி நற்பாலன்கடோற்கஜனும்
பேசினார்நால்வருமே பெருமாள்சவுரியத்தை
அம்மான்சவுரியத்தை அனைவரும்பார்த்தோமே
நம்மாலேதான்வருமோ நல்விருந்திடவே
என்றவர்கள்பேசி இருந்தார்கள்நால்வருந்தான்
பொழுதுவிடிந்ததுகாண் புறப்பட்டார்நால்வருந்தான்
ஆயன்பெருமாளு மப்போதெழுந்திருந்து
ஸ்நானங்கள்பண்ணி சதிரானமாயவரும்
காலைக்கடன்கழித்து கனமானமாயவரும்
அரவானைத்தானழைத்து ஆயன்பெருமாளும்
திரியோதிரனுற்கும் தேசத்திலுள்ளவற்கும்
பகல்விருந்துசொல்லிவந்த பரிவாகமாயவரும்
அப்படியேசொல்லிவந்தான் அரவானவர்களுக்கு

திரியோதிரன் பயப்படுவது.

தென்னமுடிவேந்தன் திரியோதிரன்பார்த்து
நல்லரவான்தன்னுடனே ஞாயமுமாச்சுதே
கலியாணக்காரியமும் கனவிருந்துமாச்சுதே
நாலுநாளாச்சுதே நாங்களுமிங்கேவந்து
ஊருக்குப்போறோமென் றுரைத்தான்கரியமன்னன்
பூணிக்கையாகவே போய்வாறோமென்றானே

அரவான் தடுப்பது.

அவ்விசேடங்கேட்டு அரவானுங்கொக்கரித்து
போகிறவர்கள்தங்களைப் பிளந்திடுவேன்தடியாலே
ஊர்கோலம்வந்து உறவாடிமொய்யெழுதி
தேறுதலைசெய்வித்து உன்சீமைக்குப்போமென்றான்
அவ்விசேடங்கேட்டு யடங்கினான்திரியனுமே
வந்தானேநல்லரவான் மாயவற்குதெண்டனிட்டான்
அவ்விசேடமெல்லாம் அரவானுரைத்தானே

பெருமான் மறுபடியும் விருந்திடுவது.

சந்தோஷப்பட்டுத் தலையசைத்துமாயவரும்
கனமானமாயவரும் காமதேனுவையழைக்க
வந்ததேகாமதேனு மாயவரைதெண்டனிட்டு
என்னையழைத்தவகை ஏதென்றுகேட்டதுகாண்

மாயன்பெருமாளும் மறுவார்த்தைசொன்னாரே
அன்னமும்பாலும் அமுதுடனேநெய்மோரும்
என்னென்னவகையுடனே இனியகறிகளெல்லாம்
ஒன்றுங்குறையாமல் வுடன்படிக்கைசெய்யுமென்றார்
அப்படியேகாமதேனும் அங்கேநினைத்ததுகாண

அரவான் சொல்வது.

அரவானெழுந்திருந்து ஐவரைபந்திவைத்து
வேணுமெனறகாய்கறிகள் வேணப்பொறிக்கறிகள்
நெய்யாறும்பாலாறும் நிகராய்ப்பொறிக்கறிகள்
கையாறவுண்டு களைதீர்ந்தார்மன்னவர்கள்

ஊர்க்கோலம் வருகிறது.

ஊர்கோலம்வரவே உத்தாரமிட்டார்கள்
யானைகுதிரைகளும் ஆள்பெரியமன்னவர்கள்
முத்துக்குடையும் முழுவயிரக்கால்குடையும்
பத்தரைமாற்றுப்பொன பவழநெடுங்குடையும்
பட்டுக்கொடியும் பசும்பொன்னால்முகக்கொடியும்
வட்டக்குடையும் மாணிக்கக்கால்குடையும்
திட்டமுடனாலவட்டந் திரள்கொடிதான்முழங்க
வெண்சாமரம்வீச வேணதெல்லாந்தான்முழஙக
பட்டுக்கொடிசீலைபத்து லட்சம்தான்பிடிக்க
தீவட்டிக்காரர் திரளாய்க்கொளுத்துமென்ன
முத்தாலேயாலாத்தி மூன்றுலட்சந்தான்பிடிக்க
பொன்னாலேதீவட்டி பெரியவர்தான்பிடிக்க
தேர்விளக்குபந்தம் திரளாகத்தான்பிடிக்க
அடித்தார்கள்மேளவகை அண்டங்கிடுகிடென்ன
ஆனையின்மேலே அடித்தார்களேந்துலட்சம்
நற்பதுமைபோலாக நாகசுரமூதிவர
பொற்காளையூதிவர பூமிகிடுகிடென்ன
ஆகாயபாணம் அதிர்புருசக்கிரமும்
பூச்சக்கிரபாணங்கள் பூமியெல்லாந்தாளிறைய
இடியம்புபாணங்கள் எட்டுலட்சந்தான்கொளுத்த
பகல்வத்திபூவத்தி பகல்போலேதானெறிய
ஆகாயபூமியெல்லாம் அதிர்ந்துநடுங்கிடவே
அபிமன்னராசாவும் யானையின்மேலேறிவர
ரத்தினத்தில்தானிழைத்த நலமானதண்டிகைமேல்
ஏறினான்தண்டிகைமேல் எல்லோருந்தான்வாழ்த்த
முத்துக்குதிரைக்காரர் மூன்றுலட்சந்தான்வாழ்த்த
வெற்றியுடன்சுந்தரியும் ஏறிவெளியேவந்தாள்
ஆயிரம்தாதியர்கள் அருகேநடந்துவர
பாடும்பெண்களாயிரம் பக்கத்தில்நடந்துவர

உள்ளங்குளிர்ந்திடவே ஊர்கோலம்வாருர்கள்
வாரதொருவைபோகும் மகாதேவர்கற்பனைபோல்
துவாரகாதன்பதியை சுற்றியேவந்தார்கள்
வீதிகடுவீதி விளக்குகளிட்டார்கள்
ஆலாத்திகாட்டுவாரும் அலர்ந்துயிருப்பாரும்
தேங்காய்கொடுப்பாரும் திருச்சின்னமூதுவாரும்
இவரார்காணென்பாரும் இந்திரன்தானென்பாரும்
சுபத்திரையாள்பெற்றெடுத்த தும்டபரிபாலனென்பார்
திருஷ்டிகழிப்பாரும் சேவைசுற்றிபோடுவாரும்
இந்திரன்போலெங்கும் ஊர்கோலம்வாருர்கள
வந்தார்களப்பொழுது மாயனைரண்மனையில்
ஆனைவிட்டுயிறங்கினை அபிமன்னராசாவும்
தண்டிகையிறங்கினள் தையலண்ணுள்சுந்தரியும்
மாப்பிள்ளைபெண்ணும் வரிசையுடனின்ருர்கள்
ஆலாத்திகொண்டுவந்து ஆயிரம்பேர்தானெடுத்தார்
குத்தாலேயாலாத்தி மூப்பியர்கள்தானெடுத்து
கறபூரவகலாத்தி கன்னியர்கள்தானெடுத்தார்

காப்பு களைவது.

மாப்பிள்ளையும்பெண்ணும் மணவரையிலுட்கார்ந்தார்
காப்புகளைந்தார் காளையபிமருக்கு
சுந்தரியாள்காப்பு துரைமன்னனதான்களைந்தான்
படைமன்னராசாக்கள் பந்திபந்தியாய்சென்ருர்
மொய்பணமும்ரத்தினமும் மூன்றுலட்சமிட்டார்கள்
வந்திருக்குமன்னவற்கு வரிசையுடன்பாக்கும்
சந்தனமுங்குங்குமமுஞ் சார்ந்துபன்னீருந்தான்
அந்தமுடன்மன்னவற்கு ஐவருக்குந்தான்பூசி
மஞ்சள்சலக்கங்கள் மன்னவர்க்குந்தானுடி
சந்தோஷவார்த்தைசொல்லி பெருமாள்தயவுடனே

பெருமாள் சொல்வது.

வந்தவரைப்போங்களென்று மாயனனுப்பிவிட்டார்
திரியோதிரனுடைய சேனைப்பரிகளமும்
பயணங்கள்பட்டாராம் பாகுடையமன்னவர்கள்
ஆனந்தவாழ்மார்பன் அரவானுந்தானினைந்து
கட்டைத்துளிர்த்தானுங் காணியாளனுகாது
துரோபதையைக்கொண்டுவந்து துயிலையுரியவைத்தான்
மாதுதுரோபதையை மயிரைவிரித்துவைத்தான்
வாளபிமன்தேவியரை தன்மைந்தனுக்குநேமித்தான்
திரியோதிரனுடனே திரள்மன்னர்நூற்றுவரை
மாளப்பொறுக்கிவிட்டு மடிப்பேனென்றெழுந்தானும்
ஆயன்பெருமாளும் அரவானினைவறிந்து

பெருமாள் அரவானண்டை ஓடிவருகிறது

ஆயர் அரவானை அழைத்தேதகூறலுற்றார்
நாளையினிபாரதத்தில் ராசாக்கள்மாளுவது
கலியாணப்பந்தலிலே கலகமிடலாகாது
மன்னவரையெல்லாம் வழிவிட்டுஅனுப்புமென்றார்
அரவான்கடோற்கசனு மானதொந்திசெட்டியுடன்
தொடைதட்டிகொக்கரித்து மிரட்டிமுடுக்கலுற்றார்
அடித்துவிழுந்ததென்று அலறியேஓடுவாரும்
இடிவிழுந்ததென இளைத்தோடிபோவாரும
பின்திரும்பிமுன்னோடி பிழைத்தோமேயென்பாரும்
தலைதடவிக்கொண்டுமன்னர் தப்பினோமென்பாரும்
இன்றுபெற்றாளென்மாதா இனிபிழைத்தோநாமென்று
இப்படிச்சொல்லி இராசாக்களோநடக்கலுற்றார்
தேசத்தழகன் துரியோதிரராசன்
கைசோர்ந்துமெய்சோர்ந்து கனத்தமுடிசோர்ந்து
இறங்குந்திருமுகத்தை எடுத்துபாராமல்
தகப்பனார்வார்த்தைகளை தள்ளிநடந்ததினால்
சகுனிநமக்குச் சத்ராதியாயிருந்தான்
இனியென்னசெய்வோ மென்றுவழிநடந்தான்
அய்யோசிவனேயென்று அழுதுவழிநடந்தான்
மார்பெல்லாம்வேர்வை வழிதலெரிந்துதானடந்தான்
கூடிவந்தசேனையெல்லாம் கொள்ளைகொடுத்துவிட்டு
எப்படிபோயிருப்பேன் இனியதொருபட்டணத்தில்
ஐவர்பெருமா ளாச்சியாள் துரோபதையும்
மைந்தர்மருமகனை வாழ்த்திமனமகிழ்ந்து
ஆயன்பெருமானை அடிபணிந்துதெண்டனிட்டு
எங்களுக்குயிங்கே யிருக்கவேண்டியல்ல
வேதநாராயணனே விடைதாருமென்றுரைத்தார்
மாயன்பெருமானும் வார்த்தையவர்க்குரைத்தார்
ஏழையும்வந்து இளைத்தோமெனவெண்ணாதே
மாளுவார்நூற்றுவர்கள் வையகத்தையாண்டிடுவீர்
மாதுதுரோபதையு மயிர்முடிப்பாள்தப்பாது
மன்னவரேநீங்கள் வனம்போயிவாருமென்றார்
மாயன்பெருமாளும் வழிவிட்டுதான்வருவார்
அந்தநாள்போக்கி மறுநாள்கழிந்தபின்பு
அரவான்கடோற்கஜனும் ஆனதொந்திசெட்டியரும்
மாயன்பெருமானை மனமகிழ்ந்துதெண்டனிட்டு
மாயவரேஎங்களிட வங்கிஷத்துமகாதுரையே
ஐயரேஎங்களைநீர் அனுப்பிவிடைதாருமையா
அப்படியேயாகுதென்று ஆயனுக்குசம்மதித்து

மாயன்மனமகிழ்ந்து மருமக்கள்மார்தனக்கு
பட்டினால்பச்சைவடம் பாங்கானகிரிகிடமும்
கடுக்கன்கொலுசுகளும் கனமானமோதிரமும்
வேண்டியபணிதியெல்லாம் வெகுமானந்தான்கொடுத்து
தோகைநல்லாள்சுந்தரிக்கு சீதனமாகவென்று
நாற்பதினாயிரங்கோடி நடையானபாற்பசுவும்
அடியார்கள்தோழியர்கள் ஆயிரந்தான்கொடுத்து
ஆனைகுதிரை ஐந்துலட்சந்தோழியர்கள்
பல்லக்குத்தண்டிகையும் பசும்பொன்னாலிழைத்ததுகாண்
மாப்பிள்ளைக்கும்பெண்ணுக்கும் வரிசையுடன்ஒப்பாக

அபிமன்னன் சொல்வது.

அப்போதுவாளபிமன் ஆயனைத்தெண்டனிட்டு
பெருமாளேஎங்களிட பெரியப்பன்தந்ததெல்லாம்
எழுநூறுஒட்டகம்பொன் யானைசுமந்ததனம்
பரியம்பொருந்திநீரே பாரளந்தமாயவரே
பேதையென்றுசொல்லியல்லோ பெண்கொடுக்கமாட்டேனென்றீர்
எங்கள்பாட்டனார்தேடும் பழம்பொருளேஇத்தனையும்
முலைப்பாலுகூலியொரு முப்பதுபொன்னுண்டுமக்கு
முப்பதுபொன்னு முதலெடுத்துகொள்ளுமையா
மற்றபொன்பூஷணமும் மாறாமல்பொதிபிடித்து
ஆனைக்குந்திபட்டணத்தே அனுப்புமென்றான்வாளபிமன்
தப்பாதனுப்பிவிடுந் தரணியளந்தவரே
உடமைகொடுத்து உறவாடுமென்றுரைத்தார்

பெருமாள் சொல்வது.

என்னபெருமாளிருதோளும்பூரித்து
தங்கைமகனுரைக்க தனித்தந்தமாயவரும்
மருமக்கள்நால்வரையும் மகளானசுந்தரியும்
வாழ்த்திவிடைகொடுத்தார் மாளிகையினுட்புகுந்தார்
மாமியார்லட்சுமியை மன்னவர்கள்தெண்டனிட்டார்
மங்கைநல்லால்சுந்தரியும் மாதாவைதெண்டனிட்டாள்
மருமக்கள்நால்வரையும் வாழ்த்திஎடுத்தணைத்து
மகளாரைசென்றெடுத்து வாயாரவாழ்த்தலுற்றார்
மங்கிலியமுண்டாவீர் மைந்தரைப்பெற்றிடுவீர்
வாயாரவாழ்த்தி மதிமுகத்தைமுத்தமிட்டு
போய்வாருமென்று விடைகொடுத்தாள்பொற்கொடியும்
அங்கேவிடைகள்பெற்று ஆயனைத்தெண்டனிட்டு
துவாரகாபதியைவிட்டு துரைமன்னர்தானடந்தார்

ஒளவையார் வீட்டிற்கு வருகிறது.

ஒளவைவனந்தேடி அரசமக்கள்போய்நடந்தார்
பேரிகைகொட்ட பெருஞ்சங்குநின்றூத

மல்லரிகொட்ட மணித்தாளமுழங்க
ஒற்றைச்சங்கூத ஒலிகள்மணிமாற
தெய்வரம்பையாடிவர தேவடிமாராடிவர
ஔவைமடத்தருகே அடுத்தார்கள்மன்னவர்கள்
அபிமன்னர்வருகிறதை ஔவையறிந்துகொண்டு
மக்களெதிராக அடிவணங்கிதெண்டனிட்டார்

ஔவையார்பாதம் சுந்தரியாள் பணிவது.

தோகைநல்லாள்சுந்தரியும் தோழிமார்தன்னுடனே
தண்டிகைதானிறங்கி தார்குழலுமோடிவந்து
மாமிசரணமென்று வணங்கியேதெண்டனிட்டாள்
ஔவையார்மனமகிழ்ந்து அணைத்தெடுத்துமுகங்கொடுத்து
வாயாரவாழ்த்தி மடத்தருகேகொண்டுசென்று
அன்னங்கறியாய் அடைவாகவேவைத்து
மக்களுக்குமங்கையர்க்கும் வரிசையாயன்னமிட்டு
வெற்றிலைகற்பூரம் மிகுந்ததாய்கண்டவுடன்
அள்ளியவர்களித்து ஔவையாருமப்பொழுது
வாழ்த்திவிடைகொடுத்து வழிவிட்டனுப்பலுற்றாள்

ஔவையார் வழிவிட்டனுப்புதல்.

அங்கேவிடைகள்பெற்று அப்புறம்போகையிலே
ஔவைவனங்கடந்து அப்புறமேபோகலுற்றார்
காடுகடந்து கரியவனங்கடந்து
இஞ்சிவனங்கடந்து இருவாட்சிபுட்புகுந்து
மஞ்சள்வனங்கடந்து மருக்கொழுந்துகால்நடந்து

வீரகெங்காளன்னை தொந்திசெட்டிவருவது.

வீரகெங்காள்பட்டணத்தே விருப்பமுடன்வந்தார்கள்
முந்திபோம்தொந்திசெட்டி முழுகுழலைதெண்டனிட்டு
மணஞ்செய்துவாளபிமன் மங்கைநல்லாள்சுந்தரியை
அண்ணமாரிப்போ அழைத்துவந்தார்பாருமென்றான்
மைந்தனுரைக்கலுமே மாதாவுமேதுரைப்பாள்

வீரகெங்காள் சொல்வது.

வீட்டைமெழுகி விநாயகக்கோலமிட்டு
சாந்தால்தரைமெழுகி சந்தனத்தால்கோலமிட்டு

கஸ்தூரிதான்கரைத்து கடுகவெளியுமென்றுள்
ஆலாத்திப்பெண்களொரு ஆயிரம்பேர்வாங்களென்றுள்
மைந்தர்க்கெதிரே மங்கையரும்போகவென்று

வீரகெங்காள் மைந்தர்களண்டை வருவது.

பல்லக்குமீதேறி பைங்கொடியுமெதிர்நடந்தார்கள்
மாதாவருகிறதை கண்டந்தமன்னவர்கள்
ஆனைவிட்டுதானிறங்கி அரசர்களெல்லோரும்
சூழவலம்வந்து சுற்றிவந்துதாயாரை
பைங்கொடியாள்சுந்தரியும் பல்லக்குவிட்டிறங்கி
அத்தையாள்பாதம் அடிவணங்கிதெண்டனிட்டாள்
வந்துபணிந்த மருமகளைச்சென்றெடுத்து
வாரியெடுத்தணைத்து மாளிகையில்கொண்டுசென்று
வாழ்த்திமனமகிழ்ந்தாள் மாதாவும்வீரகெங்காள்
ஊர்கோலஞ்செய்யவே வுத்தமியாள்தானினைந்து
மைந்தன்தொந்திசெட்டிக்கு மாதாவுரைத்தாளே
அப்போதுதொந்திசெட்டி அரண்மனையினுட்புகுந்தான்
உக்கிராணம்போய்புகுந்து ஒருபெட்டிதான்திரந்து
எண்ணைகொண்டுவாருமென்று எழாயிரம்பொன்கொடுத்தான்
பாணவித்தைகொண்டுவரப் பதிங்களப்பொன்னளித்தான்
கேளிக்கைகொண்டுவர கொடுத்தான்திரவியத்தை

ஊர்கோலம் வருவது.

பல்லக்குமேற்சிலபேர் படைமன்னரேறிவர
வீதியலங்கரித்து விளக்கேற்றிபெண்திசையும்
ஆசனங்கள்சுந்தரியும் ஆண்பெண்ணின் தண்டிகைமேல்
வேந்தர்பெருமாளும். வீதிபவனிவாரார்
வெண்சாமறைவீச வெள்ளைக்குடைகவிய
செட்டித்தெருகடந்து சீரானநாடுவிட்டு
இராசாநெடுந்தெருவு நடந்தார்கள்மன்னவர்கள்
பாணமுழக்கிவர பைங்கொடிமாராடிவர
யானைகுதிரையேறி இராசாக்கள்வீதிவாரார்
பார்த்தன்மகனும் பாரளந்தார்தன்மகனும்
காளையறவானும் கடோர்கஜன் தன்னுடனே
ஊர்வலமாக வூர்கோலம்வந்தார்கள்
கண்டாளேவீரகங்காள் கண்கள்களிகுளிர
ஆலாத்திகாட்டுமென்றுள் ஐவருக்குஞ்சுந்தரிக்கும்

அபிமனுஞ்சுந்தரியும் அப்பெண்மணியைப்பார்த்து
மாளிகையினுட்புகுந்தாள் வாளபிமன்தேவியுடன்

அபிமன்னன் மணக்கோலத்தோடு வீரகெங்காளிடம்வருவது.

பந்தலிலேவந்துநின்று பாரமுடிமன்னவரும்
அரசாணிமுன்பாக அபிமனுஞ்சுந்தரியும்
மணைமேலேயுட்கார்ந்தார் வாளபிமன்தேவியுடன்
ஆனதொருவேதியர்கள் அள்ளியேசேஷையிட்டார்
அபிமனுஞ்சுந்தரியும் அரசாணிசுத்திவந்தார்
அரசாணிசுத்திவந்து அரண்மனையினுட்புகுந்து
மாளிகைப்பாய்மீதில் பரிந்தேயுட்கார்ந்தார்கள்
கூட்டிகுழப்பி கொடுத்தார்கள் தாதியர்கள்
வாங்கியமுதுண்டார் வாளபிமர்சுந்தரியும்
ஊர்கோலவந்து உள்ளூரில்மொய்யெழுதி
பாக்கிலையும்வாங்கி பரிமளமேற்பூசி
அன்னங்கரிகாய் அடைவாகவேயளித்து
உண்டெழுந்துபோனபின்பு உத்தமவீரியர்கள்
வாளபிமன்தேவியுடன் மகிழ்ந்திருந்தாளங்கொருநாள்
அந்தநாள்போக்கி மறுநாள்கழிந்தபின்பு
அரவான்கடோற்கஜனும் அபிமருந்தானெழுந்து
ஆச்சிநல்லவீரகெங்காள் ஆசனத்தில்சேரவென்று
மாதாவுக்கேற்ற மலர்தாவிதெண்டனிட்டாள்
வந்துபணிந்ததொரு மக்களைச்சென்றெடுத்து
வாயலேவாழ்த்தி மதிமுகத்தைமுகந்துகொண்டாள்
ஆச்சிநீர்கேளீர் அடியேன்கள்விண்ணப்பம்
ஆச்சிசுபத்திரையும் அபிமரைதேடியேதான்
அனேகநாளாகுதுகா ணுயன்பதிக்குவந்து
விடைதாருமாச்சியென்று விடுதிக்குப்போகவென்றார்

வீரகெங்காள் சொல்வது.

சிரித்துமனமகிழ்ந்து செட்டிமகள்வீரகெங்காள்
மக்களைபார்த்து மனமகிழ்ந்துவீரகெங்காள்
போசனசாலையிலே பொற்கொடியும்போய்புகுந்தாள்
மக்கள்மருமகட்கு வரிசைப்படியாக
பொரித்தபொரிகறியும் பொன்போலசிறுபருப்பும்
புத்துருக்குநெய்தளிகை போதமிகபடைத்து

அசனமுண்டபிற்பாடு அள்ளிலைபாக்குமிட்டாள்
மருமக்கள்சுந்தரிக்கு வரிசைபணிதியுடனே
தோழிமராயிரஞ்சுந்தரிக்குதான்கொடுத்து
மைந்தனபிமருக்கு வரிசையணிதியுடன்
யானைகுதிரையுடன் அடியார்களாயிரமும்
வேண்டும்படிகொடுத்து வீரகெங்காளப்போது
வாழ்த்திவிடைகொடுத்து மருவிட்டனுப்பலுற்றார்
அங்கேவிடைபெற்று அலகெங்கைநன்னாடர்
இரவும்பகலும் இளப்பாரிவழிநடந்தார்
இளப்பாறிவழிநடந்தார் இரவுபகலாக
நடந்தார்களப்போழுது நாககன்னிபட்டணத்தில்
நாடுகடந்து நகரும்பலகடந்து
காடுகடந்து கடுகவேதான்கடந்து
கானகத்தைவிட்டு கடுகவேவந்தார்காண்
நாககன்னிவீற்றிருக்கும் நல்லதொருபட்டணத்தே
பாதாளலோகத் தடவையில்வந்துநின்று
காளையரவானுங் கடுகியேமுன்னோடி
முன்னாலேயோடி முத்தெதிரில்வந்துநின்று
சுற்றியேவந்துநின்று சுருக்காகத்தெண்டனிட்டு
அன்னையார்பாதத்தில் அரவானுந்தெண்டனிட்டான்
தெண்டனிட்டபோது திடுக்கெட்டழுந்திருந்து
அபிமன்னகடோர்கஜனு அன்பாகத்தொந்திசெட்டி
சுந்தரியாள்தானுஞ் சுருக்காகவந்தாள்
வந்தாரிருதோழரும் மாதவேயெனமொழிந்தான்
மக்கள்வருகிறதை மாதாவுந்தான்கேட்டு
பாங்கியரைச்சேரழைத்து பைங்கொடியுங்கூறுவாள்
வீடுமொழுகி விநாயகர்கோலமிட்டு
கஸ்தூரிகொண்டுவந்து கரைத்துதெளியுமென்றாள்
மாணிக்கதீபங்கள் வையுமென்றாளெத்திசையும்
குத்துவிளக்குங்கொளுந்து படவேற்றுமென்றாள்
இரத்தினகம்பளியை யெத்திசையும்போடுமென்றாள்
ஆலாத்திசுற்றுமென்று ளாயிரம்பெண்கள்தனை
மாதாவும்நாககன்னி மைந்தர்க்கெதிராக
பாதாளலோகம்விட்டு பார்த்தானிடதேவியரும்
பல்லக்குமேலேரி பைங்கொடியாள்தான்வருவாள்
மாதாவரவுதன்னை மன்னவர்கள்கண்டுகொண்டு

யானைகுதிரை அரசர்கள்விட்டிழந்து
மாதாவுக்கெதிராக மன்னவர்கள்வந்துநின்று
மாதாவின்பாதம் மலர்தூவிதெண்டனிட்டார்
வந்துபணிந்தவரை வாரியெடுத்தணைத்தாள்
ஆயன்மகளாரும் அன்பானசுந்தரியும்
பல்லக்கைவிட்டிழிந்து பார்த்தாள்மருமகளும்
அத்தையார்பாதம் அடிபணிந்துதெண்டனிட்டாள்
மாமிசரணமென்று வணங்கினாள்சுந்தரியும்
வந்துபணிந்த மருமகனைச்சென்றெடுத்து
வாழ்வீர்வளருவீர் மைந்தனைப்பெற்றிடுவீர்
பூமியையாளுகைக்கு புதல்வரைப்பெற்றிடுவீர்
வாயாரவாழ்த்தி மதிமுகத்தைமுகந்துகொண்டு
ஆலாத்திசுற்றுமென்றாள் ஆனந்தவாழ்மார்பருக்கு
மாணிக்கஆலாத்தி மங்கையர்கள்கட்டினார்கள்
பாதாளலோகத் தடவரையினுட்புகுந்து
மாளிகையில்கொண்டுசென்று மைந்தனையுஞ்சுந்தரியும்
அரசாணிமுன்பாக அபிமருக்குஞ்சுந்தரிக்கும்
மைந்தனுக்குஞ்சுந்தரிக்கும் வாரியேசேஷையிட்டாள்
அபிமருஞ்சுந்தரியும் அரன்மனையிற்கொண்டுசென்று
பாலும்பழமும் கொடுத்தாளேபைங்கொடியும்
நெய்பால்தயிருடனே நேரிழையாள்தான்கொடுத்து
மைந்தனைசேரழைத்து மாளுகன்தன்மகனும்
அமுதுண்ணமண்டபத்தே ஆரிழையும்போய்புகுந்து
பொன்போல்சிறுபருப்பும் புத்துக்குநெய்பாலும்
பச்சடியும்துவயலும் பழவரிசைபோசனமும்
மக்களுடனாக மாதாவும்அமுதுண்டு
வெற்றிலைகற்பூரம் வேண்டும்படியறிந்து
சந்தனங்கஸ்தூரி சாந்துமிகவணிந்து
அந்நாள்போக்கி மறுநாள்கழிந்தபின்பு
அபிமரெழிந்திருந்து ஆச்சிக்குப்போய்பணிந்து
ஆச்சியரேநீர்கேளு மடியேன்றன்விண்ணப்பம்
மாதாசுபித்திரையும் வழிபார்த்திருப்பாள்காண்
தேடித்திகைப்பாள்காண் திருமாலுடன்பிறந்தாள்
சொல்லாமல்வந்துவிட்டேன் தோகையரேயிப்பொழுது
வாழ்த்திவிடைதாரும் மாதாயெந்தனுக்கு

அப்படியேயாகுதென்று ஆநந்தவாழ்மாரி
மைந்தரபிமருக்கும் மருமகள்சுந்தரிக்கும்
பாரப்பணிதிகளும் பாங்கிமாராயிரம்பேர்
ஆனைகுதிரைகளும் ஆயிரம்பேர்தாதிகளும்
சீதனமாகக்கொடுத்தாள் திருவினையும்
மக்களைப்பார்த்து மனமகிழ்ந்துமங்கைநல்லாள்
அமுதுண்ணமண்டபத்தை ஆரிழையும்போய்புகுந்து
முப்பழமும்பாலு முடுகுபலாபழமும்
வாழைப்பழமும் மதுரமுள்ளமாம்பழமும்
வெள்ளிலைகற்பூரம் வேண்டும்படியளித்து
சந்தனமுங்குங்குமமும் சாந்துபரிமளமும்
மன்னர்பெருமாளே வாழ்வாயெனவழைத்து
மருமகள்சுந்தரியை மகிட்சியாய்தானழைத்து
வாழ்த்திவிடைகொடுத்து வழிவிட்டனுப்பலுற்றாள்
மகனையரவானை மங்கையருந்தானழைத்து
அபிமனைக்கொண்டுபோய் ஆச்சிகையிலொப்பிவைத்து
ஐந்துநாளிருந்து அப்பாநீவாருமென்றாள்
மன்னவரும்சேனையுடன் வாகனந்தானேறி
பாதாளலோகத் தடவரையைவிட்டகன்று
காடுகடந்து கரியவனந்தாண்டி
கொல்லிமலைகடந்து குட்குமலைதான்கடந்து
காளுருந்தோப்புகளும் கழுகுவனந்தாண்டி
கமலவல்லிதானிருக்கும் கதலிவனம்புகுந்து
முந்திகடோற்கஜனும் முடிசியேயோடிவந்து
வீதியும்வீதி தெருவும்பலகடந்து
கமலவல்லிதானிருக்கும் கனகமணிமண்டபத்தே
மாதாவுக்கேற்ற மலர்தூவிதெண்டனிட்டான்
கைகட்டிவாய்புதைத்து கடோற்கஜனேதுரைப்பான்
அபிமருஞ்சுந்தரியும் அரவானுந்தொந்திசெட்டி
சேனைத்திரளுடனே சென்றார்மனம்பொருந்தி
நம்முடையவனமருகே வந்தார்காணச்சியரே
மைந்தர்வருஞ்சேதி மாதாவுந்தான்கேட்டு
ஆயிரம்பேர்ராட்சதரை அனுப்பினளெதிராக
அப்படியேயமர்ந்தார்கள் ஆயிரம்பேர்ராட்சதரும்
எதிராகவந்து எழுந்திருங்களென்றாரே

அப்படியேதானெழுந்து அனைவோரும்வந்சார்கள்
தாயார்கமலகன்னி எதிரிலேதானிருந்தாள்
ஆனைவிட்டுத்தானிறங்கி அபிமன்னராசவும்
நல்லரவான்தொந்திசெட்டி நாலுபேர்தங்களுடன்
அம்மாளைசுற்றிவந்து அடிவணங்கிதெண்டனிட்டான்
தெண்டனிட்டபிள்ளையை சீருயெடுத்தணைந்து
இருக்கச்சிங்காதனங்களிட்டாளெதிரக
ஆயன்மகளாரும அழகுதண்டில்தானிரங்கி
மாமிசரணமென்று மலர்தூவிதெண்டனிட்டாள்
வந்துபணிந்த மருமகளைத்தானெடுத்து
வாழ்த்தியெடுத்தணைந்து மாளிகையில்கொண்டுசென்று
பாலும்பழமும் பசுந்தேனுஞ்சர்க்கரையும்
கூடிகலந்து தொடுத்தார்கள்தாதியர்கள்
போசனநற்கரியும் போட்டுண்டாளப்பொழுது
கல்யாணக்காரியங்கள் காட்சிகளுள்ளதெல்லாம்
ஒன்றுங்குறையாமல் வுரைத்தானேநல்லரவான்
அழ்விசேஷங்கேட்டு அம்மாள்கமலகன்னி
நகைத்துதலையசைந்து நன்றுச்சுதென்றுளே

அரவான் சொல்வது.

திரியோதிரனுடனே சேரப்பிறந்தார்கள்
குருடனுடபுத்திரர்கள் கொற்றவர்களெல்லோரை
பாலனபிமனுமே பந்திபாய்கட்டிவைத்தான்
கொள்ளவந்தலக்குணனை குடுமிவைத்துதலைசிறைத்து
ஆயிரம்பெருவிளக்கை அவன்தலையிலேற்றிவைத்து
அரசாணிகாலுடனே அவனையேகட்டிவைத்து
பார்த்திருக்கமங்கிலியும் தரித்தாரேமாதாவே
பின்னையுமுண்டான பேச்சுவகையுள்ளதெல்லாம்
ஒன்றுங்குறையாம னுரைத்தானரவானும்

கமலகன்னி சொல்வது.

கேட்டாள்கமலகன்னி கிருபையுடன்தானழைத்து
சந்தோஷப்பட்டு தலையசைந்துகமலகன்னி
அப்போபொழுதுவிடிந்து பொற்கொடியுந்தானெழுந்து
பதினயிரம்கோடி பத்துலட்சம்ராட்சதரை
உடனேயழைத்து ஊர்கோலங்காட்டுமென்றாள்
கடோற்கஜனைத்தானழைத்து காரியத்தைப்பாருமென்றாள்

அப்படியேநல்லதென்று அரவான்கடோற்கஜனும்
பந்தங்கொளுத்துமென்றார் தெருவெங்குஞ்சுற்றிவர
கொட்டுத்திரள்மேளம் கோடையிடிபோலே
சொண்டுவந்தாராலவட்டங் கோடானகோடியுண்டு
யானைகுதிரைகளும் ஆள்பெருராணுவமும்
எல்லோருங்கூடி இயல்கோவலம்வந்தார்கள்

அபிமன்னனும் சுந்தரியும் அரண்மனைக்குவருவது.

மாப்பிளையும்பெண்ணும் மகிழ்ச்சியுடன்வந்தார்கள்
ஆச்சியுடன்பெண்ணும் அரண்மனையினுட்புகுந்து
ஆலாத்திதீபம் அரிவையருந்தானெடுத்து
மாப்பிளையும்பெண்ணும் வந்தார்கள்மாளிகையில்
கமலகன்னிபட்டணத்தில் கனத்ததொருராட்சதரும்
சேஷைகளிட்டபின்பு திருவிளக்குமுன்னேவைத்து
மோகமுடன்ராசாக்கள் மொய்வரிசையிட்டார்கள்
பாக்குடனேவெற்றிலை பலபேர்க்குதான்வழங்கி
அழகுடனேசொத்து அனுப்பினால்கமலகன்னி
மாப்பிளையும்பெண்ணும் மணவறைவிட்டிறங்கி

அபிமன்னனுக்கும் சுந்தரிக்கும் பலதானமிடுவது

சொம்புடனேபால்பழமுங் குடித்தாரிருவருமே
நேர்ப்புடனேராத்திரிக்கு நித்திரைசெய்தார்கள்
அபிமனுஞ்சுந்தரியும் மறுநாள்கழிந்தபின்பு
ஆச்சிமுகம்நோக்கி அபிமன்னன்கூறுவான்.
ஆச்சியரேநீர்கேளீர் அடியேன்தன்விண்ணப்பம்
மாயன்சகோதரியாள் மாதாசுபத்திரையும்
மாயன்பதிக்குஎன்னை வழிநோக்கிபோகாமல்
மறையோன்வசமாக மதாவும்ஒப்பிவைத்தாள்
அங்கிருந்தவாறு அடியேனும்வந்துவிட்டேன்
ஆச்சிசுபத்திரையும் அலைந்தெங்குந்தேடுவாள்காண்
என்னையனுப்புமம்மா எனக்குவிடைதாருமம்மா
நல்லதுஎன்றுசொல்லி நகைத்தாளேகமலகன்னி

கமலகன்னி சுந்தரிக்குச் சீதனங்கொடுப்பது.

தாதிகளாயிரமாம் தங்கநல்லபெட்டிகளும்
மாணிக்கச்சேலை மங்கைநல்லாள்சுந்தரிக்கு
னமாகத் திரளுடனே தான்கொடுத்து

...னிட்டு

...லியாலை பசசுகளை காரியமாய்தானுவைத்து
ஊர்கோலம்வந்து வுறன்முறைக்குபாக்குவைத்து
ஐந்தாறுநாளிருந்து அப்பா நீவாருமென்ருள்
அப்படியேநல்லதென்ருர் அரவான்கடோர்கஜனும்
நல்லறவான்கடோற்கஜனும் நற்பாலன்தொந்திசெட்டி
நான்குபேர்சுந்தரியும் நாயகியைச்சுற்றிவந்து
ஏகமாய்ச்சுற்றிவந்து இருபாதந்தெண்டனிட்டார்
வாழ்த்திவிடைகொடுத்தாள் மாதுகமலகன்னி
கோடையிடிபோல குமுறுதேமேளசத்தம்
அட்டதிக்குதானதிர ஆகாயந்தானதிர
பட்டத்துயானையின்மே லேறிஞன்பாலனுமோ
சுந்தரியுந்தண்டிகைமே லேறிவெளியேவந்தாள்

நால்வரும் சுந்தரியும் நாட்டிற்கு வருவது

நடந்துதேபாளையங்கள் நாலுதிக்குந்தானதிர
ஆனைகுந்திநாடு அப்போபயணமிட்டார்
காடுகடந்து கடுகவனங்கடந்து
மேடுகடந்து மெள்ளவேவாருர்கள்
மலைதோப்புதான்கடந்து மன்னவர்கள்வாருர்கள்
குன்றுபருவதங்கள் கொப்பெனவேதான்கடந்தார்
கோயில்குளங்கடந்து கொற்றவர்கள்வாருர்கள்
வல்லாக்கன்வாழ்ந்த வனத்தருகேவந்துநின்ருர்

அபிமன்னன் சொல்வது.

அப்போதபிமனும் அண்ணர்முகம்நோக்கி
கண்டானேயண்ணன் கரியமலைபோல
அம்மானைக்கொன்றுவிட்ட தனைவர்க்கு...
அந்தவனத்தைவிட்டு அப்புறமேதா...
காளிவனத்தருகே கனவீரர்வாரு...
சுந்தரியாளப்போது சுருக்காகத்...
பூசைகள்பண்ணினுர்கள் பொ...

THE MADURA TAMIL SANGAM

இப்படியாயிங்கே யிருக்கு
இனி-ஆனைகுந்திபட்டணத் ததிசய
மாயன்சகோதரியாள் வாள்விசையன்தேவியவள்
பலாமருடன்பிறந்த பத்தினியாள்சுபத்திரையும்
மகனைப்பிறந்தமுதல் மங்கைநல்லாள் சுபத்திரையும்
பிள்ளைபோனநாள்முதலாய் போசனமும்வேண்டாமல்
அன்னநடையாட்கு யழுகைதொழிலாக
எட்டுநாளாச்சுகந்த யென்மகனைக்காணேனே
பகையாளிசேனையிலே பார்த்தன்மகன்போய்புகுந்தான்
எதிராளிசேனையிலே யென்மகனும்போய்புகுந்தான்
வான்மாறிப்போயெதிர்க்க மன்னன்-துணையுமில்லை
அஞ்சாதேயென்றுசொல்ல ஆருமில்லையண்டையிலே
பண்டும்பகையாளி பாதிநாள்தாயாதி
கொல்வாரேபாவிகள் குழந்தையென்றும்பாராமல்
அறியாதபாலனென்று அஞ்சாமல்கொல்வார்கள்
குழந்தையென்றும்பாராமல் கொல்லத்துணிவார்கள்
அறியாதபாலனென்று அவர்களென்னசெய்வாரோ
என்னசெய்வேன்வாளபிமா யெழில்விசையன்தன்மகனே
காணும்படியிலையோ காவலர்கள்வீரியனே
பார்க்கும்படியிலையோ பார்த்தன்மகனுரே
என்றைக்குக்காண்பே னினியவபிமைந்தனை
மகனையிழந்துநான் மண்ணிலிருப்பதில்லை
உன்னையிழந்துநான் உயிருடனிருப்பதில்லை
...க்கினியைக்கண்டு அரக்கதுபோல்தானுருகி
...விடமெல்லாம் காணுவபிமாவென்று
...னிருக்கு மாயிரந்தோழிகளை
...யைக்கட்டி புலம்பியழுதுக்கொண்டு
...க்கும்தேவேனையிலே

தூதன் வருவது.

...வேந்தர் தாமிருந்து
...டன்தானழைத்து
...தசேதியைத்தான்
...காகதூதுவிட்டார்
...தூதுவனும்
...க்கும்